கனடா இந்து மாமன்றம்
CANADA HINDU MAAMANTRAM

ௐ

B1 046

# சைவநீதி
# SAIVANEETHI



வரசித்தி விநாயகர் ஆலயம் - கனடா

**கனடா இந்து மாமன்றம்**
**CANADA HINDU MAAMANTRAM**

**பொங்கல் மலர் - 2000**

மேன்மை கொள் சைவநீதி விளங்குக வைய மெங்கும்

# நல்லூர் குமரன்

## பட்டுவண்ணச் சேலைகளின் சாம்ராஜ்யம்

இந்தியாவில் உள்ள அனைத்துத்
தரமான பட்டுப் புடவைகளுக்கும்
நாடவேண்டிய நம்பிக்கையான
ஸ்தாபனம்

கூறைச் சேலைகள், பட்டு வேட்டிகள்,
மங்கையர் மனம் கவரும் நவநாகரிகப்
புடவைகள் அனைத்தையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

**நல்லூர் குமரன்**
**சாறி பலஸ்**

உயர்ந்த தரம்
குறைந்த விலை
சிறந்த சேவை



# Nallur Kumaran Inc.

**2387 EGLINTON AVE. EAST, SUIT # 5 &6**
**(1st Floor) Eglinton & Kennedy**
**SCARBOROUGH, ONT. M1K 2M5**
**TEL: (416) 285-6191**

**1429 GERRARD ST. EAST**
**TORONTO, ON**
**INDIAN BAZAAR**
**TEL: (416) 469-9800**

**2276 KENNEDY ROAD**
**SCARBOROUGH, ON**
**Kennedy & Finch**
**TEL: (416) 291-1333**

அன்பே சிவம்

# சைவநீதி



## பொங்கல் மலர்

## தை 2000

---


கனடா இந்து மாமன்றம்

CANADA HINDU MAAMANTRAM

ஓம்

கணபதியாயநம!

வரந்தரும் நாயகனே! - கனடா
வரசித்தி விநாயகனே!! - முகப்பில் காட்சி தருகிறார்

ஓங்காரத் துட்பொருளே! உச்சிமலை உவந்திட்டு ஒன்றி யாங்கே
தாங்கியருள் செய்பவனே தரிசிக்கத் தலங்கொண்டு தங்கித் தேடி
ஆங்கு வரும் அடியாரின் அல்லலறுத் தாட்சிசெயும் அன்புத் தேவே
வாங்குகனி வல்லவனே! வரசித்தி விநாயகனே வணக்கம் போற்றி.

பத்தியுடன் முத்திபெறத் பண்பாடித் தொழுதேத்தி அடியார் போற்றி
நத்தியுமை நாடிவரக் கனடாவை நாடிவந்தாய் நாம்செய் பேறே
வித்தகனே! வேழமுக!! வரசித்தி விநாயகரே! வேண்டு கின்றோம்
எத்தினமும் எமைக்காத்து இன்னருளைத் தருவாயே இறைவா போற்றி!

- நம்பி

# சைவநீதி - தைப்பொங்கல் மலர் - 2000ம் ஆண்டு

வணக்கம்! வருக – வருக!! இதுவே நுழைவாயில். சென்று வருக!!!

## பொருளடக்கம்

செடி: 6 கொடி: 13


| பகுதி | இல. | தரும் பொருள் | தருநர் | பக்கம் |
|---|---|---|---|---|
| I | 1. | பஞ்சபுராணம் (வழிபாடு) | கனடா இந்து மாமன்றத் தொகுப்பு | 1–5 |
| | 2. | நால்வர்காட்டிய வழியும் –தேவர் காட்டிய நெறியும் | சிவஸ்ரீ ப. கிருஷ்ணராஜக்குருக்கள் | 6–8 |
| | 3. | ஆசிரியர் குரல் | மலராசிரியர் | 9–10 |
| | 4. | The Gayatri Mantra | C. S.Rajaratnam B. A. | 11–12 |
| | 5. | Universality of Hinduism | A. C. Nadarajah B. A (Lond) | 13–14 |
| 11 | 6. | இந்து சமயத்தில் பெண்களின் – கடமையும் இடமும் | மனோன்மணி சண்முகதாஸ், எம். ஏ. | 15–17 |
| | 7. | இறைவழிபாடு | அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் | 18–22 |
| | 8. | The Saiva Pathway and world peace | Ratna MA Navaratnam M.A, M.Lit. | 23–27 |
| | 9. | Hinduism in Relation to Spcial Problems | Dr. VA Devasenapathy | 28–29 |
| | 10. | Inter Religious Understanding | Dr. A. N. Perumal | 30–32 |
| | 11. | மனைமாட்சி | கலாநிதி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி | 33–34 |
| | 12 | Music and Religion | Dr. S. Seetha | 35–36 |
| | 13 | திருக்கோவில்களும் எதிர்கால உலகமும் | ந. பரம்சோதி, கலாச்சார அமைச்சு அலுவலகம் இலங்கை | 37–44 |
| III1 | 14. | திருமுறைகளில் இலக்கிய வளம் | டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் M.A., M.Lit, Phd. | 45–51 |
| IV | 15 | நமது சமயங்கள் | சிவஅன்பர். சீ. கிருக்ஷ்ணன் – சிங்கப்பூர் | 52–53 |
| | 16. | பெண்ணென்னும் பெரும் பேறு | வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன் | 54–55 |

| பகுதி | இல. | தரும்பொருள் | தருநர் | பக்கம் |
|---|---|---|---|---|
| | 17. | இறை இலக்கணம் | இரா. மயில்வாகனம் ஜே. பி. | 56–59 |
| | 18. | "அத்வைதமான இறைவன்" | சுப்பிரமணியம் கந்தையா இ. த. ஆ. | 60–63 |
| V | 19. | எண்சோதிடம் – தொகுப்பு | நம்பி | 64–67 |
| | 20. | நீத்தார் கடன் செய்தல் | கயிலைமாமுனிவர். தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள், பேரூராதீனம் | 68–69 |
| | 21. | பிள்ளைத்தமிழில் முருகன் | முருகவே பரமநாதன் | 70–73 |
| | 22. | காலந்தான் பதில் சொல்லும் – கவிதை | வீ. வ. நம்பி | 74–76 |
| | 23. | மாணவர் பகுதி | மன்றப்பாடசாலைகள் – மாணவர்கள் | 77–80 |
| | 24. | வாசகர் வட்டம் | | 81 –82 |
| | 25. | நன்றிக்கலசம் | ஆசிரியர் | 83 |


### எது பெரியது?

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது! புவனம் பெரிது;
புவனமோ நான்முகன் படைப்பு;
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்;
கரியமாலோ அலைகடல் துயின்றோன்;
அலைகடல் குறுமுனி அம்கையில் அடக்கம்;
குறுமுனி யோகலசத்தில் பிறந்தோன்;
கலசமோ புவியில் சிறுமண்;
புவியோ அரவினுக்கு ஒரு தலைப் பாரம்;
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்;
உமையோ இறைவர் பாகத்து ஒடுக்கம்;
இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்;
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே

– ஔவையார்

### எவை வேண்டும்?

நற்றமிழில் நாம்புலமை பெறுதல் வேண்டும்
நாற்றிசையும் தமிழோசை கேட்க வேண்டும்
கற்றபடி நின்றுபணி செய்ய வேண்டும்
காலமெலாங் கடந்தோனைத் தொழுதல் வேண்டும்
பற்றோடு சைவநெறி பரப்பல் வேண்டும்
பாவமது புரியாது இருத்தல் வேண்டும்
பெற்றோரைத் தெய்வமெனப் பேணல் வேண்டும்
பேருலகில் வாழ்வாங்கு வாழ்தல் நன்றாம்

– நம்பி

முத்திக்கு வித்தாகும் மோனமொழி பயில்வானை
எத்திக்கும் ஏத்தும் இனிதே - அருட்குறள்

THE WHOLE WORLD PRAISES THE GLORIES OF THE ONE

WHO INTONES THE LANGUAGE OF DEEP SILENCE THAT
LEADS ALL TOWARDS MUKTI. - ARUT KURAL

## இனிய பொங்கல் எப்போது?

தை முதல் பெருநாள்
தமிழர் தம் திருநாள்
ஏர் கொடு வயல் உழுது
நெல் விதை தெறித்து
வான் மழை வேண்டி
செங்கதிர் வரவை
குணதிசை பார்த்து
நாற்றுள மேடை
நல் விதை எடுத்து
சேற்றில் நாட்டி
செந்நெல் பார்த்து
கதிர்கள்வரவு கண்டு
கதிரவன் தொழுது
சூடு மிதித்து
சுழகினில் நெல்லை
குற்றி அரிசி குழுமியே இருந்து
முற்றம் செழிக்க
கோலம் இட்டு
ஆவின் பாலோடு
சர்க்கரை பயறு
அரிசி இட்டு
பொங்கிய பொங்கல்
எப்போ வருமோ?
என்று நாம் ஏங்கினோம்
இங்கும் பொங்கல்
இனிமையாய் இருந்தது!
நித்தம் சோறு ஆக்கிய சட்டியில்
மாலைப் பொங்கல்
பொங்கியே மகிழ்ந்தனர்
உழவின் சிறப்பை உணர்த்திய
பொங்கல்
உதயசூரியன் சேவையைப்
போற்றிய பொங்கல்
தமிழர் ஆண்டை
உணர்த்திய பொங்கல்
எம் மண்ணில் வயலை
மறுபடி உழுது
மாட்டுத் தொழுவம்
கூட்டியே சேர்த்து
செந் நெல் கொண்டு
கழனிகள் சேர்த்து
செழுமைப் பொங்கல்
எப்போ வருமோ?
வயல்கள் எல்லாம்
காடுகளாக வானைத்
தொட்டு வளர்ந்து நிமிர்ந்து
வீடுகள் எல்லாம்
விளக்குகள் இன்றி
ஆலயவாசல் கதவுகள் அடைத்து
மூடிய வாழ்க்கை
முடிந்து போகுமா?
மூண்டநம் பகைகள்
என்று தணியும்
இனிய பொங்கலை
எப்போ காண்போம்?

**க. ந. ஜெயசிவதாசன்**
B.Com. Diplin Ed.

# புத்தாண்டின் புனித நிகழ்வு

## கனடா இந்து மாமன்றத்தின் புதிய நிருவாகிகள்

தலைவர்: பண்டித - புலவர்: வீ. வ. நல்லதம்பி (நம்பி)
உபதலைவர்: திரு சுப்பிரமணியம் ஆறுமுகம்
திரு கனக. மனோகரன் - சட்டத்தரணி
செயலாளர் திரு ந. விஜயபாலன் CGA
உபசெயலாளர் திரு. T. தங்கவேலாயுதபிள்ளை
பொருளாளர் திரு சபா. வரதராசா
உபபொருளாளர் திரு. கே. ஜி. சிவானந்தசிங்கம்

நிருவாகஉறுப்பினர்: திரு. சே. சிறீஜெயநாதன்
திரு. எஸ் பொன்னுச்சாமி
திரு. வி. க. புகழேந்தி
திருமதி. மனோன்மணி தனபாலசிங்கம்
திரு க. நாகசிவகுமாரன்

மலர்க்குழுவினர் திரு. ச. சிவலோகநாதன் (ஆசிரியர்)
திரு க. ந. ஜெயசிவதாசன்
திருமதி. இராஜேஸ்வரி கந்தையா

புரவலர் (Chief Patron) டாக்டர் அ. சண்முகவடிவேல் அவர்கள்
டாக்டர் சண் சுந்தர் அவர்கள்

**குறிப்பு:** அங்கத்துவ சந்தா கனடிய டொலர் 25
இன்றே உறுப்பினராகி அன்னை தமிழ் - சமயத்திற்கு ஆக்கம் அளிப்பீர்

உலகளாவிய தமிழ் - சமய வெளியீடு. சைவ நீதி ஆண்டிற்கு மூன்று இதழகள்.
சந்தாதாரராகுங்கள்
வருட சந்தா கனடாவிற்குள் 15 டொலர்
அமெரிக்கா: அமெரிக்க 25 டொலர்
வெளிநாடுகள்: 25 பவுண் (U.K) தபாற் செலவுட்பட

# விசேட அறிவித்தல்

## கனடாவில் உள்ள சைவ ஆலயங்களின் பிரதம நிருவாகிகளுக்கு

ஐயன்மீர்! சைவ நீதி மலரின் முகப்பில் இதற்குமுன் கனடாவிற்கு வெளியே உள்ள பிரசித்திபெற்ற சில ஆலயங்கள், சிவப்பெரியார்களின் படங்கள் இடம்பெற்றன. இனிமேல் இவற்றோடு கனடாவில் அமைந்துள்ள சைவ ஆலயங்களின் படங்களையும் முகப்பில் தனித்தனி போட எண்ணியுள்ளோம். சைவம் உள்நாட்டிலும் வளரவேண்டும். எனவே கனடாவிலுள்ள ஆலய நிருவாகிகள் தத்தம் ஆலயங்களின் படங்களை மலரின் முகப்பு அட்டையில் போடுவதற்கு கனடா இந்து மாமன்றத்துடன் தொடர்பு கொள்ளுவீர்களாக.

வணக்கம்

மலராசிரியர்
5-02-2000

# செயலாளர் அறிக்கை

இனிய தமிழ்-சைவப் பெரியோர்களே!
உங்கள் அனைவருக்கும் கனடா இந்து மாமன்றத்தின் சார்பில் புத்தாண்டு வணக்கத்தையும் பொங்கல்வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வெய்துகின்றேன். கடந்த நான்கு வருடங்களின் பின் கனடா இந்துமாமன்றப் பணிகளை புதிய நிருவாகம் 19-12-1999ல் பொறுப்பேற்றுள்ளது. அதனால் சர்க்கரைப் பொங்கல் திருநாளைப் பொங்கல் திருநாள் அன்று கொண்டாடும் நிலை பின்தள்ளப்பட்டது. ஆயினும் தமிழர் திருநாளைக் கொண்டாடவே வேண்டும் என்ற உந்துதலினால் 5-2-2000 சனிக்கிழமை விழாவைக் கொண்டாட முற்பட்டோம். உங்கள் ஆதரவைக் கடந்த காலங்கள் போல முன்னின்று அளிப்பீர்களாக.

இந்த விழாவிற்கு எமக்கு வருடந்தோறும் பணஉதவியளித்தும் வருகை தந்தும் சிறப்பிக்கும் ரொறன்ரோ நகரசபையினருக்கும் (produces with support of the city of toronto through the toronto arts council) ஆட்ஸ் கவுன்சிலருக்கும் நடைமுறை உத்தியோகத்தினருக்கும் முதலில் நன்றிகூறுகின்றோம். மேலும் சங்க நிருவாகத்தைக் கடந்த காலங்களில் நன்கு நடாத்தி பணிபலவாற்றிய தலைவர், செயலாளர் பொருளாளருக்கும் நிருவாகசபையினருக்கும் பொதுச்சபை அங்கத்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றி உரித்தாகுக. கனடா இந்துமாமன்றம் தமிழ் சைவப்பணிகளுக்காக உருவாக்கப்பெற்ற "ஒரு பெருந்தேர்" இதனைத் தமிழ் சைவப் பெருமக்கள் அனைவரும் வடம்பிடித்து ஒத்திழுக்க வேண்டும். அப்படியானால் தான் அது தன்கடமைகளை மக்களுக்காக வெற்றிகரமாகச் செய்து முடிக்கும். இதைவிடுத்து முன்னுக்கு வந்தவர்கள் முரியட்டும் என்றிருத்தல் கூடாது. நாம் செய்ய வெளிப்பட்டது மக்கள் பணி. இதற்குப் பக்கபலமாக நின்று அனைவரும் பாடுபட வேண்டும். பதவியில் இருந்தால்தான் பணியல்ல. பதவியில் இல்லாவிட்டாலும் தமிழ்-சமயப் பணிகளை நமக்காக நம்மினத்திற்காக எதிர்கால சந்ததியினருக்காகச் செய்தல் வேண்டும். அதுவின்றேல் நலம்செய்யாவிடினும் தீமை செய்யாது இருத்தல் நன்று.

பெரியீர்காள்! கனடா இந்துமாமன்றம் கடந்த ஆறுவருடங்களுக்கு மேலாகத் தமிழ் மக்கள் நலன் கருதிப் பல தமிழ் சமயபாடசாலைகளை வேண்டிய இடங்களில் தகுதியான ஆசிரியர்கள் மூலம் நடாத்தி வருவதுடன் பண்ணிசை பரதநாட்டிய வகுப்புக்களையும் தரம் 9 தொடக்கம் OAC வரையிலான மாணவர்களுக்கு கணித பாடத்தையும் பலருக்குமான சித்திர வகுப்பையும் நடாத்தி வருகின்றது. சர்வதேச தரத்திற்கு வளர்ந்திட்ட "சைவநீதி" மலரை வெளியிட்டு வருகின்றது. சமய- கலை-கலாச்சார விழாக்களை ஆண்டுதோறும் நடாத்திவருகின்றது. உலகே பாராட்டும் வகையில் ஏழாவது உலகசைவமகாநாட்டை நடாத்தி வெற்றிகண்டது. இன்னும்பல. இனிமேல் இவற்றுடன் ஒரு பொது நூலகம், காரியாலயம் அமைப்பதுடன் யோகாசனம், சைவசித்தாந்த வகுப்புக்களையும் தமிழ்-சமயப் பொதுப்பரீட்சைகளையும் நடாத்திப் படிப்படியாக மக்களுக்கு வேண்டிய பொதுப்பணிகளைச் சிறப்பாகச் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளதுடன் தாயகமக்களுக்கும் ஏற்ற பணிசெய்ய எண்ணியுள்ளது. அனைத்திற்கும் உங்கள் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம்.

"மண்ணில் நல்ல வண்ணம்
வாழலாம் வைகலும் எண்ணில்"
வணக்கம்

ந.விஜயபாலன்
செயலாளர்
கனடா இந்துமாமன்றம்

05-02-2000

"அம்மா புகட்டிய ஆன்ற தமிழிருக்க
'மம்மி' என்றழைத்து மாண்புறுதல் கூடாது."

"சொந்த மொழியைச் சுவைத்துப் புலமைபெற்று
வந்த மொழிபயிலல் மாண்பாகும்."

நன்றி.

உ

*சிவமயம்*

# பஞ்சபுராணம்

**தேவாரம்: சுந்தரமூர்த்திநாயனார் திருத்தலம்: திருக்கச்சியேகம்பம் பண்: தக்கேசி**

*திருச்சிற்றம்பலம்*

ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
ஆதி யையம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
என்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

**திருவாசகம்: திருச்சதகம் - மெய்யுணர்தல் - மணிவாசகர்**

பரந்துபல் லாய் மல ரிட்டுமுட்
டாதடி யேயிறைஞ்சி
யிரந்தவெல் லாமெமக் கேபெற
லாமென்னு மன்பருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன்
வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை
யேத்த முழுவதுமே.

**திருவிசைப்பா - திருமாளிகைத்தேவர் பண் - பஞ்சமம்**

உயர்கொடி யாடை மிடைபட லத்தின்
ஓமதூ மப்பட லத்தின்
பெயர்நெடு மாடத்(து) அகிற்புகைப் படலம்
பெருகிய பெரும் பற்றப் புலியூர்ச்
சியரொளி மணிகள் நிரந்துசேர் கனகம்
நிறைந்தசிற் றம்பலக் கூத்தா!
மயர்வறும் அமரர் மகுடந்தோய் மலர்ச்சே
வடிகள்என் மனத்துவைத் தருளே.

**திருப்பல்லாண்டு - சேந்தனார்**

சேலுங் கயலுந் திளைக்கும்
கண்ணார் இளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்
குமென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியாநெறி
தந்து வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்து நின்
றானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

**திருப்புராணம் - சேக்கிழார்**

சோதிமுத்தின் சிவிகை சூழ்வந்துபார்
மீதுதாழ்ந்து வெண்ணீற்றொளி போற்றிநின்
றாதியாரருளா தலில் அஞ்செழுத்
தோதி ஏறினார் உய்ய உலகெலாம்.

*திருச்சிற்றம்பலம்*

### திருமந்திரம் - திருமூலர்

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வாரில்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே.

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.

### கந்தரலங்காரம் - அருணகிரிநாதர்

அடலருணைத்திருக் கோபுரத் தேய்ந்த வாயிலுக்கு
வடவரு கிற்சென்று கண்டுகொண் டேன்வரு வார்தலையிற்
றடபடெ னப்படு சூட்டுடன் சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுச் கிளைய களிற்றினையே.

படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப் பதாகையென்னுந்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்
துடைபட்ட தண்ட கடாக முதிர்ந்த துடுபடல
மிடைபட்ட குன்றமு மாமேரு வெற்பு மிடிபட்டவே

ஒருவரைப் பங்கி னுடையாள் குமார னுடைமணிசேர்
திருவரைக் கிங்கிணி யோசை படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிபட் டெட்டுவெற் புங்கனகப்
பருவரைக் குன்று மதிர்ந்தன தேவர் பயங்கெட்டதே.

கும்பாச வாழ்க்கையுட் கூத்தாடு மைவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை யீடேற்று வாயிரு நான்கு வெற்பு
மப்பாதி யாய்விழ மேருங் குலுங்கவிண் ணாருமுய்யச்
சப்பாணி கொட்டிய கையா றிரண்டுடைச் சண்முகனே.

### கந்தரனுபூதி

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா வுபதேச முணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே.

கருதா மறவா நெறிகாண வெனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூர விபா டணனே.

காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே.

**அபிராமி அந்தாதி - (முற்றொடர்ச்சி)**

ஆளுகைக் குன்ற னடித்தா மரைகளுண் டந்தகன்பான்
மீளுகைக் குன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேயன்று முப்புரங்கண்
மாளுகைக் கம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே. 39

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய வெம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சிற்
காணுதற் கண்ணிய எல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய வெண்ணமன் றோமுன்செய் புண்ணியமே. 40

புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தா
னண்ணியிங் கேவந்து தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநஞ் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி இணைகொண் டிறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட வல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே. 42

# சகல கலாவல்லி மாலை

வெள்ளைக் கமலத் திலே, – அவள்
வீற்றிருப்பாள், புகழேற்றிருப் பாள்,
கொள்ளைக் கனியிசை தான் – நன்கு
கொட்டுநல் யாழினைக் கொண்டிருப்பாள்,
கள்ளைக் கடலமுதை – நிகர்
கண்டதோர் பூந்தமிழ்க் கவிசொலவே
பிள்ளைப் பருவத் திலே – எனைப்
பேணவந் தாளருள் பூணவந் தாள்.

வேதத் திருவிழி யாள், – அதில்
மிக்கபல் லுரையெனுங் கருமையிட்டாள்
சீதக் கதிர்மதி யே – நுதல்
சிந்தனையே சூழ லென்றுடையாள்
வாதத் தருக்க மெனுஞ் – செவி
வாய்ந்தநற் றுணிவெனுந் தோடணிந்தாள்,
போதமென் நாசியினாள் – நலம்
பொங்குபல் சாத்திர வாயுடையாள்.

கற்பனைத் தேனித ழாள், – சுவைக்
காவிய மெனுமணிக் கொங்கையினாள்,
சிற்ப முதற்கலைகள் – பல
தேமலர்க் கரமெனத் திகழ்ந்திருப்பாள்,
சொற்படு நயமறிவார் – அசை
தோய்ந்திடத் தொகுப்பதின் சுவையறிவார்
விற்பனத் தமிழ்ப்புல வோர் – அந்த
மேலவர் நாவெனும் மலர்ப்பதத்தாள்.

## அபிராமியம்மை பதிகம்

வாடாமல் உயிரேனும் பயிர்தழைத் தோங்கிவர
அருண்மழை பொழிந்தும் இன்ப
வாரிதியிலே நின்ன தன்பெனுஞ் சிறகால்
வருந்தா மலேய ணைத்துக்
கோடாமல் வளர்சிற் றெறும்புமுதல் குஞ்சரக்
கூட்டமுத லான சீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக்
குறையாம லேகொ டுத்து
நீடாழி யுலகங்கள் யாவையும் நேயமாய்
நின்னுதர பந்தி பூக்கும்
நின்மலீ! அகிலங்க ளுக்கன்னை யேயுன்னை
நீலியென் றோது வாரோ
ஆடாய நான்மறையின் வேள்வியால் ஓங்குபுகழ்
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி ! அபிராமியே!

## தாயுமான சுவாமி பாடல்

அங்கிங்கெனாதபடி எங்கும்பிரகாசமாய்
ஆனந்தபூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள்வெளிக்குளே
அகிலாண்டகோடியெல்லாம்
தங்கும்படிக்கிச் சைவத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாமனின்றதெது சமயகோடிகளெலாந்
தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவு நின்றதெது
எங்கணும்பெருவழக்கா
யாதினும்வல்லவொரு சித்தாகியின்பமாய்
என்றைக்கு முள்ளதெதுமேல்
கங்குல்பகலுறநின்ற வெல்லையுளதெதுஅது
கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாமோனவுரு வெளியதாகவுங்
கருதியஞ்சலிசெய்குவாம்.

## பட்டினத்தார் பாடல்

பிறக்கும்பொழுது கொண்டுவந்த தில்லைப் பிறந்துமண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை யிடைநடுவில்
குறிக்குமிச் செல்வஞ் சிவன் தந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே.

## மூத்த திருப்பதிகம்

சூடு மதியம் சடைமேல் உடையார் சுழல்வார் திருநட்டம்
ஆடும் அரவம் அரையில் ஆர்த்த அடிகள் அருளாலே
காடு மலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடி ஆடப் பாவம் நாசமே

## அற்புதத் திருவந்தாதி

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் – நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

## கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி

சொல்லும் பொருளுமே தூத்திரியும் நெய்யுமா
நல்லிடிஞ்சில் என்னுடைய நாவாகச் – சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேல்இருந்த
பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று.

## நடராஜப் பத்து

தாயாரிருந்தென்ன தந்தையுமிருந்தென்ன
தன்பிறவி யுறவுகோடி
தனமலை குவித்தென்ன கனபெயரெடுத் தென்ன
தாரணியை யாண்டுமென்ன
சேயர்களிருந் தென்ன குருவா யிருந்தென்ன
சீஷ்யா களிருந்துமென்ன
சித்து பலகற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது மூழ்கினும் என்னபலன் எமனோலை
ஒன்றைக்கண்டு தடுக்கவுதவுமோ
இதுவெலாம் சந்தையுற வென்றுதான்
உன்னிருபாதம் பிடித்தேன்
யார்மீது மென்மிருந்தாலு முன்கடைக்கண்
பார்வை யதுபோதும்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

## திருப்புகழ் - அருணகிரிநாதர்

நிறைமதி முகமெனு மொளியாலே
நெறிவிழி கணையெனு நிகராலே
உறவுகொள் மடவர்கள் உறவாமோ
உனதிருவடியிணை யருள்வாயே
மறைபயிலரிதிரு மருகோனே
மருவலரசுரர்கள் குலகாலா
குறமகள் தனைமணம் அருள்வோனே
குருமலைமருவிய பெருமாளே.

## சேக்கிழார்

வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வவெண்டிரு நீறு சிறக்கவே.

## திருஅருட்பா

தடித்தஓர் மகனைத் தந்தைஈண் டடித்தால் தாயுடன் அணைப்பள் தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன்இங் கெனக்குப் பேசிய தந்தையும் தாயும்
பொடித்திருமேனி அம்பலத் தாடும் புனிதநீ ஆதலால் என்னை
அடித்ததுபோதும் அணைத்திடல் வேண்டும் அம்மைஅப் பாஇனி ஆற்றேன்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் **சைவநீதி** விளங்குக உலகமெல்லாம்.

# நால்வர் காட்டிய வழியும்.....

சிவஸ்ரீ. ப. கிருஷ்ணராச குருக்கள்



திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் - திருத்தலம்: திருத்தருமபுரம் பண்:யாழ்முரி

*திருச்சிற்றம்பலம்*

மாதர்ம டப்பிடியும் மட வன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மக டுணையென மகிழ்வர்
பூதவி னப்படைநின் றிசை பாடவு மாடுவ
ரவர் படர் சடைந் நெடு முடியதொா புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங் கும லர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயி றருமபு ரம்பதியே.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் - திருத்தலம்: திருத்தோணிபுரம் பண்:பழந்தக்கராகம்

சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் றிருநாம மெனக்கொருகாற் பேசாயே.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் - பண்:பியந்தைக்காந்தாரம்

கொத்தலர்குழலியோடு விசையற்குநல்கு
குணமாயவேடவிகிர்தன்
மத்தமுமதியுநாக முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
புத்தரொடமணைவாதி லழிவிக்குமண்ண
றிருநீறுசெம்மைதிடமே
அத்தகுநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே



திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தலம்: திருவதிகைவீரட்டானம் பண்: கொல்லி

முன்னம் மடியே னறியா மையினான்
முனிந்தென் னைநலிந் துமுடக் கியிடப்
பின்னை யடியேன் உமக்கா ளும்பட்டேன்
சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்
தன்னை யடைந்தார் வினைதீர்ப் பதன்றோ
தலையா யவர்தங் கடன் ஆவதுதான்
அன்ன நடையா அதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தலம்:திருவொற்றியூர் பண்: திருநேரிசை

மனமெனும் தோணிபற்றி மதியெனும் கோலையூன்றிச்
சினமெனும் சரக்கையேற்றிச் செறிகட லோடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணாது
உனையுனு முணர்வைநல்கா யொற்றியூ ருடையகோவே.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தலம்: திருவதிகைவீரட்டானம் பண்: காந்தாரம்

மடமான் மறிபொற்கலையு மழுப்பாம் பொருகையில் வீணை
குடமால் வரையதிண் டோளுங் குனிசிலைக் கூத்தின் பயில்வும்
இடமா றழுவிய பாக மிருநில னேற்ற சுவடும்
தடமார் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை.

# நால்வர் காட்டிய வழியும்.....



சுந்தரமூர்த்திநாயனார் - திருத்தலம்: திருவாரூர் பண்:காந்தாரம்

*திருச்சிற்றம்பலம்*

கரையுங்கடலு மலையுங் காலையுமாலையு மெல்லாம்
உரையில்விரவி வருவா னொருவனுருத்திர லோகன்
வரையின்மடமகள் கேள்வன் வானவர்தானவர்க்கெல்லாம்
அரையனிருப்பது மாரூ ரவரெம்மையுமாள்வரோ கேளீர்.

சுந்தரமூர்த்திநாயனார் - திருத்தலம்: திருவாரூர் பண்:செந்துசுருத்தி

மீளா வடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போ லுள்ளே கனன்று முகத்தான் மிகவாடி
ஆளா யிருக்கு மடியார் தங்க ளல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே.

சுந்தரமூர்த்திநாயனார் - திருத்தலம்: திருப்பாண்டிக்கொடுமுடி பண்:பழம்பஞ்சுரம்

அஞ்சினார்க்கர ணாதியென்றடி
யேனுநான்மிக வஞ்சினேன்
அஞ்சலென்றடித் தொண்டனேற்கரு
ணல்கினாய்க்கழி கின்றதென்
பஞ்சின்மெல்லடிப் பாவைமாகுடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
நஞ்சணிகண்ட நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சி வாயவே.



மாணிக்கவாசகசுவாமிகள் - திருத்தலம்: திருத்தில்லை

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும்நீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

மாணிக்கவாசகசுவாமிகள் - திருத்தலம்: திருத்தில்லை

சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிபட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் உரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே.

திருவேசறலுவு

மாணிக்கவாசகசுவாமிகள் - திருத்தலம்: திருத்தில்லை

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.

# தேவர்காட்டிய நெறியும்.

**இல்லறவியல் - அதிகாரம் 13 - அடக்கமுடைமை**

121. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.
(க.ரை): அடக்கமானது ஒருவரை உயர்த்தித் தேவருள் சேர்த்துவிடும். அடக்கமில்லாதிருந்தால் பொல்லாத இருள் போன்ற தீயவாழ்வில் செலுத்திவிடும்

122. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூ உங் கில்லை உயிர்க்கு.
(க.ரை) அடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு போற்றிக் காத்தல் வேண்டும். அந்த ஆக்கத்தை விட மேலான ஆக்கம் உயிர்க்கு இல்லை

123. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்.
(க.ரை) அறியவேண்டியவற்றை அறிந்து நல்வழியில் அடங்கி ஒழுகப் பெற்றால், அந்த அடக்கம் நல்லோரால் அறியப் பெற்று மேன்மை பயக்கும்

124. நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.
(க.ரை) தனது நிலையிலிருந்தும் மாறுபடாமல் அடங்கி ஒழுகுவோருடைய உயர்வு மலையினுடைய உயர்வைவிட மிகவும் பெரியதாகும்

125. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து
(க.ரை) பணிவுடையராக ஒழுகுதல் பொதுவாக எல்லோருக்கும் நல்லதாகும். அவர்களுள்ளும் சிறப்பாகச் செல்வர்க்கே இன்னொரு செல்வம் போன்றதாகும்

126. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து
(க.ரை) ஒரு பிறப்பில் ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால், அஃது அவனுக்குப் பல பிறப்பினும் காப்பு ஆகும் சிறப்புடையது.

127. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.
(க.ரை) காக்கவேண்டியவற்றுள் எவ்வெவற்றைக் காக்கா விட்டாலும் நாவையாவது காக்கவேண்டும் காக்கத் தவறினால் சொற்குற்றத்தின் உட்பட்டுத் துன்புறுவர்.

128. ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்.
(க.ரை) தீயசொற்களின் பொருளால் விளையுந்தீமை ஒன்றாயினும் ஒருவனிடம் உளதானால், அதனால் மற்ற அறங்களாலும் நன்மை விளையாமற் போகும்.

129. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.
(க.ரை) தீயினாற் சுட்டபுண் புறத்திலே வடு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால், நாவினால் தீச்சொல் கூறிச் சுடும் வடு என்றும் ஆறாது.

130. கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.
சினம் தோன்றாமல் காத்துக் கல்விகற்று அடக்க முடையவனாக இருக்க வல்ல ஒருவனுடைய செவ்வியை, அவனுடைய வழியில் சென்று அறம் பார்த்திருக்கும்.

# மலராசிரியர் .....

அன்பான தமிழ்ச் சமுதாய உள்ளங்களே! புத்தாண்டு வாழ்த்தும் வணக்கமும் உரித்தாகுக!

உலகம் 2000ம் ஆண்டைப் பெரும் எதிர்பார்ப்போடு நோக்கி நிற்கின்றது. தமிழ் மக்கள் வாழ்விலும் இது ஒரு நல்ல சகுனமாகத் தென்படுகின்றது. எப்படியாகுமோ?

உலகிலே அமைதியும் சமாதானமும் நிலைக்க வேண்டும் என்பதே எல்லோருடைய பெருவிருப்பமுமாகும். ஆனாலும் அவையோ எம்மைவிட்டு விலகிச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. எமது சமயம், பாதகச் செயல்கள் என்று எவற்றையெல்லாம் விலக்கி வைத்ததோ அவையெல்லாம் இன்று மலிந்து அமைதிக்கும் சமாதானத்துக்கும் சவாலாக உள்ளன. இவை நலிந்த நாடுகளில் மலிந்து காணப்பட்டாலும் வளர்ந்த நாடுகளிலும் இன்று ஒரு சவாலாக வந்துள்ளதை நாம் காண்கின்றோம்.

இயற்கையோடு இயல்பாக இயைந்து வாழந்த மனித இனம், செயற்கையான ஒரு மாயையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

விஞ்ஞானத்தின் வேகவளர்ச்சி எமது கலாச்சார அடித்தளங்களை ஆட்டங்காண வைத்துவிட்டது. ஒன்றன் வளர்ச்சி இன்னொன்றின் அழிவிலே என்பது நாம் அறிந்த உண்மை. இயற்கைச் சமநிலைகாலச் சந்ததியினருக்கு நாம் விட்டுச்செல்ல இருப்பது நஞ்சு கலந்த நீரும் காற்றும் நிறைந்த ஒரு சூழலே.

கனடா எல்லாவகையாலும் சிறந்தநாடு. அதன் வளர்ச்சி வேகத்திலே நம்மையும் இயைபுபடுத்தி வளர்த்துக் கொள்ள வேண்டும். அதேநேரத்தில் எமது தனித்துவத்தை நாம் இழக்கலாமா? இல்லை. 2000ஆண்டுகளுக்கு மேலாகப் பேணிக்காத்து வளர்க்கப்பட்ட அருஞ்செல்வங்கள் எமது பாரம்பரிய கலையும், கலாச்சாரங்களுமே. அவற்றை நாம் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற போக்கில் போக விடலாமா?

மனிதம் அழிந்து செல்லும் இந்த நேரத்தில் நாம் அவசரமாகச் செயற்பட வேண்டி உள்ளது. நம் இளம் சிறார்கள் வேறுகலாச்சாரங்களில் தம் காலடியை ஊன்றிப் பதிக்க முன் அவர்களை நேரான சீரான பாதையில் இட்டுச் செல்லவேண்டிய பாரிய பொறுப்பு சமகாலத்தே வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவருடைய கடமையுமாகும். அடுத்த வீட்டானை அறியாத கலாச்சாரத்தை விட்டு ஒவ்வொருவரும் எனது சகோதரன் சகோதரி என்ற விரிந்த பரந்த நோக்கோடு செயற்பட வேண்டும். அறிவும் ஆற்றலும் விடாமுயற்சியும் தமிழனுக்கு இறைவன் கொடுத்த கொடை. குறுகிய காலத்திலே அளப்பரும் வளர்ச்சியைக் கனடாவிலே கண்ட நாம் ஏன் இப்பணியிலும் முன்னின்று உழைத்து எம் பாரம்பரியத்தை இன்னும் நிலைத்து நிற்க உழைக்க முடியாது. நிறையவே பற்பல அமைப்புக்கள் செயற்பட்டுக் கொண்டிருப்பது பெருமகிழ்ச்சிக்குரியது. எல்லாம் ஒரே, நோக்கமாகத்தான் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் பல சிறு ஆறுகளைவிடப் பேராறு பெருமை சேர்க்கும் தானே. என்றோ எடுத்திருக்கப்பட வேண்டிய இனவிடுதலை ஏன் இன்று இழுபட்டுக் கொண்டிருக்கின்றது. சற்றே சிந்தியுங்கள்.

நாம் அன்று அங்கு நடந்த சரியான பாதையை இங்கும் அமைத்துச் சரியான வழியிலே நடத்தல் வேண்டும். பணஆசையோ பதவி ஆசையோ இன்றிச் சமூகப்பணியாற்ற வேண்டும். சட்டத்திற்கு அமைவாகவும் ஒற்றுமையாகவும் நடக்க வேண்டும். ஸ்தாபனங்கள் நல்லெண்ணத்துடன் ஒன்றுபட்டியங்கினால்தான் சமூகப்பணி பயனை அளிக்கும். இதைவிடுத்து மொட்டைக் கடிதங்களை எழுதியும் நொட்டை சொல்லியும் கோள்கள் சொல்லி ஆளையாள் முடிந்துவிட்டுக் கூத்துப் பார்ப்பதும் சமுதாயத்திற்கு உதவாத பண்புகளாகும். பிழை செய்பவனைக் கண்டுகொள்ளமுடியாவிடினும் அவனை இறைவன் தண்டிப்பான். பிழையான வழியில் செல்பவன் சரியான பதிலைக் கூறவேண்டும். இதை விடுத்துத் தன்பிழையை மற்றவன்மீது சுமத்தக்கூடாது. மறைந்து நின்று கொண்டு கோள்சொல்லிக் கொழுவிவிடுவதா மனிதப்பண்பு. சிலர் தொடர்ந்து மொட்டைக் கடிதங்கள் எழுதுவதில்தான் வினைக்கெடுகின்றார்கள். இவர்கள் சமய-சமூகஸ்தாபனங்களிலிருந்து விலகியிருக்க வேண்டும். ஸ்தாபனத்திலிருந்தால் அதற்கு மரியாதையில்லை. பதவிக்காகப் பழிகளைச் செய்பவன் மனிதனா? எனவே, நமது சமுதாயம் தவறுகளைப் ஆற்றாது நல்ல பாதையில் நடக்க வேண்டும். பொதுச்சேவை மக்களுக்கே. உழைப்பிற்கும் பிழைப்பிற்கும் மதிப்புக்கும் அல்ல. நற்பணிக்கு எல்லோரும் ஒத்து உழைக்க வேண்டும். முடியாதெனில் ஒதுங்கி இருத்தல் நன்று.

எனவே இரண்டாயிரம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கப்போகும் தமிழ் இனம் தலைநிமிர்ந்து தனக்கே உரித்தான பாதையில் ஒற்றுமை என்ற கொடியின் கீழ் சென்றிடப் பிரகடனம் செய்து கொள்வோமாக.

எதிர்காலச் சமுதாயத்தை நாம் உதிரிகளாக்கக்கூடாது. இப்பொழுதிருந்தே அணைபோட்டு நன்நிலைப்படுத்த வேண்டும். இல்லையேல், நாம் சமுதாயத் துரோகிகளாகி விடுவோம். காலங்காலமாகக் கல்விப்பணியில் சமய - சமூகப்பணியில் திறமையாக உழைத்து வாழ்வின் சிறப்பை அனுபவித்தவர்கள் நாங்கள். உள்ளத்தால் பொய்யாதொழுகியவரும் நாங்களே. தமிழன் சீர்கெட வாழ்ந்ததுமில்லை, சீர்கெட்டு வாழ்ந்ததுமில்லை. சிந்தியுங்கள், இரண்டு தசாப்த காலமாகத் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் போர் பல இன்னுயிர்களைக் காவுகொண்டு

விட்டது. பலரை ஊனப்படுத்திவிட்டது. விதவைகளாக, அநாதைகளாகப் பலர் துன்பத்தை அனுபவிக்கிறார்கள். நாம் இன்று பல்லாயிரம் மைல்களுக்கப்பால் தப்பிவாழ்ந்தாலும் எம்பரமனின் முதுகில் பட்ட பிரம்படி உலக உயிரினங்களின் முதுகில் பட்டது போல, நாமும் துன்பப்பட்டுக் கொண்டேயிருக்கிறோம். அல்லல் பட்டே வதங்குகின்ற அந்த மக்களின் துன்பம் நீங்கி உரிமை பெற்றுவாழ, அமைதிபெற்று வாழ, ஆனந்தமாய் வாழ இறைவனை வேண்டுகிறோம்.

ஐந்தாண்டுகளுக்கு மேலாக சமய - சமூகத் தமிழ்ப்பணிகளில் முன்னின்று உழைத்த கனடா இந்துமாமன்றம் உலக சைவப் பேரவையின் ஏழாவது சைவ மாநாட்டை கனடாவில் உள்ள சைவ ஸ்தாபனங்களுடன் இணைந்து நடாத்திப் பெருஞ் சிறப்புக் கண்டது. இதற்காக உழைத்த அனைத்து உள்ளங்களையும் வெகுவாகப் பாராட்டுகிறது சர்வதேசப் பத்திரிகையின் தரத்தைப் பெற்று மிளிரும் **சைவநீதி.** வாழ்க! வையகம். வளர்க இந்துமாமன்றம்.

ச. சிவலோகநாதன்
க. ந. ஜெயசிவதாசன்
இராஜேஸ்வரி கந்தையா
மலர்க்குழுவினர்

50, TUXEDO COURT, #1121
SCARBOROUGH, ON.
M1G 3S8 CANADA
TEL/FAX: (416) 431-2460

14–01–2000

## இன்னமுதப் புத்தாண்டே
## இருபத்தோராம் நூற்றாண்டே வருக.

இன்றெமக்கு இனிதாற்ற வருகின்ற இரண்டாயி ரமான ஆண்டே!
நன்றியுடன் உம்மைநாம் வரவேற்று நிற்கின்றோம் வருக! வாழ்க!!
சென்றுபோன ஆண்டிற்கு விடையீந்தோம் சீராகச் செல்க வென்றே
ஒன்றுபட்டு உமைமேலும் வாழ்த்திவர லாறெழுத வாய்ப்பைத் தாரீர்.

என்று வரும் இனிதான எதிர்காலம் தமிழர்க்கென் றெண்ணி நிற்க
இன்றுவரும் இரண்டாயி ரத்திலென எதிர்கால முணர்ந்தோர் சொன்னார்
நன்றியுடன் எதிர்காலம் சீராகச் செயற்பட்டு வரவெம் வாழ்த்து
ஒன்றியநல் லுணர்வோடு ஊருக்கும் போய்வருவோம் உரிமை யோடு.

ஈழவள நாடுவிட்டு எங்கெங்கோ தமிழ்மக்கள் இருக்கின் றார்கள்
வாழவழி யாவருக்கும் வகைசெய்ய வேண்டுகிறோம் வைய முய்ய
ஆளுகின்ற அரசாட்சி அமையட்டும் அன்னோர்க்கிவ் வாண்டு தன்னில்
ஏழமையே இரிந்தோட இரட்சிப்பான் தெய்வமென வேண்டி நிற்போம்.

நல்லநல்ல பெருநாளை நம்மவரின் பண்டிகையை நன்று செய்தோம்
எல்லவரும் மகிழ்வோடு உண்டுடுத்து உவந்தோமே உலகம் போற்ற
வல்லவராய் நல்லவராய் வாழ்ந்தகதை பொய்யல்ல வரலா றாகும்
பல்லுலகும் போற்றுகிற பண்பாடு நந்தமிழர் பண்பா டாகும்.

இன்னமுதப் புத்தாண்டே! இருபத்தோ ராம்நூற்றாண் டாய நாளே!
நன்னிமித்த வழியாவும் நல்கிடுவாய் நலமாக நாங்கள் வாழ
மன்னுயிர்கள் அனைத்திற்கும் மகிழ்வூட்டி மாணிக்க மலையாய் நின்றே
தன்மானத் தமிழ்பேசுந் தாரணிக்கு தந்துதவு தகுந்த யாவும்.

தமிழன்றன் தாகமது தனியாட்சி தரச்செய்யின் தாகம் தீரும்
அமிழ்தான அதற்கென்றே அழிகின்றார் அலைகின்றார் ஆண்டாண் டாக
தமிழோடு சமயங்கள் தக்கநிலை பெறவேண்டும் தருமம் ஓங்கி
எமையாளு மீசனடி எந்நாளுந் தொழவேண்டும் எவரும் என்றும்.

ஆண்டிரண்டு ஆயிரமாய் ஆகியது அனைவோரும் அன்பாய் வாழ்க!
ஈண்டெமது இருள்நீங்கி ஒளிபெற்று ஈசனடி ஏந்தி வாழ்வோம்
வேண்டுவன வெல்லாமே வேண்டியாங்கு எய்திடலாம் வேதன் காப்பு
ஆண்டடிமை அற்றுப்போம் அறமோச்சி அன்பேசெய் அனைத்தும் வெற்றி.

என்றும் வாழிய! சைவநீதி

# ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா

**திருமணம் மற்றும் இந்துமத கிரியைகள் சேவை**

## சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஸ்ணராஜ குருக்கள்

இந்து மதகுரு, திருமணப்பதிவதிகாரி – கனடா

**5556 Whistler Cresent, Mississauga, ON.**
**TEL: (905) 501-0011**

**(905) 501 0011**



**(905) 501 0011**

முத்து மணவறை, தலைநகை, தலைப்பாகை, மண்டப அலங்காரம், கல்யாண பூஜைக்குரிய பொருள்கள், கல்யாண மண்டபம் (மரீனா), திருமணம், பதிவுத் திருமணம், புண்ணியா வாசனம், கடைத்திறப்பு விழா, வீடு குடிபுகுதல், சிரார்த்தம், பூப்புப்புனித நீராட்டு விழா

நவீன முறையிலான மின் அலங்காரம், மண்டப சோடனை அலங்காரம், அழகான தரமான முறையில் அமைக்கப்பட்ட முத்து மணவறை, நவீன வடிவமைப்பிலான கதிரை, மேசைகளுடன் மண்டபத்திலேயே சிறந்த உருசி மிக்க சைவ உணவு அனைத்தும் ஒரே இடத்தில் அமையப்பெற்ற நான்கு அடுக்கு மாடி

**வாகனம் நிறுத்தும் வசதிகள் உண்டு**

# (905) 501 - 0011

# The Gayatri Mantra

The Gayatri mantra is the universal prayer enshrined in the vedas, the most ancient scriptures of man. Krishna declares 'who ever' without any qualifying words limiting it to one class or sex'.

The Gayatri Mantra is a prayer that can well be spoken with yearning by men and women of all creads and climes in all centuries Repetition of this mantra will develop the intelligence.

Om
BHUR BHUVA SVAHA
TAT SAVITUR VARENYAM
BHARGO DEVASYA DHEEMAHI
DHIYO YONAH PRACHODAYAT

We meditatate on the trancendal glory of the deity supreme who is inside. The heart of earth inside the life of the sky and inside the soul of Heaven, Stinulate. Stimute and illumine our minds.

Gayatri Mantra is the elaborate of the Pranava sabda or OM

Gayatri Mantra can be translated as follows:-
Om-Para Brahman
Bhur - Bhu Loka or Physical plane (earth)
Bhuba- Bhubva loka the middle world (space)
Svaha-Swarca Loka heaven the land of God or Brahman
Savitur- that from which all that is born
Varenyam- fit to be worshipped
Bargo- the radience, the spiritual effulgence or light that bestows wisdom
Devasya-Divine reality
Deemahi- We meditate
Dhiyo- Buddhi intellect
Yo - which , Nah- our
Prachodayat- Enlighten

This mantra is known from the time of sages Vasistar and Visvamitra.

The Gayatri mantra is the mother of the Vedas it has immence powers Gayatri is present where ever the mantra is chanted. One who practices putiry and harmony of thought word and deed will have Gayatri, Savitri and Caraswathy residing in him.

Gayatri is the master of senses. Savitri is the master of Prana. Saraswathy is the Goddess of speech

The Gayatri Mantra is the key to the opening the door of cosmic conciousness.

The Gayatri mantra should be chanted three times or Sandhya Kall, that is to say the meeting point between night and day, morning and evening, day and night. These times are important for spiritual pratices or Sadana, or at any times any where.

The Gayatri Mantra has been given to us as the third eye, the inner vision, to real Brahman. The Gayatri Mantra is a treasure and we must guard it throughout our lives, if chanted with correct accent the atmosphere around is visibly illumined by the vibrations produced.

To one who chants the Gayatri Mantra regularly and with faith it relieves one form disease, it ward off all misery and ful fills desire.

The result will be incalculable. The sincere seeker will have the light of the infinite, the delight of the eternal and the life of the immortal.

Subtle is the path to Moksa liberation hard is the path to liberation but a genuine soul can reach the goal solely by meditation on the Gayatri Mantra when one is freed from the fetters of ignorance one grows into the supernal glory of the transcend self. Liberation can be achieved must be achived while the seeker of the soul is in the body. To fail to reali God on earth is to swim in the sea of ignorance with two more swimmers ignorant birth and shamely death. Liberation attained the bond of grief destroyed before liberation one should sing like the Tamil Saints.

"வாழ்வாவது மாயம் இது
மண்ணாவது திண்ணம்"

With inspiration a seeker sees truth with as piration a seeker realises the truth with realisation a seeker becomes the truth.

The Ggayatri Mantra is eternal knowledge divine, when this knowledge dawns in a seeker's heart, he need not seeek anything else in this world or in heaven. He reveals what he achieves, He manifest what he reveals.

The Gayatri Mantra is dedicated to Savitra. the root of the word Savitr is su to createor to loose forth. This manTra is also known as the savitra mantra for savitri is the sakti of savit. Savitrais regarded as Brahman Vishnu and shiva.

Brahma as creator with brahm as his Sakthi Vishnu the preser with his sakthi as Vaishnavi and

shiva or Rudra the destroyer with his sakthy Rudrani. The eagle is the vehicle of bird of vishnu. The swan is the vehicle bird of Brahma, the bull is the vehicle of Shiva.

The Gayatri mantra is the divine magnetic needle. The magnetic needle points to the north since the ship does not loose its direction. The Gayatri mantra always points to the trancenda height. of the supreme. Hence the seEker does not miss his goal 'existance consciousnes, bliss.

Time has come for the vedas and the Gayatri mantra to be propagated among all as before irrespective of caste creed sex or religion.

The vedas emphasise the performance of Gayatri puraschara and Gajartriyajna for peace, individual and international.

May the universal mother bless the entire world with trascendal peace.

'ஆழ்கதீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே"
'குறைவிலாது உயிர்கள் வாழ்க"
'மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்."

**சான்றோர் சொல்லமுதம்**

காலை நேரப் பிரார்த்தனையில் இருபத்தொரு தடவைகள் 'ஓம்' என்று சொல்லுகிறோம். இதற்கு ஒரு தத்துவப் பின்னணி உண்டு. ஐந்து கர்மேதிரியங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து பிராணன்கள், ஐந்து கோசங்கள், பிரார்த்தனையைக் கூறும் சாதகன் ஆகியவற்றைச் சேர்த்தால் இருபத்து ஒன்று ஆகிறது. இருபத்தொரு தடவை ஓம் என்று சொல்லும்போது இவை அனைத்தும் தூய்மை அடைகின்றன. ஜீவதத்துவம் பரதத்துவத்துடன் ஒன்றிப் போகிறது. இருபது குதிரைகளை அடக்கி ஒடுக்கும் ஒரு சாதகனாக மனிதன் உருவெடுக்கிறான். மூன்று முறை சாந்தி என்று கூறும்போது பூரணமான அமைதி கிடைக்கிறது. முதல்முறையில் உடலும், இரண்டாவது முறையில் உள்ளமும், மூன்றாவது முறையில் ஆத்மாவும் தூய்மை அடைகின்றன. இந்தப் பிரணவஜபம் உடலையும் உள்ளத்தையும் உறுதிப்படுத்தி மனத்துக்கு அமைதியை அளித்து அருள் பெறுவதற்கு உதவுகிறது.

'ஓம்' என்பது சப்தப் பிம்மம். அ-உ-ம் ஆகிய மூன்று எழுத்துக்கள் சேர்ந்து 'ஓம்' என்ற சப்தமாக உருவெடுக்கின்றன. 'அ' என்பது தொண்டையிலிருந்தும் 'உ' என்பது உள்நாக்கிலிருந்தும் 'உம்' என்பது உதட்டிலிருந்தும் வெளிப்படுகிறது. ஆனால் 'ஓம்' கார சப்தத்தை எழுப்பும்போது அதற்குரிய சக்தி நாபியிலிருந்து எழுந்து வெளிப்படுகிறது.

'ஓம்' என்பதை மெதுவாகவும், மூச்சை நிறுத்தி மெல்ல மெல்ல விட்டும் உச்சரிக்க வேண்டும். இந்த சப்தம் முதலில் மெதுவாகவும் முடிவில் ஓங்கியும் இருக்கவேண்டும். 'அ' என்பது உறுதியான ஆரம்பமாகவும் 'உ' என்பது தீர்க்கமான மத்தியாகவும் 'உம்' என்பது சிகரமான முடிவாகவும் இருக்க வேண்டும். இப்படி உச்சரிக்கப்படும் 'ஓம்' நமக்குச் சக்தியை அருளவல்லது. பராசக்தியின் பேரருளைப் பெறத் தியானிக்கப்படும் ஸ்ரீ சக்கரத்தில் 'ஓம்' என்பது மையமாக நாயகமாக விளங்குகிறது. அதைச் சுற்றியே மற்ற சக்திப் பரிணாமங்கள் அமைந்துள்ளன. மனிதனும் அதேபோலத் தனது பிரார்த்தனையில் 'ஓம்' என்பதை மையமாக வைத்து அதைச் சுற்றிலும் தனது தியானத்தை அமைத்துக் கொள்ள வேண்டும்

மனிதனைக் காப்பாற்றுவது மந்திரம். மனிதனின் மனத்தில் உறுதியை நிலவச் செய்வது மந்திரம். இந்த மந்திர ஜபத்துக்கு ஆணிவேராக அமைந்திருப்பது பிரணவ மந்திரமான 'ஓம்'. பிரணவ சாதனையில் மூச்சை இழுப்பதும் வெளியே விடுவதுமான யோகப் பயிற்சியுடன் இது ஒன்றி உடலையும் உள்ளத்தையும் உறுதிப்படுத்துகிறது. - **பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா**

இரும்இரும் என்று சொன்னீர் ஏற்குமோ ஏழை யேற்கு
தருபொருள் உணர்ந்து சைவ சமயமும் அனைத்தும் நீங்கி
மருள்தரும வினையும் நீங்கி பாசிலா உண்மை ஞானம்
பொருந்தினர் இருப்பர் பின்பு பொறாதவர் இறப்பர் தானே – திருவள்ளுவர்

கருத்துரை: என்னை அமர்ந்திருக்குமாறு நீவிர் சொன்னீர், எளியவனாகிய எனக்கு அது பொருத்தமாகுமோ? மேலான நல்ல கதியை அடையுந் தன்மை அறிந்து சைவம் முதலான சமயங்கள் அனைத்தையும் கடந்து மயக்கத்தைத்தரும் மலங்கள் அனைத்தையும் விலக்கி குற்றம் இல்லாத உண்மை ஞானம் பெற்றவர்கள் நிலையான இடத்தில் அழிவின்றி இருப்பர். உண்மையான ஞானத்தை அடைந்தும் அது நன்கு கைவரப் பெறாதவர்கள் மரணத்தை அடைவர்.

# Universality of Hinduism

**A.C. Nadarajah. B.A. (Lon)**

Swami Vivekananda speaking about Hinduism said" Unity in variety is the plan of nature, and the Hindu has recognised it. Every other religion lays down certain fixed dogmas and tries to force society to adopt them. It places before society only one coat which must fit Jack and John or Henry all alike. If it does not fit John or Henry he must go without a coat to cover his body".

Quot homisces tot sententies (as many men, so many opinions) is an ancient saying. There can be unity but no uniformity in thinking; that is why many different views find accommodation in the Hindu religion. Each one has his own conception of God and of what kind of activity is good for his spiritual progress. It was in this context that Swami Vivekanada once said: 'would to God that religions multiplied until every man had his own religion quite separate from that of any other."

One fundamental view Swami Vivekanada wanted to plant in the minds of people is that there was divinity in each one of them, and they should do what was necessary to manifest that divinity. This view is fundamental to Hinduism. Swamy Sivananda in his Practice of Yoga (p. 30) says "The ultimate object of all holy texts is in establishing the identity of the individual soul with Brahman."

As a step towards the establishing of this identity Hinduism suggests Renunciation. Sri Krishna says "Renunciation and selfless action both lead to the highest good". The less a man has, the nearer to God he is. A rich man is further away from God than a poor man. Samadhi or the superconscious state has to be attained through the extinction of desires for objects. Swamy Vivekanada says "Renunciation, renunciation. renunciation let this be the one motto of your lives." Lord Buddha and Jesus Christ emphasised renunciation. Renunciation is said to be the soul of the Upanishads.

Every religion is an attempt by man to establish through worship a relation between himself and a conceptual transcendental subject. In Hinduism this is sought to be done through the various forms of Yoga. Yoga is the method of joining man and God. Yoga is the practical part of Hinduism. Karma Yoga, Bhakti Yoga, Raja Yoga and Gnana Yoga are the principal Yogas. The idea behind the different Yogas is that the Yoga one adopts must fit in with one's temperament. An emotional man can be benefited by Bhakti Yoga while an intellectual man can be benefited by Gnana Yoga. All Yogas ultimately lead to the same place, even as various rivers run through various lands and finally reach the same ocean and lose their identity in it. Both Lord Krishna and Sri Ramakrishna recommend Bhakti Yoga as the best suited for this Kaliyuga. There is hardly anything to prevent non-Hindus adopting Yoga. Yoga has become very popular all over the world as it is the one method by which mind can be controlled and mental peace realised, apart from its main purpose of joining man and God. Sri Aurobindo prefers a synthesis of all Yogas under the name Synthetic Yoga. Before any Yoga is undertaken, Hinduism requires purification of the heart chitta and mind through Yama and Niyama. Yama refers to moral conduct, and Niyama refers to self-discipline.

Swamy Vivekananda stated "We Hindus do not merely tolerate, we unite ourselves with every religion, praying in the Mosque of the Mohamedan, worshipping before the fire of the Zoroatrians, and kneeling to the Cross of the Christian, We know that all religions alike, from the lowest fetishism to the highest absolutism, are but so many attempts of the human soul to grasp and realise the infinite."

At the parliament of Religions in 1893, President C.C. Bonney enumerated ten chief religions of which only five are well known Christianity, Hinduism, Buddhism, Islam and Zoroastrinism. St. John's Gospel has this:- "In the beginning was the word; and the 'word' was with God and the 'word' as with God. The 'word' corresponds to the Naada-Brahman of the Hindus. Various statements of Christ like-

"The Kingdom of heaven is within you"
"I and my father are one."
"Ye shall be perfect as your Father in Heaven is perfect."
"If anyone says I love God, and hates his brother, he is a liar,"

Have great resemblance to Hindu ideas. Christianity is an Eastern religion. It went West and lost its significance. What we see there is not Christianity but Churchianity. It is Magellan who is reported to have said " The church says the earth is flat, but I have seen its shadow on the moon, and I have more confidence even in a shadow on in the Church." Reverend Studert Kennedy published a number of his poems in a book called "The Unutterable Beauty" one of which was "Christ goes to Burmingham." The substance of that poem was that Christ went to Burmingham. He went along the streets. There was rain, there was sun. Nobody gave him shelter. The people passed him by and nobody recognised him,

As far as Buddhism is concerned a European Author stated that Buddha was born a Hindu, lived a Hindu and died a Hindu. Apparently Buddha never realised that he was giving rise to a new religion.

As regards Islam Swamy Vivekananda is reported to have said that of all religions the Muslim religion is the closest to the Hindu religions. Though there has been much conflict between the Hindus and Muslims in India. When one reads the religious literature produced by the Bahai sect of Muslims one sees hardly any difference between them and Hindu religious literature.

The Zoroastians worship fire. So do the Hindus. Siva is said to have appeared as a huge pillar of fire before Brahma and Vishnu. Saivites refer to Siva in their songs as 'Jothy'.

It is said that Druids of the early period in England practised Hinduism. It is also believed that Hinduism is likely to outlive all the other religions. Saiva Sidhanta a branch of Hinduism practised by most Hindus in Sri Lanka has caught the imagination of the Americans. A Saiva Sidhanta Church has been established by an American disciple of our Yoga Swamy in America, and worldwide propaganda for it is being carried on. Mr. M.P. Pandit from Aurabindo Ashram, a first rate scholar is going round the world broadcasting Sri Aurobindo's philosophy, and is well received everywhere. Sri Aurabindo had predicted in 1947 in his independence speech that India will be the fountain head of spirituality for the whole world. Present developments support this view. These are good signs for Hinduism and the world.

They who adore his sacred feet whose grace Gladdens with sudden thrill the fervent heart, High o'er the earth shall soar to endless joy.

"Hinduism deepens the life of spirit among the adherents who belong to it, without affecting its form. All the Gods included in the Hindu pantheon standfor some aspect of the Supreme. Brahma, Vishnu, and Siva bring out the creative will, saving love and fearful judgement of the Supreme. Each of them to its worshippers becomes a name of the Supreme God..... Whatever form of worship is taken up by the Hindu faith it is exalted into the highest. The Multiplicity of divinities is traceable historically to the acceptance of preexisting faith in a great religious synthesis where the different forms are interpreted as modes, emanations, or aspects of the one Supreme. In the act of worship, however, every deity is given the same metaphysical and moral perfections...... That is why from the Rig-Veda Hindu thought has been characterized by a distinctive hospitality. As the Bhagavadgita has it: however men approach me, so do I welcome them, for the path men take from every side is mine'. Hinduism did not shrink from the acceptance of every aspect of God conceived by the mind of man, and of every form of devotion devised by his hear".

DR. S. RADHAKRISHNAN

"Hinduism is unique among the world's religions. We ay boldly proclaim it the greatest religion in the world. To begin with, i is mankind's oldest spiritual declaration, the ery fountainhead of faith on the planet. Hinduism's venerable age has seasoned it to maturity, It is the only religion, to my knowledge which is not founded in a single historic event or prophet, but which itself precedes recorded history. Hinduism has been called the "cradle of spirituality", and the "mother of all religions", partly because it has influenced virtually every major religion and partly because it can absorb all other religions, honour and embrace their scriptures, their saints, their philosophy. This is possible becasue Hinduism looks compassionately on all genuine spiritual effort and knows unmistakably that all souls are evolving toward union with the Divine, and all are destined, without exception, to achieve spiritual enlightenment and liberation in this or in future lives".

- SWAMI SIVAYA SUBRAMUNIYA

ஓம் சக்தி ஓம்

# ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்



தேவஸ்தானம்
திறந்திருக்கும் நேரம்
காலை
7:00 மணி -
10:00 மணி வரை
சனி, ஞாயிறு
காலை
7:00 மணி -
12:00 மணி வரை
மாலை 6:00 மணி-
9:00 மணி வரை

பூஜை நேரம்
காலை 8:00 மணி
மாலை 7:00 மணி
செவ்வாய், வெள்ளி
மாலை 7:30 மணி

விசேட நாட்களில்
நேரங்கள் மாற்றி
அமைக்கப்படும்

மிஸிஸாகா மாநகரில் **Dixie/Dundas East** சந்திப்புக்கு அருகாமையில் **3057 Universal Drive** இல் ஸ்ரீ முத்து மாரி அம்பாள் தேவஸ்தானம் அமைந்துள்ளது.

மாத அர்ச்சனை, நித்திய பூஜை உபயங்கள் செய்ய விரும்பும் அம்பாள் அடியார்கள் முற்கூட்டியே தேவஸ்தானத்தில் பதிவு செய்து, அம்பாளின் கிருபா கடாட்சத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

சகல சமயக் கிரியைகளையும் வேதாகம முறைப்படி செய்து கொள்ளவும், ஜோதிட ஆலோசனை விளக்கங்களுக்கும்

## அம்பாள் நிலையம்

## சுவாமி சோமேஸ்வரக்குருக்கள்

(பிரதம குருக்கள், ஜோதிடர், திருமணப்பதிவாளர்)

**3057 Universal Drive, Mississauga. ON. L4X 2E2**

**T.P No (905) 602 2068 / 629 2050**

**Fax: (905) 629 4428**

# இந்து சமயத்தில் பெண்களின் கடமையும் இடமும்

மனோன்மணி சண்முகதாஸ், எம். ஏ.

மனிதன் அறிவுத் திறம் பெற்று வாழத் தொடங்கிய காலத்தில் இருந்தே சமயம் என்ற கோட்பாடும் உடன் வளர்ந்து வந்துள்ளது. பழங்கால மக்களிடையே சமய உணர்வு குறைவாகக் காணப்பட்டாலும் ஏதோ ஒரு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் வாழ்வு நடத்தி வந்தனர்.

சமய உணர்வு என்பது பல்வேறு நிலைகளில் உலகின் பல பாகங்களிலும் காணப்பட்டு வந்துள்ளது. மேலை நாடுகளிலும் கீழை நாடுகளிலும் இன்றும் சமய உணர்வு நிலைபெற்றிருப்பது இதற்குச் சான்று. மனித வாழ்வின் நெறி அல்லது வழி என்ற பொருளில் பல சமயங்கள் தோன்றி வளர்ந்து வந்துள்ளன.

தமிழ் நூல்கள் பலவற்றில் சமயம் என்ற சொல்லுக்குத் திருநெறி, செந்நெறி என்ற சொல்லாட்சிகள் காணப்படுகின்றன. இதனால் மனிதனது வாழ்வை நெறிப்படுத்துகின்ற ஒரு பண்பினைச் சமயம் பெற்றிருந்ததை உணர முடிகிறது.

சமயம் என்பது மனிதனுக்கும் மனித நிலைக்கும் அப்பாற்பட்டதாக உள்ள ஆற்றல் அல்லது அந்த ஆற்றலுக்குள்ள தொடர்பு என்று கொள்ளலாம். இவ்வாற்றல் பற்றி அறிகின்ற உணர்வு மக்களிடையே தோன்றியபோதே சமயங்கள் பற்றிய கருத்துக்களும் உருவாகியிருக்க வேண்டும்.

சமயம் புனித உணர்வினை மக்களிடையே ஏற்படுத்தும் ஓர் அம்சமாகவும் காணப்பட்டது. பொதுவாகச் சமயங்களிற் கடவுள் பற்றிய நம்பிக்கை காணப்பட்டாலும் வாழ்க்கையின் நன்னோக்கத்தை நிறைவேற்ற உதவும் கொள்கையாகவே சமயம் விளங்கி வருகிறது. இதனால் சமயம் மனித வாழ்க்கையில் "நெறிப்படுத்தல்" என்ற கோட்பாட்டை உருவாக்குகிறது. இந்நெறிப் படுத்தல் மனிதனுக்கு அவசியமானது என்பதை உணர்ந்த யாவரும் ஏதோ ஒரு சமயத்தைத் தமது வாழ்வின் ஆதாரமான நம்பிக்கையாக்கி வாழ்கின்றனர்.

உலகிலுள்ள பல்வேறு சமயங்களில் இந்து சமயம் தொன்மை வாய்ந்த சமயமாக விளங்குகின்றது. இந்து சமயம் என்னும்போது பொதுவாக இந்தியாவில் தோன்றிய சமயங்களைக் கருதலாம். ஆனால் இன்று இப்பெயர் சிறப்பாக சைவ, வைணவ சமயங்களுக்கே வழங்கப்பட்டு வருகின்றது.

சைவ, வைணவக் கோட்பாடுகள் பற்றி அறிவதற்கு ஆதாரமாக உள்ள வேத இலக்கியங்களும் உபநிடதங்களும் தர்மசாஸ்திரங்களும் திவ்விய பிரபந்தங்களும் இந்து சமய நெறிகளை உணர்த்தும் சான்றுகளாக விளங்குகின்றன. மனித வாழ்வை நெறிப்படுத்தும் நோக்கத்திற்காகவே அவை எழுந்திருக்கவேண்டும் என்ற கொள்கை அவை கூறும் விடயங்களிலிருந்து இன்று வலுப்பெறறு வருகின்றது.

இவ்வாறாக வாழ்க்கை நெறிப்படுத்தும்போது இந்து சமயம் பெண்களுக்குரிய சமூக அந்தஸ்தினைப் பற்றிய தகவல்களையும் கூறியுள்ளது. பெண்களுக்கு இந்து சமயம் எத்தகைய கடமைகளையும் உரிமைகளையும் கொடுத்து வந்துள்ளது என்பதை நாம் இன்று உணர்வதற்கு மேற்குரிய சான்றுகளே பெரிதும் உதவுகின்றன.

உபநிடதத்தில் பெண்கள் மேலான நிலையில் வைத்துக் கூறப்பட்டுள்ளனர். அவர்களுக்குப் புரோகிதர்களாகும் வாய்ப்புக் கொடுக்கப்படாவிட்டாலும் தவ வாழ்வை மேற்கொள்ளும் உரிமை வழங்கப்பட்டிருந்தது. வேதங்களிலே சில சுலோகங்கள்கூடப் பெண்களால் இயற்றப்பட்டுள்ளன. பிரகதாரண்ய உபநிடதத்தில் கார்கி, வாஸக்நவி என்ற இரு பெண்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அக்காலத்தில் பெண்கள் மிகுந்த கல்வியறிவுடன் இருந்ததை இவ்வுபநிடதம் உணர்த்துகின்றது. ஆனால் பிற்காலத்தில் பெண்களது நிலை தாழ்த்தப்பட்டதை அறியமுடிகிறது.

பெண்ணைத் தெய்வமாக்குகின்ற ஒரு நிலையும்தொடர்ந்தது. இந்த நிலையும் பின்னர் மாற்றமடைந்தது. பெண் பெருமையும் மதிப்பும் உடையவளாக உயர்த்தப்பட்டாள். செல்வத்துக்கும், கல்விக்கும் அதிதேவதைகளாகப் பெண்கள் சரஸ்வதியாகவும் இலட்சுமியாகவும் கொள்ளப்பட்டனர். பக்திநெறியிலே சக்தி என்ற புதிய கோட்பாடு உருவாகத் தொடங்கியது. ஆண்டவனுக்கே அர்த்தநாரீசுவரவடிவம் கற்பிக்கப்பட்டது. இந்த உலகிலுள்ள அனைத்தையுமே படைத்தவள் சக்தி என்ற நம்பிக்கை உருவாகியது.

பல்லவர் காலத்தில் எழுந்த பக்திப் பாடல்கள் பெண்களுக்குச் சமய ரீதியாகச் சற்று மேலான தகைமைகளைக் கொடுத்தன. சைவ சமயத்தையே வளர்க்கின்ற அரும்பணியில் அவர்களை ஈடுபடுத்துகின்ற நிலையும் காணப்பட்டது.

காரைக்கால் அம்மையார் திலகவதியார் மங்கையர்க்கரசியார் என்ற மூவரும் சைவசமயத்தின் வளர்ச்சியிலே பெரும் பங்கு கொண்டவர்களாக அமைகின்றனர். திருத்தொண்டர் புராணத்தில் இவர்களுக்கு இடமளிக்கப்பட்டது.

"வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே" எனச் சிவனே காரைக்காலம்மையாரைப் புகழ்வதாகக் காணப்படுகின்றது.

"தூண்டு தவ விளக்கனையார்" என்று திலகவதியாரும், "தென்னர்குலப் பழி தீர்த்த தெய்வப்பாவை" என மங்கையர்க்கரசியாரும் போற்றப்பட்டுள்ளனர்.

இம்மூவருள்ளும் காரைக்காலம்மையார் தனிச்சிறப்புப் பெற்றவராகப் பெண்ணின் பெருமையை உலகுக்கு உணர்த்துபவராகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளார். இறைவனைப் பற்றி அவர் பாடிய பாடல்கள் பெண்கள் புலமைக்கு எடுத்துக்காட்டாக மட்டுமன்றி சைவ சமயத்தை வளர்ப்பதற்கு வித்திட்டவர் என்ற பெருமையையும் உணர்த்தி நிற்கின்றன.

பத்தி இயக்கம் பல்லவர் காலத்திலே தமிழ் நாட்டில் தோன்றுவதற்குக் காரணமானவராக காரைக்காலம்மையார் திகழ்கிறார். சைவ சமயத்தைப் பிற மதங்களின் தாக்குதலிலிருந்து காப்பாற்றுவதற்காக எழுந்த பக்தி இயக்கம் இவரது பாடல்களினாலே வலுப்பெற்றது. பக்திப் பிரசாரஞ் செய்வதற்கான பக்திப் பாடல்களை இயற்றுவதற்கு வழிகாட்டியாக விங்கியவரும் இவரே. மக்கள் மனதில் இறைவனைப் பற்றிய சிந்தனையை அவனுடைய கோலவழகு, அருட்சிறப்பு ஆகியவற்றைப் பாடுதல் மூலமாக ஏற்படுத்தினார்.

பக்தி இயக்கத்தின் வளர்ச்சியில் முக்கிய .இடம்பிடித்த சம்பந்தப் பெருமான் பணிக்குப் பெரிதும் உதவியவராக மங்கையர்க்கரசியார் விளங்குகின்றார். தம் கணவரின் மதமாற்றத்தைத் தடுக்க மங்கையர்க்கரசியார் எடுத்த முயற்சிகள் இந்து சமயத்திற் பெண்கள் சமயப் பணியினை எடுத்துக்காட்டுகின்றன.

இதே போன்று திலகவதியாரும் திருநாவுக்கரசர் என்ற சைவ நாயனார் உருவாவதற்குத் தொண்டு புரிந்தவராக விளங்குகின்றார்.

குடும்ப நிலையிற் பெண்கள் சமயப் பணி செய்த வகையினைப் பெரியபுராணம் என்ற நூல் தெளிவாக விளக்குகின்றது. இந்து சமய வளர்ச்சிக்காகப் பெண்கள் தத்தமது குடும்ப நிலையில் இருந்தே பணி செய்யலா மென்பதைக் காலத்தின் தேவைக் கேற்ற வகையில் இந்து சமயம் உணர்த்தி வந்துள்ளது.

சமய நெறிகளுள் பெண்களுக்காக இந்து சமயம் வகுத்த சில நெறிமுறைகள் இவர்களை ஒழுக்கச் சீர்கேடுகளிலிருந்து பாதுகாக்கப் பெரிதும் உதவின. கணவனை இழந்துவிட்ட நிலையில் பெண்ணின் வாழ்வு சமயத்தோடு தொடர்புபடுத்தப்பட்டது. துறவியைப் போலத் தூய வாழ்வையே அவர் மேற்கொள்ள வேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

"வெறுந்தரையிலே தான் படுக்கலாம். ஒரெயொருவேளை எளிய உணவுதான் கொள்ளலாம். வர்ண ஆடைகளோ அணிகளோ பூணக் கூடாது. மலர் சூடவோ வாசனைப் பொருள்களை உபயோகிக்கவோ கூடாது. மறு பிறவியில் மீண்டும் தம் கணவருடன் சேரும் நம்பிக்கையுடன் கடுமையான விரதங்களைக் கடைப்பிடித்து எஞ்சிய வாழ்நாளை ஓட்ட வேண்டும். இதற்கு மாறாக நடந்தால் மறு பிறவியில் கஷ்டப்பட நேருவதுடன் கணவனுடைய ஆத்மா விற்கும் கேடு செய்தவள் ஆவாள்." என்று சாஸ்திரங்கள் விதித்திருக்கின்றன.

இத்தகைய ஒரு கட்டுப்பாடான வாழ்க்கை முறை பெண்களுக்கு அவைவிதிக்கப்பட்ட காலத்தில் பெருத்தமாக இருந்திருக்கலாம். ஆனால் தற்காலத்தில் சமயம் பற்றிய நோக்கும் போக்கும் வேறுபட்டதனால் இக்கட்டுப்பாடுகள் பெண்களை அடிமைகளாக்க முயல்வதாகச் சிலர் கருதுகின்றனர்.

பெண் தன் நிலையுணர்ந்து கடமையாற்றும் ஆற்றல் நிரம்பியவள். தன்னாற் பாதுகாக்கப்பட வேண்டிய ஒழுக்க நெறிகளை அவள் நன்கு உணர்ந்தவள் என்பதையே இந்து சமயம் பெரிதும் வலியுறுத்துகின்றது. திலகவதியார் வாழ்வு நெறிமூலம் இதனை உணரமுடிகிறது. பெற்றோர் மறைவுக்குப் பின்பு தனக்குக் கணவனாக வரவிருந்தவரையும் போரிலே பறிகொடுத்த திலகவதியார் தன் நம்பிக்கை வாழ்வு நடத்துகின்றார். அவர் வாழ்வு சேவை நிலையில் அமைகின்றது. தனக்கென்று இன்பங்கள் கிடையாதவிடத்து மற்றவர்க்கு நலமளிக்கும் செம்மை வாழ்வாக மாறுகிறது. திருமணம் ஆகாமலே துறவு பூண்டு தவ வாழ்வு வாழும் அவர் வரலாறு பெண்கள் வாழ்வின் தத்துவத்தை விளக்குகின்றது. சமூகப் பணியிலே பெண் எத்தகைய நிலையில் ஈடுபடுகிறாள் என்பதை அவர் வரலாறு உணர்த்துகின்றது.

இந்து சமயம் பெண்களின் கடமைகளைத் தெளிவாக வரையறை செய்துள்ளது. பழைய புராணக் கதைகளிலும் இதிகாசங்களிலும் பெண்களின் வாழ்வு நிலை சித்தரிக்கப் பட்டிருக்குமாற்றை நோக்குமிடத்து இது புலனாகின்றது.

மகாபாரதம் பெண்ணின் கடமைகளை வற்புறுத்தும்போது அவள் அடையக்கூடிய சில கஷ்டங்களையும் விளக்கிக் காட்டுகின்றது. குந்திதேவி தன் இளமைக் கலத்திற் செய்த காரியத்தால் தன் குடும்பத்தவர்க்கு எத்துணைக் கஷ்டங்களைத் தேடினாள் என்பதை மகாபாரதம் உணர்த்துகின்றது. பெண்ணானவள் தன்கடமை எதுவென அறியாமல் இருப்பதால் ஏற்படக்கூடிய தீமையை இது விளக்குகின்றது. இன்னும் அவளது செயல் அவளோடு சம்பந்தப்பட்ட பெண்களையும் எவ்வாறு பாதிக்கின்றது என்பதையும் இது விளக்குகின்றது.

ஐவருக்கும் மனைவியாக வாழ்ந்த பாஞ்சாலி தன் கணவர்களைவிடக் கடவுளாலேயே காப்பாற்றப் பட்டாளென்ற தத்துவத்தையும் மகாபாரதம் எடுத்துக் காட்டுகின்றது. இராமாயணத்தில் சீதா தேவியில் குழந்தைமையால் ஏற்பட்ட பாரதூரமான விளைவுகள் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன. இராம அவதாரத்தின் தேவையை உணர்த்தும் பாத்திரமாகச் சீதை உருவாக்கப்பட்டதோடு அல்லாமல் பெண்ணினத்தின் பண்புக்கு ஓர் எடுத்துக் கட்டாகவும் விளங்குகின்றாள்.

இந்து சமயம் பெண்களைப் பொறுத்த வரையில்

கற்பு என்ற சிறப்பிலக்கணத்தைக் கொடுத்துள்ளது. கற்பினால் எதையும் சாதிக்கும் ஆற்றல் பெண்களுக்கு உண்டு என்பதையே இந்து சமயம் வலியுறுத்துகிறது. கணவனைத் தெய்வமாகப் பெண் வணங்கினால் அற்புத ஆற்றல் படைத்தவளாகிறாள். அந்த ஆற்றல் எதையும் அழிக்கும் தன்மை வாய்ந்தது.

பெண்களைப் பொறுத்த வரையிவ் இந்து மதம் ஒழுக்க நெறிகளைச் சமூகத்திற்கு ஆக்கிக் கொடுப்பவர்கள் பெண்களே என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. பெண் தன் குடும்ப நிலையில் ஒழுக்கத்தைப் பேணினால் நாட்டின் ஒழுக்கம் தானாகவே பேணப்படும். இதற்காகவே பெண்ணின் பெருமை பற்றிய பல கதைகள் புராணக் கதைகளில் அமைக்கப் பட்டுள்ளன. ஏனைய மதங்கள் பெண்கள் துயரத்துக்கே துணையானவர்கள் என்ற கோட்பாட்டைக் கொண்டிருக்க இந்து சமயம் அவர்களது தனித்துவங்களை வெளிப்படுத்திக் காட்டியது.

வீட்டிலிருந்தேமனிதனை நெறிப்படுத்தும் வழிகளை இந்து சமயம் கூறுகின்றது. அதனால் குடும்பத்தில் செய்ய வேண்டிய பல்வேறு விதமான சடங்குகளையும் பெண்களுடனும் தொடர்புறுத்தி இந்து சமய நூல்கள் கூறலாயின.

குடும்பத்தில் நிகழும் எந்த விதமான முக்கிய நிகழ்ச்சியும் சமயச் சடங்கு இல்லாமல் நடைபெறமாட்டாது. குழந்தையின் பிறப்பு, குழந்தைக்குப் பெயரிடுதல் குழந்தைக்கு முதல் முதலாகத் திட உணவு கொடுத்தல் கல்விக்கு அனுப்புதல், திருமணம், இறப்பு ஆகிய பல்வேறு நிலைகளிலும் பலவிதமான சடங்குகளை இந்து சமயம் வகுத்துள்ளது. இச்சடங்குகளைச் செய்வதற்கு இல்வாழ்வான் தன் வாழ்க்கைத் துணையான மனைவியை நாடுகின்றான். தான் செய்ய வேண்டிய ஐந்து நிவேதனங்களையும் ஒழுங்கு முறையிலே செய்வதற்கு ஆணுக்குப் பெண் உதவுகின்ற பணியினைச் செய்யும் படி இந்து சமயம் பெண்ணுக்குச் சில முக்கியமான கடமைகளை வகுத்துக் கூறியுள்ளது.

ஏனைய குடும்ப அங்கத்தவர்கள் ஆன்மீக நெறியிலே செல்வதற்கு அப்பெண்ணின் கடமைகள் சரிவர நிறைவேற்றப்பட வேண்டும். உணர்வும் அறிவும் குழந்தை நிலையிலிருந்து ஒருவனுக்கு ஊட்டப்படுவதற்கும் அவன் தொடர்ந்து தன் வாழ்நாள் முழுவதும் அந்நெறிச் செல்வதற்கும் பெண்ணே துணையாகின்றாள்.

இந்து சமயம் தன்னிலையைக் காலத்திற்குக் காலம் புதுப்பித்துக் கொண்டிருக்கின்றது. சமூகநிலைகளில் மாறுதல்கள் ஏற்படும்போது வாழ்க்கை முறையும் சிந்தனைகளும் மாறுபடுகின்றன. இதனால் வளர்ந்து கொண்டிருக்கும் ஒருநெறியாகவும் இந்து சமயம் இன்று விளங்குகின்றது. பெண்களுக்கு உரியதாக இந்துசமயம் வகுத்த கடமைகளில் மாற்றம் ஏற்படவேண்டிய தேவையும் ஏற்பட்டது. இதனால் இந்து சமயத்திலே சீர்திருத்தக் கொள்கைகள் பரவத தொடங்கின.

ஆரிய சமாஜம் என்பதை நிறுவி, சுவாமி தயாநந்தா சில புரட்சிகரமான மாற்றங்களை இந்து சமயத்தின் நெறிகளிலே ஏற்படுத்தினார். அவற்றுள், பெண்களைப்பொறுத்த வரையில் விதவைகள் மறுமணம் செய்தல் பற்றிய சில கருத்துக்களை அவர் முன்வைத்தார். அவரைத் தொடர்ந்து பெண் மணியான திருமதி அன்னி பெஸ்ண்டு அம்மையார் இந்து சமயத்தைப் பற்றிய சில சீர்திருத்தக் கருத்துக்களை இந்தியரிடம் கூறிச் சென்றார். "இந்து சமயமின்றி இந்தியாவிற்கு எதிர்காலம் இல்லை. இந்தியாவின் வேர்கள் ஆழமாகப் பதிந்துள்ள மண்ணே இந்து சமயமாகும். அதிலிருந்து அதை வேறுபடுத்தினால் மண்ணிலிருந்து பிடுங்கப்பட்ட மரம் போலவே இந்தியாவும் மடிந்து விடும். அவர் கூறிய கருத்து இந்து சமயத்தின் வளர்ச்சிப் பாதையில் சிந்தனைச் சிதறல்களை ஏற்படுத்தியது.

இந்து சமயம் பெண்களுக்குக் கொடுத்திருக்கும் உரிமைகளைப் பற்றி இன்று பலரும் அறியாததன் காரணத்தாலேயே இந்து சமயத்தின் மீதுள்ள நம்பிக்கை ஏனைய புதுமைக் கருத்துக்களால் தாக்கப் பெறுவதற்கும் காரணமாயிற்று. இந்நிலையைப் பாரதி நன்குணர்ந்திருந்தான். அதனால் தனது பாடல்களிலே பெண் தெய்வங்களைப் பற்றிய கருத்துக்களைத் தெளிவாக எடுத்துக் காட்டினான். பழைய இந்து சமய இலக்கியங்களை நன்கு பயின்றிருந்தமையால் அவற்றை மற்றவர்க்கும் உணர்த்த வேண்டிப் பாடல்களைப் பாடினான். சக்தியைத் தன் நம்பிக்கையின் ஆதாரமாக்கினான். பாரதியின் சக்திப் பாடல்கள் பாரதியின் சமய நம்பிக்கையினை மட்டுமன்றி மற்றவர்களும் அந்த உணர்வினை அறிவதற்குப் பெரிதும் உதவின. காளி சரஸ்வதி இலக்குமி என்னும் முப்பெரும் பெண் தெய்வங்களைப் பற்றிய பாரதியின் பாடல்கள் பெண் தெய்வங்களது கோட்பாட்டை மட்டும் விளக்குவதோடு அமையாது இந்து சமயத்திற் பெண்ணுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்பினையும் மறைமுகமாக உணர்த்துகின்றன.

அறிவு, ஆக்கம், அழிவு என்னும் முப்பெரும் சக்திகள் பெண்களிடம் உள்ளன. அச்சக்திகளை ஏற்ற சந்தர்ப்பத்தில் ஏற்றவாறு பயன்படுத்துவதால் பெண் தன் ஆற்றலை வெளிப்படுத்துகிறாள். தன் மென்மைக் குணங்களையும் அறிவுத் திறனால் வாழ்வு நெறிக்காக அப்பணிக்கும் பெண்மையின் உயர்ந்த இலட்சியம் இந்து சமயத்தின் கோட்பாடாகவே அமைந்து விட்டது. இந்த உலகையெல்லாம் காக்கின்ற அன்னை பராசக்தியாகப் பெண்களைப் போற்றும் மரபினை இந்து சமயமே ஆரம்பித்துவைத்தது. பாரதியின் பாடல் ஒன்று அதனை நன்கு விளக்குகின்றது.

மலையிலே தான்பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்
உலையூதி உலகக் கனல் வளர்ப்பாள்
நிலையி லுயர்ந்திடுவாள் நேரே அவள்பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே.

# இறை வழிபாடு

அருள்மொழி அரசு திருமுருக
கிருபானந்த வாரியார் சுவாமிகள்

எங்கும் நிறைந்தவன் இறைவன். இறை என்ற சொல் "இறு" என்ற பகுதி அடியாகப் பிறந்தது. சரம் அசரம் என்ற எல்லாப் பொருள்களிலும் தங்கியிருப்பவன் இறைவன்.

"பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற
நிறைகின்ற பரிபூரணானந்தமே"

"அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்தபூர்த்தி யாகி அருளொடு நிறைந்தது"

உடம்பிலே உயிரும், உயிரிலே இறையும் தங்கியிருக்கின்றன. உதை பந்து -பந்துக்குள் "பிளாடர்" அதற்குள் காற்று என்பது போல எல்லாப் பொருள்களையும் எல்லா உயிர்களையும் இயக்குகின்றதனால் பரம் பொருள் .இயவுள் எனப் பேர் பெற்றார். பெயரும் பெயர் இயவுள் என்பர் நக்கீரர். எல்லாவற்றையும் கடவுவதனால் கடவுள் எனவும் பெயர் பெற்றது.

ஒரு மருத்துவமனையில் மருத்துவர் தங்கியிருப்பதன் நோக்கம் அம்மருத்துவமனையில் உள்ள பிணியாளர்களின் பிணிகளைப் போக்குவதற்கேயாகும். அதுபோல், இறைவன் எல்லா உயிர்களிலும் தங்கி அவ்வுயிர்களின் பிறவிப் பிணியைப் போக்குகின்றனன்.

உள்ளொடு புறங்கீழ் மேலாய்
உயிர்தொறும் ஒளித்து நின்ற கள்வன்

அண்டமும் அளவிலாத உயிர்களும
ஆகமாகக் கொண்டவன்

என்பது பரஞ்சோதிமுனிவர் திருவாக்கு.

இன்னணம் இறைவன் எங்கும் இருப்பினும் ஞானிகள் திருவுள்ளத்திலும் திருக்கோயில்களிலும் சிறப்பாக விளங்கித் தோன்றுகின்றான். ஏனைய இடங்களில் இறைவன் மறைந்திருக்கின்றான்.

"ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே"
மாணிக்கவாசகர்

பாலில் நெய் மறைந்திருப்பதுபோல், பிற இடங்களில் இறைவன் நிறைந்து மறைந்திருக்கின்றான். கடைந்த தயிரில் வெண்ணெய் திரண்டு உருண்டு வெளிப்பட்டிருப்பதுபோல், ஞானிகள் உள்ளத்திலும், திருக்கோயிலிலும் இறைவன் விளங்கிக் காட்சியளிக்கின்றான்.

மற்ற இடங்களில் இறைவனை நாம் நினைந்து தியானிப்பதனாலும் துதிப்பதினாலும் வழிபடுவதனாலும் வினைகள் வெதும்புகின்றன. கோயிலில் இறைவனை வழிபட்டால் வினைகள் வெந்து எரிந்து கரிந்து நீறாகி விடுகின்றன.

கொடிய வெயிலில் ஒரு துணியை வைத்தால், அத்துணி, வெதும்புமேயன்றி வெந்து சாம்பராகாது. சூரிய காந்தக் கண்ணாடியை வெயிலில் வைத்து அதன்கீழ் வரும் மற்றொரு வெயிலில் துணியை வைத்தவுடனே அத்துணி சாம்பராகி விடுகின்றது. நேர் வெயிலுக்கு இல்லாத ஆற்றல், சூரியகாந்தக் கண்ணாடியின் கீழே வருகின்ற வெயிலுக்கு உண்டு.

பரந்து விரிந்து இருக்கின்ற கதிரவனுடைய வெப்பத்தை ஒன்றுபடுத்தித் தன்கீழே சூர்ய காந்தக் கண்ணாடி பாய்ச்சுகின்றது. பிறஇடங்களில் இறைவனை வழிபடுவது, வெயிலில் வேட்டியை வைப்பது போலாகும். திருக்கோயிலில் இறைவனை வழிபடுவது, சூரியகாந்தக் கண்ணாடியின் கீழே வைப்பது போலாகும். ஆதலால், திருக்கோயில் வழிபாடு இன்றியமையாததாகும்.

மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே

என்பது சிவஞான போதம்.

திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்கள் தேவர்களாலும், முனிவர்களாலும் நால்வர், ஆழ்வார்கள் ஆகிய ஆன்றோர்களாலும் நிறுவப்பெற்ற காரணத்தால் அவை மேன்மை பெற்று, வழிபடுவோருடைய வல்வினைகளையகற்றி, வேண்டிய வரங்களை வழங்கி அருள்புரிகின்றன.

பசுவின் உடல் முழுவதும் பால் பரவியிருப்பினும் மடியின் மூலமாக அதனைப் பெறுவதுபோல், எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுடைய திருவருளைத் திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்கள் மூலமாக நாம் பெறுதல் வேண்டும்.

ஒரு பறவை இரு சிறகுகளைக் கொண்டு

பறப்பதுபோல், இறைவழிபாட்டிற்குப் பூவும் நீரும் வேண்டப்படுகின்றன.

"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்"
- என்பது திருமந்திரம்.

எங்கும் நிறைந்த இறைவனை, எங்கும் எளிதாகக் கிடைக்கக்கூடிய பூவினாலும், நீரினாலும் நாம் வழிபட வேண்டும். வழிபாட்டிற்கு அன்பும், ஆசாரமும் இரண்டு கண்கள் போன்றவை.

"அன்புடன் ஆசார பூசை செய்து
உய்ந்திட வீணாள் படாது அருள்புரிவாயே"

என்று அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

திருக்கயிலாய மலையில் பார்வதி பரமேசுவரர் மீது விளையாட்டாக வில்வக் கிளையை உதிர்த்த குரங்கு அபுத்தி பூர்வமாகச் செய்த அச்சிவ புண்ணியத்தால் பூவுலகிற் பிறந்து, முசுகுந்தச் சக்கரவர்த்தி என்ற பெயருடன் மூவுலகும் ஆண்டது.

வில்வக் கிளையுதிர்த்த வெய்யமுசுக்கலையைச்
செல்வத் துரைமகனாய்ச் செய்தனையே
திருவருட்பா

இறைவழிபாடு செய்து மார்க்கண்டேயர் மறலியை வென்ற வரலாறு உலகம் அறிந்த ஒன்று.

ஆத்ம சோதியினால் அருட்சோதி சூழச் சிவசோதி விளங்குகின்றது.

ஆத்மசோதி -வட்டமாகிய கல்
அருட்சோதி - அதனைச் சூழ்ந்திருக்கின்ற ஆவுடையார்
சிவசோதி - மேல் நோக்கிய இலிங்கம்.
இதுதான் சிவலிங்கத்தின் உண்மை.
"ஜோதியுள் ஜோதியுள் ஜோதி"
என்பார் இராமலிங்க அடிகளார்.

கோயில் ஐந்து பிரகாரங்களோடு கூடியது. இந்த உடம்பே இறைவன் இருக்கின்ற திருக்கோயில். இந்த உடம்பு அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமயகோசம் என்ற பஞ்ச கோசங்களையுடையது.

உடம்பில் 32 கட்டுக்களோடு கூடிய முதுகந்தண்டே, திருக்கோயில் கொடிமரமாகக் காட்சியளிக்கிறது. கொடிமரத்தில் கொடி ஏறியவுடன் இறைவன் வெளியே வந்து காட்சியளிக்கின்றான். அதுபோல் முதுகெலும்பாகிய வீணா தண்டத்தில் வளைந்து செல்லுகின்ற சுழுமுனை என்ற வெள்ளை நரம்பின் வழியாகப் பிராணவாயு ஆறாதாரங்களையுங் கடந்து, பிரமரந்திரத்தைத் தாண்டி சகஸ்ரார வெளியிலே சென்றவுடன் சிவசோதி காணப்படும்.

திருக்கோயிலில் விளங்கும் பத்திர இலிங்கமாகிய பலிபீடம் பாசத்தையும், நந்திதேவர் பசுவையும், சிவலிங்கம் பதியையும் குறிப்பிடுகின்றன.

நமது சரீரத்தில் உள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களையும் கோயிலில் உள்ள யாக மண்டபம், அலங்காரமண்டபம், கல்யாண மண்டபம், நிருத்த மண்டபம், மகாமண்டபம், அர்த்தமண்டபம் என்ற மண்டபங்கள் தெரிவிக்கின்றன. எனவே, திருக்கோயிலில் சென்று இறைவனை வழிபட்டு அங்கே கண்ட பரம்பொருளை நம்உடம்புக்குள்ளேயும் கண்டு மனோலயம் பெற வேண்டும்.

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே**
திருமந்திரம்

கட்டையில் கனல் மறைந்திருக்கின்றது. "விறகிற் றீயினன்" என்கின்றார் அப்பர் பெருமான். கட்டையைக் கடைந்தவுடன், அதில் மறைந்த கனல் வெளிப்பட்டுக் கட்டை கனலாகக் காட்சியளிப்பது போல், உயிரில் ஒளிந்திருக்கின்ற இறைவனை ஞானத்தால் கடைவோமாயின், சிவம் வெளிப்பட்டுச் சீவனைச் சிவமாக்கிக் கொள்ளுகிறது.

எண்ணில் காலமாக எண்ணில்லாத உடம்பெடுத்து வருகின்ற நாம், இறைவனை மெய்யன்புடன் உள்ளம் குழைந்து உருகி மலரிட்டு அருச்சனை செய்து வழிபட்டால் பிறவி நோய்தீரும்.

**கன்றெடுத்து விளவெறிந்து**
**காலெடுத்து மழைக்குடைந்த காலிகாக்கக்**
**குன்றெடுத்து மால்விடையின்**
**கொடியெடுத்து வடிவெடுத்துக்கூறொணாத**
**மன்றெடுத்த சேவடியின் மலரெடுத்துச்**
**சாத்தியன்பின் வழிபட் டோர்கள்**
**இன்றெடுத்த வுடற்பிறவி யினியெடா**
**வண்ணமெண்ணம் எய்து வாரே**
- சிவரகசியம்

## தெய்வம் ஒன்று:

திருக்கோயில்களில் சிவலிங்கம், தட்சிணாமூர்த்தி, நடராஜர், சந்திரசேகரர், அம்பிகை, விநாயகர், முருகர், திருமால் என்ற பல மூர்த்தி இருப்பினும், அவைகள் அனைத்தும் ஒரே மூர்த்திதான்.

நெருப்பு - சிவபெருமான்
நெருப்பில் உள்ள சூடு - அம்பிகை
நெருப்பில் உள்ளசெம்மை - விநாயகர்
நெருப்பில் உள்ள ஒளி -முருகன்

மலர்-சிவபெருமான்

மலரின் வடிவம் - அம்பிகை
மலரின் நிறம் - கணபதி
மலரின் மணம் - மயிலவன்

நூல்-சிவபெருமான்
நூலின் அகலம் - பார்வதி
நூலின் நீளம் - கணேசர்
நூலின் கனம் -குமாரக் கடவுள்

சுடரோ சிவபெருமான் சூடுபரா சக்தி
திடமார் கணநாதன் செம்மை - படரொளி
கந்தவே ளாகும் கருதுங்கால் சற்றேனும்
வந்ததோ பேத வழக்கு

சிவபெருமானுடைய சக்திகள் நான்கு. அருள்சக்தி, போர்ச் சக்தி, கோபசக்தி, புருஷ சக்தி.

அருட்சக்தி - பார்வதி
போர்ச் சக்தி - காளி
கோபசக்தி - துர்க்கை
புருஷ சக்தி - விஷ்ணு

அரியலால் தேவியில்லை
ஐயன் ஐயாற னார்க்கே
என்பது அப்பர் திருவாக்கு

முக்கண்ணன் - முக்கண்ணி
சங்கரன் - சங்கரி
திரிபுரசுந்தரன் - திரிபுரசுந்தரி

என்பதுபோல், அரன்-அரி என வந்தது. ஆகவே, திருமாலின் வழிபாடும் அம்பிகையின் வழிபாடும் ஒன்றெனக் காண்க.

"யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வமாகியாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்
- சிவஞானசித்தியார்

ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்
- அப்பர்

திருக்கோயில்களில் காட்சியளிக்கின்ற துவாரபாலகர்களில் ஒருவர் ஆள்காட்டி விரலைக் காட்டி நிற்பது, உள்ளே வழிபடச் செல்வோருக்குக் கடவுள் ஒன்றே என்பதைஅறிவுறுத்துகிறது. மற்றொரு துவாரபாலகர் ஒரு கையை விரித்துக் காட்டுவது கடவுள் ஒன்றைத் தவிர வேறொன்றில்லை என்பதை உணர்த்துகின்றது. இதையே "ஏகம் ஏவ அத்வீதீயம் பிரம்ம" என்று வேதம் கூறுகின்றது. கடவுள் ஒன்றே தான் இரண்டாவது இல்லை என்பது இதன் பொருள்.

எனவே, தெய்வ வழிபாடு செய்வோர் தெய்வ பேதம் மூர்த்திபேதம், குறித்து மாறுபட்டு மலையாது, நிலையாயஅன்புடன் ஒரு பொருளைத் தியானித்து வழிபட வேண்டும்.

ஒரு காகிதத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பதுபோல் தெய்வத்திற்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று தட்பம் மற்றொன்று வெப்பம். வெப்பமும் தட்பமும் சமமாக இருந்தால் தான், மலர் மலராகக் காட்சியளிக்கும். வெப்பம் மிகுந்தால் மலர் வாடும். தட்பம் மிகுந்தால் மலர் அழுகும்.

இந்த உடம்பும் சீதோஷணத்தால் தான் வாழ்கின்றது. ஒரு சமயம் உடம்பில் சூடு குறையுமானாலும் சுற்றத்தார் சூழ்ந்து கொள்வார்கள். மருத்துவர் வந்து பார்த்து 'To Late" என்று கூறி அவர் விரும்பியதெல்லாம் கொடுங்கள், என்று சொல்லுவார். ஆகவே உலகிற்கு வெப்பமும் தட்பமும் மிகமிக இன்றியமையாதவை. வெப்பத்தின் நுண்மை சிவம். தட்பத்தின் நுண்மை திருமால். வெப்பத்தின் நிறம் சிவப்பு. தட்பத்தின நிறம் பச்சை, எனவே, சிவமூர்த்தி பவளம் போல் மேனியன், திருமால் பச்சை மா மாலைபோல் மேனியன். சிவம் அனல் ஏந்தி விளையாடுகின்றது. திருமால் ஆழியிடைத் துயிலுகின்றார். சிவாலயத்தில் வெந்த நீற்றையும், விஷ்ணு கோயிலில் தீர்த்தப் பிரசாதத்தையும் வழங்குகின்றார்கள்.

பாதி சிவம், பாதி விஷ்ணு. இந்தத் தத்துவத்தைச் சிவமூர்த்தங்கள் இருபத்துஐந்தனுள் கேசவார்த்த மூர்த்தம் என்பது தெளிவிக்கின்றது, சங்கர நாராயணர் கோவிலும் இதற்குச் சான்று.

தாழ்சடையும் நீள் முடியும் ஒள்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்நாணும் தோன்றுமால் வீழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்
கிரண்டுருவும் ஒன்றாய் இசைந்து

என்று ஆழ்வார் சுறுகிறார்.

சிதம்பரம், திருநெல்வேலி, காஞ்சிபுரம், திருக்குற்றாலம், திருவருணை முதலிய திருத்தலங்களில் உள்ள சிவாலயங்களில் திருமாலும் காட்சி தருகின்றார்.

நம்மிடைப் பலருக்கும் இறைவனை ஏன் வணங்கவேண்டும்? வணங்காவிடில் என்ன? மனித வாழ்வில் இறையுணர்ச்சி இல்லாமல் வாழமுடியாதா? நாம் வணங்காவிடில் கடவுளுக்கு என்ன நஷ்டம்? என்ற வினாக்கள் உள்ளுணர்வில் எழுவது இயல்பு. இவைகளுக்கு விடை காண முயல்வதுமுறை.

விலங்குகளும் உண்ணுகின்றன: உலாவுகின்றன வம்சத்தை வளர்க்கின்றன. மனிதர்களாகிய நாமும் உண்ணுகின்றோம் உறங்குகின்றோம் மக்களைப் பெறுகின்றோம். இரை விலங்குகட்கும் மனிதர்கட்கும்

ஒன்றாகவே அமைந்திருக்கின்றது. விலங்குகளினின்றும் மனிதன் உயர்ந்து காட்சியளிப்பது தெய்வ உணர்ச்சி ஒன்றாலேயேதான்.

ஒரு கானகத்தில் விலங்கு மாநில மாநாடு கூடிற்று. அதில் தலைமை தாங்கிய சிங்கம் விலங்குத் தோழர்களே! உயிர் வாழ்க்கைக்கு ஆடை அவசியமா? மனிதர்கள் ஆடைக்கு அவசியமின்றி அதிகம் செலவழிப்பது அறிவின்மையாகும். அது வருந்தத்தக்கது கண்டிக்கத்தக்கது" என்று கூறிற்று. இது போல் மனித வாழ்க்கைக்குக் கடவுள் வணக்கம் தேவையா? நாங்கள் கடவுளை வணங்காமல் வாழவில்லையா? என்று சிலர் வினாவுவார்கள். மானம் உள்ளவன் ஆடை உடுப்பான். மனம் உள்ளவன் இறைவனை வணங்குவான்.

மனிதன் செய்கின்ற பாவங்களுக்கெல்லாம் கழுவாய் உண்டு. நன்றி கொன்ற பாவத்துக்கு மட்டும் கழுவாய் இல்லை.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு - திருக்குறள்

"ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கின் கழுவா யும்உள
நிலம்புடை பெயர்வ தாயினும்
ஒருவன் செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம் பாடிற்றே"

எனவே கழுவாய் இல்லாத பாவம் நன்றி கோறல் ஆகும். இதற்கு நேர் மறுதலையாகச் சிறந்த புண்ணியம் நன்றி மறவாமையாகும். இந்த உடம்பையும் உறுப்புக்களையும் உள்ளுறை கருவி கரணங்களையும் தந்தவன் இறைவன். கண்ணைக் கொடுத்த இறைவன் கண்தூசு பட்டு மங்காமல் இருக்கும் பொருட்டுக் கண்ணிற்குக் கதவுபோல் இமையும் கொடுத்தான். அந்த இமையின் நுனியில் உரோமங்களையும் அமைத்தான். உணவு உண்கின்ற வாயில் உணவைத் துகள் படுத்தப் (Flour mill) பற்களையும் கொடுத்தான். வாய்க்குள் நுழைகின்ற பொருள் நல்லனவா? அல்லனவா? என்று சோதித்து உள்ளே அனுப்ப வாய்க்கு நேராக இரண்டு காவற்காரர்களைப் போல், இரு நாசிகளை அமைத்தான். உண்ணுகின்ற உணவைப் பல் மெல்லவும் நாவில் நீர் ஊறவும் அமைத்தான். நம்முடைய உடம்பில் எல்லா அவயவங்களிலும் நரம்புகள் உள்ளன. நாவில் மட்டும் நரம்புகள் இல்லை. ஏனோ?

நரம்புள்ள பகுதிகள் சுளுக்கிக்கொள்ளும். நாவில் நரம்பு வைத்திருந்தால் ஒரு நாளுக்கு நூறு முறையாவது சுளுக்கிக்கொள்ளும். விளக்கெண்ணெய் தடவிஉருவவேண்டிவரும். இறைவன்கருணையினால் இடையறாது பேசுகின்ற நாவை நரம்பின்றிப் படைத்துக் கொடுத்தான். அவன் கொடுத்த நாவினால் அவனுடைய நாமங்களைச் சொல்லுதல். நன்றி பாராட்டுதலாகும். அவன் கொடுத்த தலையினால் அப் பரமபிதாவை வணங்குதல் நன்றிக் கடனாகும். வட மொழியில் காலையும் மாலையும் கடவுளை வணங்குவதைச் சந்தியா வந்தனம் என்பார்கள். சம் - செவ்வையாக தியா - தியானித்து வந்தனம் - வணங்குவது, சந்தியா வந்தனமாகும். இந்தச் சொல்லைப் பார்க்கினும் ஒரு கோடி மடங்குபொருளாழம் உள்ளதாகக் கடவுளை வணங்குதற்குக் காலைக் கடன் மாலைக் கடன் என்று தமிழில் ஆன்றோர் கூறினர். கொடுத்த கடனைத் திருப்பிக் கொடாதது எத்துணைப் பெரிய பாபமாகுமோ, அத்துணைப் பெரிய பாபமாகும் இறைவனை வணங்காதிருத்தல். "என் கடன்பணி செய்து கிடப்பதே" என அப்பர் பெருமான் குறிப்பிடுகிறன்றார்.

கருணையே வடிவமாகிய இறைவன், உயிர் களின் மீதுள்ள இரக்கத்தினால் இந்த உடம்பை வழங்கினான் என்பதை முன்னர் அறிந்தோம். அவன் தந்த உடம்பினால் அவனை வழிபடுவது கடமையாகும். இன்றேல் கடமையை மறந்த மடமையாகும். காவிரியில் ஒருவன் நீராடுவதுகாவிரிக்கு நன்மை விளையும் பொருட்டன்று. தன் உடம்பிலுள்ள வெப்பம் தணியும் பொருட்டுக் காவிரியில் நீராடுகின்றான். அதுபோல அருட்கடலாயிருக்கிற ஆண்டவனை வழிபட்டால் நம்முடைய பிறவி வெப்பம் தணிகின்றது.

ஆர்த்த பிறவித்துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம்பலத்தே
தீயாடும்கூத்தன்

என்று மாணிக்கவாசக சுவாமிகள் திருவெம்பாவையில் அருளிச் செய்கின்றார்.

**வாழ்த்த வாயும் நினைக்கமடநெஞ்சும்**
**தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்**
**சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே**
**வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே**

என அப்பர் பெருமான் இறைவன் நமக்குத் தலை முதலிய கருவிகளைத் தந்தான் என்று தெரிவித்துவிட்டு அக் கருவிகளை நோக்கி இறைவழிபாடு செய்யுங்கள் என்றும் அருளிச் செய்கின்றார்.

**தலைநே வணங்காய்!**
**தலைமாலை தலைக் கணிந்து**
**தலையாலே பலி தேரும் தலைவனைத்**
**தலையே நீ வணங்காய்!**

உடம்பின் பயன் இறைவனை வணங்குவதாகும். அறிவின் பயன் இறைவனை அறிவதாகும். கல்வியின் பயன் கடவுளைத் தொழுதலாகும்.

கற்றதனாலாய பயன் என்கொல்? வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் -திருவள்ளுவர்

இறைவனுடைய திருவடியில் அன்பில்லாதவர்

கல்வியின் பெருக்காலும் புலத்தின் முறுக்காலும் நன்மையடைய மாட்டார்.

**சென்றது காலம் சிதைந்த(து) இளமைநலம்**
**நின்றதுசா வென்று நினைந்துருகி - மன்றில்**
**நடிக்கின்ற பால்வண்ணர் நாமமெண் ணாமாந்தர்**
**படிக்கின்ற நூல்எல்லாம் பாழ்.!**

அதிவீரராம பாண்டியர்.

**கற்றதனாற் றொல்வினைக் கட்டறுமோ நல்லகுலம்**
**பெற்றதனாற் போமோ பிறவிநோய - உற்றகடல்**
**நஞ்சுகந்து கொள்ளருணை நாதனடித் தாமரையை**
**நெஞ்சுகந்து கொள்ளா நெறி**

- அருணகிரியந்தாதி

அதனால் மனிதப் பிறப்புக்கு இறைவழி பாடு இன்றியமையாதது என வுணர்க ஒரு மாவட்டத்திற்கும் மற்றொரு மாவட்டத்திற்கும் அரசாங்கத்தார் ஓர் எல்லைக் கல் அமைத் திருப்பதுபோல், விலங்குகட்கும் மனிதனுக்கும் இடையில் இட்ட எல்லைக்கல் இறைவழிபாடாகும்.

இறைவழிபாடு இல்லாத மனிதன் விலங்கெனவும் இறைவழிபாடு செய்கின்ற விலங்கு தேவன் எனவும் உணர்க.

**எறும்புகடை யானைதலை ஈசனைப் பூசித்துப்**
**பெறுங்கதிகண் டுந்தேறார் பேய்கள் அறிந்த**
**உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்**
**தலகையாய் வைக்கப் படும்**

- முதுமொழிவேல் வைப்பு

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் எறும்பு வழிபட்ட திருவெறும்பூரும் யானை வழிபட்ட திருவானைக்காவும் காட்சிதருகின்றன. எறும்பு முதல் யானை ஈறாக எல்லா வுயிர்களும் இறைவனை வழிபட வேண்டும் என்பது போதருகின்றது.

கோயிலில் வழிபடுவோர் நீராடி, தூய ஆடை அணிந்து, சமயச் சின்னங்கள் தரித்து, அன்புடனும் ஆசாரமுடனும் கோயிலுக்குச் செல்லுதல் வேண்டும்.

கொடிமரத்திற்குவெளியே விழுந்து வணங்குதல் வேண்டும். உள் பிராகாரங்களில் விழுந்து வணங்குதல் குற்றம்.

விநாயகரை ஒரு முறையும் சிவமூர்த்தியை மூன்று முறையும் அம்பிகையை நான்கு முறையும் வலம் வருதல் வேண்டும்.

கோயிலில் ஒருமைப்பட்ட மனதுடன் வழிபாடு செய்ய வேண்டும். கோயிலில் வழிபடுவோர் வீண் வார்த்தைகள் பேசுவதும் எச்சில் துப்புதல் பிற தீமைகள் செய்தலுங் கூடா. அர்ச்சகர் தரும் விபூதி பிரசாதங்களைப் பயபக்தியுடன் இரு கரங்களாலும் ஏந்திப் பெறுதல் வேண்டும். பெற்ற பிரசாதத்தைக் கீழே சிந்துதலும் ஒரு புறத்தில் எறிவதும் பெரும் பாவமாகும். சண்டேசுவரர் மீது நூல் இடுவதும் சிவ லிங்கத்திற்கும் நந்திதேவருக்கும் இடையே போவதும் மிக்க குற்றமாகும்.

கோயிலில் பிரசாதங்களை உண்டு. கோயில் தூண்களில் துடைப்பது அனுசிதமாகும். கோயிலில் படுத்து உறங்குவோர் மறு பிறப்பில் மலைப் பாம்பாகப் பிறப்பார்கள். வழிபாடு முடிந்தபின் கொடி மரத்தின் அருகிலிருந்து வடதிசை நோக்கி யமர்ந்து மூலமந்திரம் ஜெபிக்க வேண்டும். நன்கு இனிமையாகத் தோத்திரப் பாடல்களை அதிகம் சப்தம் போடாமல் இனிய குரலில் ஓதித் துதிக்க வேண்டும். கோயில் விளக்குகளில் எண்ணெய் இடுதல் வேண்டும்.

**விளக்கிட்டார் பேறுசொல்லில்**
**மெய்ந்நெறி ஞானமாகும்** - அப்பர்

கோயிலில் அணைகின்ற விளக்கை அபுத்தி பூர்வமாகத் தூண்டிய எலி, மாபலிச், சக்கரவர்த்தி யாகப் பிறநது புகழ் பெற்றது.

நீளுகின்ற நெய்யருந்த நேரெலியை மூவுலகமும்
ஆளுகின்ற மன்னவனாய் ஆக்கினையே

- திருவருட்பா

இனி, நாள்தோறும் குடும்பத்தில் உள்ளோர் அனைவரும் ஒன்றுகூடிக் காலை அல்லது மாலையில் வழிபடவேண்டும். வீட்டுத் தலைவன் ஒருபாடலைச் சொல்ல ஏனையோர் அதனை வழிமொழிந்து சொல்லி இறைவனைக் காதலுடன் வழிபாடு செய்ய வேண்டும். இதனால் குடும்பத்தில் ஒற்றுமை உண்டாவதுடன் அந்த வீட்டில் தெய்வ கடாட்சமும் திருமகள் விலாசமும் உண்டாகும்.

ஒரு தனி இழையை எளிதில் அறுத்துவிடலாம். பல இழைகள் ஒன்று பட்டுத்திரித்தகயிறு (வடம்) தேரை இழுத்துவிடும். அதுபோல பல அன்பர்கள் வாரத்திற்குகொரு நாள்கோயிலில் ஒன்றுபட்டுக் கூட்டு வழிபாடு செய்தால் திருவருளை ஈர்த்துவிடலாம். முஸ்லீம் அன்பர்கள் தினம் ஒன்றுக்கு ஐந்துவேளைதவறாமல் தொழுவதும் கிறிஸ்தவ அன்பர்கள் ஞாயிறு தோறும் ஆண் பெண் அடங்கலும் தங்கள் தேவாலயத்திற்குச் சென்று நியதியாகத் தொழுவதும்போல் இந்துக்களாகிய நாமும் குறிப்பிட்ட நாட்களில் ஆங்காங்குள்ள ஆலயங்களில் நியதியாக வழிபடுவது மிக மிக அவசியமாகும். அண்ணல் காந்தியடிகள் இறுதியாகப் பிராத்த்தனைக் கூட்டம் நாள்தோறும் நடத்தி முடிவில் பிரார்த்தனைக் கூட்டத்திலேயே ஆத்மசாந்தியடைந்தார். ஆதலால் அன்பர்கள் காதலாகிக்க கசிந்து கடவுளை வழிபட்டு இகபரநலன்களை எளிதில் பெறுதல் வேண்டும்.

இவ்வாறு திருக்கோயில் வழிபாடு செய்வதற்கு ஏற்ற தெய்வத் தமிழ்ப் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டிருக்கின்றோம். இவைகளை அன்பர்கள் அவசியம் மனப்பாடம் செய்து கொண்டு ஆலயவழிபாடு செய்து பிறவிப் பிணியையொழித்துப் பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவார்களாக.

வாழ்க சைவநீதி! வளர்க இந்து மாமன்றம்!

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும்.

கனேடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் (ஐயாமணி)

(புங்குடுதீவு – 10)

கனடா ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு, ஆலய ஸ்தாபகர்

**(416) 266 - 3333**

**(416) 266 - 3333**



**(416) 266 - 3333**

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும், திருமணம், மற்றும் மங்களகரமான வைபவங்களுக்கும் வேண்டிய எல்லாத் தேவைகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். இத்துடன் குறைந்த வாடகையில் ஸ்காபுரோ, ரொறன்ரோ ஆகிய இடங்களில் 200 பேர் முதல்600 பேர் வரை இருக்கக்கூடிய கார் தரிப்பு வசதியுடன் கூடிய அழகான மண்டபங்கள் பெற்றுக் கொள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

# THE SAIVA PATHWAY AND WORLD PEACE

RATNA MA NAVARATNAM M.A., M.Lit.

"Truth wins ever, and not untruth
With Truth is paved the road to the divine
On that pathway walk the enlightened
among them
With desires subdued, to reach the Abode
of truth

Truth is the only pathway to Sivam. So declare the Hindu Seers. They aver that the Supreme Life that shines in and through all life is a manifestation of that universal, formless and causeless Being. The sun, moon and all quarters, all knowledge and the souls of all existing being. All life and all qualities, functions and activities are forms of that single Energy. Man's suffering lasts only until he 'sees' the Supreme Sivam that dwells within himself. Truth, understanding and purity are the requisites for this experience of Sivam Within.

Let us take a glimpse of the world outside us and survey the wondrous scientific avalanche of today. We recall Einstein's words of wisdom; "The most incomprehensible thing about the world is that it is comprehensible". Many of us begin to doubt whether or not our essential products are serving the needs of the body and soul at one and the same time. Whenever there in not this intention, man is attempting to live an atrophied existence.

In the modern age, some of the great men of science and religion have worked on parallel lines in trying to discover the meaning behind the phenomena of nature and the human being. Their quest has been to reach the goal of unity leading to world peace. Science is vying today with the spiritual search to discover and establish relationships between objects and to arrive at a basis that will clarify the entire gamut of relationships. We begin to be aware of the difference in the two approaches; one vindicates the fundamental right to life, while the other claims to advance man to utopias with broken symmetries. Scientific consciousness can lead man to perceive 'Second Causes ' only, while spiritual consciousness can lead him to perceives action of the First Cause. The scientific attitude to life encourages more and more control over the forces of outer nature and less and less grasp over man's inner nature. Is it any wonder that the latest unification processes, the last dream of Einstein, in the field of nuclear energy have failed to uphold the welfare of mankind? Developed and developing nations are struggling with stupendous imbalances and are heading for annihilation.

In the midst of these menacing challenges, it becomes increasingly urgent to restore the disturbed equilibrium between modern man's outlook on the external worlds and man's vision of the everlasting existence within. The inward transformation of man practised and proclaimed by ancient pathfinders of India's hoary culture, which even today is a living tradition, has been universally acclaimed as the essential prerequisite for world Peace. Unless the transformation of man comes from within there is very little change for any meaningful and enduring survival of the human race. Even if all the scientists and the super Powers get together and taboo all nuclear tools of destruction from the face of the earth, that will not ease the tensions among collective groups and between individuals, unless the transformation through the alchemy of love comes from within the spirit of man.

The Saiva pathway clearly discriminates between the science within and the science without. It perceives scientific knowledge as a record of inner experiences. It is only when science is guided by spirituality, when the inner and outer balance evenly, that world peace would become a reality. The Saiva code of life had laid down some three thousand and more years ago, that the love of siva, outflowing as love of our fellow men formed the basis of man's conduct and dutiful action, constituting what is known as Siva Dharma. From this pinnacle stood Kaniyan Punguntranar, who lived at Madurai during the Thamil Sangam Age and who proclaimed it in Purananuru thus:

"Everywhere our abode; everyone out kith and kin.
I will and good-will stem from with in;
They do not generate from actions of others.
Dying is not strange, nor living enjoyable
Suffering is not to be despised nor joys welcomed.
Thus the immortal soul moves onward
Always guided in its assigned pathways
The enlightened men discern it thus."

However the ultimate vindication of the delete of the validity and veracity of the Hindu pathway lied in the

Vedas and the Agamas. The Hindus have continued to believe for over five thousand years that some cosmos can be energised through the power of the Supreme Siva. If modern man heed to the clarion call of he Vedas and Upanishads, he can victoriously usher in the golden age of peace and plenty to the disillusioned world of today.

Unified ana I, quite undivided
Unified my soul
Unified my sight, unified my hearing
Unified my breathing, both in and out,
Unified is my continuous breath.
Unified, quite undivided am I
The whole of me."

Atharva Veda

The mundaka Upanishad declares that everything that moves, breathes or twinkles, moves or lives in Him. All that exists, as well as all ideas, even those which the mind indicates to itself as inconceivable, issue out of His presence. Brahma is indeed gyhayam, the spirit hidden in us, as a sun in the heart and found it. (vide Rg. V. 40.6) Dr. Ananda Coomarasamy puts it succinctly in his Atmayajna thus: "As he (bhagavan) distributing his powers, divides himself in them, so are they his devoted supported (Bhaktas) in that it is theirs to 'support' Him, especially in as much as it is theirs to render Him His share (bhagam). The relationship is of the breaths to the Breath."

"We are Thine and Thou are ours"

Rg. V. VIII 92.32

"As is one's willing so one comes to be."

Br. Up Iv 4.37.

The Brahma pathway stresses piety and devotion. A true bhakta nourishes God as food for existence. The act of' being is one of self-knowledge. It is in the context of being and knowing to be the same, that Dr. Ananada Coomaraswamy explain the significance to Tat tvam asi, 'That art Thou' "It is only to my real Self, this inward person (antapurusha) that the words 'That are Thou' can't be applied; not to this man who still knows in the worldly sense, who he is be name and family descent."

## Anta Yagjna self sacrifice

The term 'sacrifice' cannotes devotion of a bhakta. In this sense, the Vedas extol real sacrifice and being the act of a man who withdraws the breaths (the elemental self) from their objects, and sacrifices them to the fire. By self sacrifice, the bhakta (the supporter) sacrifices oneself by one self to one's self. We find that the sacrificer (bhakta) sets up the sacrificial fire within himself. Then he sees the Self impartially in all beings and all beings in the Self. True sacrifice (making sacred) is implicit in the concept of action (karma) itself.

"The fire of devotion set up in my inward Self
It does not die down in me.
He feeds the flame who utters truth,
And more and more becomes his own fiery force (tejas)

He quenches the flame who utters wrong.
Truth is satyam rtam: un-truth is an rtam"

- M. Up. III-2

In the Hindu tradition, Siva (Agni or Brhaspati) conveys the spiritual power in which the temporal power inheres. Therefore, whenever the activity of life is sacramentally conceived, this perfection is carried over into every field of doing. Skilful action is Yoga. Every karma becomes a sacrificial operation. This again has been vigilantly carried out in the Southern school of Saivism by St. Tirumular and extolled as the Saiva Way of life, par excelsis, by all the 'Sixty three' Preceptors in their lives some of which have been beautifully delineated in that sanga of deified lives in Tamil called the Peria Puranam. Among them the four samaya achariyas, religious preceptors, in their soul-out pourings called Thevaram and Tiruvasakam declare that true Sacrifice which is really making sacred is to be performed every minute in every hour of he day in every one of our performances. He is a true bhakta who is a karma yogi whose powers of the soul are yoked to the controlled mind in all his acts and deeds. This gives rise to the grand conception of the sacrificial life, where in all acts are reduced to their archetypes and so are referred to Him, from Whom all actions stem. It is to be noted that an emphasis on ultimate inwardness necessarily tends to obey the physical laws that are the supports of contemplation.

The cause of all the improper rhythms of our lives, the discords and disorders we see around us has been traces by the Hindu Preceptors (Achariyas) to the domination of the ego, ahamkara, (I am the doer), and the conceit of self- existence has been the subject of many of the cantos in the Saiva Tirumurai. The discipline and meditation that serve to help the soul to detach itself from the things of the world is what is called Yoga. The inner Self (antaratman) is lodged in the secret recess of our hearts and so the domination of the ego-self can be overcome by the self within.

"With understanding, separate Him from the

Sheaths of the body in which
He is lodge, even as you take off the blades of a reed plant.
Know that He is immaculate and deathless."
Katha Up. 6-17

St. Tirumular affirms the efficacy of the saiva pathway in a well known stanza:

"The ignorant ascribe that Love and Sivam are two
None know that Love and Sivam are one.
When they know that Love is Sivam
Then do they repose in the love of Sivam."
Tirumantiram 270

In another stanza of equal felicity, he defines the goal of this special pathway precisely:

"It is not one; It is not two; I is non-dual
Not involved in religious disputation or reproach
It follows the path of love, recognised as Siva Sakti In this way, the anma is filled with the bliss of Sivam.
Such is the goal of Siddhanta pathway."
Tirumantiram

All Hindu Seers certify with St. Thirumular that this pathway leads to an 'Accomplished End',
(Siddhanta), which is the goal of supreme felicity. It implies freedom from the gnawing fears and pains of life as well as its joys and triumphs. The master key is presented in this poem; it opens the gateway of unitive realisation to the illumined man:

" There are two positions, I and He.
I discerned them both as one; took the I
And placed it at His Feet as my offering.
Ever after, distinction of ' distinction of 'I and He' retracted."
Tirumantiram

St. Karaikal Ammaiyar, another enlightened woman saint, recalls her experience of peace perfect peace, as the ultimate end of the Saiva pathway, in her Atuputha Tiru Antati (Wonder Odes) thus:

"The knower is Himself, the subject of knowledge is Himself:
The wisdom of knowing is also himself.
He is the subject and the object of the universe
He needed is the supernal reality."

How truthfully down the portray the beauty of the One who became Many. Having been many the immanent Siva must again become One in transcendence. This unification and coming into one's own, so different from the unification processes set by scientific researchers, will alone help man to survive the passage of comings and goings and break the casual of Karma.

### The Rationale of Saiva Pathway

The exponents of Saiva Pathway (Saiva Neri), down the ladder of time have again and again affirmed that the significant part of the sacrifice (sacred devotion) is to put together again of what has been divided and to re-establish a unitary anma that shall be ourself, when this individual self bearing name and family is no more. This unification, this coming together into one's own is the theme of some of the soul-stirring cantos in the Saiva Tirumurai. The saiva way of life asserts that by knowing Who we are, we can attain liberation from the bondage of the elemental powers and the categories of existence (tattvas) such self-realisation leads to illumined peace (Shantam Advaitham) and torrential showers of Grace, (Shakti-nipata) begin to pour upon the inheritors of the indwelling Sivam.

The sacredness of life at every point of intersection in the Saiva Pathway has been examined by us, leading us to ask some fundamental questions and finding out the solutions to some of the problems of life in general, with the searchlight of the Hindu Elect. Who am I? What is He? From where did It emerge? In what way are we linked together? Has reality any meaning independent of man? Is the oneness sought after by the scientists identical with the unitive realisation declared by the spiritual seers? In the pursuit of Truth, is the good something different from the pleasant? Is not the Absolute Para Sivam extolled in the Mandukya Upanishad as 'Shantam Adavaitham, the Nama Sivaya hailed in Tiruvasagam? Am I not the Sadasat neither Sat nor Asat fully, but part taking of the nature of both? Can that and this mingle in communions?

The illumined Saiva Seers have enshrined in their sacred songs that Para Sivam is the Absolute Foundation of all existence and enters into inseparable relationship with man and world, linking space and time ever in advaithic union in every minutest particle of being in the ever expanding cosmos. On realising Him, in other words, when His presence within us and His Immanence in every aspect of existence is realised all questions are answered and all doubts are cleared and such a man becomes the most enlightened among men. He validates his life in Siva, for Siva and with Siva. That is the Saiva Pathway, a veritable way of life, that satisfies man's diverse needs at all stages of life for all times.

It is imperative that we understand fully the refined nature of Siva Sambandham. Sambandham is our integral relationship with Para Sivam, the Supreme Being Sat, through the operation of His will in the form of Para Sakti. It is true that man finds himself bound up with the limitations exerted by the primordial substance named Maya and the effects of our deeds (Karma) as well as by our inherent egoity (Anavam) . Even so the Will of Siva termed His Grace or Siva Sakti (Tiruvadi, Tiruarul) never ceases to operate on the soul of man( anma) as its eternal prop, at first veiled and concealed, and eventually unfolding in full luminosity of divine Grace (Anugraha). The liberated anma regins its pure consciousness. St. Manicavasagar sings jubilantly on his experience.

"This day in mercy unto me my darkness dispelled
Thou filleth my heart as yonder morning sunrise
Thy mode of rising, I comprehend not by thought.
There being nought else but Thou, atom by atom
All things great and small change and merge
Into Thy oneness Siva Dweller in the Holy
Shrine
Thou are not i his and that, yet are Thou
The essence in all who can know Thee?
Tiruvasagam 22.7

When one realises the Supreme Siva within oneself, all confusions of joy and grief disappear. St. Appar, the epitome of desirelessness, bids us to come "with faith and purity unto the Lord. Though no writ can be issued to certify Siva's majestic splendour, yet silently will He bestow the bounty of His infinite Grace on His chosen ones."

## The causal power and divine will

The casual power of Sivam is made feminine (mother) Because of its Generating when helped to know, cannot know unless God's knowledge unites with it and passes with it to the object and unites with it.

Man cannot perceive or know the reality of anything alone. Therefore God must be in union with the anma and know, so that the anma may perceive and know. The supreme Siva, the Indweller, knows all the perceptions of the anma 'simultaneously'.

When the anma which in dependance upon God becomes one with Him and experiences His Power (Grace), then it sees by direct intuition the light centre as luminous Sivam.

Meikanda Deva's Sivajnana Botham, Sutra XI expounds on this fundamental unification process of seer, sight and seen and the consequent unfolding of the symmetry behind existence:

"It is the anma with in that directs the seeing eye
to see.
So too, this anma that is unseen is made to
see by the Lord within it.
Thus the anma moves in ever-remembering
love (of oneness) towards the feet of Siva."

The perpetual presence of the divine awareness within the soul of man is an established truth in the Saiva Pathway. The saiva glorifies the essence of the indwelling, inseparable Sakti (luminosity) of Siva in the microcosm and macrocosm and records its application, utilisation and realisation in infinite variety of ways. The efficacy of divine Grace confers Plenum upon the realised man, who has faithfully followed light on the Saiva Pathway, and endows him with Peace. Perfect peace. The truth dawns on one and all of us that we should in the first instance be at peace within ourselves, before we can work to establish the plenum of peace in this world.

" .In the fusing hear of wisdom's fire refining me
Till tempered and touched by Thy Grace-
The soul's transforming alchemy-
SAID SWAMI VIVEKANANDA IN 1895: "Nation after nation has arisen and based its greatness upon materialism declaring that man was all matter. All such civilizations have been based upon such loose sand foundations as material comforts and all that have disappeared one after another from the face of the world; but the civilisation of India and of other nations that have stood at India's feet to listen and learn live even to the present day. Their lives are like that of the phoenix a thousand times destroyed but ready to spring up again more glorious. But a materialistic civilisation once dashed down never can come up again." True enough world's picture still remains the same! No appreciable change. The world today is characterised by the loss of direction, dissension and self destructions that are endemic to an over stimulated materialism. Swami foresaw this oncoming avalanche of spiritual crisis of this century and signified the unifying role of Vedanta as the only hope for humanity. Vedanta is not a new or particular religion; it is the essential spirit of all the religions of the world; the key note is "TRUTH IS ONE; SAGES CALL IT BY VARIOUS NAMES" with its four cardinal points namely-non duality of the God Head; divinity of the Soul; unity of co-existence; and harmony of religions. Practical Vedanta calls for this worship of the living God. God in man and its exhortation is "Service of Man is worship of God".

Swami Vivekananda, the dynamic apostle of Sri Ramakrishna, made Vedanta the Sanatana Dharam a world religion in the Parliament of Religions in Chicago in 1893. Today, thanks to the initiative and the dynamic drive of the Hon. Minister C. Rajadurai in charge of Hindu Culture & Hindu Affairs, this World Hindu Conference in 1982 a rich harvest of the spiritual seeds sawn by Swami Vivekananda in Colombo in 1897 is being held under the auspices of the Sri Lanka Government; a government and honoured it by its gibing assent to hold the first World Hindu Conference of this nature in Sri Lanka. It may not be out of place to quote Swami Vivekananda from what he said in Madras. "The restless western atheist or agnostic finds in the Gita or in the Dhammapada the only place where his soul can anchor.

May this conference be inspired to action by Swami Vivekananda's "Plan of Campaign" as disclosed in his address in Madras May the Grace of the Holy Trinity Bagawan Sri Ramakrishna Paramahamsa, Sarada Devi the Holy mother and Swami Vivekananda decend on this conference giving strength to ascend up to an unqualified success. - SWAMI PREMATMANANDA

பொங்கலோ பொங்கல் என்றும் பொங்குக!

# பேன்சி பூக்கடை

## பூ மணவறை
## சிறியது, நடுத்தரம், பெரியது



திருமணம், பூப்புனித நீராட்டு விழா மற்றும் மங்களகரமான வைபவங்களுக்குத் தேவையான பூக்கள், பூமாலைகள், பூ மணவறை, வட்ட மணவறை, அலங்காரத்துக்குத் தேவையான சகல பொருட்களையும் எம்மிடம் தாராளமாகவும் மலிவு விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.






## CONTACT THE LOCATION CLOSE TO YOU

**1634 Oak Tree Road**
**Edison NJ 08820**
**TEL: (732) 906-8881**

**383 Old Indian Trail Rd.**
**Aurora IL 60506**
**TEL: (630) 896-9206**

**1668 Victoria Park Ave.**
**North York, ON. Canada**
**(416) 288-1419**

**3059 Sheridan Dr.**
**Amherst, N.Y. 14226, U.S.A**
**(716) 838-0844**



# திருக்கோவில்களும் எதிர்கால உலகமும்

ந. பரம்சோதி
கலாச்சார அமைச்சு அலுவலகம், இலங்கை

"வான் தொடும் கோபுரங்கள் கொண்ட கட்டிடங்களும் வளம் பல உள்ளடக்கிய செல்வங்கள் "இறைவனின் தலம்" எனும் கோயில்களில் முடக்கப்பட்டு மூடத்தனமான காரியங்களை வளர்க்கும் வரவாற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்தல் வேண்டும்" என்னும் பகுத்தறிவாளர் எனத் தம்மைத் தாமே முத்திரையிட்டு வெளிப்படுத்தும் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரின் - அவர்கள் வார்த்தைகளிற் கூறுவதாயின் "வர்க்கத்தினரின்" உரத்த குரலுக்கு மத்தியிலும் எந்த வித சலனமும் சஞ்சலமும் தடைகளும் சோர்வுகளும் இன்றி இன்னும் - இன்னுமின்னும் கோயிற் கோபுரங்கள் வான் முட்ட எழுந்து கொண்டே இருக்கின்றன. "ஆத்மீகத்தின் அரண்" எனக் கூறப்படும் ஆசிய நாடுகளில் மட்டுமின்றி "அறிவியலின் தளம்" எனக் காணப்படும் ஐரோப்பிய நாடுகளிலும் - ஏன் - கால்மாக்ஸின் சித்தாத்தங்கள் வித்திடப்பட்ட சில கம்யூனிஸ நாடுகளிற் கூட கோயில்கள் கும்பாபிஷேக நிகழ்வுகளைக் காணத் தொடங்கிவிட்டன. எந்திரக் கணணிகளும் "இன்றநெட்" முறைமைகளும் சர்வ உலகின் மீது ஆதிக்கம் செலுத்தும் ஒரு புதிய யுகத்தின் புதுமைகளுக்கு மத்தியலும் ஆலயங்கள் அமைக்கும் பணிகளும் அவற்றின் மீதான அனுட்டானங்களும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.

இவ்வுலகில் இனம், மொழி, மதம், பண்பாட்டினாற் பிளவுபட்டு பரந்து வாழும் மனிதனுக்கு இனம் மொழி மதம் பண்பாடுகளே அடையாளத்தை (Identity)க் கொடுக்கின்றன மனிதனது பண்பாடு என்பது பெரும் பாலும் அவன் பின்பற்றும் மதம் மதநடைமுறைகள் ஆத்மீகக் கருத்துக்களின் அடிப்படையில் வடிவமைக்கப் பட்டவையாகவே காணப்படுகின்றது. இந்துப் பண்பாடு, பௌத்தப் பண்பாடு, கிறிஸ்தவப் பண்பாடு, இஸ்லாமியப் பண்பாடு என்று கூறும் போது பண்பாட்டில் முக்கியத்துவம் பெறுவது மதமே.

எல்லா மதங்களிலும் கோயில் வழிபாடு என்பது நடைமுறை அம்சங்களிற் பிரதான இடத்தை வகிக்கிறது. மதங்கள் உருவ வழிபாடு உடையனவாகவோ, உருவ வழிபாடற்றனவாகவோ, குறியீட்டுத் தன்மை கொண்டனவாகவோ இருக்கலாம். ஆனால் மக்கள் ஒன்று கூடித் திருவுருவங்களையோ, குறியீடுகளையோ, உருவமற்ற அப்பொருளை நினைப்பதற்கோ கோயில்கள் பிரதான இடமாக அமைகின்றன. மதங்கள் பேசும் கொள்கைகள், தத்துவங்கள், நடைமுறை வழிபாடுகள் பெரும்பாலும் ஒன்றாகவோ, ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவோ இருந்தாலும் அவற்றை அடையும் வழிகள் மார்க்கங்கள் பலவாக இருக்கலாம். பல மார்க்கங்களைப் பின்பற்றினாலும் மனிதன் அடையும் அடைவு (Achievement) ஒன்றே.

### புறப்படும் புதிய இந்து நாகரிகம்:

மண்ணில் இருந்து விண்ணுக்கு - ஏன், மற்றொரு கோளான சந்திர மண்டலத்திற்கு மனிதனை அனுப்பி - அங்கு அவனை இருத்தி நீல் ஆம்ஸ்ட்ரோங்கின் பாதம் சந்திரனில் பட வைத்து மனுக்குலத்தினுடைய விஞ்ஞான இராட்சதப் பாய்ச்சலாக அதனை இனங்காட்டி இன்று வரை அப்பணி தொடரும் அகில உலக வல்லரசனான அமெரிக்க நாட்டில் இந்து ஆலயத்தின் கும்பாபிஷேகம் இந்தியத் துணைக்கண்டத்தில் இருந்தும் இலங்கை எனும் சிறு தீவில் இருந்தும் சென்ற சிவாச்சாரியார்கள், வைதிக விதி விற்பன்னர்கள் தம் கைப்பட நிறைவேற்றிய கிரியைகள் - அறியும்போதும், காணும்போதும் இறை அச்சத்தால் இதயம் நிறைய, மெய் சிலிர்க்க, கண்கள் பனிக்க, கரங்கள் அத்திசை நோக்கி குவிகின்றன - சிரம் அத்திசைப் பக்கம் குனிகின்றது.

கனடாவில், ஜேர்மனியில், இங்கிலாந்தில், பிரான்ஸில் இன்னோரன்ன பல இடங்களில் இந்துக் கோயில்கள் - வளம் கொழிக்கும் அந் நாடுகளில் இந்துப் பெருமக்களின் வல்லமைக்கேற்ப அழகொளிர, ஆத்மீகம் வெளிப்பட, இறை அன்பு, வைராக்கியம், தெய்வத்துக்கான நன்றிக்கடன் இனங்காட்டப்பட உயர உயர எழுகின்றன. "எங்கும் நிறை இறைவா! இந்த யுகத்ததில் - தெய்வமே தேவையில்லை என்று தேவையற்ற கூக்குரல்கள் எழுந்து ஒலிக்க முற்பட்டிருக்கும் இந்த நவீன விஞ்ஞான யுகத்தில் அந்த ஒலிகளையெல்லாம் உள்வாங்கி ஜீரணித்து, சமிக்கப் பண்ணி உன்னுள் சங்கமமாக்கி உன் இல்லங்களை - எங்கிருந்து எதிர்ப்புக் குரல் ஒலிக்கின்றனவோ அங்கெல்லாம் பலமான அத்திபாரத்துடன் அமையச் செய்யும் பரம்பொருளே; என்று இதயம் வெம்பி, கண்கள் குளமாகி, கரம் கூப்பும் இந்துப் பெருமக்கள் இன்னொரு

புதிய நாகரிகத்துக்கு ஆம் கி.மு 3250 க்கும் 2750 க்கும் இடைப்பட்ட காலத்தில் நிலவியிருந்த பாரதத் துணைக்கண்டத்தில் உதித்து நாகரிகத்தின் அடிச்சுவடுதனைப் பாருக்குப் போதித்த "சிந்து வெளி நாகரிகம்" எனும் மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகத்தை விடவும் ஐரோப்பிய நாடுகளும் தம் வரலாற்றில் எதிர் காலத்தினைப் பதிக்கும் இன்னும் ஒரு நாகரிகத்தைத் தோற்றுவிக்கும் பெருமை பெறுகின்றனர்.

மேற்கூறியவரை ஆத்மீகத் தாகத்தைத் தணிக்கும் ஜீவ நீரான இந்து மதத்தின் தோற்றுவாயான ஆசியாவில் மட்டுமின்றி அண்ணளவாக அகிலமெங்கணும் அமையும் இந்துக் கோயில்களின் இன்றைய வியத்தகு விந்தைமிகு, விஞ்ஞான யுகத்தில் எழுந்துவரும் இந்துக் கோயில்கள் பற்றிக் குறிப்பிட்டோம். எமது பிரதான இலக்குகள் ஒன்று **கோயில் வழிபாடு மற்றையது எதிர் காலம்:**

## கோயில் எனுஞ் சொல் தமிழ் இந்துக்களின் சொந்தச் சொத்து:

"கோயில்" எனும் தூய தமிழ்ச் சொல்லுக்கு சொந்தக்காரர் இந்து மத வழிபாட்டினரே என்பதனை எவரும் மறுப்பதற்கில்லை. இறை இருப்பை ஏற்றுக்கொண்டு - தெய்வத்தைத் தமிழ் மொழியிலும் வழிபடும் வேறு மார்க்கத்தவர்களுமான கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் இறை இல்லத்தை - தெய்வீக சந்நிதானம் பிரத்தியேக கைங்கரியங்களுடன் நிலை பெறும் தலத்தை "கோயில்" எனும் பதத்தால் குறிப்பது அரிது. ஆலயம், தேவாலயம், பள்ளிவாசல், மசூதி, எனும் பதங்களாற் சுட்டுகின்றனர். ஆனால் கோயில் எனும் சொற்பிரயோகம் இந்துக்களின் சொந்தச் சொத்து. இந்துக்கள் இறைவழிபாட்டுத் தலத்தை வெறுமனே கோயில் எனும் வார்த்தை கொண்டு குறிப்பிடுவதனைத் தவிரவும் "திருக்கோயில்" எனும் மங்கலகரமான பதத்தால் அழைப்பதே அதிகம் - அதுவே அவர்தம் மன நிறைவு - அதுவே அவர்களுக்குப் பெருமை.

கோயில் எனும் அடிப்பதம் - அதாவது நிலைப்பதம் தலைவன், அரசன் என்ற பொருள்களைச் சுட்டும் என்பதனையும், இல் எனும் வருபதம் - அல்லது இணைச்சொல் வீடு எனும் பொருள் தரும் என்பதும் அறிந்தவையே. மண்ணாளும் மன்னன் ஒருவன் வாழும் வீடு கோயில், அவ்வாறாயின், அண்டசராசரங்களைப் படைத்து, அவற்றினுள்ளே பரந்து, அவற்றை இயக்கி, அவற்றுள் நிலைத்து நிற்கும் அனைத்தையும் ஆளும் இறைவன் உறையும் இல்லமும் கோயில்தானா? இவ்வாறு குறிப்பதில் இந்துக்கள் மன நிறைவு காணவில்லை. மனமுறிவுற்றனர். இறைதத்துவத்தின் தனித்துவம் பேணப்பட்டு தெய்வத்தின் உறைவிடம் சூட்டப்பட வேண்டும் - வார்த்தைப் பிரயோகமே அதனை உணர்த்துதல் வேண்டுமெனக் கொண்டனர். எனவேதான் அது சாதாரண கோயில் அல்ல. திரு - கோ - இல் என்று குறிப்பறிந்து குறிப்பிட்டனர். 'திரு' செல்வம், மேன்மை, உயர்தகுதி, தெய்வீகம், என்ற பல பொருள்படும். இறைவன் உறையுமிடம் திருக்கோயிலாகத்தானே இருக்க வேண்டும்.

எழுதும் சொல்லுக்கு பெறுமதிமிக்க அர்த்தமும், மேற்கொள்ளும் அனுட்டானங்களுக்கு மேலான பாரம்பரியமும் தம் முதுசொம் எனக்கொண்டுள்ள இந்துத் தமிழர்களே இறையில்லத்தைத் திருக்கோயில் எனக்குறிப்பிடுவர் என்பதில் வியப்பில்லை. இனி, இந்துத் திருக்கோயில் எனும் சொற்றொடர் வெளிக்கொணரும் சில சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளலாம்.

## திருக்கோயில்கள்

இந்துக் கோயில்கள் (திருக்கோயில்கள்) என்று குறிப்பிடும்போது பல்வேறு விளக்கங்களைக் கூறக்கூடிய வாய்ப்புண்டு. எனினும் வார்த்தைகளின் சிக்கனம் கருதிச் சிலவற்றை மட்டும் குறிப்பிடுவது சாலப் பொருந்தும்.

இந்துக் கோயில்கள் வெறுமனே எழுந்தமானக் கட்டங்கள் அல்ல. "காயமே கோயிலாக" எனும் அழியா வாக்கின் அர்த்தம் உணர்த்துவன. இந்துக் கோயில்களின் அமைப்பில் - ஆக்கத்தில் - பேணுகையில் அர்த்தங்கள் பல உள. தத்துவங்கள் நிறைய உள. மனித உடலமைப்பே கோயில்களின் உருவமாக, அந்த அந்த உடலுக்குள்ளே உறைந்து இயக்கும் ஆன்மாவானாது லயப்படும், இசைந்துவிடும் தலமாக "ஆன்மா" (உயிர்) "லயப்படும்" (இணைந்துவிடும்) இடம் ஆலயம் எனும் கோயில் எனும் தத்துவத்தில் உடலாகிய கட்டிடத்துள் (கோயிலுள்) உயிராகிய இறைவனை (திருவை) வைத்திருப்பது கோயில் என்ற தத்துவ அர்த்தம் விளங்கும் வகையில் இந்துக் கோயில்கள் அமைகின்றன.

*உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்*
*வள்ளல் பிரானார்க்கு வாய்கோபுரவாசல்*
*தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே*

சிவனாகிய சிவலிங்கம் எம்முடலில் இருந்து அவ்வுடலை இயக்கும் இறைவன் அந்த இறைவனையே புறத்தே சிவலிங்கமாகக் கருவறையில் பூசிக்கும் குறியீட்டுத் தன்மை (Symbolic Worship) சைவ சமயத்திற்குப் பெருமையூட்டுவது.

சிறந்து விளங்கும் இந்துக் கோயில்கள் ஒன்றிரண்டைக் கூறுமிடத்து இந்துக் கோயில்களின் அமைப்பு, அழகு, வியாபகம், அர்த்தம், தத்துவம், பெறுமானம் தெரிவன. தமிழ் இலக்கிய வரலாற்றியலாளர் தமிழகத்தின் பொற்காலம் எனப் போற்றும் சோழர் காலத்துப் பெரு வேந்தன் மும்முடிச்சோழன் ராஜராஜன் முயன்று நிறைவு செய்த **தஞ்சைப் பெரிய கோயில்.**

கோயில் என்றால் அது சிதம்பரமே எனும் சிறப்புக் கூறும் சிதம்பரத்தலம், மீன்கொடி கொண்டு தீந்தமிழ் வளர்த்த பாண்டியர் தம் தலைநகராம் மதுரையில் உள்ள **மீனாட்சி அம்மன் திருக்கோயில** மட்டுமல்ல,

ஹரியும் - ஹரனும் இணைந்து பெற்ற முத்து ஹரிஹரசுதன் எனும் கானகத்துத் தெய்வம் **ஐயப்பசுவாமி ஆலயம்** (கேரளம்)

வந்த வினை போக்கி, வரு வினை தவிர்க்கும் விந்தை மிகு தெய்வம் விநாயகன் மீதான **உச்சிப் பிள்ளையார் கோயில்,**

திருப்பதி சென்று திரும்புவோர் வாழ்வில் திருப்பம் காணச்செய்யும் வெங்கடாசலபதி உறையும் **திருப்பதித் திருக்கோயில்.**

குன்று தோறாடி - ஆறுமுகம் காட்டி ஆறுதல் ஈயும் கார்த்திகைக் கந்தவேளின் ஆறுபடைத் திருத்தலங்கள். இவ்வாறு சிவனுக்கு, அம்மனுக்கு, விஸ்ணுவுக்கு, முருகனுக்கு, விநாயகனுக்கு, ஐயப்பனுக்கு என்று; அமைந்துள்ள கோயில்கள் எல்லாம் இந்துக் கோயில்கள் அமைப்பின் வைதீக நெறியை, தத்துவ விதியை, வைராக்கியப் பக்தியை வளமிக்க இறை அருட்கொடையை எடுத்தியம்புவன.

புண்ணிய பாரத பூமியின் தென்திசைப் பகுதி எனும் தென் இந்திய மண்ணே இறை இனிதாய், இயைபாயக் குடிகொண்ட அதிக தலங்களைக் கொண்டது.

இந்து சமுத்திரத்தின் முத்தெனும் சின்னஞ்சிறு இலங்கைத்தீவும் இந்துக்கோயில்கள் அமைத்ததிலும், அனுட்டானம் பேணுவதிலும் பின் நின்றதல்ல.

தேவாரப் பாடல் பெற்ற **ஈஸ்வரங்கள்**, வள்ளியை உவந்து ஏற்ற கந்தனுறை **கதிர்காமத்தலம்**, எல்லோருக்கும் நல்லருள் பாலித்து வல்லமை புரியும் முருகவேளின் நல்லையம்பதி எனும் நல்லூர் என்றும் இல்ங்கை மணித்திரு நாட்டின் இணையிலாப் புகழ்மிக்க இந்துக்கோயில்களையும் இனங்காட்டலாம்.

வரலாறு திரும்பி விட்டது.... பாரதத்திலும், இலங்கையிலும் உள்ள ஆலயங்கள் இந்து ஆலயங்களின் வழி நின்று, சாம்ராச்சியம் ஒன்றைக் கட்டி ஆண்ட பிரித்தானியாவின் தலைநகராம் இலண்டனில், ஓடி வருவோருக்கு உறைவிடம் கொடுத்து மனிதாபிமானம் பேணும் கனடாவில், இந்துக் கோயில்களின் கோபுரங்கள் சிரம் தாழ்த்திக் கரம் கூப்பச் செய்கின்றன.

"கோயிலின் அழகு கோபுரம்" என்பர் "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பர். இந்துக்கோயில்கள் பற்றிச் சிந்திக்கும் போது கோபுரங்கள் இல்லாச் சிந்தனை எழுமா?

வானம் தொடக் கம்பீரமாய் எழுந்து நின்று தன்னகத்தே எண்ணிறந்த புராண இதிஹாச நிகழ்ச்சிகளைப் பொறித்தும், செதுக்கியும் கொண்டிருக்கும் இந்துக் கோயில்களின் ராஜ கோபுரங்கள் இந்துக்கள் இறைவன் மீது கொண்டிருக்கும் பக்தியின் உயர்வை, வைராக்கியத்தை, இதயத்திற்குக் களிப்புத் தரும் கனிவை, ஏன் அழகைக் கூட எடுத்தியம்புவன.

இவ்வாறு இந்துக் கோயில்கள் எனும் போது எழுந்து வரும் சிந்தனைகளுக்கு பயபக்தியுடன் ஒரு தடையிட்டு இக்கட்டுரையின் அடுத்த பகுதிகளையும் சற்று நோக்குவோம். இந்துக்கோயில் வழிபாடு என்பதே விடயம். எனவே கோயில்களின் அமைப்பு, தேவை, சுவை உணர்த்தும் தத்துவம் என்பவை முக்கியத்துவப் படுத்தப்பட வேண்டியதில்லை. காலத்தின் தேவை கருதி, நாம் வாழும் சூழலின் இயல்பறிந்து, தன்மை நோக்கி - இன்றைய வழிபாடு கோயில் வழிபாடு எதிர்காலத்தில் எதிர் நோக்குபவை, எதிர்காலத்துக்கான இன்றியமையாத் தன்மை, நாமும், நமது சந்ததியினரும் எதிர் கொள்ளப் போகும், உட்புகும் எதிர்காலம் - அதிற் கோயில் வழிபாடு.

இலக்கியங்களும் இதிஹாஸங்களும் மட்டும் முக்கியத்தும் பெற்ற - அல்லது சற்று காலங்கடந்து - வானொலியும் தொலைபேசியும், மோட்டார் வாகனங்களும் மட்டும் முக்கியத்துவம் பெற்ற - அல்லது, மேலும் காலச் சுழற்சியில் தொலைக்காட்சியும், கம்பியற்ற தந்தி முறையும், வித்தியாசமான வானூர்திகளும் வழக்கத்தில் உள்ளன - அல்லது காலச்சக்கர ஓட்டத்தில் விஞ்ஞான வளர்ச்சியில் மேலும் உலகம் சுருங்கி காலத்தால், தூரத்தால் அருகே வந்துவிட்ட நாடுகளைக் கொண்ட உலகமாக மாறியுள்ள நிலைகளில் கோயில் வழிபாடு பற்றிப் பேசுவது, எழுதுவது பெறுமான வித்தியாசம் காணும் என்பதில் ஐயமில்லை.

இலக்கியங்களும் இதிஹாஸங்களும் பற்றியே எல்லோருடைய கவன ஈர்ப்பும் இருந்த காலத்தில் கோயில் வழிபாடு பற்றிச் சிந்திக்கும் பாங்கில் "இன்றநெற்" யுகத்தில் நுழைந்திருக்கும் இவ்வேளை சிந்திக்க முடியாது. 'கோயில் வழிபாடு பற்றிப் பேசுவதே கூடாதோ" என்று எண்ணுவோரும் எம் மத்தியில் இருக்கக் கூடும். ஆனால் ஆரம்பத்திலேயே நாம் குறிப்பிட்டு விட்டோம், மனித சிந்தனைகள் விஞ்ஞான யுகம் நோக்கி வளர, வளரக் கோயில்களின் கோபுரங்கள் உயருகின்றன. எதனாலும் ஆறுதல் காணா மனித இனம் கோயில்களிற் குடிபுகுந்து தஞ்சம் தேடுகின்றது. எனவே **கோயில் வழிபாடு** பற்றி அதிகம் மிக மிக அதிகம் சிந்திக்க வேணடிய தேவை இந்தக் காலத்தில் கட்டாயமாகிவிட்டது.

இந்துப் பாரம்பரியத்தில் கோயில் வழிபாடு இந்து மதத்திற்கு மையமாக அமைந்த ஒன்று. இந்து மதம் கடவுள் நம்பிக்கை உடைய மதம். கடவுள் என்ற மேலான பரம்பொருளை அடிப்படையாகக் கொண்டு, ஆன்மா, பிரபஞ்சம் இவை மூன்றிற்கும் இடையில் உள்ள தொடர்பு பற்றிப் பேசினாலும், கடவுள் காட்சிக்குப் புலனாகும் பொருளல்ல. காட்சிக்குப் புலனாகவில்லை என்பதற்காக அது இல் பொருளல்ல. அதுவே நித்தியமான எல்லையற்ற, அழிவற்ற மேலான உட்பொருள். ஆன்மா என்பது சரீரத்தில் தங்கியுள்ள நித்தியவஸ்து. அது பிரபஞ்சத்தில் வசிக்கிறது. அது ஸ்தூல சரீரத்தோடு கூடி, பிரபஞ்சத்தில் விடயங்களை நுகர்கிறது. உலகில் வாழும் உயிர்களை மேற்கூறப்பட்ட மூன்று விடயங்களிலும் முக்கியத்துவம் பெறுபவை. மனிதன், அவன் வாழும் பிரபஞ்சம், மனிதனுக்கு அப்பாற்பட்ட பரம்பொருள். இந்துக்களின் தத்துவத்தில் சகல வல்லமையும் கொண்டது பரம்பொருள். அந்தப் பரம்பொருளைக் குறியாகக் கொண்டு மனிதன் பிரபஞ்சத்தில் நெறிப்படி வாழவும் இறுதியில் உடல், பிரபஞ்சம் ஆகியவற்றைத் துறந்து ஆன்மா ஈடேற்றம் பெறவும் கோயில் வழிபாடு அவசியம் என்பதை எல்லா மதங்களும் ஏற்றுக்கொள்கின்றன. கோயில் வழிபாடு என்பது சமயத்தோடு தொடர்புடைய ஓர் அம்சம் மட்டுமல்ல. மனித வாழ்வின் ஒரு பிரதான கூறு அது. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது ஆன்றோர் வாக்கு. இன்று தகவல் தொழில் நுட்ப உலகில் 2000 ஆம் ஆண்டில் மனிதன் நுழைந்தாலும் மனித மனதிற்கு வேண்டிய அமைதி சாந்தம. மகிழ்ச்சியைக் கொடுப்பது கோயில் வழிபாடுதான். நாகரிகத்திலும் விஞ்ஞானம் தொழில் நுட்பத்திலும் அறிவு ரீதியாக மனிதன் வளர்ச்சி பெற்றாலும் உளத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மதம் அவனுக்கு உதவுகிறது. கோயில் வழிபாடு என்பது புலனடக்கம், மன அடக்கம், அமைதி, சாந்தம் போன்ற மனநிலைக்கு மனிதனை இட்டுச் செல்கிறது.

இந்துமதத்தில் கோயில் வழிபாடு என்பது திருவுருவ வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டது. கோயில் வழிபாடு ஆகமங்கள் கூறும் விதி முறைகளுக்கேற்ப அமைக்கப்படுவதுடன், வழிபாட்டுக்கு வேண்டிய திருவுருவங்கள், சிற்பங்கள், விக்கிரகங்களும் ஆகமங்கள், சிற்ப சாஸ்த்திர நூல்கள் கூறும் அளவைப் பிரமாணங்களுக்கேற்ற வகையில் ஸ்தபதிகளினால் வடிவமைக்கப்படுகின்றன. வாஸ்த்து சாஸ்த்திர அமைப்புக்கேற்ற வகையில் கோயில் கட்டட அமைப்பு நிர்மாணிக்கப்பட்டு ஆகமங்கள் சிற்ப சாஸ்த்திரங்கள் கூறும் விதிமுறைகளுக்கு ஏற்ற வகையில் சிற்பங்கள் விக்கிரகங்கள் படைக்கப்பட்டு, பல்வேறு காரணப் பயில்வுகளுடன் கோயில்களிற் பிரதிஷ்டை செய்யப் படுகின்றன. ஆகமங்களும் சிற்ப சாஸ்த்திரங்களும் அளவைப் பிரமாணம், லட்சணவிதி பங்கு அமைதி, ஆடை ஆபரணங்கள் ஹஸ்தங்கள் முத்திரைகள் போன்ற பல அம்சங்களை சிற்பக் கலை நியமங்களாகக் கூறி கலை நியமங்களுக்கேற்ற வகையில் உருவாக்கப்படும். அழகிய சிற்பங்களே வழிபாட்டிற்கு உரியவை, வழிபடும் மக்களுக்குப் பலன் செய்பவை என்ற குறிப்பையும் தருகின்றன.

**கோயில் வழிபாடு:-**

இந்துக்கோயில் வழிபாட்டு முறை ஏனைய ஆத்மீக மதங்களின் வழிபாட்டு முறையில் இருந்து மாறுபட்டது. கூட்டு வழிபாடு அல்லது குறிப்பிட்ட நேர வழிபாடு என்பது இந்துக்கோயில் வழிபாட்டில் இல்லை. பரந்து, விரிந்து செல்லும் ஆற்று நீரில் இறங்கிக் குளிக்க விரும்பும் ஒரு மனிதன், பாய்ந்து நீந்த விரும்பும் மற்றொருவன், நடு ஆறு வரை சென்று மூழ்கி மிதந்து விளையாட விரும்பும் மற்றொருவன், பாதங்களை மட்டும் ஆற்றுநீரில் பதியவிட்டு சுகம்காண விரும்பும் மற்றொருவன் என்பது போல இந்துக்கோயில் வழிபாடு, அவரவர் தேவை எதுவெதுவோ அவரவர் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் அமைந்து விடுகிறது.

மூலமூர்த்தியைக் கண்டு வழிபடும் ஒரு கூட்டம், உட்பிரகாரத்தை மூன்றுமுறை சுற்றி வரும் ஒரு கூட்டம், உள்ளே பிரதிஷ்டை பண்ணப்பட்டிருக்கும் தம் இஷ்ட தெய்வங்களின் முன்பாக இதயம் கசிந்து இறைஞ்சும் ஒரு கூட்டம், மங்கள வாத்திய ஒலிகளினூடே மனதைப் பறிகொடுத்து, கண்ணீர் மல்க இறைவனைக்காணும் ஒரு கூட்டம், எத்தனையோ சந்தடிகளுக்கு மத்தியிலும் ஒரு ஓரமாக உட்கார்ந்து, எண்ணமனைத்தையும் ஒரு

நிலைப்படுத்தி, சித்தத்தை தெய்வத்தின்பால் குவித்து, மௌனித்து இறையன்பை உருசி பார்க்கும் ஒரு கூட்டம் - பரந்த ஆற்றில் பலவகைச் சுகம் கண்ட பல மனிதர்கள் போல இந்துக்கோயில் வழிபாட்டில் இணையும் அடியார்களை நாம் காணலாம். ஆகையினால் தான், எந்த நாட்டவரும், எந்த இனத்தவரும் இந்தக் கோயில் வழிபாட்டில் இதய சுகம் காணுகின்றனர் போலும்.

ஆலய வழிபாட்டில் ஈடுபடும் ஒருவன் புறத்தூய்மை யுடையவனாகவும், அகத்தூய்மையுடையவனாகவும், கரண சுத்தியுடன் அதில் ஈடுபடுதல் வேண்டுமென்பது ஆகமங்கள் சமய நூல்கள் கூறும் விதி. இத்தகைய விதிமுறைகளுக்கேற்ற வகையில் திருக்கோயில் அமைப்பும், விக்கிரகங்களும் இடம்பெறுகின்றன. கோயில் அமைப்பின் பிரதான பாகம் கருவறை அல்லது கற்பக்கிருகம் (Sanctum Sanctoriam) கருவறையில் மேலுள்ள பகுதி விமானம் அல்லது ஸ்தூபி எனப்படும். மூலவிக்கிரகம் எழுந்தருளியுள்ள இடமே கருவறை. அதன் முன்னால் அர்த்த மண்டபமும், அர்த்த மண்டபத்தின் முன்னால் மகா மண்டபமும் இடம் பெறுகிறது. கருவறையின் விரிந்த நிலையே கருவறை அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்பன. மண்டபத்தை கொடிஸ்தம்பம், நந்தி, பலிபீடம் இடம் பெறுகின்றன. சைவ சமயத்தின் பிரதான கடவுள் சிவன். சிவனை லிங்க வடிவில் வழிபடுவது சைவர்களது வழக்கம். ஆகமங்களும் லிங்க வழிபாட்டையே சிறப்பித்துக் கூறுகின்றன. "லிங்கம்" என்றால் "குறி" அல்லது "அடையாளம்" என்பது கருத்து. சைவத்திருக் கோயில்களில் லிங்க வடிவமே மூலவிக்கிரகமாகக் கருவறையில் வைக்கப்பட்டுள்ளது. சைவப்பாரம் பரியத்தில் கருவறையில் உள்ள சிவலிங்கம் - சூக்குமலிங்கமாகவும், கருவறையின் மேலுள்ள விமானம் அல்லது ஸ்தூபி தூலலிங்கமாகவும், ஆலய பலிபீடம் பத்திரலிங்கமாகவும் கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. சைவ தத்துவப் பாரம்பரியத்தில் தோத்திரமாகவும் சாத்திரமாகவும் அமைந்த திருமந்திரம் பின்வரும் பாடல் மூலம் அதனைத் தெளிவுபடுத்தப்படுகிறது.

*தூய விமானமுந் தூலமதாகுமால்*
*ஆயசதாசிவமாகு நற்சூக்குமம்*
*ஆயபலிபீடம் பத்திரலிங்கமாம்*
*ஆய அரனிலை ஆய்ந்து கொள்வார்கட்கே.*

கோயிலுக்குள்ளே செல்லும் ஒருவன் பலிபீடத்தில் தனது ஆசைகளையும், கீழான எண்ணங்களையும் பலி கொடுத்து விட்டு, அதாவது கொடிஸ்தம்பத்திற்கு முன்னால் பலிபீடத்தில் ஆண்கள் அஷ்டாங்கமாகவோ, பெண்கள் பஞ்சாங்கமாகவோ விழுந்து வணங்கி எழுந்து, கருவறையை நோக்கும்போது, அங்கு திரைச்சீலை எனும் அறியாமை நீங்க, அறியாமை விலக, ஞான ஒளியில் சிவலிங்கத்தைத் தரிசனம் செய்கிறான். தூய உள்ளத்தில் இறைவனது அருவுருவத்திருமேனி பதிய அவன் புறச்சூழலை மறந்து, தன்னையே மறந்து அந்த இறைவடிவத்தோடு ஒன்றி, அதிலேயே லயித்து அமைதியையும் மகிழ்ச்சி அனுபவத்தையும் பெறுகிறான். உலக வாழ்வில் பல்வேறு அவஸ்தைகளுக்கும், துன்பத்திற்கும் உள்ளாகும் ஒருவன் இறைவழிபாட்டின் மூலம் துன்பம், துயரத்தினின்றும் விடுபடுகிறான். இதனால் வழிபாடு என்பது வெறும் அர்த்தமற்ற சடங்குகளையும், கரணங்களையும் கொண்டதல்ல. இவ்வுலகில் பிறந்த உயிர்கள் படிப்படியாக ஆன்ம ஈடேற்றத்தைப் பெறுவதற்குரிய சாதனமே வழிபாடு.

வழிபாடு ஒரு கடமையல்ல. அது ஒரு செயற்பாடு மல்ல. மற்றவர் காண நிறைவேற்றப்படும் காரியமுமல்ல. நேர அட்டவணைப்படுத்தும் நாளாந்த கடமையுமல்ல. சுய விளம்பரத்தை, தன்னாதிக்கத்தை, கௌரவத்தைப் பறைசாற்றும் நிகழ்வும் அல்ல. ஆன்மா லயப்படும் ஆலயத்துள் செல்லுகின்றவர், புறஉலகின் கெடுபிடி களிலிருந்து முற்றாக விடுபட்டு, புலன்களை ஒடுக்கி, தன்னை இறைவனுள் அடக்கிக் கொள்ளுதல் வேண்டும். கவியரசு கண்ணதாசனின் ஓரிரு பாடல் வரிகளை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

*"ஆடை, அணிகலன், ஆடம்பரம் இவை*
*ஆண்டவன் விரும்புவதில்லை*
*அங்கொரு கண்ணும், இங்கொரு கண்ணும்*
*ஆலய வழிபாடில்லை."*

இந்த அறிவுரை வார்த்தைகளுக்கு உகந்த வழிபாட்டினை, எமது சொந்த மதம், இந்து மதம் கொண்டிருக்கின்றது. வேத சாஸ்திரங்களின், விளக்கங்களின்படி, வேண்டும் வழிபாடு நடத்தும் இந்துமத கோயில்களின் வழிபாடு எதிர்காலத்துக்கு வழங்கக் கூடியது என்ன? எதிர்காலச் சவால்களுக்கு கோயில் வழிபாடு ஈடுகொடுக்குமா?

**வழிபாட்டின் பரிணாமம்:-**

இந்து நாகரிகத்தின் தோற்றுவாய் காலமுதல் கோயில் வழிபாட்டின் முக்கியத்துவமானது பக்தியோடும், ஆத்மீக வளர்ச்சியோடும், இறைவன் மீதான நேர்த்திகளோடும், இறையருள் வேண்டிய மன்றாட்டுகளோடும் மட்டுமே அதிகம் தொடர்புபட்டிருந்தது. அந்தணர் சமூக மொன்றை பேணிப்பாதுகாப்பதிலும் தேவபாஷை எனும் சமஸ்கிருத மொழியிலும் அதிக ஈடுபாடு காட்டியது. காலச்சக்கரத்தின் சுழற்சியில் ஆன்மீகத்துக்கு அப்பாலும் கோயில் வழிபாடு வேறு தொடர்புகளையும் கொள்ளத்

தொடங்கியது. தனி ஆன்மீகத் தேவைக்கு அப்பால் சமூகத்தின் தேவைகள், தேசங்களின் தேவைகள், சமூகம் சார்ந்த வேறு, வேறு துறைகளின் தேவைகள் அனைத்தும் கோயில் வழிபாட்டில் இணையத் தொடங்கின. புராண, இதிஹாஸ, இலக்கிய சம்பவங்கள், கோயில் வழிபாட்டோடு இணைந்து வளரத் தொடங்கின.

கோயில் வழிபாடு உள்ளார்ந்த ரீதியான ஆத்ம திருப்தியை மட்டுமல்லாமல், உடல் ரீதியான, உலகியல் ரீதியான தேவைகளிலும், வளர்ச்சிகளிலும் பங்குகொள்ளத் தொடங்கியது.

கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பின்பு குறிப்பாக, சைவநாயன்மார்களும், வைஷ்ணவ ஆழ்வார்களும் கோயில் வழிபாட்டில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தினர் எனக் கூறலாம்.

தன்னைத் தொண்டனாகவும், இறைவனை எஜமானனாகவும் கொண்டு, உழவாரத் தொண்டு செய்து, இறையனுபவத்திற்கான தாச மார்க்கத்தைக் காட்டிய நாவுக்கரசு நாயனார் எனும் அப்பர் சுவாமிகள் கோயில் வழிபாட்டில் ஒரு புதிய பாதையைக் காட்டியவர் எனக் கூறலாம். இப்பணி ஏனையோரூடாகவும் தொடர்ந்தது.

வழிபாடு என்பது இறைவனைத் திருப்திப் படுத்துவது மட்டுமல்ல, மற்றவர்களுக்காகவும் வேண்டுவது, இறைபடைப்புக்களின் பெறுமானங்களை அனுபவரீதியாக உணர்ந்து அவற்றுக்கென நன்றியும் தெரிவிப்பது என்ற வழிபாட்டு முறை, இந்துக்கோயில் வழிபாட்டு முறையில் ஏற்பட்ட மாற்றம் எனக் கூறலாம்.

"பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புளதேல் உனை மறவாமை வேண்டும்" என்று இறைவனோடு இறைஞ்சி, தன் அழகுத் திருவுருவைப் பேயுருவாக மாற்றி, இறைத்தலத்தின்மீது பாதம்படக்கூடாது எனத் திடசங்கற்பம் எடுத்துத் தலையை பூமி மீது வைத்துக் கடந்து, ஆண்டவனால் அம்மையே என அழைக்கப்பட்ட காரைக்காலம்மை வழிபாட்டு முறையில் மற்றொரு மாற்றத்தை ஏற்படுத்திய பக்தையாவார்.

இவையெல்லாம் சில ஆயிர, சில நூறு ஆண்டுக்கு முற்பட்டவை. எமது கட்டுரையின் மற்றொரு பகுதி "வழிபாடும் எதிர்காலமும்" என்பதாகும். எமது சிந்தனைகளின் ஆரம்பத்திலேயே கூறினோம். இது புராண, இதிஹாஸ, இலக்கியங்களின் காலமல்ல. விஞ்ஞான விளைவுகளின் அங்குரார்ப்பண காலமல்ல. விண்வெளி யுகம் ஆரம்பித்த காலமல்ல. அணு ஆயுதங்கள் ஆக்ரோஷமாகச் சத்தமிடும் காலம்.

புவி மண்டலம் கடந்து மனித இனம் அயல் மண்டலங்களின் ஆய்வில் இறங்கியுள்ள காலம்.

மூடப்பட்ட உள்ளங்கையினுள்ளே முழு உலகையும் காணக்கூடிய தொலைக்காட்சிப் பெட்டியை வைத்திருக்கும் காலம்.

மனித உள்ளுறுப்புக்கள் அனைத்தையும், வெளியே இருந்து நோக்கியே நுண்ணிய கருவிகளை உள்ளனுப்பிச் சிகிச்சை கொடுக்கும் காலம்.

ஏவுகணைப் பாய்ச்சல்களினால் மானுடம் ஏக்கப் பெருமூச்சு விடும் காலம்.

போதைவஸ்துக் கெடுபிடிகளின் பொல்லாத அச்சுறுத்தல் காலம்.

இனங்கள், மதங்கள், நாடுகள், பிராந்தியங்கள் தினமும் குருதிக் குளியல் நடத்துகின்ற காலம்.

இத்தனைக்குள்ளும் நாம், இன்னும் ஓரிரு வருடங்களில் காணப்போகும் எதிர்காலம், நுண்ணிய மின் அலை வலைகளுள் முழு உலகமும் நுழைக்கப்படப்போகின்ற "இன்ரநெற்" காலம். இந்த எதிர்காலத்தில் கோயில் வழிபாடு கொள்ளப்போகின்ற பங்கு என்ன?

## எதிர்காலத்தில் எதிர் நோக்கும் சவால்கள்

பாரதப் புண்ணிய பூமியில் பர்ணமித்த இந்துமத வழிபாட்டு முறையும் திருக்கோயில்களின் சிறப்பும் ஏனைய நாடுகளிலும் இலகுவாகப் பரவிய வரலாற்று அத்தியாயங்களை நாம் அறிய முடியும். தென் கிழக்காசிய நாடுகளான இந்தோனேஷியா, பர்மா, தாய்லாந்து, ஜாவா, சுமாத்திரா போன்ற நாடுகளில் இந்துத் திருக்கோயில்கள் அமைப்பும் அந்நாட்டவரே. அக்கோயில் வழிபாடுகளில் ஈடுபட்ட தன்மையும் வரலாறு உணர்த்தும் உண்மைகளாகின்றன.

சோழர் ஆட்சிக்காலத்தின்போது இலங்கை நாட்டிலும் தன் ஆட்சியும் அமையும் ஒரு மண்டலமாக - ஈழமண்டலமாகக் கொண்ட சோழவேந்தன் பொலனறுவை இராஜதானியில் அமைத்த சிவன்கோயில் அதனடிப்படையில் பேணப்பட்ட வழிபாடு கடல் கடந்தும் அண்மித்த அயல்நாடுகளிலும் ஆலயங்கள் அமைந்தன, வழிபாடு நிறைவேறியது என்பதற்கு ஆதாரம் எனினும் இவ்விடத்தில் நாம் ஒரு குறிப்பினை மனதிற் கொள்ளுதல் அவசியம்.

நாடாளும் மன்னர் இந்துக்களாக இருப்பின், அன்றேல் சமயப் பொறையும் புரிந்துணர்வும், இந்துமத

நம்பிக்கையும் உள்ள அரசர் ஆட்சிக்காலத்தில் அவர்தம் ஆதரவுடன் ஊக்குவிப்புடன் மானியக் கொடுப்பனவுகளுமான இந்து ஆலயங்கள் எழுந்தன. இந்துத் திருக்கோயில் வழிபாடு பரவியது - வளர்ந்தது என்பதே வரலாற்று உண்மை.

இந்திய நாட்டில் இதற்கு ஆதாரம் காட்டுவதை விடவும் இலங்கை நாட்டில் அதாவது மதத்தாலும் மொழியாலும் மாறுபட்ட பெரும்பான்மையோரால் நிருவகிக்கப்படும் இலங்கை நாட்டில் இந்துத் திருக்கோயில்கள் அமைப்பும் வழிபாட்டு அனுட்டானங்களும் பேணப்பட்டமைக்கு ஆதாரங்கள் காட்டுவதே சிறப்பு.

யாழ்ப்பாணத்து அரசர்கள் பரராஜசேகரம், சேகராஜசேகரம் மற்றும் மன்னன் குளக்கோட்டன், புவனேகபாகு, போன்ற மன்னர் ஆட்சிக் காலங்களைக் குறிப்பிடலாம். ஆனால் இந்த நிலை தற்போது உள்ளதா? இது ஒரு சவால் அல்லவா? இந்துமதத்தைக் காப்பாற்றத் துணியும் வளர்க்க விரும்பும் ஆட்சியாளர்கள் அல்லது சமயப் பொறையுள்ள ஆட்சியாளர்களின் ஆதரவுடன் இந்துத் திருக்கோயில்கள் அமைப்பும், வழிபாடும் பேணப்படும் காலம் இன்றுள்ளதா? எதிர்காலம் அத்தகைய வாய்ப்பை வழங்குமா?.

பல்வேறு காரணங்களால் தமிழர்கள் குறிப்பாக இந்துக்கள் புலம்பெயர்ந்து அகதிகளாக ஐரோப்பிய நாடுகளில் வாழுகின்றனர் என்பது உண்மையே. அவர்கள் வாழும் நாடுகளில் தம் வாய்ப்பான சூழலுக்கேற்ப திருக்கோயில்களை அமைத்தலும் வழிபாடு இயற்றியும் வருகின்றனர் என்பதும் உண்மையே. ஆனால் நிர்வாகப் பலத்துடனோ, ஆட்சி அதிகாரத்துடனோ, செல்வமேம்பாட்டுடனோ, இவற்றைச் செய்யவில்லை. அதிகளவு அகதி அந்தஸ்த்திலேயே வாழும் இந்துமக்கள் அதிசயத்தக்க ஆண்டவனின் அனுக்கிரகத்தினால் ஆலயங்களையும் அமைத்துக் கொள்கின்றனர் - வழிபாடும் நடத்திக் கொள்கின்றனர்.

கணமும், தினமும் நான் கேட்கும் செய்திகளைத் தொலைக் காட்சிகள் ஊடாக நாம் காணும் காட்சிகள் சஞ்சலத்தையும், சலனத்தையும், பீதியையும், எதிர்காலம் பற்றிய பாரிய சந்தேகங்களையும் ஏற்படுத்துவதனை நாம் மறுத்து ஒதுக்கி விடலாமா?

மதம் ஒரு பக்திமிக்க அனுட்டானமாகக் கொள்ளப்படாமல் மதம் - வெறி எனும் அர்த்தம் விளக்கும் காரியங்கள் பல தேசங்களில் நிகழுகின்றனவே. ஒரு மதத்தவர் மறு மதத்தவரை தம் வழிபாட்டுச் சுதந்திரத்தின் குறுக்கே வந்தார்கள் என்று இம்சிக்கும் கொடூரங்களை நாம் கேட்டறிகிறோம் - பார்க்கிறோம். மதச் சகிப்புத்தன்மையை நாடுகளும், சமூகங்களும் தொலைத்து விட்டனவே. இந்து மார்க்கத்தின் புண்ணியபூமி எனும் பாரத தேசத்திலேயே இந்துக்களுக்கு எதிரான எண்ணற்ற சவால்கள் உண்டே.

விஞ்ஞானத்தின் பக்கம் முழு உலகும் திரும்பி வாழ்வுமுறை, அணிகலன்கள், உபயோகமொழி, உறவாடும் நண்பர், உண்ணும் உணவு, கற்கும் கல்வி, செய்யும் தொழில், சேர்ந்து வாழும் சமூகம் - என்று அனைத்துமே பாரம்பரிய மரபுகளில் இருந்து விடுபட்டு "வேறொரு கோலம்" எடுத்திருக்கும் இக்காலத்தில் - இதனூடாக நாம் நுழையப்போகும் எதிர்காலத்தில் திருக்கோயில் அமைப்பதில் ஆர்வம் ஏற்படுமா? வழிபாடுகள் பேணப்படுமா?

எதிர்காலச் சந்ததிக்கு முழுமுதற் பொருளாம் சிவனை இனங்காட்டும் அப்பரின் ஒரு தேவாரம் போதும் என்ற பேருண்மை தெரியுமா?

*குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயுள் குமுண் சிரிப்பும்*
*பனித்த செஞ்சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்*
*இனித்தமுடன் எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்*
*மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.*

அன்று அப்பர் தன் ஞானத்தால் தரிசித்து எமக்கும் இறை முழு உருவை வெளிப்படுத்திய தேவாரம் பாடி அர்த்தம் புரிந்து அகம் குளிரும் எதிர்காலச் சந்ததியொன்று நம்மிடையே உண்டா? இது ஒரு காலம் அல்லவா?

பொருள் சேர்க்கும் மன்றங்களும், விஞ்ஞான உபகரணங்கள் பற்றி ஆய்வுகள் நடத்தும் அரங்குகளும், அண்ட வெளி ஆய்விற்காக அமைக்கப்படும் விந்தைமிகு விஞ்ஞானகூடங்களும், "எயிட்ஸ்" எனும் ஆட்கொல்லி நோய்களை சுமக்கத் தொடங்கிவிட்ட மனித இனத்தின் விடுதலைக்கான மருத்துவத் தேட்டங்களும் ஒரு வல்லரசு உருவாக்கும் ஆயுதத்தின் பலம் அதிகரிக்க மறு வல்லரசு அணுவைப் பிளந்து ஆராய்ச்சி நடத்தும் அவசரங்களும் காணும் - காணப்படும் நிகழ்காலத்தின் ஊடாக கடந்து சென்று சேரவேண்டிய எதிர்காலத்தில் பிரத்தியட்சமாய்க் காணும் பொருள் எனப் பேசப்படும் இறைக்கு இல்லம் எழுப்புவார்களா? வழிபாடுகள் நிகழுமா?

## அழியாத வழிபாடு" சவால்களைச் சமாளிக்கும்

கிறிஸ்தவ விபத்தின் அடிப்படையில், அண்ணளவாக இரண்டாயிரம் ஆண்டுகளாக மதம் வாழுகிறது. கிறிஸ்த்தவ சித்தாந்தத்தின்படி முதல் மனிதனாகிய ஆதாமின் காலத்திலிருந்தே, இறை நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. இதுவரை மதம் அழியவில்லை. ஆலய வழிபாடு அகலவில்லை.

காலக் கணிப்புள் அடக்கிவிட முடியாத இந்துமதத்தின் அனுட்டானங்களைப் பின்நோக்கிப் பார்க்குமிடத்து வேதகாலம் எனப்படும் ஆதிகாலம் கி.மு. 6000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இந்திரனை முதற் தெய்வமாகவும் வர்ணன் வாயு அக்கினி போன்ற துணைத் தெய்வங்களையும், வழிபாட்டில் கொண்டகாலம் வேதகாலம் ஆகும். அக்காலம் தொட்டு இக்காலம் வரையும் மதநம்பிக்கை முற்றாக மாறவில்லை, வழிபாடுகள் அழியவில்லை.

விஞ்ஞான முறைமைகளின் அடிப்படையில் அமைந்த அகழ்வாராய்வு முடிவுகளின் படி பூமியினுள்ளே புதையுண்டு போய் அகழ்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட மொகஞ்சதாரோ ஹரப்பா நகரங்களையுள்ளடக்கிய இந்துவெளி நாகரிகம் - முழுமையான இந்துமத வழிபாடு கொண்டிருந்த பழம்பெரும் நாகரிகம், கி.மு. 3250ற்கும் 2750ற்கும் இடைப்பட்ட காலத்திற்கு உரியது என்பது தொல்லியலாளர்களின் துணிபு. இன்றுவரை அழியவில்லை. வழிபாடுகள் மறையவில்லை.

தோமஸ் அல்வாஎடிசனின் மின்சாரக் கண்டுபிடிப்பு நிகழ்ந்ததுதான்:
கோயில் வழிபாடு குறையவில்லை.

கிரகம்பெல் தொலைபேசியை கண்டு பிடித்தார்தான்:
கோயில் வழிபாடு குறையவில்லை.

மார்க்கோணி வானொலியை கொண்டுவந்தார்தான்:
கோயில் வழிபாடு குறையவில்லை.

றைட் சகோதரர்கள் வானூர்தியை உலகிற்கு வழங்கினார்கள்தான்:
கோயில் வழிபாடு குறையவில்லை.

டாக்டர் பேனாட் மாற்று இருதய சிகிச்சையில் வெற்றி கண்டார்தான்:
கோயில் வழிபாடு குறையவில்லை.

இறைவனே இல்லை. கோயில்களே வேண்டாம் என்றும், மதம் "அபின்" போன்றது என்று கால்மார்க்ஸ் கர்ச்சித்தார்தான். உயர்ந்து செல்லும் இராஜகோபுரம் போல வழிபாடும் வளர்ந்தே வந்தது.

கூட்டு மொத்தமாக நாம் குறிப்பிட முனைவது என்னவென்றால் விஞ்ஞானம் வளர்ந்தது, விந்தைதான் நிகழ்ந்தன. ஆனால் மனித இனத்தின் ஆத்மீக நம்பிக்கைக்கு அந்தம் கொண்டுவர எவராலும் முடிய வில்லை. கோயில் வழிபாட்டிற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட எவராலும் கூடவில்லை. ஏனெனில் மாற்றங்கள் எத்துறையில் எத்தனைதான் வந்தாலும், மானுடம் மறையவில்லை. ஆகவே மனித இனம் இருக்கும்வரை மதம் இருக்கும். கோயில் வழிபாடும் இருக்கும். காலச்சக்கர சுழற்சியின் எத்தனை சகாப்தங்கள் மனித இனம் கடந்து வந்தாலும், கோயில் வழிபாடு நிலைக்கும். இந்துக் கோயில்களும் அவை சர்வ உலகிற்கும் வழங்கும் வழிபாட்டு முறைகளும் எவ்வாறு காலத்தின் தேவைகளை அறிந்து, மனுக்குலத்தின் மேம்பாட்டிற்காக செயல்பட்டனவோ அவ்வாறே எமது கோயில்களின் வழிபாடு எத்தகைய யுகத்துள் எதிர்காலம் சென்றாலும் அந்த எதிர்காலத்தின் அத்தனை தேவைகளுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் இருக்க வேண்டும்- இருக்கும்.

இதுவரை கூறியவற்றைத் தொகுத்துக் கூறுமிடத்து கோயில், வழிபாடு எதிர்காலம் எனும் மூன்று விடயங்களில் எமது சிந்தனையை ஓடவிட்டோம். கோயில் எனும் பதத்தின் பொருள் இந்துக் கோயில்களின் தனித்துவம் வழிபாட்டின் தொன்மை- காலம் கடந்தும் அழியா வழிபாட்டின் தன்மை - கடந்த காலங்கள், வாழும் காலங்கள், வரும்காலம் இவற்றில் இந்துக் கோயில்கள் -வழிபாடு என்பன பற்றி இயன்றவரை நோக்கினோம்.

எதிர்கால உலகத்திலும் மனிதப் பண்பாடு, நாகரிகத்தில் கோயில் வழிபாடு முக்கியத்துவம் பெறுவதுடன் மக்களை மதம் சார்ந்த நடவடிக்கைகளில் பெருமளவில் ஈடுபடுத்தி அணு, ஆயுத யுகத்தில் அவனுக்கு அமைதியைக் கொடுக்கும் என்பதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. தென்னாசியாவிலேயே நாளுக்குநாள் நாம் கேட்கும் செய்திகள் அங்கு ஆயுதப் பரிசோதனைகளும் அவற்றை உற்பத்தி செய்தலுமே இந்நிலையில் மனித உலகத்திற்கு அமைதியை ஏற்படுத்தும் சமய முயற்சிகளையும் வளர்க்க வேண்டிய கடமை எமக்குண்டு.

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

# LAW OFFICES



## யசோ சின்னத்துரை

பரிஸ்டர், சொலிசிற்றர் & நொத்தாரிஸ்

- வீடு கொள்முதல், விற்பனை - உறுதி எழுதுதல்
- வர்த்தக ஸ்தாபனங்கள் கொள்முதல், விற்பனை, பதிவு
- சிவில் வழக்குகள், முக்கியமாக சமரச வழியில் பிணக்குகளைத் தீர்த்தல்
- குடிவரவு அகதி விசாரணை
- குடும்ப விவகார சட்ட உதவி, பிரதிநிதித்துவம்
- உயில் தத்துவப் பத்திரங்கள் தயாரித்து அத்தாட்சிப் படுத்துதல்
- சத்தியப் பத்திரம் தயாரித்து அத்தாட்சிப் படுத்துதல்

மற்றும் பொதுத் தேவைகளுக்கான சட்ட ஆலோசனைகளும் வழங்கப்படும்

## Yaso Sinnadurai

Barrister & Solicitor, Notary Public

- Real Estate - Home Purchase, Sales and Mortgage
- Commercial Law, Commercial and Residential Lease
- Civil Litigation, with focus on Alternate Dispute Resolution (ADR)
- Immigration and Refugee Law
- Family Law (uncontested)
- Last Will
- Power of Attorney and Statutory Declarations

* Consultations by appointments only

அலுவலகத்தில் நேரடியாகச் சந்திப்பதற்குத் தயவுசெய்து முன்கூட்டியே நேரம் ஒழுங்கு செய்து கொள்ளவும்.

**2555 Eglinton Ave. East**
**Suite 204, (at Midland)**
**Scarborough, ON MIK 5J1**

**Tel: (416) 265-3456**
**Fax: (416) 265-2770**

வீடு உறுதி எழுதுவதற்கு எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

**Mississauga Branch Office**
**3038 Hurontario Street, Suite 203**
**(Just North of Dundas Street)**

**Tel: (905) 306-1100**

மிசிசாகா, ஒக்வில், பிறாம்ரன், எற்றபிக்கோ ஆகிய நகரங்களில் இருந்து எமது சேவையை நாடுபவர்கள் எமது மிசிசாகா அலுவலகத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ளமுடியும்.

# திருமுறைகளில் இலக்கிய வளம்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் எம்.ஏ,. எம். லிட்., பிஎச். டி.

## தோற்றுவாய்:

ஓவியம், சிற்பம், இலக்கியம், இசை, நாட்டியம், நாடகம் என்பன மக்களுக்கு இனிமையைப் பயக்கும் கலைகளாகும். இவற்றுள் இலக்கியம் என்பது மக்களின் பல்வேறு குறிக்கோள்களாகிய இலக்கினைக் கருத்திற்கொண்டு அறிஞரால் இயற்றப்படுவது ஆதலால் இலக்கியம் என்று பெயர் பெற்றுள்ளது. இலக்கினை உடையது இலக்கியமாகும்.

## இலக்கிய வகை:

அறிஞர் இலக்கியத்தை உரைநடையாகவும் செய்யுள் நடையாகவும் இயற்றி வருகின்றனர். ஆனால், உரைநடை இலக்கியத்தைக் காட்டிலும் செய்யுள் நடையாக இயற்றப்படும் இலக்கியமே சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது.

இலக்கியங்கள் நாடக வழக்கென்னும் புனைந்துரை, உலகியல் வழக்கென்னும் இயல்புரை, என்னும் இவற்றை, இரண்டு கால்களாகக் கொண்டு இயங்குகின்றன. நாடக வழக்கென்னும் புனைந்துரைக்கும் கற்பனை என்றும் பெயர் உண்டு.

இலக்கியங்கட்கு இன்றியமையாததாய் வேண்டப்படுவது பொருட்பொலிவாகும். எடுத்துக் கொண்ட பொருளை ஆற்றல் வாய்ந்த நால்வகைச் சொல்லுள் அமைத்து, மோனை முதலான தொடையும் சினை முதலான தொடை விகற்பங்களும் சிறப்பாய் அமைய, தன்மை உருவகம் உவமை முதலான அணிகள் அமைந்து அழகு செய்ய, பல்வேறு ஓசைப் பொலிவு தோன்ற, உணர்பவர்கட்கு அமிழ்தம் போல் இனிய சுவையைத் தருவது இனிய செய்யுளாகும்.

"பொருளின் பொலிவும் சொல்லின் திறனும் தொடையும்
தொடையின் விகற்பமும் துணை உருவகம் முதலாம்
அலங்காரங்களை உட்கொண் டோசைப் பொலிவுடைத்
தாகி உய்த்துணர் வோர்தம் உள்ளங் கட்கு
மாக்கடல் அமிழ்தெனப் பாடுவது மதுரகவி"

என்று கூறுகிறது, பிங்கல நிகண்டு.

இலக்கியம் ஒவ்வொரு நாட்டிலும் அங்கு வாழும் மக்களின் தன்மைக்குத் தகுந்தாற் போல் பலவகைத் தன்மையுடையனவாக அமைந்துவிடுகின்றன. அதுபோல் காலத்திற்குக் காலம் இலக்கியம் பல்வேறு மாற்றம் பெற்று வளர்ந்து வருகின்றது. வரலாற்றறிஞர் இடத்தாலும் காலத்தாலும் இலக்கியத்தைப் பாகுபடுத்தி வழங்குகின்றனர். எடுத்துக்காட்டாக, மேலைநாட்டு இலக்கியங்களின் தன்மை வேறு, நம்நாட்டு இலக்கியத்தின் தன்மை வேறு. அதுபோல, முற்கால இலக்கியத்தின் தன்மை வேறு, இக்கால இலக்கியத்தின் தன்மை வேறு.

தமிழ்நாட்டிலே மிகப் பழைய காலத்தில் தோன்றியவை வாய்மொழி இலக்கியமாகும். அவை அகப்பொருள் பற்றியும் புறப்பொருள் பற்றியும் தோன்றியிருக்கலாம். அவற்றுள் வேலன் முதலியோர் வெறியாடும்பொழுது கடவுள் மேல் பாடிய இலக்கியம் முதலாயின பழைய காலத்துத் தெய்வ இலக்கியமாகும். சங்க இலக்கிய காலத்தில் கடவுள் வாழ்த்து என்ற தலைப்பில் சில தெய்வ இலக்கியங்கள் தோன்றின. சங்ககாலத்திற்குப் பின் மிகுதியான தெய்வ இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் தலைசிறந்தன சைவ வைணவ தெய்வ இலக்கியமாகும்.

## திருமுறைகள்:

சைவ தெய்வ இலக்கியங்களில் மிகப் பழமையானவை காரைக்கால் அம்மையார் பாடிய பாடல்களும், திருமூலர் பாடிய திருமந்திரமாலையும், சமயகுரவர்கள் பாடிய பாடல்களுமாகும். இவற்றையெல்லாம் "திருமுறை" என்ற பெயரால் சைவப் பெருமக்கள் பகுத்து முறைப்படுத்தி வழங்கி வந்தனர்.

## திருமுறை என்ற பெயர்:

"திருமுறை" என்ற பெயர் திருமுறை வகுத்த நம்பியாண்டார் நம்பிக்கும் பல நூற்றாண்டுக்காலம் முன்பிருந்த திருமூலர் திருமந்திரத்தில் வந்துள்ளது.

"ஏடங்கை நங்கை இறையெங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும்வெண் டாமரை
பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரம் சொல்லுமே" (1067)

மேற்கூறிய பாடல் திருமந்திரத்தில் நான்காம் தந்திரத்தில் "சத்திபேதம் - திரிபுரைச் சக்கரம்" என்ற தலைப்பில் வந்துள்ளது.

திரிபுரை என்ற சத்தி அந்தரி, சுந்தரி, நாரணி, பரிவர்ணி,

ஈசி, மனோன்மணி என்னும் பல பெயருடையவள் என்றும் (1048), அவள் பொன்னிறம் செந்நிறம் வெண்ணிறம் என்னும், மூன்று நிறமுடையவளாயிருந்து கல்வியையும் போகத்தையும் முத்தியையும் தருகிறாள் என்றும் (1047), அவள் அங்கையில் ஏட்டினை உடையவளாய் மூன்று விழியையுடையவளாய் விளங்குகிறாள். படிகம், போன்ற வெண்ணிறம் உடையவள். அவள் விரும்பி அமர்வது வெண்டாமரை மலர். அவள் பார்ப்பதி என்னும் பெயருடையவளாயிருந்து திருமுறையைப் பாடிக்கொண்டுள்ளாள். அத்தகைய திரிபுரையின் திருவடியைச் சென்னியிலே சூடுமின், அவளைத் தோத்திரம் செய்யுங்கள் (1067) என்று திருமூலர் உலக மக்களைத் திரிபுரையிடம் ஆற்றுப்படுத்துகிறார். இங்கே திரிபுரையால் பாடப்படும் திருமுறை உயர்ந்த அறிவு நூலாக இருத்தல் வேண்டும்.

## திருமுறை என்ற சொல்லின் பொருள்:

இனித் திருமுறை என்ற சொல்லின் பொருளை ஆராய்வோம். "திருவென்ப மேலை செல்வம் சிறப்பொடு முப்பேர் செப்பும்" என்ற சூடாமணி நிகண்டின்படித் "திரு" என்னும் சொல் "இலக்குமி" "செல்வம்" என்னும் பெயர்ப்பொருளிலும், "சிறப்பு" என்னும் பண்புப் பொருளிலும் வரும். திருமுறை என்ற சொல்லில் வந்துள்ள திரு என்னும் சொல் இலக்குமி என்னும் பொருளில் வரவில்லை. செல்வம் சிறப்பு என்ற இரண்டு பொருளில் வந்ததாகவே அதனைக் கொள்ள வேண்டும். எனவே செல்வத்தைத் தரும் முறை. சிறந்த தன்மையுடைய முறை என்ற இரண்டு பொருளில், திருமுறை என்னும் சொல் வந்துள்ளதாகக் கருதவேண்டும்.

"முறை" என்ற சொற்கு "முறையென்ப கோசமே ஊழ் முறைமை இம் முப்பேர் என்ப" என்ற சூடாமணி நிகண்டின்படி கோசம் (புத்தகம்) என்றும், ஊழ் என்றும் முறைமை என்றும் மூன்று பொருள் உள்ளன. இவற்றையெல்லாம் கருத்தில் வைத்துக் கொண்டு "திருமுறை" என்ற சொற்குப் பொருள் உணர முற்படுவோம்.

முறை என்பது, இங்கே கோசம் அல்லது புத்தகம் நூல் என்ற பொருளில் வந்துள்ளது. திரு என்பதைச் சிறப்பு என்று பொருள்கொள்ளின் சிறந்த கோசம், சிறந்த புத்தகம், சிறந்த நூல் என்று பொருள்படும்.

திரு என்ற சொல்லிற்குச் செல்வம் என்று பொருள் கொள்ளின், செல்வத்தை உணர்த்தும் நூல் என்று பொருள் கொள்ளலாம்.

சைவ சமயத்தவர் பதி, பசு, பாசம் என்று முப்பொருளைக் கூறுவர். அம்முப்பொருளில் சிவமாகிய பொருள் சிறந்ததாகலின் சிவமாகிய திருவை உணர்த்தும் நூலினைத் திருமுறை என்று சைவப் பெருமக்கள் வழங்கலாயினர்.

மாணிக்கவாசகர் "சிவமே பெருந்திரு எய்திற்றிலேன்" என்று கூறுதலைக் காண்க. தொண்டர் பெற்றுள்ள சிவமாகிய செல்வத்தைக் "கேடும் ஆக்கமும் கெட்ட திரு" என்று சேக்கிழார் கூறுவர். இறுதியும் தோற்றமும் இல்லாதவன் இறைவன். ஆதலின் அதனைக் "கேடும் ஆக்கமும் கெட்ட திரு" என்று கூறுதல் பொருந்து மாறுணரலாம். எனவே சிவமாகிய செம்பொருளைப் பற்றிப் பேசும் இலக்கியம் திருமுறையாயிற்று.

## திருமுறை என்ற இலக்கியத்தின் பாடுபொருள் திரு என்னும் சிவமே:

பழைய திருமுறையாசிரியரெல்லாம் சிவபெருமான் ஒருவரைப் பாடுதலாகிய ஒரு நெறியிலேயே இயங்கியுள்ளனர். தேவாரம், திருவாசகம் என்னும் பழைய திருமுறைகளில் சிவபெருமானைத் தவிர்த்து வேறு எந்தத் தெய்வத்தையும் பாடிய பாடல்களைப் பார்க்க முடியாது. எனவே, சிவம் என்னும் திருவைப் பாடு பொருளாக உடையது திருமுறையாயிற்று. "செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே" என்ற திருமுறைப்பாடலின்படி இறைவன் திருவடியை வணங்கும் நெறியாகிய செல்வத்தைக் கூறுவதும் திருமுறையின் உட்கிடையாகும். எனவே, திருமுறையிலக்கியத்தின் இலக்கு சிவம் என்னும் செம்பொருளைக் கூறுதலும் வழிபாட்டு நெறியைக் கூறுதலுமாகும். எனவே நாம் திருமுறையின் பதியாகிய சிவத்தைப் பற்றியும் அச்சிவத்தை அடையும் நெறிகளைப்பற்றியும் அந்நெறி நின்ற அடியவர்தம் சிறப்புப்பற்றியும் உணர்ந்து கொள்ளலாம்.

## பதி இயல்பு:

மேற்கூறிய நான்கு பகுப்பினைப் பொருளாகக் கொண்டு திருமுறைகளில் உள்ள கருத்துகளைத் திரட்டினால் ஒவ்வொன்றும் மிகப் பெரிதாக விரியும். ஆதலால் அவற்றுள் சிலவற்றை மட்டும் குறிப்பிடுவோம். இறைவன் ஒருவனே, அவன் அருவடிவினன், உயிர்கள் உய்யும் பொருட்டு அவற்றிற்கு அருள்செய்ய அவன் பல்வடிவையுடையவனாகின்றான் என்பது சைவசமய உண்மைக் கருத்து. இக்கருத்தினை உடைய திருமுறை பாடற் கருத்தினைக் கீழே காண்க.

1. இறைவனை "ஞானத்திரளாய் நின்ற பெருமான்" என்பர் ஞானசம்பந்தர்.

2. அப்பர் "மல்லை ஞாலத்து வாழும் உயிர்க்கெலாம் எல்லையான பிரானார்" என்பர்.

3. ஞானசம்பந்தர்

"ஈறாய்முதல் ஒன்றாய்இரு பெண் ஆண் குணம்மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்அவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையோ டெட்டுத்திசை தானாய்
வேறாய்உடன் ஆனான்இடம் வீழிம்மிழலையே"

என்னும் பாட்டில், உலகத்திற்கு அழிவும் தோற்றமும் செய்யும் ஒருவனாய், ஆண் பெண் என்னும் இரு வடிவினனாய் சாத்துவிகம் முதலிய மூன்று குணத்தனாய் நான்மறையாய் ஐம்பூதமாய் ஆறுசுவையாய் ஏழோசையாய்

(ஏழ்பண்) எட்டுத் திசைதான் ஆய் இவற்றின் வேறாய் இவற்றின் உடனாகி நிற்பான் இறைவன் என்று அவனுடைய மூவகை நிலையினைக் கூறியுள்ளார்.
மாணிக்கவாசகரும்,
"பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர் விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக் கண்ணா ரமுதமுமாய் நின்றான்" (திருவெம்பாவை-18) என்பர்.

### பதியை அடையும் நெறி:

பதியாகிய இறைவனை அடைவதற்கு நான்கு நெறிகள் கூறப்பட்டுள்ளன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாம்.
1.திருநாவுக்கரசர்,

"தொண்டராகித் தொழுது பணிமினோ
பண்டை வல்வினைப் பற்றற வேண்டுவீர்"

"தொண்டு பாடியும் தூமலர் தூவியும்
இண்டை கட்டி இணையடி ஏத்தியும்
பண்ட ரங்கர் பராய்த்துறைப் பாங்கரைக்
கண்டு கொண்டடி யேனுய்ந்து போவனே"

"அல்ல ரமகனும் பூதங்கள் ஆட்டினும்
பல்ல வாறு சிவாய நமவென்று
நல்லம் மேவிய நாதன் அடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே"

"பொறிபு லன்களைப் போக்கறுத் துள்ளத்தை
நெறிப டுத்து நினைந்தவர் சிந்தையுள்
அறிப்பு றும்மமு தாயவன் ஏகம்பம்
குறிப்பி னாற்சென்று கூடித் தொழுதுமே"

"அற்றுப் பற்றின்றி யாரையும் இல்லவர்க்
குற்ற நற்றுணை யாவான்"

### அந்நெறி நின்ற அடியவர்தம் சிறப்பு:
### திருநாவுக்கரசர்:

"அங்கமெல்லாம் குறைந்தொழுகு தொழுநோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும், கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே."

**சேக்கிழார்**:

"பெருமையால் தம்மை ஒப்பார்
        பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
        ஊனமேல் ஒன்றும் இல்லார்,
அருமையாம் நிலையில் நின்றார்
        அன்பினால் இன்பம் ஆள்வார்,
இருமையும் கடந்து நின்றார்
        இவரைநீ அடைவாய் என்று."
(பெரியபுராணம் தடுத்தாட் -196)

### பிறபொருள்:

திருமுறையுள் முதல் மூன்று திருமுறை திருஞானசம்பந்தர் பாடியவையாகும். அம்மூன்றில் முதல் திருமுறையுள் முதல் பதிகத்தில் முதற்பாட்டாய்ச் சிறந்து விளங்குவது "தோடுடைய செவியன்" என்ற பாடலாகும். இப்பாடல் சீர்காழிப் பதியில் பிரமதீர்த்தக் கரையில் இறைவன் திருவருளால் ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தர் இறைவனைச் சுட்டிப் பாடிய முதற்பாட்டாகும். தோடுடைய செவியனாய் விடையை ஊர்ந்து தூய வெண்மதியைச் சூடிக்கொண்டு காடுடைய சுடலைப் பொடியைப் பூசினவனாய் இறைவன் என்முன் வந்து அருள் செய்தான். அக்காட்சி என் உள்ளத்தினைக் கவர்ந்துவிட்டது என்று அவர் கூறுகிறார். முதன் முதல் ஞானசம்பந்தப்பெருமான் கண்ட இறைக்காட்சியில் முதலில் தோன்றியது தோடாகும். சிவம் என்னும் ஆண்கூறும், சக்தி என்னும் பெண்கூறும் கலந்து ஒன்றான இறைவன் திருவுருவில் அருட்சத்தியின் பகுதியாகிய இடப்பாகத்தில் விளங்குவது தோடாகும். முதற்கண் தோட்டினையும், அதனை அணிந்த சக்தியையும் இறைவனுக்கு உடைமைப் பொருளாக்கி, இரண்டாவது விடையாகிய ஊர்தியையும், மூன்றாவது தூய வெண்மதியையும், நான்காவது சுடலைப் பொடியையும் உடைமையாக்கி, உடையவனாய் இறைவனைச் சிறப்பித்து அவ்வுடையவனாகிய இவன் உள்ளங்கவர் கள்வனாயுள்ளான் என்று கூறியுள்ளார்.

வடமொழியில் உள்ள ஸ்ரீருத்திரம் என்னும் சாமவேதப் பகுதியானது சிவபெருமானைப் பல வடிவினனாகக் கூறி வணங்குகின்றது. அவ்வணக்கத்தில் ஒன்று "தஸ்கராய நம, தஸ்கராணம் பதயே நம" என்னும் பகுதியாகும். "கள்வனுக்கு வணக்கம் கள்வர் தலைவனுக்கு வணக்கம்" என்பது அப்பகுதியின் பொருள். இறைவன் கள்வனாகவும் கள்வர்தம் தலைவனாகவும் விளங்குகின்றான் என்பது அப்பகுதியின் கருத்தாகும். அவ்வேதப் பகுதிக்கு விளக்கவுரையாக ஞானசம்பந்தர் "என் உள்ளத்தைக் கவரும் கள்வனாக இறைவன் உள்ளான்" என்று கூறுகிறார்.

### உள்ளத்தைக் கவர்ந்த பொருளில்:

ஞானசம்பந்தர் சிறுகுழந்தை. அவருக்கு இறைவன் திருமேனியில் விளங்கி அவர்தம் உள்ளத்தைக் கவர்ந்த பொருள் தோடும் பிறையும் திருநீற்றுப் பூச்சும் ஆகும். அவற்றுள் நடுநாயகமாயிருப்பது பிறை. இப்பிறையாகிய திங்களை முதல் திருமுறைத் தொடக்கத்தே "தூ வெண்மதிசூடி" என்று குறிப்பிட்டார். இவர் பாடிய இரண்டாம் திருமுறை முதற்பாட்டிலும் இறைவனை நோக்கி, "நீ இளைய இனிய பிறையினைக் கொடிய பாம்புடன் சடையில் வைத்திருக்கின்றாயே! அதற்குக் காரணம்

என்ன?" என்று வினவுகிறார்.

"..........................................................................பூந்தராய்
துன்னி நல்லிமை யோர்முடி தோய்கழ லீர்சொலீர்
மின்னு செஞ்சடை யிற்பிறை பாம்புடன் வைத்தே"
என்பது அப்பாட்டு. இன்னும் அவர் பாடிய மூன்றாந் திருமுறை முதற்பாட்டிலும், "திங்கள் சூடிய இறைவனே, எம் தொல்வினை சுருங்குமாறு அருள்செய்க" என்று கூறுகிறார். "பல்சடைப் பணி கால்கதிர் வெண்டிங்கள் சூடினாய் அருளாய் சுருங்களம் தொல்வினையே" என்பது அப்பாட்டு.

எனவே, அவர் முதல் திருமுறைத் தொடக்கத்தில் தூய வெண்மதியைச் சூடி உள்ளங்கவர் கள்வன் என்று கூறுதலையும், இரண்டாந் திருமுறைத் தொடக்கத்தே, "பூந்தராய் ஈசனே! இனிய பிறையை இன்னாமை செய்யும் பாம்புடன் வைத்த கருத்தென்ன?" என்று வினாவுவதும், மூன்றாம் திருமுறைத் தொடக்கத்தே "வெண்டிங்கள் சூடினாய்!எம் தொல்வினை சுருங்க அருளாய்" என்று வேண்டுவதும் ஒப்புநோக்கிப் படித்து இன்புறத் தக்கதாம். இறைவனை வடமொழிவாணர் சந்திரசேகரன், சோமசேகரன் என்று கூறுவர். தமிழறிஞர் பிறைசூடி முதலான பெயராற் கூறுவர். இறைவனை வழிபடுகின்ற தொண்டர்கட்கெல்லாம் அவன் திங்களைச் சூடியிருப்பது பற்றிப் பல்வேறு புனைந்துரை (கற்பனை) நினைவில் தோன்றுகின்றன. அவர்தம் நினைவுகளிற் சில கூறுவோம்.

### அருங்கலம்:

அருங்கலம் என்பது பொன்னும் மணியும் கொண்டு இயற்றப்படுவதாகும். "அருங்கலம் உலகின் மிக்க அரசர்க்கே உரிய" (கல்யாண-184) என்று சூளாமணி கூறுகின்றது. இதனால் அருங்கலத்தின் சிறப்பினை உணர்ந்து கொள்ளலாம். இறைவன் திங்களைத் தலையிற் சூடியுள்ளான். அதனால், உலகத்தவர் இறைவன் தலைக்குத் திங்கள் அணிகலனாக அமைந்துள்ளது என்று கருதுவர். ஆனால், அப்பர் சுவாமிகள், திங்கள் இறைவன் முடிக்கு அணிகலனாக இல்லை, திங்களுக்கு இறைவன் முடியே அருங்கலன் என்னும் அணியாக உள்ளது என்று கூறுகிறார். "திங்களுக்கு அருங்கலம் திகழும் நீண்முடி" என்பது அவர் பாட்டு.

### திங்கள், மின்னல்:

இறைவன் மார்பில் அரவினை அணிந்துள்ளான். அந்த அரவு இறைவன் தலையில் அணிந்துள்ள திங்களை மின்னல் என்று கருதி அடங்கியிருக்கிறதாம்.

"பாகத்தின் நிமிர்தல் செய்யாத் திங்களைப் பிறையென் றஞ்சி
ஆகத்திற் கிடந்த நாகம் அடங்கும் ஐயாறனார்க்கே"
என்பது அவர் பாடல்.

### மதியிலா அரவின் ஐயம்:

இறைவன் வெண்மை நிறமுடைய திங்களைச் சூடியுள்ளான். மார்பிடத்தே திருமாலாகிய பன்றியின் வெண்மை நிறமுடைய பல்லினையும் அணிந்துள்ளான். இறைவன் அணிந்துள்ள மதியில்லாத அரவு திங்களையும் எயிற்றினையும் பார்த்து அது திங்கள் என்று துணியாமல் ஐயஉணர்வுடன் உள்ளது. காரைக்கால் அம்மையார் தாம் பாடியுள்ள அற்புதத் திருவந்தாதியில்,

"திருமார்பில் ஏனச் செழுமருப்பைப் பார்க்கும்
பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கும் - ஒருநாள்
இதுமதியென் றொன்றாக இன்றளவும் தேரா
அதுமதியொன் றில்லா அரவு" (48)
என்று பாடியுள்ளார்.

### அரவும் மதியம் விளையாடுதல்:

ஞானசம்பந்தர் ஒரு பாடலில் இறைவன் திருமுடியில் அரவும் மதியும் விளையாடுவதாகப் பாடுகிறார்.

"துன்னார் புரமும் பிரமன் சிரமும் துணிசெய்ய
மின்னார் சடைமேல் அரவும் மதியும் விளையாட" என்பது அப்பாடல்.

### திருஞானசம்பந்தரும் இயற்கைப் புனைவும்:

திருமுறையில் வந்துள்ள பல புலவர்களின் பாடல்களெல்லாம் ஒரே தன்மை உடையனவல்ல. ஒவ்வொருவருடைய பாட்டும் ஒவ்வொரு தன்மை உடையதாய் இருக்கின்றது. திருஞானசம்பந்தருடைய பாடல்களில் அரிய பெரிய சமயக் கருத்துகள் ஆங்காங்கே காணப்பட்டாலும் அவருடைய பாடல்களில் சிறப்பாகக் கருதத் தக்கது இயற்கைப் புனைந்துரை ஆகும். எடுத்துக்காட்டாகச் சிலவற்றை நோக்குவோம். முதல் திருமுறையில் கீழைத் திருக்காட்டுப் பள்ளியைப் பற்றி அவர் பாடும் பதிகத்தில் "வயல் அருகே புனல் பாய்கிறது. அப்புனலிலிருந்து செங்கயல் பாய்கின்றது. அவ்வயலிடத்தே சில மலர்கள் கைபோல் தேனுடன் மலர்ந்துள்ளன. அம்மலர்த்தேன் கையருகே வாழைகள் கனி ஈன்றுள்ளன. அந்த மலர் மணமும் கனிமணமும் கமழ்கின்ற காட்டுப்பள்ளி" என்று பாடுகிறார்.

"செய்யரு கேபுனல் பாயவோங்கிச் செங்கயல் பாயச்
சிலமலர்த்தேன் கையரு கேகனி வாழையீன்று கானலெல்
லாங்கமழ் காட்டுப் பள்ளி" என்பது அப்பாடலாகும்.

முதல் திருமுறையில் திருநள்ளாற்றையும், திருவாலவாயையும் சேர்த்துப் பாடும் பதிகத்தில் "நள்ளாற்றுப் பெருமானைப் பூசிப்பவர் பூசிக்கின்றார். அவர் பூசிக்கும் பூவில் நறுமணம் கமழ்கின்றது. அபிடேகம் செய்யும் புனலில் தூய்மையாகிய பொலிவு விளங்குகின்றது. திருமேனியிற் சாத்தும் சந்தனம் புதுவிரைச் சாந்தாய் இனிய மணத்தை வீசுகின்றது. பூசிப்பவர்தம் நாவில் இனிய பாடல்கள் எழுகின்றன"

என நள்ளாற்றுப் பெருமான் பூசைக்காட்சியை ஞானசம்பந்தர் பாடுகிறார்.

"பூவினில் வாசம் புனலில் பொற்பு புதுவிரைச் சாந்தின் இன் நாற்றத்தோடு நாவினிற் பாடல்அறா நள்ளாறுடைய நம்பெருமான்" என்பது அவர்தம் பாடலாகும்.

அவர் முதல் திருமுறையில் சீர்காழியைப் பற்றிப் பாடிய பதிகத்தில் "கடல் அலைகள் சங்கினைக் கொண்டுவந்து கடலுக்கு வெளியே எறிகின்றன. எறியப்பட்ட அச்சங்கு, பக்கத்திலே மருதநில வயலில் செந்நெற் காட்டுக்குள் புகுந்து முத்தினை ஈனுகின்றது" என்று பாடுகிறார்.

"மாடே ஓதம் எறிய வயற்செந்நெல்
காடே றிச்சங் கீனும் காழியார்" என்பது அப்பாடலாகும்.

அவர் சண்பை நகரைப் பற்றிய மற்றொரு பாடலில் "மீனை உண்பவரும் கப்பலில் ஏறிச் செல்பவருமாகிய பரதவர் வாழும் மனையின்கண் நுனிமூக்குச் சங்கம் சென்று முத்தினை ஈனுதற்கு இடமாகிய சண்பை நகரார்" என்று பாடுகிறார்.

"............................................................. மீனாரும்
"வங்கம் மேவு கடல்வாழ் பரதர் மனைக்கே நுனிமூக்கின்
சங்கம் ஏறி முத்தம் ஈனும் சண்பை நகராரே"
என்பது அப்பாடலாகும்.

## கோயில்களில் இசை:

மக்களிடத்தில் கடவுள் பக்தியை இசைநாட்டியங்களால் முற்காலத்து மக்கள் உண்டாக்கி வந்தனர். திருக்கோவில்களில் இறைவனைப் பூசிக்கும்பொழுது மந்திர இசை, வீணைஇசை, வேத அத்தியயனம், சாஸ்திரப்பாடல் முதலியன செய்வித்தல் வேண்டும் என்றும், இவற்றின் பின் கௌடமொழி முதலானவற்றில் இசையைத் தூபம் காட்டும் வரையிலும் அதற்கு மேல் தமிழ் மொழிக்கு உறுப்பாகிய இசையை நடனத்தோடு செய்வித்தல் வேண்டும் என்றும், அதன் பின் பிழையில்லாமல் சமஸ்கிருத மொழியிற் பாடப்படும் இசையையாவது அல்லது பதினெண் மொழிகளுடைய இசையையாவது பாடவேண்டும் என்றும் காமிகாகமம் அர்ச்சனவிதிப்படலம் கூறுகின்றது. இதனைப்போலத் திருக்கோவில்களில் தமிழ்ப்பாடல்களும் வெவ்வேறு திசைமொழிப் பாடல்களும் பாடப்படுவதை ஞானசம்பந்தர் கூறுகிறார்.

"ஊறுபொரு ளின்றமிழ் இயற்கிளவி தேருமடமாதருடனார் வேறுதிசை யாடவர்கள் கூறஇசை தேருமெழில் வேதவனமே"(3-78--4)

"தென்சொல் விஞ்சமர் வடசொல் திசைமொழி
நரம்பெடுத்து, துஞ்சு நெஞ்சினார் நீங்கத்
தொழுதெழு தொல்புக ளூரில்" (3-71-1)
என்பவை அப்பாடலாகும்.

இறைவன் பாடும் இடத்தில் நீங்காது எழுந்தருளியிருப்பார் என்று ஞானசம்பந்தர் கூறுகிறார்.

"தமிழின் நீர்மை பேசித் தாளம் வீணை பண்ணி நல்ல முழவம்மொந்தை மல்குபாடல் செய்கையிட மோவார்" என்பது அப்பாடலாகும்.

## பாடும் தொண்டின் சிறப்பு:

திருக்கோவில்களில் செய்யப்படும் திருவலகிடுதல் (விளக்குதல்), மெழுகுதல், மலர்தொடுத்தல், திருவிளக்கிடுதல், என்னும் தொண்டுகள் ஒன்றுக்கொன்று உயர்ந்தது என்றும், எல்லாவற்றிற்கும் உயர்ந்தது இறைவனைக் குறித்துப் பாடுதலாகும் என்றும் அப்பர் சுவாமிகள் கூறுகிறார்.

"விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றி யாகும்
துளக்கில்நன் மலர்தொ டுத்தால் தூயவிண் ணேற லாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞான மாகும்
அளப்பில கீதம் சொன்னார்க் கடிகள்தாம் அருளு மாறே"
என்பது அப்பாடலாகும்.

பதினோராம் திருமுறையில் கபிலதேவ நாயனார் தாம் பாடிய சிவபெருமான் திருவந்தாதியுள் (100) "நூறு ஆவின் பாலை இறைவன் திருமுடிக்கு ஆட்டி நூறு மலரைக் கொண்டு இறைவன் திருப்பெயர்களைக் கூறிக்கொண்டு அருச்சனை செய்தலைக் காட்டிலும் சிறந்ததாகும் அச்சிவன் மேல் ஒரு பாடல் பாடி வணங்குவது" என்பர்.

"நூறான் பயன்ஆட்டி நூறுமலர் சொரிந்து
நூறா நொடிவதனின் மிக்கதே நூறா
உடையான் பரித்தவெரி உத்தமனை வெள்ளேறு
உடையானைப் பாடலால் ஒன்று" (100) என்பது அப்பாடலாகும்.

## சம்பந்தர் இசையால் தமிழ் வளர்த்தார்:

திருஞானசம்பந்தர் தாம் வாழ்ந்திருந்த ஒவ்வொரு நாளும் இனிய இசைத்தமிழ்ப்பாடல்களைப் பாடி அச்செயலாலேயே தமிழ்மொழியினை வளர்த்து வந்தார் எனவும், அம்முயற்சிக்கு இறைவனும் உறுதுணையாகவிருந்து தாளம் என்னும் இசைக்கருவியைத் தந்து உதவி அவர் பாடிய பாடல்களுக்கு இரங்கி அருள்புரிந்தார் என்றும் சுந்தரர் பாடுகிறார்.

"நாளும் இன்னிசை யாற்றமிழ் பரப்பும் ஞானசம்பந்த னுக்குலகவர்முன், தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்கும் தன்மை யாளனை" (7-62-8) என்பது அப்பாடலாகும்.

## சமணர், பௌத்தர்:

ஞானசம்பந்தர் திருப்பதிகத்தில் பத்தாவது பாட்டில் சமண சமயத்தவரையும் பௌத்த சமயத்தவரையும் பழித்துப் பேசும் செய்தி இடம்பெற்றுள்ளது. திருநாவுக்கரசரும் தாம் பாடிய பதிகத்தில் பலவிடங்களில் அவர்களைப் பழித்துப் பேசுகின்றனர். இவர்கள் இவ்வாறு பழித்துப் பேசுதற்குரிய காரணத்தைச் சேக்கிழார் கீழ்வருமாறு கூறுகிறார்:

"வேதகா ரணராய வெண்பிறைசேர் செய்யசடை

நாதனெறி அறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும்
போதமிலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கும்
ஏதமே யெனமொழிந்தார் எங்கள்பிரான் சம்பந்தர்"

"அறிவு நூலுக்குக் காரணமாய் விளங்கும் தலைவனுடைய நெறியை அறிந்து உய்யாராய் உயிர்களாகிய தமக்கு மேல் ஒரு தலைவன் உண்டென்பது இல்லை, உயிர்களாகிய தாமே உள்பொருள், தம்முடைய நலம் தீங்கிற்குத் தாமே காரணம் என்றுரைத்து, பௌத்தர் தம் சமயநெறி பழியாக்கும் ஏதமுடையதே எனக் கூறினர் எங்கள் பிரான் ஞானசம்பந்தர்" என்பது அவர் தம் கருத்துரையாகும்.

சேக்கிழார் கூறுவதை நன்கு கருதினால் உயிர்களாய தாமும் தமக்குமேல் தலைவனாகிய ஒருவனும் உண்டென்றுணர்வது சைவசமய உண்மைநெறி என்றும், தாம் என்னம் உயிர்களே உண்டு தமக்குமேல் தலைவனாகிய ஒருவன் உண்டு என்பது இல்லை. உயிர்களாகிய தாமே நலத்தைச் செய்து கொள்ளும் என்பது சமண பௌத்த சமயநெறி என்றும் உணர்ந்து கொள்ள வேண்டும். "பேராற்றல்பேரறிவும் வாய்ந்த பதிப்பொருளாகிய ஒன்று இவ்வுலகிற்கு முதலாக உள்ளது. அதன்வழி உயிர்களாகிய நாம் இயங்கி உலக இன்பத்தையும் வீடுபேற்றையும் அடைகிறோம்" என்னும் உண்மை நெறியைக் கருதி உணராமையால்"போதமிலாச் சமண்கையர் புத்தர் வழி" என்று சேக்கிழார் கூறுவாராயினர்.

### அகப்பொருள்:

சங்ககாலச் செய்யுட்களில் அகத்துறைப் பாடல்களே மிகுதியாக உள்ளன. திருமுறைக் காலத்திலே அகத்துறைப்பாடல்கள் சுருங்கி வந்துள்ளன. அந்த அகத்துறைப் பாடல்களும் இறைவனைத் தலைவனாகவும் உயிர்களாகிய தம்மைத் தலைவியாகவும் கற்பனை செய்துகொண்டு பாடும் முறையாக மாறிவிட்டது. தலைவனின் பிரிவாற்றாத தலைவி தன் துயரத்தினைத் தலைவனிடம் கூறுமாறு வண்டு முதலானவற்றை விளித்துக் கூறுவதுபோல் அமைந்த அகத்துறைப் பாடல்களைத் திருமுறைகளிற் காணலாம்.

யாப்பு:

திருமுறையில் ஆசிரியம், வெண்பா என்னும் இயற்றமிழ்ப் பாக்களே இடம்பெற்றுள்ளன. கலிப்பா, வஞ்சிப்பா இடம்பெறவில்லை. தரவு, கொச்சகம் வந்துள்ளதாக நச்சினார்க்கினியர் கூறுகிறார். "நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் சிறப்பிக்கப்பட்ட ஞானசம்பந்தர் பாடல்களெல்லாம் இசைத்தமிழ்ப் பாடல்களாகவே கருதப்படுகின்றன. இப்பாடல்கள் பண்முறையில் பாடப்படுவதால் இவற்றைப் பண்ணத்தி என்று வழங்கலாம்.

"பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டின் இயல பண்ணத் தியியே"

என்னும் தொல்காப்பிய நூற்பாவின் உரையுள் "இளம்பூரணர் பண்ணைத் தோற்றுவித்தலாற் பண்ணத்தி என்றார். அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன என்று கூறி,

"அடிநிமிர் கிளவி ஈரா றாகும்
அடியிகந்து வரினும் கடிவரை யின்றே"

என்னும் நூற்பாவுரையில் பன்னிரண்டாவன ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலியெனச் சொல்லப்பட்ட நான்கு பாவினோடும் தாழிசை, துறை விருத்தம் என்னும் மூன்றினையும் வைத்து உறழப் பன்னிரண்டாம், அவை ஆசிரியத் தாழிசை வஞ்சித்தாழிசை வெண்டாழிசை கலித்தாழிசை எனவும், ஆசிரியத்துறை, வஞ்சித்துறை, வெண்டுறை, கலித்துறை எனவும், ஆசிரியவிருத்தம், வஞ்சி விருத்தம், வெளிவிருத்தம் கலிவிருத்தம் எனவும் வரும் என்பார். இவையெல்லாம் திருமுறைப்பாடல்களில் வந்துள்ளன. பிற்காலத்தார் இவற்றைப் பாவினம் என்பர். ஞானசம்பந்தர் பாடலில் வந்துள்ள இருக்குக் குறள் என்னும் பாடல் வகையைப் பிற்காலத்தார் வஞ்சித்துறை என்பர்.

### சித்திர கவி:

திருஞானசம்பந்தர் பாடலில் மிறைக்கவி என்னும் சித்திரகவி கொஞ்சம் மிகுதியாகவே உள்ளன. மொழிமாற்று, மாலைமாற்று, வழிமொழி, மடக்கு, இயமகம், ஏகபாதம், இருக்குக் குறள், எழுகூற்றிருக்கை ஈரடி, ஈரடிமேல் வைப்பு, நாலடி மேல்வைப்பு, முடுகியலாகிய திருவிராகம், (அராகம் என்றும் வழங்கும்) சக்கரமாற்று, கோமூத்திரி என்ற பாடல் வகைகளைப் பாடியுள்ளார். பதினோராந்திருமுறையில் எழுகூற்றிருக்கை வந்துள்ளது. அவர் தாண்டகம் என்னும் பாடலைப் பாடவில்லை. ஆனால் அவர் காலத்தில் வாழ்ந்த அப்பர் சுவாமிகள் தாண்டகத்தை மிகுதியாகப் பாடித் தாண்டக வேந்து என்ற பெயரைப் பெற்றுள்ளார்.

### திருவாசக யாப்பு

திருவாசகத்தின் தொடக்கத்தில் கலிவெண்பா இடம்பெற்றுள்ளது. ஆசிரியப்பா, ஆசிரியவிருத்த வகை, கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம், கட்டளைக் கலித்துறை, கொச்சகக் கலி, நேரிசை வெண்பா முதலியன இடம்பெற்றுள்ளன. திருச்சாழல் திருவுந்தி முதலிய நாடகப் பாடல்களும் திருவூசல் முதலிய இசைப்பாடல்களும் திருவாசகத்தில் உள்ளன.

### திருமூலர் யாப்பு:

திருமூலர் யாப்பு ஒரே வகையானது. ஈரசைச்சீர் மிக்கு வரச் சிறுபான்மை முச் சீரும் வரநாற்சீர் கொண்ட அடி நான்கினைப் பெற்று நடக்கும். ஒவ்வொரு அடியிலும்

பன்னிரண்டெழுத்தும், பதினோரெழுத்தும் வரும். இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் அவர் பாட்டில் வரும் தளைகளாம்.

### சிறப்புத் தன்மைகள்:

திருமுறைப்பாடல்கள் மூன்றாம் நூற்றாண்டிலிருந்து சேக்கிழார் காலம் வரையில் வாழ்ந்த பல அறிஞரால் பாடப்பெற்றுள்ளன. அவர்தம் தன்மை இடத்தாலும் காலத்தாலும் வேறுபடுமாதலால் ஒவ்வொருவருடைய பாட்டும் ஒவ்வொரு விதமாக அமைந்துள்ளன. ஞானசம்பந்தர் பாடல்களில் வேதம், ஆறங்கம், வேதவேள்வி முதலானவற்றின் சிறப்பைக் காண முடிகிறது.

### திருநாவுக்கரசர்:

"கோலும் புல்லும் ஒருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரமுற் றெனபயன்"
"சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்தி ரமும்குல முங்கொண் டென்பயன்"
என்று வைதிகர் நெறியைப் பயனில்லை என்று கூறுகிறார்.

திருமந்திரத்தில் ஆகமக் கூறுகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் பகுதிகளும் பலவகை மந்திரங்களும் இடம்பெற்றுள்ளன.

திருவாசகத்தில் பத்திச் சுவையொன்றே சிறப்பாய் விளங்குகின்றது.

முடிப்புரை:
திருமுறையைப் பல நிலைகளில் நின்று சிறிது சிந்தித்தோம். திருமுறை என்றது சைவப்பெருமக்களின் அறிவுக் கருவூலமாய் விளங்குகிறது. கருவூலத்தில் அடங்கியவை விலையற்ற "அழிவற்ற உண்மைப் பொருளாகும். அவை நமக்கு அறிவினையும் பேரின்பத்தையும் தருகின்றன. திருமுறையின் பயன் கடவுள் இன்பமாம் என்பதைக் கூறி அமைகின்றேன்.

### சான்றோர் சொல்லமுதம்

சைவவழிபாட்டு முறைகள் கிரியைகள் யாவும் விஞ்ஞான முடிபுகளுக்கு மேலானவை. காய்கள் தராத மலர்கள் நிவேதிக்கப்படுகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு பாவத்தை நீக்கமுடியுமோ அவ்வளவுக்கவ்வளவு செயற்பாடுகள். விபூதி மேலான ஐஸ்வரியத்தைத் தருவது. அதனை நெற்றியில் நிறையத் தரித்துக் கொண்டால் விஷவாயுவை உறிஞ்சிக் கொள்ளும். அட்டாங்க நமஸ்காரம், பஞ்சாங்க நமஸ்காரம், பிரதிட்டை, வலம்வருதல் எல்லாம் யோகாசன சம்பந்தமுடையவை. ஆதிசைவப்பெருமக்கள் இவற்றை எவ்விதம் கண்டறிந்தனர் என்பது வியப்பிற்குரியது. சிவசின்னங்கள் அணிவது நாகரிகம் இல்லை எனச் சிலர் எண்ணுகிறார்கள். நல்லறிவு இல்லாத தன்மை இது. எங்கள் சமயகுரவர்கள், திருமுறைகள் ஆக்கித் தந்து சைவத்தின் அளவிலா அற்புதப் பெருமைகளை நிலைநாட்டியுள்ளனர்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாசார்ய சுவாமிகள்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் - யாழ்ப்பாணம்

சமயத்தைச் சரியான முறையில் கடைப்பிடிக்கத் தவறியதன் காரணத்தினாலேயே இன்று சமுதாயத்தில் அமைதியின்மையும் அராசகமும் பெருகியுள்ளன. அர்த்தமற்ற சொற்களாகவோ, செயல்களாகவோ, சமயம், மாறிவிடும் போதே இத்தகைய அவலநிலை உண்டாகிறது. தூய்மை, அன்பு, நேர்மை, சுயநலமின்மை போன்ற உயர்பண்புகளின் அடிப்படையில் சமயத்தை அமைக்கும்பொழுது அது சக்திஉடையதாகிச் சமுதாயத்தின் தீமைகளை வேருடன் அறுக்க வழிவகுக்கின்றது. சைவசமயம் அத்தகைய உயர்பண்புகளைக் கொண்ட நாயன்மார்களைப் பெற்ற பெருமை படைத்தது. எனவே தான் சிரஞ்சீவியாக என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. - சுவாமி ஆத்மகாநந்தா, கொழும்பு

"பெருமையும் தொன்மையும் வாய்ந்த சைவசமயத்தின் தாற்பரியங்களை அளப்பது சமுத்திரத்தின் ஆழத்தை அளப்பது போலாகும். சைவத்தின் பெருமையையும் மகிமையையும் எடுத்து உலகத்தவருக்கு இயம்ப உதித்த நாயன்மார்களும் அடியார்களும் தம்மால் இயன்ற சைவப்பணிகளை ஆற்றிச் சமயத்தொண்டுகள் பல புரிந்து மறைந்தனர். "நாமார்க்கும் குடியல்லோம்" என்ற அறைகூவலும் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற திடமான இலட்சியமும் "சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லை" என்ற மாறாநம்பிக்கையும் "ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான்" என்ற பேருண்மையும் எமது சமய கருவூலங்களாகப் பிரகாசிக்கச் செய்தவர்கள் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலான சைவநாயன்மார்களாவர். - யோகேந்திரா துரைசுவாமி இலங்கை இந்துப் பேரவை

இறைவன் திருக்கோயிலில் மட்டும் இருக்கின்றான் என்று எண்ணக் கூடாது. நம் உள்ளத்திலே பிரியாது இருக்கின்றான். அதனால் 'பிரான்' என்று இறைவனை அழைக்கின்றோம். எண்ணத்திலும் சொல்லிலும் இறைவன் இருக்கிறான். ஆதலால் நம் எண்ணங்களும் சொல்லும் செயலும் தூயனவாக இருக்க வேண்டும். அருளறியப் பாவங்கள் செய்தல் கூடாது. - திருமுருக கிருபானந்தவாரியார்.

சிவநெறிச் செந்தமிழேடு சைவநீதி வாழ்க

# பாலா செல்வம்

## நகை மாளிகை &

## துரித பணமாற்றுச்சேவை



அதி உயர்ந்த தரம்
தன்னிகரற்ற தங்கம்
அழகு மிகு எழில் கொஞ்சும் நவீன வடிவமைப்பு
அனைவருக்கும் தனித்துவமான நியாய விலை
அசல் 22 கரட் தங்க ஆபரணங்கள்

**துரித பணமாற்றுச் சேவையில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக நம்பிக்கை! நாணயம்! உத்தரவாதம்!!**

துரித பணமாற்றுச்சேவை இப்பொழுது புதிய முகவரியில் நடைபெறுகிறது தொடர்ந்தும் நடைபெறும்

| | | |
|---|---|---|
| திருகோணமலை | யாழ்ப்பாணம் | பாங்கொக் |
| மூதூர் | கொழும்பு | சென்னை |
| மன்னார் | சிங்கப்பூர் | திருச்சி |
| கண்டி | மலேசியா | |

மற்றும் அனைத்து ஐரோப்பிய நாடுகளுக்கும் நடைபெறுகிறது

## BALA - SELVAM JEWELLERY & FOREIGN EXCHANGE

2480 EGLINTON AVENUE EAST, UNIT #6 SCARBOROUGH

**(Midland / Eglinton)**

## TEL: (416) 264-4000

# நமது சமயங்கள்

சீ. கிருஷ்ணன் - சிங்கப்பூர்

இப்பரந்த உலகிடைத் தோன்றிய மனிதன் தான் வாழும் சூழ்நிலைக்கு ஏற்பப் பல்வேறு மொழிகளைத் தோற்றுவித்தான். அவற்றுள் சில நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. சிறப்பு அடைந்துள்ள மொழிகளில் நம் தமிழ் மொழியும் ஒன்று. சமய இலக்கியங்கள் நிரம்பிய சுந்தர மொழி.

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே...." என்று தொல்காப்பியம் கூறும். சாதாரண மனிதன் - உயர்ந்தவனாக, சிறந்தவனாக, மேம்பட்டவனாக ஆவதற்கு ஆவன செய்வது சமயம். அதோடு இந்து சமயத்தின் அறநெறி - உலக வாழ்க்கையோடு மத வாழ்க்கையும் இணைத்து மேற்செல்ல உய்கதி பெற வழிகாட்டுகிறது.

சமூகத்தில் மனிதன் சில கொள்கைகளை ஏற்பதனாலும் அவற்றில் நம்பிக்கை வைப்பதனாலும் ஒரு மேலான நிலைக்கு ஆளாகிறான். அதற்குக் காரணமாக அமைவது சமயமே. சமயத்தினைச் சார்ந்து வாழ்பவன் ஆதலால் சமயத்தினைச் சார்ந்து ஒழுக்கமானவனாகிறான்.

இன்பதுன்பங்களை ஏற்பதால் அவனது மனம் மாறுகிறது. ஒவ்வொருவனும் கொள்கைவாதியாக மாறுவதால் ஒழுங்கான மனிதனைச் சமயம் உருவாக்கிக் காட்டுகின்றது.

இந்து சமயம் விஞ்ஞானத்தால் உணரமுடியாத மெய்ப்பொருளாகத் தனது மெய்ஞானத்தால் இனிது இயம்புகிறது. தெய்வீகமான கருத்துக்களைத் தன்னுள் அடக்கி மறைத்து வைத்திருப்பதால் அது மறை எனப் பெயர் பெற்றது.

நமது சமய சித்தாந்தம் அறிவியல் நோக்கில் மெய்ப்பொருளை நிலைநிறுத்தும் உண்மைகளின் முடிபு. அறிவால் உண்மைகளை, பூவினுள் மணம்போல் கொண்டுள்ளது.

**'அண்டப் பகுதியின் உண்டைப்பிறக்கம்**
**அளப்பருந்தன்மை வளப் பெருங்காட்சி..."** என்று மாணிக்கவாசகர் கூறுகிறார்.

முன்னோர்களின் அனுபவத்தில் தோன்றிய நெறிகள் பின்னோரின் வாழ்க்கைப்பாதைக்கு வழிகாட்டின. அவ்வாறு முன்னோரால் காட்டபெற்ற நெறிகள் பற்பல சமயநெறிகளாயின. சமயம், மதம், நெறி, என்னும் சொற்கள் பொருளுடையன. சமைத்துப் பக்குவப்படுத்தல் என்னும் பொருளில் சமயம் என்னும் சொல் தோன்றியது. கொள்கை, கோட்பாடு, குறிக்கோள் என்னும் பொருளில் சமயம் அல்லது மதம் என்ற சொல் அமைந்தது.

மனித வாழ்க்கைப் பயணத்திற்கு வழியாக அமையக்கூடிய காரண அடிப்படையில் நெறி, வழி ஆகிய சொற்கள் அமைந்தன. சமுதாயக் கூட்டுவாழ்க்கைக்கு மனிதன் பண்பட வேண்டும். தனிமனித வாழ்க்கையாகிய விலங்கு வாழ்க்கையிலிருந்து மனிதன் பண்படவேண்டும் என்று முன்னோர்கள் வகுத்துக் காட்டிய நெறிகளுக்கு துணையாக அமைந்தன.

உணவுப்பொருளை நேரடியாக உண்ணாமல் சமைத்த பிறகே அவற்றை அவித்து, வேகவைத்து உண்ணுகிறோம். அதுபோல் பக்குவமில்லாத-பண்பில்லாத விலங்காக வாழும் மனிதனைச் சமைத்துப் பக்குவப்படுத்தத் தோன்றியவை சமயம்.

மதங்களுக்கு இரண்டு முகங்கள்:

ஒன்று, அதன் தத்துவம் சார்ந்தது. அன்பையும் மனித உறவுகளையும் போற்றும் சமயம். இன்னொன்று இந்த ஆன்மீகத்தன்மைகளைக் காப்பாற்ற உருவாக்கப்பட்ட சடங்கு. (பூசை, யாகம், பலி என்ற சடங்கு) மறைந்த ஆன்மீகம் முன்நின்றிருக்க வேண்டும். ஆனால், சடங்குதான் ஆன்மீகத்தை விழுங்கிவிட்டு முன்நிற்கிறது. மதம் மக்களுக்கு அபின். நோயுள்ள தருணம் மயக்கம் தருகிறது.

### சமயம் என்றால் என்ன?

மனிதன் தன் வாழ்வு வளம் பெறவும், மாக்கள் தன்மையிலிருந்து விடுதலை பெற்று, மக்கட் தன்மை பெறவும் செய்யப்பட்டது. இதனை வேறு வகையில் சொன்னால், மனிதனைப் பண்பாடு உடையவனாக ஆக்குவது சமயம். அனைத்திற்கும் ஆணிவேராய் அமைந்த ஒன்றை அறிகிறான். அவ்வறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு பொருள் உண்டு என்பதையும் அறிகிறான்.

ஐம்பூதங்களை வணங்கியவர்களை அவைகளுக்கு அப்பாலும் இறைவன் உண்டு என்று நெறிப்படுத்தியதே நமது சமயம். அவை அனைத்தும் ஒரு வரன் முறைக்கு உட்பட்டு இயங்குவதையும் காண்கிறான்.

சமயம் என்பது வெறும் குறிகளும், அடையாளமும் அன்று. சமயம் என்பது இவற்றைக் கடந்து நிற்பது. குறிகள், அடையாளங்கள் என்று எதனையும் போற்றாமல் ஒருவன் சிறந்த சமயவாதியாக வாழமுடியும். மனித மனத்தின் மாசை அகற்றி, பண்புடையவனாய், ஒழுக்கம் உடையவனாய், பிறர்க்குப் பயன்படுபவனாய் வாழ முற்படுவதே சமய வாழ்க்கையாகும். இவற்றிற்கும் அப்பால் அனைத்தையும் கடந்து நிற்கின்ற ஒன்றை - கடவுள் என்ற ஒன்றை மனதில் கொண்டு வாழ்பவனே சமயவாதியாவான்.

எனவே, கடவுள் - மனித வாழ்வு என்ற இவை இரண்டிற்கும் உள்ள தொடர்பு, இவ்வாழ்விலிருந்து கடவுளை அடையும் நெறி மார்க்கங்களைத்

தெளிவுப்படுத்துவதே சமயம். மனிதரை நெறிப்படுத்துவதற்கும் முறைப்படுத்துவதற்கும் தோன்றிய சமயநெறி. அவற்றின் நடைமுறையால் மாறுபட்டு முரண்பட்டுப்போயின. உண்மையில் சமயம் என்பது தூயவாழ்க்கை முறை. மனிதனை நெறிப்படுத்திப் பக்குவப்படுத்தும் வாழ்வியல் அனுபவமுறை. மனிதனுடைய குறைநீக்கத்திற்கும், நிறைநல பேற்றிற்கும் சமயவாழ்க்கையே துணை செய்யும். புலன்களைப் பக்குவப்படுத்தும்; தூய்மையடையச் செய்யும்; இன்பஅன்பு கனியும், அருள் பெருகும். ஆகவே, நமது சமயங்கள் அன்பை மையமாகக் கொண்டது. ஆருயிர்க் கெல்லாம் அன்பு செயல் வேண்டும் என்னும் வள்ளலார் காட்டிய வாழ்வு நெறியுமிதுவே.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே.**

(திருமந்திரம் - 270)

என்னும் திருமந்திரப் பாடல் இவ்வுண்மையை உணர்த்தும் பின் ஏன் இத்தனை சமயங்கள் என்று கேள்வி எழலாம்......? மக்கள் அனைவரும் ஒரு படியினராக இல்லை. அவர்கள் வாழும் இடம், அதன் தட்பவெப்ப நிலை, சுற்றுச் சூழ்நிலை, மொழி இவற்றால் மாறபட்டு இருந்தனர். மேலும், இவை அனைத்தும் ஒன்றாக உள்ள நிலையில் வாழும் பல்வேறு மனிதர்கள், அவர்கள் வளர்ச்சியும் பல்வேறு நிலையில் இருந்தது. எனவே, அவர்கள் அனைவருக்கும் ஒரே சமயம் பயன்படுமாறு இல்லை. ஆகவேதான், ஒவ்வொருவர் கருத்தையும் வலியுறுத்திக் கூறும் பல்வேறு சமயங்கள் அந்தந்தக் காலத்துக்கு ஏற்பவும் இடத்துக்கு ஏற்பவும் தோன்றலாயின.

சமய வேறுபாடுகள் தவிர்க்க முடியாதவை. மண்ணில் தோன்றிய சான்றோர்கள் தாங்கள் சார்ந்த மண்ணின் இயல்புகளை, காலச்சூழலுக்கு ஏற்பவும் தாங்கள் அனுபவித்த புலன் உணர்வுக்கு ஏற்பவும், பெற்ற ஞான அனுபவம், அருட்பேறு ஆகியவற்றுக்கு ஏற்ப சமய நெறிகளை வகுத்துக் கூறினர். ஒருவரது அனுபவம் போன்று மற்றவர் அனுபவம்இருக்க வேண்டும் என்பதில்லை. அனுபவங்கள் வேறுபடுவதால் அவர்கள் காட்டிய சமயநெறிகளிலும் வேறுபாடு ஏற்பட்டது. ஆயினும் இந்த வேறுபாடுகளைக் கடந்து மனித குலப்பொதுமையை நமது சமயம் வலியுறுத்தியது.

**'யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா"**

என்னும் கணியன் பூங்குன்றனார் பாடல் உண்மை, சமயநெறியை உணர்த்துவது.

இந்த அடிப்படையில் தமிழ்மொழியின் பரப்பைக் காணவேண்டும். பிற்காலத்தில் வேற்றுநாடுகளில் தோன்றி இந்தியாவில் குடிபுகுந்த கிறித்தவம், இசுலாம் ஆகிய இரண்டும் தவிர சைவம், வைணவம், ஜைனம், பௌத்தம் ஆகிய நான்கு இம்மொழியில் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. ஓர் இன மக்கள் பேசும் மொழிக்கு மட்டும் இலக்கணம் வகுக்காமல் அம்மக்கள் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்த பெருமை உலக மொழிகளில் தமிழ் மொழி ஒன்றுக்கு மட்டுமே உண்டு. வாழ்வுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியம் வாழ்வு நடைபெறுவதற்கும் நிலைகளாக உள்ளது.

குறிப்பிட்ட ஒரு சமயத்தின் சாயல் பெறாமல் கடவுட் கொள்கைபற்றிப் பேசும் ஆதிநூல் தொல்காப்பியம். அதில் சமயம் இடம்பெறுகிறது. அதனை அடுத்து திருக்குறளிலும் தனியொரு சமயத்தின் சாயல் இன்றிக் கடவுள் கொள்கையும், சமயமும் பேசப்படுகிறது.

இறைவனிடத்து மனிதன் வேண்டுவது என்ன என்பதைப் பரிபாடல் ஒன்று சிறந்த முறையில் கூறுகிறது.
"பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின் பால்
அருளும் அன்பும் அறனும் ஒலி தாரோயே" என்கிறது. கருதாத வழிபாட்டை வேண்டி, "அன்பும், அறனும் அருளும்" மூன்றும் வேண்டும் என வேண்டி விழையும் சமயம் நமது சமயம்.

தமிழ் மொழியைப் பொறுத்த மட்டில் அளவைகளின் உதவி கொண்டு சமயத்தை நிறுவுவதைக் காட்டிலும் அகத்தே நிகழும் உணர்வுகொண்டே சமயத்தைப் பரப்பும் நூல்களே மிகுதியாகும். அதனால்தான் போலும், சமய இலக்கியம் என்ற பெயரில் பக்தி இலக்கியங்களே தமிழில் மிகுதியாக தோன்றின. உலகமொழிகளில் பக்தி இலக்கியம் என்று எடுத்துக்கொண்டால், முதல் இடம் தமிழுக்குத்தான். இரண்டாவது இடம் ஹீப்ரு மொழியும், மூன்றாவது இடத்தை சமஸ்கிருதமும் பெறுகிறது. வடமொழியிலிருந்து தமிழாக்கம் செய்த சில நூற்களும் உண்டு.

சமயநூல்கள் தமிழில் அதிகம் தோன்றக் காரணம் அன்புவழியாலும், பக்தி நெறியாலும் மட்டுமே சமயத்தை வளர்க்க முடியும் என்ற காரணத்தால்.

"அன்பென்னும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பென்னும் குடில் புகும் அரசே"
என்கிறது அருட்பா.

அன்பின் வழியே, ஆண்டவனை அடையமுடியும் என்கிறது நமது சமயம். இந்த அடிப்படையை மனத்தில் கொண்டு பார்த்தால், தமிழ் மொழியில் சாத்திரங்கள் அதிகம் தோன்றாமல் தோத்திரங்கள் அதிகம் தோன்றியதற்கு உரிய காரணத்தை ஒருவாறு அறிய முடியும் என்றாலும் தமிழில் தோன்றிய பேரிலக்கியங்கள் அனைத்தும் சமயத் தொடர்புடையது.

காலத்தை வென்று நிலைபெறும் வன்மை இல்லைபோலும். பேரிலக்கியங்கள் ஒருபுறம் இருக்கச் சிற்றிலக்கியங்களாகிய பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, பள்ளு, உலா ஆகியவைகள் சமயத் தொடர்பு உள்ளதாகவே அமைந்துள்ளன. ஆதலால்தான் "சமயமின்றித் தமிழில்லை"என்று கூறுவது பொருள் பொதிந்த மொழியாக அமைந்துள்ளதாலேயே.

சைவம் வளரவேண்டின் சைவநீதியை ஆதரியுங்கள்

# கனகாம்பிகை தங்க நகை மாளிகை

(தனி ஸ்தாபனம் - வேறு கிளைகள் இல்லை)



சகல ஓடர்களும், திருத்த வேலைகளும் விசேட விலைச் சலுகையில் செய்து கொடுக்கப்படும்.

சிங்கப்பூர் புதிய டிசைன் நகைகள் அனத்தும் நகரில் வேறு எங்கும் பெறமுடியாத மலிவு விலையில் பெறலாம் குறித்த நேரத்தில் உங்கள் எண்ணங்களுக்கு ஏற்றவாறு நகைகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

**சகலவிதமான கைவண்ணம் கூடிய நகைத் தேவைகளுக்கும் என்றும் நாடுங்கள**

- 22 கரட் அசல் தங்க ஆபரணங்கள்
- நவரத்தின மோதிரங்கள்
- வைரக்கற்கள் (பவளம், முத்து)
- பரிசுப் பொருள்கள்
- மாணிக்கக் கற்கள்
- தாலிக்கொடி
- காது குத்துதல்
- **BIRTH STONES**
- **LUCKY STONES**
- **FINEST QUALITY 22K GOLD AND DIA-MOND JEWELLERS**

பழைய நகைகள்
புதிய நகைகளாக
மாற்றித் தரப்படும்





*Kanagambikai Gold House*

**3160 Eglinton Ave. East, Unit 3, Scarborough, ON. MIJ 2H3**

**Tel: (416) 269-7198**

# பெண்ணென்னும் பெரும் பேறு

வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாது வேறொன்றறியேன் பராபரமே".

முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாய் மூவா இளநலம் காட்டி, முதுமை அழகைக் கூட்டி, காலம் இறந்து நிற்கும் ஒப்பற்ற பழம்பெரும் மதம் இந்துமதம். இந்துமதம் என்ற நூலில் பல்வேறு வகைப்பட்ட பல்வேறு தனித் தன்மை கொண்ட சமயங்கள், மணிகள் போலக் கோக்கப்பட்டிருக்கின்றன. இந்துக்கள் என்றழைக்கப்படும் நாம், பல்வேறு தத்துவங்களை அநுசரிக்கின்றோம். பல்வேறு தெய்வ வழிபாடுகள். பல்வேறு சடங்குகள். ஆனாலும் எல்லோரும் ஒட்டு மொத்தமாக இந்துக்களே. உலகில் வேறு எந்த மதத்திலும் காணப்பெறாத புதுமை இது, விரிந்து கொடுத்துத் தன்னை அடைந்தோரைக் காக்கும் கருணையின் நெகிழ்ச்சிதான் இம்மதத்தின் ஆணிவேர்.

*"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவ தாரும் அறிந்த பின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"*

என்ற திருமூலரின் ஓங்கிய குரலே இந்து மதத்தின் தாரக மந்திரம்.

இசை நிகழ்வில், வெவ்வேறு இராகங்கள், வேறு வேறு பாடல்கள். மனோரீதியான கற்பனைகள்...... ஆனால் அத்தனைக்கும் ஓர் அடிப்படை நிர்ணயம் உண்டு. அதுதான் ஆதாரசுருதி. சுருதியிலிருந்து விலகாத வரை இசைக்கு மதிப்பு உண்டு. அதுபோல வேதம் காட்டும் வழியிலிருந்து விலகாதவரை இந்துவிற்கும் பெருமையுண்டு.

நாம் வாழும் வாழ்க்கை வேறு. நமது முன்னோர் வாழ்ந்த வாழ்க்கை வேறு. நாம் இன்று சமயம் வேறு வாழ்க்கை நடைமுறை வேறு என்ற சிந்தனையில் வாழ்கிறோம். ஆனால் நமது முன்னோர்களோ வாழ்க்கையைச் சமயமாக்கி வீரம், காதல், விளையாட்டு எல்லாவற்றிலும் ஆன்மீகப் புனிதங்களைக் காணும் பக்குவம் பெற்றிருந்தனர். இகம், பரம், என்ற வேற்றுமைகளில் ஒற்றுமையைக் கண்டனர். ஒவ்வொரு வினாடியும் இறை நினைவுடன் கூடிய வாழ்க்கையை வாழ்ந்தனர். வேதகாலப் பெருமக்கள் ஒன்றேயான சக்தியைக் கண்டு ஆனந்தம் கொண்டனர். அதிலே மெய்ப்பொருளை, சத்தியத்தை, ஒழுங்கை உருக்கட்டினர். பிறப்பிலிருந்து இறப்புவரை வேத இசையிலேயே வாழ்ந்து மடிந்தார்கள். இந்து சமயத்தின் பல்வேறு பிரிவுகளையும் வேதம் என்ற கொடியால் கட்டி ஒருங்கிணைத்தார்கள்.

வேதத்திற்குப் பேதம் தெரியாது. தன்னை உயர்த்திக்கொண்டு மற்றவர்களைத் தாழ்த்தத்தெரியாது. வாழ்வின் ஜீவனான அறத்தையும் ஒற்றுமையையும் அது வலியுறுத்துகின்றது. இது எல்லாக் காலத்திலும் எல்லா மதங்களுக்கும் எல்லா நாடுகளுக்கும் பொதுவானது. மொழி மத இனங்களைக் கடந்து காலம் காலமாக நிற்கும் அதிசயமேல்வரிச் சட்டம்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"
அதுதான் வேதக் கொள்கை. இந்து மதத்தின் கொள்கை.

இந்து மதத்தில் காணும் மற்றுமொரு விழுமிய கொள்கை பெண்மையின் ஏற்றம். இதுவும் ஏனைய மதங்களில் அதிகம் சிறப்புறுத்தப் பெறாத செய்தி. அன்னையைத் தெய்வமாக மதிக்கும் பண்பு....... இல்லை தெய்வத்தையே அன்னையாக மாற்றும் மாண்பு. இந்துக்களின் தனிப் பெருஞ் சொத்து அதர்வவேதத்தில் நீ பெண்: நீயே ஆண் (த்வம்ஸ்திரீத்வம் புமான் அஸி) என்று பரம் பொருளைப் பெண்ணாகப் போற்றும் வாக்கியங்கள் காணப்படுகின்றன. அருள்மலரும் அதிகாலைப் பொழுதை "உஷை" என்ற பெண்ணாகக் கண்டவர்கள், அச்சம் தரும் இரவுப் பொழுதை "ராத்ரீ" என்ற பெண்ணாகக் கண்டு வழிபட்டனர். அதுமட்டுமல்ல இவ்வுலகைப் படைத்துக் காத்து அழிக்கும் முப்பெருஞ் செயல்களைச் சக்தியின் உருவிலே வழிபட்டார்கள். அண்டாண்ட கோளங்களையும் ஆளும் ஆளுமையைப் பராசக்தியாக, இராஜராஜேஸ்வரியாக வணங்கி மகிழ்ந்தனர். கல்விக்கும் செல்வத்திற்கும் வீரத்திற்கும் கலைமகளையும் திருமகளையும் அலைமகளையும் அதிதெய்வாக ஆக்கி உவந்தனர்.வாழ்வின் எல்லாக் கோணங்களிலும் பெண்மைக்குப் பெருமை சேர்த்தனர் நம் முன்னோர். வாழ்வை வளமாக்கும் பாரிய பொறுப்பைப் பூவையரின் பூங்கரங்ளிலே ஒப்படைத்தார்கள். ஒருபெண் இல்லறத்திலே மனைவியாக மட்டுமல்ல மந்திரியாக, நண்பனாக, ஆசானாக இப்படிப் பல கோணங்களில் பணிபுரிகின்றாள். கணவன் தவறிழைக்கும் பொழுது இடித்துத் திருத்திய தையலார்களை நாம் அறிவோம்.

"தீண்டுவீராகில் எம்மைத் திருநீலகண்டம்"
எனச் சிவன்மேல் ஆணையிட்டு அற்புது

புணர்ச்சியின்மை அயலறியாவகை வாழ்ந்து பண்பையும் பதியையும் காத்த திரு நீலகண்டரின் மனைவி....

மைவைத்த கண்டன் நெறியன்றி மற்றோர் நெறியறியாத் தவத்திருவாட்டி தென்னவன் தேவி மங்கையர்க்கரசி, அன்பு ஒன்றையே ஆயுதமாக்கி தவறிழைத்த கணவனைத் திருத்த சைவசமய மறு மலர்ச்சிக்கு வித்திட்ட வீரப்பெருந்திரு....

பிறர் பொருளை வெளவி வளர்த்த கள்ளத் தொழில்கைதேர்ந்த நீலனை யாருக்கும் பணியாத அந்த அஞ்சா நெஞ்சனை தன் ஆடற் கலையால் வென்று தன்னைப் போலவே மாலவன் அடியார்களிடம் மனம் கொளவைத்து "பீதகஆடைப்பிரானார் பிரமகுருவாகி" வந்து அஷ்டாக்ஷரத்தை உபதேசிக்கும் பேறு பெறச்செய்து நீலனைத் திரு மங்கையாழ்வாராக மாற்றியவள் குமுதவல்லி என்ற ஆடற்கலையரசி.

சிறுவயதில் பெற்றோர்களை இழந்து அன்பிற்காக ஏங்கித் தவித்தவள் இராம்போலா..... அந்த அன்பினைத் தன் மனைவியின் வடிவத்தில் கண்டு ஆராக் காதல் அவள்மீது கொண்டான். ஒரு நாள் அவனைப் பிரிந்து அவள் பிறந்தகம் செல்ல அவளின் பிரிவுத் துயர் பொறுக்காத இராம்போலா கொட்டும் மழை யென்றும் பாராது வெட்டும் மின்னலென்றும் கருதாது ஓடோடி வந்து நள்ளிரவு நேரத்தில் பாம்பை மரவிழுதாக எண்ணி அதன்வழி இறங்கி வீட்டுற்குள் வந்து தனது மனைவியிடம் தன் காதலைப் புலப்படுத்துகின்றான். "அழியும் தன் உடல்மேல்வைத்த இந்த ஆழ்ந்த அன்பை அழியா அழகனான இராகவனிடம் வைத்தால் இப்பிறவிப் பயன் கிடைக்குமே" என்று பரிவாக எடுத்துரைத்தாள் இரத்தினாவளி. மறு வினாடியே இராம்பேரலா அழிந்தான்....... துளசிதாஸர் உதயமானார். "இராமசரிதமானசம்" என்ற அமரகாவியம் நமக்குக் கிடைப்பதற்கு அடி கோலியவள் ஒரு பெண்மணி.

அதுமட்டுமல்ல. உயர்ந்த நோக்கங்கள் உலகினில் நிறைவேறத் தியாகத் தீயில் தங்களை ஆகுதி ஆக்கிக்கொண்ட பெண்களும் உண்டு.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தவர் வாசஸ்பதிமிச்ரர். அனைத்து சாஸ்திரங்களிலுங் கரைகண்டவர். ஆதிசங்கரர் எழுதிய பிரம்ம சூத்திரபாஷ்யத்திற்கு மிக அரியமுறையில் விளக்கம் அருளியிருக்கின்றார். அதற்கு "வாசஸ்பதீயம்" என்று பெயர். அப்படி அவர்விளக்க உரை எழுதும் காலத்தில்தான் அவரது திருமணம் நிகழ்ந்தது. திருமணம் அவரது எழுத்துப் பணியைத் தடைசெய்யவில்லை. அப்பணி தங்குதடையற்ற பிரவாகம் போல் பொங்கிப் பெருகிக் கொண்டே போயிற்று. வாசஸ்பதி மிச்சரனின் இளம் மனைவியின் இளமை அனலின் மெழுகாகக் கரைந்தது. ஆனால் மிச்ரர் இதைக் கவனிக்கவில்லை. ஆண்டுகள் பல உருண்டன புத்தகம் உருவாயிற்று. தலைநிமிர்ந்தார். வாசஸ்வதி மிச்சரர். அவர் கண்டது தலை நரைத்துத் தோல் சுருக்கமுற்ற மனைவியின் முதுமையையே. மிச்ரரின் மனம் உருகியது. தான் எழுதிய அப்புத்தகத்திற்குத் தனது பத்தினியின் பெயரான "பாமதி" என்ற நாமத்தையே சூட்டித் தியாகத்தின் சின்னமாக அதனை நிலைநாட்டினார்.

தம்பியர் உளராக வேண்டும் என வைத்த திலகவதியாரின் துயர் அவர் கழுத்தில் ஏற இருந்த மங்கல நாணைத் தடைசெய்தது. அம்பொன் மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள் தாங்கித் திரு நாவுக்கரசர் என்னும் ஞானச் செல்வத்தை அளிக்கத் திலகவதியார் செய்த தியாகம் ஒப்பற்றது.

தனக்குக் கிடைக்க இருந்த பொருட் செல்வத்தை விலக்கி தன் கணவரான யாக்ஞவல்கியரிடமிருந்து ஞானச் செல்வத்தைப் பெற நிழல்போல் அவரைத் தொடர்ந்த வேதகால வனிதையான தைத்ரேயியின் மாண்பும் எண்ண இனிப்பவை.

இப்படிக் கல்வியாலும் ஒழுக்கத்தாலும் தியாகத்தாலும் இந்து மதப் பண்பாட்டைக் காத்த மங்கையர்களின் வரலாறுகள் எண்ண எண்ண இனிக்கும் இன்சுவை ஊற்றுக்கள். இதைக் கருத்திற் கொண்டுதான் கவிமணி அவர்கள்.

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா"
என்று முழுங்கினார் போலும்.
உண்மைதான். பெண்மையே ஓர் உரிய தவம்தான்.

**சான்றோர் சொல்லமுதம்**

இறைவன் தம்மை மறைத்துக் கொண்டுள்ளார். அதனால் தான் அவரது படைப்பான இந்தப் பிரபஞ்சம் மாட்சிமையுடன் திகழ்கின்றது. எந்தப் பணியானாலும் தன்னைமறைத்துக் கொண்டு அதைச் செய்பவனே மிக மேலானதைச் சாதிக்கிறான். - சுவாமி விவேகானந்தர்

" இன்பத் தமிழ்க்கல்வி யாவரும் கற்றவர் என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால் துன்பங்கள் நீங்கும்."
- புரட்சிக் கவிஞர்

இலக்கியம் விளக்கு, இலக்கணம் ஒளி. விளக்கினிடமாக ஒளி நின்று பொருளுண்மையைப் புலப்படுத்துவது போலவே இலக்கியங்களினிடமாக இலக்கணம் நின்று பொருளுண்மையை உணர்த்தும். எள்ளிலிருந்தும் எண்ணெய் எடுபடுவது போல இலக்கியத்தினின்றும் எடுபடுவதே இலக்கணம். நம்பி

# P. KAYILASANATHAN

**B.A. (CEY) LLB. (CEY)**

***Barrister & Solicitor***





## உங்கள் தேவைகளுக்குச் சிறப்பாக.....

குற்றவியல் வழக்குகள்
குடிவரவு அகதிநிலை விண்ணப்ப விசாரணைகள்
மேன்முறையீடுகள்
மனிதாபிமான அடிப்படையில் விண்ணப்பங்கள்
ஸ்பொன்சர் சம்பந்தமான சகல விடயங்களும்
வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல் விற்றல்
குடும்ப விவகாரங்கள் (விவாகரத்து, பிள்ளைகள் பராமரிப்பு, பிள்ளைகள் பாதுகாப்பு, சொத்துக்கள் பிரித்தல்)

வாணிபச் சட்டங்கள் சம்பந்தமான சகல விடயங்கள்
வாகன - விபத்துச் சம்பந்தமான நட்டஈடு கோருதல்

## பொ. கயிலாசநாதன்

**கனேடிய சட்டத்தரணி**

**2401 EGLINTON AVENUE EAST, SUITE 302**
**SCARBOROUGH, ON. M1K 2M5**

**TEL: (416) 752 - 9561**
**FAX: (416) 752 - 7262**

# இறை இலக்கணம்

சிவநெறிச் செல்வர், சைவநன்மணி, ஞானவாரிதி
**இரா. மயில்வாகனம், ஜே. பி.**

உருவும், ஊரும், பேரும் இல்லா இறைவன் ஆன்மாக்களின் பொருட்டு மேற்கொண்ட பெருங்கருணையினால் அவற்றை ஆட்கொள்ளும் முகமாக அவ்வப்போது சங்கற்ப மாத்திரையில் பற்பல மூர்த்தங்களைக் கொண்டு மூர்த்திகளாக விளங்கி ஆன்மாக்களுக்கு அருள்செய்கிறார். அம்மூர்த்தியின் உருவ அமைப்புகளையும் தத்துவங்களையும் எப்படி என்று உணர்வோம்.

ஒவ்வொரு மனித ஜீவராசிகளுக்கும் தத்தமது வாழ்வின் நோக்கினையும் போக்கினையும் உணர்ந்து உயர்வடைவதற்கு சமயங்கள் ஒவ்வொன்றும் பொதுவில் வழிகாட்டுகின்றன. இவ்வகையில் சிவனை முழுமுதற் கடவுளராக ஏற்று நிற்கும். சைவசித்தாந்தமும் நயக்கத் தகுந்த வகையில் வழிகாட்டி நிற்பது காணுதற்குரியதாகும்.

சைவசித்தாந்த அறிவு விளக்கத்தின் பெறுமானம் எவ்வளவென்பதைச் சிந்திக்க வேண்டும். இது ஒவ்வொருவருக்கும் உரியதாகும். அம்மை நல்வாழ்வுக்கு மட்டுமல்ல இம்மை நல்வாழ்வுக்கும் உறுதுணையாய் நிற்கவல்லது அறிவு விளக்கமேயாம். வாழ்வியல் உண்மையை உணர்ந்து தன்னுணர்வுக்கு மாறுபடாமல் வாழக்கூடியவன் சைவசித்தாந்த விளக்கமுள்ள ஒருவன் மட்டுமே என்றால் மிகையாகாது. இவ்விளக்கத்தை தலைகொள்ளாவிடத்து உண்மையை உரைக்கும் ஒருவனைக் காண்பதரிது. ஜீவ இரக்கம், சகிப்புத்தன்மை இவைகள் உள்ளவர்களைக் காண்பதும் அரிதாகும். சைவசித்தாந்த விளக்கம் குன்றுமிடத்து நம் சைவசமயவாதீனங்கள், சைவ ஆலயங்கள் அனைத்தும் வெறுஞ் சம்பிரதாயச் சடங்கு நிலையங்களாகி விடும். இவற்றை உயிர் இல்லாத உடல்போலப் பார்க்கலாம். சைவசித்தாந்தம் உயிர் வாழ்க்கையின் இரகசியத்தையும் உணர்வு வீக்கத்தையும் உணர்ந்து கொள்ள உதவுவதாகும். தம் வாழ்வில் ஒருவர் உயர்ந்த விழுமியங்களைக் கடைப்பிடித்து தம் வாழ்வையும் பிறர்வாழ்வையும் நன்னெறியிற் செலுத்தும் விருப்பத்தைப் பெறுவதற்கு உதவுவதாகும். இத்தகைய விளக்கம் பொதுவில் எல்லார்க்கும் இலகுவாக அமையாது. தமிழர் பாரம்பரியத்தில் இவ்வாறான விளக்கத்தை உணர்த்திக் கொண்டிருக்கும் விசேடகலை சைவசித்தாந்தக் கலையே, சமய சமூக வாழ்வியல் ரீதியாகத் தமிழரிடத்தே இக்கலை விளங்கி வருகிறது. இதைத்தவற விடாமல் பாரம்பரியமாகக் கைக்கொண்டு நடந்து வருவது நம்கடமையாகும். இறை இலக்கணம் என்றும் வளர்ந்து வரும் நாகரிக வாழ்வுக்கு ஓர் அங்கத்தவராய் ஆக்குவதற்கு உதவுவதாகும்.

. இந்த இறையின் இலக்கணத்தை எவ்வகை எந்த நூல்கள் நம்போன்றவர்களுக்கு எடுத்து இயம்பியுள்ளன. இவை காட்டும் வழிதான் என்ன என்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

தொன்மைத் தென்னாட்டுச் செந்தமிழின் நன்மைத் திருநெறி சிவநெறியாகும். அந்நெறிக்குரிய மறைநூல்கள் திருமுறைகள் எனப்படும். திருமுறைகள் செந்தமிழின் உயிரெழுத்தொப்பப் பன்னிரண்டு. இப்பன்னிரண்டுகளுள் திருமூல நாயனார் அருளிய திருமந்திரம், பத்தாந்திருமுறையாகும். அப்பத்தாந் திருமுறை முத்திற வாழ்க்கையின் இலக்கணங்களைச் செம்மைபெற எடுத்தோதுஞ் சீரிய அருள்நூல். அந்நூல் ஒன்பது தந்திரங்களையுடையது. அவற்றுள் முன்நான்கு தந்திரங்களும் அறம், பொருள், இன்பம், வீடு, என்று நான்கையும் குறிப்பனவாகும். பின்னுள்ள ஐந்தும் திருக்கோயிலமைப்பு நெறிமுறைகள் வழிபடுமியல்புகளை பெறற்கரும் பேறுகளைக் குறிப்பன. செந்தமிழ்த் திருமநதிர நூலொன்றே தனித்தமிழ் மறைநூலும் முறைநூலும் ஆகும். மறை-வேதம், முறை - ஆகமம், முத்திற வாழ்க்கை, இம்மை வாழ்க்கை, உம்மை வாழ்க்கை, அம்மை வாழ்க்கை எனப்படும்.

மேலும் மறைநூலை உலகியலென்றும், முறை நூலைக் கடவுள் இயல் என்றும் கட்டுரைப்பர். திருமந்திர நூலிற்காணும் முதல்நான்கு தந்திரங்களிலும் ஓதப்பெறும் நான்மறையின் விரிவே திருவள்ளுவ நாயனாருளிய செந்தமிழ்ப் பொதுமறையாகும். ஏனை ஐந்து தந்திரங்களும் செந்தமிழ் வழிபாட்டின் சீரிய இலக்கணமாகும். திருமந்திர நீங்கலாகிய ஏனைய திருமுறைகள் பதினொன்றும் சிவவழிபாட்டுத் தோத்திரங்களாகும். எனவே திருமந்திரம் வழிபாட்டு நூல் அல்ல, வழிபாட்டின் மாண்புகளை ஏனைய நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. வழிபாட்டு இலக்கணத்தை பொருள்நூல் என்றும், வழிபடுனர் மாண்புகளை புகழ்நூல் என்றும் கூறுவர். இதுவே சாஸ்திர தோத்திரங்களாகும்.

அனுபவ வாயிலாக எடுத்துக் கூறியுமுள்ளார்கள். இவர்களில் நக்கீரரும் ஒருவர் ஆவர். இவர் இலக்கிய வாயிலாகச் சிவனிடையே நடந்த சொற்போரில் திருப்புமுனையாக எடுத்தாண்ட நூல்களே திருமுருகாற்றுப்படை, கயிலைபாதிகாளத்திபாதி

போற்றிக் கலிவெண்பா முதலியனவாகும். நற்கீரர், அடியவரை இறைவனிடம் வழிபடுத்தும் வகையில் திருமுருகாற்றுப்படை என்னும் இலக்கியத்தால் நெறிப்படுத்தினார். இவ்வளவு அனுபவங்களுக்குப் பின் நக்கீரர் எடுத்தியம்பியது இறைத்தத்துவம்.

திருமுருகாற்றுப்படை:-

**'ஆய்ந்து கொள்வார்க்கு அரன் அங்கு வெளிப்படும்**
**தோய்ந்து நெருப்பது தூமணி சிந்திடும்"**
**'சொற்பொருளைச் சார்பின்றிச் சோதித்து உணர்த்துவதே**
**நற்பொருள் காட்டும் நயம்"**

கயிலைபாதி காளத்திபாதியந்தாதி என்பதை சற்று ஆராய்ந்தால் சொரூபநிலையில் உள்ள பரம் பொருளுக்கு அமைந்த ஆண், பெண் உருவம் வாழ்க்கைக்கு வழிகாட்டுகிறது என்ற தத்துவமாகும். இறைவனை "அவிரொளி, வடிவினன் என நக்கீரர் எடுத்து இயம்பியிருக்கிறார்.

நக்கீரனாருக்குப்பின் வாழந்தவரான காரைக்கால் அம்மையார் பெற்றிருந்த இறையனுபவங்களும் இத்தகையதே. இவர் இறைவனின் சொரூபவடிவினை

**'அன்றுந் திருவுருக் காணாதே ஆட்பட்டேன்**
**இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்**
**எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட் கென்றுரைக்கேன்**
**எவ்வுருவோ நின்னுருவம் ஏது."**

(அற்புதத்திருவந்தாதி)

என வினவுகிறார்.

இவ்வாறே மாணிக்கவாசகர் முதலான சிவநேசச் செல்வர்களின் அனுபவங்களும்.

**'போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்**
**நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே**
**மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே...(45)**
சிவபுராணம்

**"உண்டோ ஒண்பொருள் எண்ணுவார்க்கெலாம்**
**பெண்டிர் ஆண் அலி என்றறி யொண்கிலை**
**தொண்ட னேற்குள்ள வாவந்து தோற்றினாய்**
**கண்டுங் கண்டிலேன் என்னகண் மாயமே"**

இவ்வாறு கூறுகின்றது திருச்சதகம்.

**விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்**
**எண்ணிறந் தெல்லை இலாதானே நின் பெருஞ்சீர்**
**பொல்லா வினையேன் புகலுமா றொன்றறியேன்**
(25வரி) சிவபுராணம்

இந்நிலை சம்பந்தர் கண்ணுக்கும் புலப்பட்டது.

**"இன்னவுரு வின்னநிற, மென்றறிவதே யரிது. நீதிபலவும்**
**தன்னவுரு வாமெனமி குத்தவ னீதியொடு தானமர் விடம்**
**முன்னைவினை போய் வகையினான் முழுதுணர்ந்து முயல்கின்றமுனிவர்**
**மன்ன ரிரு போதுமரு வித்தொழுது சேரும் வயல் வைகாவிலே"**
(329ம் பதிகம் - 4ம்பா)

இந்நிலையே நாவுக்கரசருக்கும்

**'மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி**
**மயானந்தான் வார்சடையானென்னி னல்லான்**
**ஒப்புடைய னல்ல னொருவ னல்லன்**
**ஒரூர னல்லனோ ருவம னில்லி**
**அப்படியு மந்நிறமு மவ்வண் ணமு**
**மவனருளே கண்ணாகக் காணினல்லால்**
**இப்படிய னின் நிறத்தனிவ்வண் ணத்த**
**னிவனிறைவ னென் றெழுதிக் காட்டொணாதே"**
(பதிகம் 311 பா 10)

என்று இயம்புகின்றார்.

இன்னும் கச்சியப்ப சிவாச்சாரியாரும்,

**"ஞானத் தானுரு வாகிய நாயகனியல்பை**
**யானும் நீயும் இசைந்து மென் றாலஃதெளிதோ**
**மோனந் தீர்கலா முனிவருந் தேற்றிலர் முழுதுங்**
**தானும் காண்கிலர் இன்னமுந் தன்பெருந் தலைமை"**
என்றார்.
(கந்தபுராணம் 128)

என அளத்தற்கரியது இறைத்தத்துவம் என்பர். அதனாலே தான் வடமொழி வேதங்களிலும், திருக்குறள், தொல்காப்பியம் முதலான தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் இறைதத்துவம் மறைபொருளாக உணர்த்தப்பட்டது என்பது புலனாம்.

இறைவன் சிறப்பு இயல்புகளை வேதங்கள் தேடித் துருவிக் கொண்டிருந்ததை மாணிக்கவாசக சுவாமிகள் அப்பெருமறை தேடிய அரும்பொருள். மறைஈறு அறியா மறையோனே, "வேதங்கள் ஐயாவென வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே". என்று பல சொல்லடுக்குகளால் சுட்டிக் காட்டியுள்ளார்.

வேதங்கள் நால்வகை அறங்களைக் கூறி இல்லறத்தைப் பேணும் சகலருக்கும் வழிகாட்டியுள்ளன. இதனாலே இவைகளைப் பொதுநூல்கள் என்று கூறியுள்ளார்கள். தேவார அணிகளை இறைபுகழ் நூலென்றும் மற்றையவற்றைப் பொருள் நூல் என்றும்

ஒருவாறு வகுத்துக் கூறியுள்ளார்கள்.

ஏன் தொல்காப்பியரும்,

**"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்**
**முனைவன் கண்டது முதல் நூல் ஆகும்"** எனக் கூறினார்.
(தொல்649)

முனைவன் என்பது முன்னோன் ஆகிய சிவனே. காலத்தால் அடுத்துவரும் பௌத்தநூலாகிய மணிமேகலையும், "கணக்கர் தந்திறங்கேட்ட காதையில் வஞ்சிமாநகர்ப்புறத்துச் சமயக்கணக்கர் தந்திறங் கேட்டபோது,

**'காண்டற் பொருளாற் கண்டிலதுணர்தல்**
**உவ மான தொப்புவமை யளவை**
**கவய மாப் போலுமெனக் கருதல்**
**ஆகம வளவையறிவ னூலாற்**
**போக புவன முண்டெனப் புலங்கொளல்**
**அருத்தா பத்தி யாய்க்குடி கங்கை."**
**இருக்கு மென்றாற் கரையிவென் றெண்ணால்**
**இயல்பியானை மேலிருந்தோன் றேட்டிக்**
**கயவொன்றீயா ததுவே கொடுத்தல்**
**ஐதிக மென்ப துலகுரை யிம்மாத்**
**தெய்திய தோர் பேயுண்டெனத் தெளிதல்**
**அபாவ மென்ப தின்மையோர் பொருளைத்**
**தவாத்துவிடத்துத் தாளிலை யென்றால்**
மணிமேகலை 40வது வரித் தொடர்

எனும் வரிகளில் கடவுளின் இயல்பைத் திட்டவட்டமாக இயம்புதல் இலகுவல்ல என்பதை விளக்கி இருப்பதைக் காண்க. "கவயமா என்பது ஒருவகை மிருகம் - காட்டுப் பசு. இதை பசுவை ஒருவகையாய் ஒக்கு மெனஉரு உவமவளவை" யால் அளக்கிறார். ஆகம வளவை - அறிவனூல். இதனை புலங்கொளல் - அறிதல், இதனை சாத்தமென்றும் உரையளவையென்றும் கூறுவர். அருத்தாபத்தி அளவை இது பொருளளவை என்பர்.

கடவுளின் இயல்பைத் திட்டவட்டமாய் இயம்புதல் இலகுவல்ல என்பதை இதற்கு முன் கூறியவற்றால் உணர்ந்தோம். எனினும் வேண்டியளவு ஆராய்ந்து புல்லறிவுக்கேற்ற புத்தியைப் புகுத்திப் பார்ப்போம்.

இறைவன் தாங்குவோனாகியும் தாங்கப படுவோனாகியும் தன்தண்ணளியால் முறையே இரு நிலைக்கண்ணும் இருவகையான விடையேறும் அடையாளம் ஆருயிரின் சிறப்பு நிலையினைக் குறிக்கும். இந்நிலையில் இறைவன் தாங்கப்படுவோனாகிறான். இதுவே சிவபெருமான் அம்மை அப்பனாய் ஆனேற்றின் மீது வீற்றிருந்தருள்கின்றனன் என்னும் உருவக உள்ளுறை உண்மையாகும். இறைவன் தாங்கப்படுவோனாகிய காலத்து ஆருயிர் தாங்குவதாகும் தாங்குங்கால் அவ்வுயிர் சிவாகமப் பெருவாழ்வினை தாங்கும் வண்ணஞ்செய்து தனக்கு அடிமையாகவும் "மீளா அடிமை" ஏனோர்க்கு தாங்குதலாகும். ("ஏனோர்க்குத் தங்கோனை) பாடேலோரெம்பாவாய்" மணிவாசகனார் திருவெண்பாப் பகுதி) இம்முறை மேலதற்கு ஒப்பாகும். சிவபெருமான் ஆருயிர்களைத் தாங்கும் வண்ணம் செய்தற் பொருட்டே விடை ஏறுகின்றனன் என்னும் உண்மை வரும். இதை தேவாரத் திருமா மறையாயுணரலாம்.

**"ஏறேற்ற மாவேறி எண்கணமும் பின்படர**
**மாறேற்றார் வல்லரணஞ் சீறி மயானத்தில்**
**நீறேற்ற மேனியரும் நீள்சடைமேல் நீர்ததும்ப**
**ஆனேற்ற அந்தணனை நான் கண்ட தாரூரே"**
-4-19-4

தூய வெண்மதி சூடிஇருப்பவன், தூய வெள்ளிய வளர்மதியைச் சூடியருளி என்பது உயிர்களைப் பிறையொடு பொருத்தியருளியதன் உருவகமாகும். திருமுடி என்பது சிவபெருமானின் திருவருட் பெருவெளியாகும். மதிக்குத் தூய்மை புல்லுமலநீக் கத்தின் பொருட்டுப் பிறப்பின்கண் திருவருளால் வருதல், கல்லூரியில் கற்றற் பொருட்டு ஒருவர் நல்லாசானால் சேர்த்துக் கொள்ளப்படின் அவன் மாணவன் என்றே அழைக்கப்படுவான். கற்றுத் தேறியவர் மாணவர் என்றே அழைக்கப்படுவர். இவர்களின் வேறுபாடுகள் அவர்கட்குக் கொடுக்கப்படும் அடைமொழிகள் விளக்கும். உதாரணமாக தலைமை ஆசிரியர் விரிவுரையாளர் பேராசிரியர் போன்றன.

இம்முறையில் சிவபெருமான் தலைமேல் விளங்கும் அடையாளமாகிய பிறையும் "தூவெண்மதி" என்று விளக்கப்படுவதாகும்.

ஆருயிர்களை இறைவன் இயைக்கிய - சத்தி அறிவிக்க அறியும் இயல்பினன். இஃது ஆசான் மாணவரோடியைந்து கற்பிக்க கற்கும் மாணவர் இயல்பினோடொக்கும் கற்பிக்கும் ஆசானின் அறிவுப் பங்கு மாணவனுக்கு ஏறுவது போல ஆண்டவனின் அறிவுப்பங்கும் ஆருயிர்க்கு வரும். இதனைத் திருமாமறை

**'பங்கேறு மதிசேர்சடையார் விடையார் பலவேதம்**
**அங்கமாறு மறைநான் கவையும் ஆருர் பலவேதம்**
**வங்கமேற கடல்வாழ் பரதர் மனைக்கே நுளைமூக்கின்**
**சங்கம்ஏறி, முத்தமீனுஞ் சண்பை நகராரே** - 1 66 -1
எனக் கூறுகிறது.

வெண்மை - பளிங்கொத்த ஆருயிரின் பண்பினைக் குறிக்கும்.

இவ்வுண்மையைத் தாயுமான சுவாமி பின்னர் உணர்த்துகிறார்.

**'வந்தேனுடல் பொருளாவி மூன்றுந் தன்கை**
**வசமெனவே அத்துவாமர்க்க நோக்கி**
**ஐம்புலன் ஐம்பூதங் கரணமாதி அடுத்தகுணம்**
**அத்தனையும் அல்லை அல்லை**
**இந்தவுடல் அறிவறிய, மையுயுநீயல்லை யாதொன்று**
**பற்றினைதன் இயல்பாய்நின்று**
**பந்தமறும் பளிங்கனைய**
**சிந்துநீர்பக்குவங்கண்டறிவிக்கும் பான்மையேயாம்**

நன்கு ஆய்ந்து போவோமானால், இறைவன் ஆன்மாக்களை ஆட்கொள்வதற்கு உயிர்களைத் தன் வசப்படுத்தி மாபடச் சட்டை தாங்கி வருகின்றான்.

வேட்டுவர் அந்தந்த இனத்தில் பழக்கப்பட்ட விலங்குகளைக் காட்டி ஏனைய வன விலங்குகளை வசப்படுத்திப் பிடிப்பர். இறைவனும் மானுடச் சட்டை போர்த்திக் கொண்டு வருவார். இப்பூவுலகத்தோர் இதை இலகுவில் அறியார்.

திருவாதவூரடிகளை ஆட்கொள்ளும் பொருட்டு திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் இருந்த முறையும் இதுவே

**"போர்வை எனக்காணார் பதி பார்வை என**
**மாக்களை முன் பற்றிப் பிடித்தற்கு"**

திருவருட்பயன் 45ம் செய்யுள்

இவ்விடத்திலே, சகலராவாரைத் தடுத்தாட் கொள்வதற்கே திருவருள் மானிடத்திருக்கோலம் தாங்கி வருகிறார்.

**'உருததிரநற் திருமணியை யிலங்குகாதி**
**லொண் சிரத்திற் கந்தரத்தி லொளி கொண்மார் பிற்**
**கரத்திலணிந் திலகு திரு முண்டமங்கிக்**
**கண்கரந்த நன்னுதன்மேற் கவிதை சாத்திற்**
**திருத்திகழும் வேதியனா ரம்பொன்மேனி**
**திகழ்வதுகண் டகமகிழ்வார் செங்கை மீது**
**பொருத்த முறும் புத்தகமே தையா வென்னப்**
**பொய்மையிலாச் சிவஞான போதமென்றார்"**

திருப்பெருந்துறைச் சருக்கம் 35ம் பா.

மானுடச் சட்டையோடு வந்ததை விளக்குபவர் ஞான தேசிகருடைய அணியையும் கூறுகிறார்.

நல்ல உருத்திராக்க மணியை, விளங்கா நிற்கும் திருக் கரங்களிலும் அழகிய சிரசினும், திருக்கழுத்திலும் ஒளிபொருந்திய மார்பிலும், திருக்கரங்களிலும் தரித்தும், வெள்ளொளி விளங்குங் திரிபுண்டரத்தை அக்கினிக் கண்ணை மறைத்த நல்ல திரு நெற்றியிலே சிவாகமவிதிவிளங்கத் தரித்தும் குருலஷணம் விளங்கும் அநாதி சைவராகிய சிவபெருமானது மாற்றுயர்ந்த பொன் போலும் ஞான தேசிகத் திருமேனி பேரொளி செய்வதைத் தரித்து மேலும் மனம் களிகூரும் திரு வாதவூரடிகள் அவரை நோக்கி சுவாமி உமது சிவந்த திருக்கரத்திற் பொருந்தும் திருமுறையாதெனவினவ அதற்கு அவர் இது மெய்மையாகிய சிவஞான போத மென்று கூறினார். வேடர் தம் வினையான் மகிழ்வெய்தற்கு விரும்பிய மிருகத்தை ஒத்துநடக்கவைத்து மற்றவற்றைப் பிடிப்பர் அதுபோல ஞானசாரிய வேடங் கொண்டே திருவாதவூரடிகளை அடிமையாக்க வேண்டுமென்று இவ்வாறு வேடங்கொண்டார் என்பதைக் கடவுள் மாமுனிவர் விளக்கியுள்ளார்.

இன்னும் பலவாறு நம்சிவனை நினைந்து ஆட்கொள்ளும் பலப்பல வடிவங்களை எடுத்துக் காட்டலாம். விடயம் விரிந்து நீண்டு வடமாகும்.

இவ்வாறாய சிவன் மனுவடிவம் தாங்கி வந்து அடிமையாய்த் திருவாதவூரரை ஆட் கொண்டாரே ஆனால் திருமாலும் திசைமுகனும் ஏன் இன்றும் காணவில்லை என மாணவ நேயர்கள் கடாவக்கூடும்.

**'அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்**
**நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடீ**
**நில முதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவரும்தம்**
**சல முகத்தால் ஆங்காரம் தவிரார் காண் சாழலோ"**

திருச்சாழல் 6வதுபா
மணிவாசகர்

இன்னும் அப்பரடிகள் அருளிய திருக்குறுத் தொகைக் கண்ணும் இவ்வுண்மை காண்க.

**'செங்கணானும் பிரமனுந் தம்முள்ளே**
**எங்குந்தேடி திரிந்தவர் காண்கிலார்**
**இங்குற் றேனென் நிலிங்கத்தே தோன்றினார்**
**பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே"**

இலிங்க புராணத்திருக் குறுந்தொகை 11ம் பா

இதுவே முடிந்தமுடிபாகும் கடாவின் விடையுமாகும் சிவபெருமான் முத்தொழிலின் பொருட்டுக் கொள்ளும் முவ்வடிவங்களை திருமாமறை பின்வருமாறு கூறுகிறது

**'சிவனாகித் திசைமுகனாய்த் திருமா லாகிச்**
**செழுஞ்சுடராய்த் தீயாகி நீருமாகிப்**
**புவனமா கிப் புவனங்கள் அனைத்துமாகிப்**
**பொன்னாகி மணியாகி முத்துமாகிப்**
**பவனாகிப் பவனங்கள் அனைத்து மாகிப்**
**பசுவேறித் திரிவானோர் பவனாய் நின்ற**
**தவனாய தலையாலங் காடன்தன்னைச்**
**சாராதே சானாட் போக்கினேனே 6,2,9-4**

பின் நாம் திருவுந்தியாரின் கருத்தினைப் பார்ப்போம்

*(தொடர்ச்சி அடுத்த இதழில்)*


Eastown
Restaurant & Banquet Halls
Banquet facilities up to 700 Persons
50 பேர் தொடக்கம் 700 பேர் வரையில்
கொள்ளக்கூடிய அலங்கரிக்கப்பட்ட
3 மண்டபங்கள் ஒரே இடத்தில் அமைந்துள்ளன.
திருமணம்.
பிறந்தநாள்,
பூப்புனித
நராட்டு விழா
மற்றும் சகல
வைபவங்களுக்கும்
நாடுங்கள்.
தொடர்புகளுக்கு
JEY or SASI
2648 Eglinton Ave. East
Scarborough, ON
(at Brimley)
Tel: (416) 265-3333
(416) 266-3841

# எனது அனுபூதி நிலையில் அத்வைதமான இறைவன்

சுப்பிரமணியம் கந்தையா
*இளைப்பாறிய தலைமை ஆசிரியர்*

**'வான் முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

**'மண்ணுலகத்தினில் பிறவிமாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின்முற்றுறக்
கண்ணுதலுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்"**

**"நன்றென்றும் தீதென்றும் நான் என்றுந் தான் என்றும்
அன்றென்றும் ஆம் என்றும் ஆகாதே - நின்றநிலை
தான் அதாம் தத்துவமாம் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள்" - ஒளவையார்**

உலகிலுள்ள எல்லாச் சமயங்களும் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று அறுதியாகவும் உறுதியாகவும் ஒப்புக் கொள்கின்றன. அனைத்துச் சமயங்களுக்கும் ஆதாரமாயுள்ளன வேதாந்தங்கள். அதாவது வேதங்களின் சாரமாயுள்ள சத்திய தரிசனங்களாயமைந்த உபநிஷத்துக்கள் - சுருதிகள்.

இறைவன் ஒருவனே உள்ளவன். இரண்டாவதாக ஒரு பொருளும் இல்லை என்ற ஆதாரத்தை தான் அதுவாகி உணர்ந்து தெளிந்து கொண்டவர்களே சத்தியதரிசன விளக்கமாக வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். கடவுள் அனந்த சக்தியுடைய பராசக்தியுடன் ஏகமாய் எங்கும் நிறைந்து இருக்கிறார். ஆறுமுகநாவலர் சைவவினாவிடையிலே மிக விளக்கமாகவும் தெளிவாகவும் எளிமையான தமிழிலே கூறியிருக்கிறார்.

1. எங்கும் நிறைந்தவர் (சர்வவியாபகி)
2. எல்லாம் வல்லவர் (பேராற்றல் உள்ளவர்)
3. முற்றறிவு உள்ளவர்
4. முற்றுணர்வு உடையவர்
5. இயல்பாகவே பாசங்களின் நீங்கியவர்
6. வரம்பில்லாத இன்பம் உடையவர்

இப்படியாக நாங்கள் சிறிய வகுப்புகளிலே படித்துப் பாடமாக்கியிருக்கிறோம். அதன் உண்மையான பொருளை நான் இப்பொழுதுதான் ஓரளவு உணர்ந்து தெளிகிறேன். சமயங்கள் எல்லாவற்றுக்கும் ஆதாரமான கடவுள் சமயாதீதமானவர். ஒரு வெள்ளை நிறமான சேலையிலே பலவிதமான வர்ணசித்திரங்களை வரையலாம். அனைத்துச் சித்திரங்களுக்கும் அந்த வெள்ளைச் சேலையே ஆதாரம் சித்திரங்கள் சேலைக்கு ஆதாரமல்ல. அதேபோல மதங்கள்

"எனது அனுபூதியிலே அத்வைதம்"
"உலகம் யாவையுந் தாம் உளவாக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா அலகிலா விளையாட்டுடையார் அவர் தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே" - கம்ப இராமாயணம்

அத்வைத வேதாந்த விளக்கத்திற்கு உதாரணபுருஷராக வாழ்ந்து விளக்கியவர் ஆதிசங்கரர் ஆகப் பிரஹ்மம் ஒன்றே சத்தியம் என்பதே அத்வைதம். கடவுள், காலதேச வர்த்தமானத்தைக் கடந்திருக்கிறார் என்று கூறுகிறது வேதாந்தம்.

காலத்தைக் கடந்தவர் என்னும்போது இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்ற பகுப்புகளில்லாத முக்காலமும் ஒரேகாலமாக ஏகனாக உணர்ந்தவராகிறார். தேசங்கடந்தவர் என்ற நிலையிலே சிற்றம்பலமான நுண்ணிதின் நுண்ணிதான அணுவுக்கு அணுவான இடத்திலிருந்து எல்லையில்லாத பேரம்பலமாக இடத்தைக் கடந்த (இறை) வெளியாக இருக்கிறார்.

வர்த்தமானத்தைக் கடந்திருக்கிறார். வர்த்தமானம் என்பது காரணகாரியமாக அமைந்துள்ள இந்தப் பிரபஞ்சம் அனைத்துக்கும் அப்பாற்பட்டு அதீத வெளியாய் ஏகமாய் ஒரே பொருளாய் இருக்கிறார் என்று விளக்குகிறது வேதாந்தங்கள் "அந்தம் ஆதி என்மனார் புலவர்"
- தொல்காப்பியம்
"ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே" என்பது திருவாசகம்.

## அத்வைதமான இறைவன்

"வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்கு
சோதியுமாய் இருள் ஆயினார்க்குத் துன்பமுமாய் இன்பம்

ஆயினார்க்கு
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்குப் பந்தமுமாய் வீடுமாயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே"

இப்பொழுது என்னிடம் வருகிறேன். அதாவது அனந்த சக்திகளுடன் கூடிய - பராசக்தி வேறு தான் வேறு என்றில்லாத கடவுளை சனாதன தர்மங்கள் என்று கூறப்படும் வேதவேதாந்தங்களின் வாயிலாக அனுபூதியில் தான் அதுவாகிய நிலையிலே தெளிந்த ஞானிகள் அனந்த கோணங்களிலே தான் தான் கண்டு தெளிந்த வகையிலே விளக்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு மெய்ஞ்ஞானியும் அவர் அவர் உடற்கூற்றுக்கு இசைவாக ஒரே உண்மைப் பொருளைப் பல்வேறு கோணங்களிலே ஒரேபொருளை அதுவாகியே தெளிந்திருக்கிறார்கள்.

ஆகவே அத்வைதமான இறைவனை எல்லோரும் விசாரித்துத் தெளிந்த முறைகள் பலகோணங்களிலே உள்ளன. எனது நிலையிலே நான் எல்லோருங்கூறிய ஒரே உண்மைப் பொருளை அதாவது என்றும் உள்ள சத்தியமான கடவுளை அனுபூதியிலே எனக்கென இசைந்த சிந்தனைமுறையிலே

அத்வைதமாக இறைவன் எப்படி இருக்கிறான்
"மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம்" என்று
அறிவில் முதிர்ந்த சான்றோர் அமிழ்தமாக உதவிய வார்த்தைகளை அனுசரித்து வாழவேண்டும் என்ற தெளிவுஏற்பட அவர்கள் வழியில் அசைவிலா நடைமுறையை அனுசரித்தேன். "நோன்பு என்பதுவே கொன்று தின்னாமை" என்று ஒளவைப்பாட்டி கூறிய அமிழ்தமொழி மறைமொழி என நடைமுறையில் நன்மையும் தெய்வ அனுக்கிரகமும் பெற உதவியது.

இப்பொழுது அத்வைதமான இறையுணர்வும் தெளிவும் பெற்ற நிகழ்வுக்கு வருகிறேன். இலக்கியங்களும் தேவார திருவாசகங்களும் பெரியார் வரலாறுகளும் புராணங்களும் சத்சங்கங்களும் கோயில்களும் அனைத்து மதங்களின் ஆதாரமான வேதமொழிகளும் கடவுளைப்பற்றிய சிந்தனையையும் விசாரணைகளையும் தூய இனிய இதயபூர்வமான இரக்கக் குணத்தையும் இனிதாக வளர்த்தன. இடைவிடாத சிந்தனை தொடர்ச்சியான தியானமாகியது. ஏறக்குறைய இன்றிலிருந்து நாற்பது வருடங்களின் முன் ஒரு இரவு. கனவு நிலையிலே பழைய புராண இதிகாசங்களிலே கண்ட ஒரு சடாபாரத்துடனும் ஏனைய அங்க இலட்சணங்களுடனும் கூடிய ஒரு வேதரிஷி எனது கண்முன் அமர்ந்து தெக்ஷிணாமூர்த்தியாக உபதேசிப்பதாகக் கண்டேன்.

அன்று இரவுபோக விடிந்து அடுத்தநாள் காலையிலே வேதாந்த மடத்துக்கு ஒருக்கால் போய்ப் பார்ப்பமே என்ற எண்ணம் இயல்பாக வந்து தூண்டியது.

குமாராசாமி வீதியில் (கந்தமடத்தில்) உள்ள வேதாந்த மடத்திற்குச் சென்றேன். அங்கு நான் கனவுக்காட்சியில் கண்ட ரிஷிக்கு (முனிவருக்கு) நேர்மாறான கோலத்தில் வேதாந்த மடத்தில் ஒருவர் இருந்தார். மார்க்கண்டுச் சாமியார் என்பது அவர் பெயர். அவர் ஒரு எளிமையான தோற்றத்துடன் மொட்டைத் தலையுடனும் நாலுமுழ வெள்ளை வேட்டியுடனும் ஒரு நலமுண்டுச் சால்வையுடனும் கோவணமுந் தெரியும் உடையுடன் பகவத்கீதை (ஆங்கிலநூல்) ஆதிசங்கரர் உரையைத் தெளிவாக வாசித்து மிகவிளங்கத்தக்க நல்ல தமிழில் விளக்கங் கூறிக்கொண்டிருந்தார். தொடர்ந்து வேதாந்த மடத்துக்குச் சென்று வந்தேன். அப்பொழுது மார்க்கண்டுச் சுவாமியார் வேறுயாருமல்ல நான் கனவிலே கண்ட சடையுடன் கூடிய மகரிஷியே இக்கோலத்திலே இங்கு எனக்கு உபதேசிக்க எளிமையான கோலத்திலே தோன்றியிருக்கிறார் என்ற உணர்வு இதயத்திலே உண்டாயிருந்தது.

சுவாமியாரின் உபதேசம்
கடவுள் காலதேச வர்த்தமானங் கடந்தவர் என்பது.
காலத்தையும் இடத்தையும் காரணகாரிய வடிவில் தோன்றும் இப்பிரபஞ்சத்தையும் கடவுள் எப்படிக் கடந்திருப்பார்?
முதல்முதலாக காலத்தையும் இடத்தையும் கடப்பது பற்றிச் சிந்தித்து விசாரித்து ஒரு முடிபு காண்போம் என எண்ணினேன். காலத்தையும் இடத்தையும் கடக்க ஒளியின் வேகத்தை முதல் ஆதாரமாக எடுத்துக் கொண்டேன்.
ஒளி ஒரு கணத்திற்கு (செக்கனுக்கு) ஒரு லட்சத்து எண்பத்து ஆறாயிரம் மைல்கள் செல்லக்கூடியது என்பதை ஆரம்ப விஞ்ஞான ஆதாரபாடத்திலேயே படித்திருந்தேன்.
கடவுள் பற்றி மணிவாசகர்
"வேகங்கெடுத்தாண்ட வேந்தன் அடிபோற்றி"
என்று கூறியுள்ளதையும் வேறும் சிவகதி பரகதி என்ற மறைமொழிகளையும் பற்றிச் சிந்தித்தேன்.
"சிவசிவ என்னச் சிவகதி தானே" எனவும்
அருணகிரிநாதர் சுவாமிகள்
சரண கமல ஆலயத்தை
அரை நிமிட நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத என்ற திருப்புகழில் தருணம் இது ஐயா! மிகுத்தகனம் அது உறு நீள் சவுக்கியம், சகல செல்வம், யோகம் மிக்க பெருவாழ்வு, தகைமை, சிவஞானம் முத்தி, பரகதியும் நீ கொடுத்து அருள்புரிய வேண்டும் நெய்த்த வடிவேலா! என்றும்
நச்சினார்க்கினியர் திருக்கோவையார் பாயிரத்தில்
"அறிவோன் அறிவிலது என்னும்
இரண்டாகும் நெறிதனில்
தொகை பெற்றது நிரல் பட விரிந்த
மண், புனல், அனல், வளி, மாவிசும்பு, வெண்மதி, செஞ்சுடர் வேட்போன் (இயமானன்) என (எட்டு வகையாக) எண்வகை

நிலவிய எவ்வகைப் பொருளும் தோற்றம், நிலை இறுதி கட்டு, வீடு எனும் மாற்றாருஞ் செயல்வழி மாறாது செயப்பட்டு வெருவா உள்ளத்து வேட்போன் தான்செய் இருவினைப் பயன் துய்த்து மும்மலனொரீ இப் பொருவறு சிவக்தி பொறப்பினிற் பொருந்தவும், ஏனைய தத்தங் குணநிலை புணரவும் நிலையி யவ்வயின் நிமித்தமாகி
அலகு தவிர்த்த பலவகை அண்டமும்
இல் நுழை வெயிலின் துன்னணுப்புரைந்து
தன்னுள் அடங்கவும் தான் அவற்றுள்ளும்
நுண்ணுணர்வாயும் நோக்கரு நுழையிற்
சிறுமை பெருமைக்கு இருவரம்பு எய்திப்
போக்கும் வரவும் புணர்வுமின்றி
ஆக்கமுங்கேடும் ஆதியும் அந்தமும்
நடுவும் இகந்து ஞானத்திரளாய்
அடியும் முடியும் அளவாது அயர்ந்து
நெடியோன் நான்முகன் நான்மறைபோற்ற
எரிசுடர்க் கனலியின் நீங்காது
விரிசுடர் வெப்பமும் விளக்கமும் ஒப்பவோர்
பொழுதினில் துப்புற இயற்றுவதென
எப்பொருளுங் காண்டலும் இயற்றலும்
இயல்பாம் - என்று கடவுளைப் பற்றிய இயல்பைக் கூறியுள்ளார்.

இதிலே பொருவறுசிவகதி பொறப்பினிற் பொருந்தவும் என்பதிலே கடவுளின் வேகசக்தியைச் சிவகதி என்று கூறியுள்ளார். கடவுள் காலங்கடந்து தேசங்கடந்து வேகம் கடந்து இருப்பதை தான் அதுவாகிய, சிவகதியிலே உணர்ந்து தெளிந்து விளக்கியிருக்கிறார். போக்கும்வரவும் புணர்வும் இன்றி என்பதனாலே கடவுளின் வேகம் ஏகமுஞ்சமசீராக அசைவில் அசைவின்மையாகவும் இயக்கத்தில் இயங்காமையாகவும் கடந்த வேகத்திலே போக்குவரவு செய்ய இயலாத செறிவான எங்கும் நிறைந்த இறைவெளியாக...
ஈச போற்றி
இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி என்ற மணிவாசகர் கூற்றிலுள்ள தேசப்பளிங்கான விண்வெளியாகப் பளிங்காக கண்ணாடி (வைரமாக) யாக ஒளிர்கிறார்.
கடந்த வேகத்திலே போக்குவரவு ஏன் செய்ய இயலாமல் இருக்கிறார்? என்று விசாரித்துச் சிந்தித்து அவன் அருள் கொண்டே அவனை அறிவோமானால் ஆரம்ப விஞ்ஞான அறிவே போதுமானதாகும்.
அதாவது பவனம் புயலாகவோ அன்றி சாதாரணமாகவோ வீச வேண்டுமானால் ஒரு இடத்திலே (பிரதேசத்திலே) அமுக்கம் கூடியும் ஒரு இடத்திலே அமுக்கங் குறைந்தும் இருந்தாலே வீசும். சமசீராக இருந்தால் காற்று வீசமாட்டாது.
தண்ணீரும் மேடு பள்ளம் என்ற நிலையிலே தான் ஆறாகவோ அருவியாகவோ ஓடும். "ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே" என வள்ளலார் கூறுவது ஓடும். நீரையே ஓடையிலே எனக் கூறுகிறார். சமசீரான தடாகத்திலே தண்ணீர் சமசீராக இருக்கும்போது வேகந்தெரிவதில்லை. உள்ளீடாக வேகம் இருக்கிறது. கடவுள் காலம், தேசம் வர்த்தமானத்தைக் கடந்திருப்பதற்கு மூலகாரணமாயிருப்பது கடந்த வேகத்துடன் வேகங்கெடுத்தாண்ட வேந்தனாக இருப்பதே. அப்படியெனில் அந்த வேகத்தையுடைய கடவுள் கால தேசத்தைக் கடந்தவராய ஏகதேசமும் ஏககாலமும் ஏகவேகமுமாக எங்கும் சமசீராக இருக்கிறார் என்பதை சிந்தனையிலே தெளியலாம்.
கடவுள் சிவமயமாக சிற்றம்பலமாக, சிதம்பரமாக ஏக இறை வெளியாக ஏகப்பிரமமாக பராசக்தியுடன் இருக்கிறார். பராசக்தி எதனாலே இருக்கிறது? என்று விசாரித்தால் கடந்த வேகத்துடன்
போக்குவரவு செய்ய இயலாதவாறு சமசீராக எங்கும் நிறைந்திருப்பதால் அவர் பேராற்றல் உள்ளீடாக உள்ளவராக விண்ணாக இருக்கிறார். விண் (இறை) வெளியாக ஒரே பொருளாக செறிவாகவும் அறிவாகவும், அன்பாகவும் ஆனந்தமாகவும் பேராற்றல் உள்ள முழுப்பொருளாக ஏகமும் ஒருசீரா நிறைந்திருக்கிறார். வேகம் நிறைந்து ஏகமும் சமசீராக போக்குவரவு செய்ய இயலாத விண்ணாகி வெளியாக நிர்விகற்பமாக இறைவனையுணர வேண்டும்.
கடவுளைக் காணமுடியுமா? ஒரு சிறிய குழந்தைக்குக்கூடக் கடவுளை உணரவைக்க இயலும். "தான் அதாம் தத்துவமாம்" ஒளவையார் தான் என்பது நீ என்பது ஆகும்.
அது ஆம் - என்பது இருக்கிறாய் எனப் பொருள்படும். தத்துவமஃ அசி என்பதில் (தத்) அது,
(துவம்) நீயாக, அசி - இருக்கிறது என்பதாகும்.
ஆகவே நாம் அனைவரும் இறைவன் குடியிருக்கும் கோயிலாக இருக்கிறோம். அதாவது நமது ஆன்மா இறைவனை விட வேறானது அல்ல என்பதே சத்தியம். உயிர் இருப்பதாலேயே கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் கண், காது, நாக்கு, மூக்கு, என்ற ஐந்து பொறிகளும்.
மனம், வாக்கு, காயம் என்ற திரிகரணங்களும் (மனம்) புத்தி சித்தம் அகங்காரமாகி நான்கு கரணங்களும் செயற்படுகின்றன. நாம, ரூபம் இந்த உயிரின் படைப்பே. நாதம் என்பது சத்தம் ரூபம் என்பது உடம்பு. உருவம் உயிர்தான் உருவத்தைப் படைத்தது. வளர்த்தது பாதுகாத்து வருவது அழிப்பது அனைத்துக்கும் ஆதாரம். ஆகவே நான் யார்? நானோ ஆன்மா என்பது விடையாகும். நான் எப்படிக் கடவுளாவேன். அறிவு, அன்பு, ஆனந்தம், ஆற்றல் அனைத்தும் உயிரினுடையதே. சத்தம் உயிருடையது. ஆகவே எங்கும் நிறைந்திருக்கும். கடவுள் நமது உடலிலும் மறைந்திருக்கிறார் .
குழந்தைகளுக்கு விளங்கும் அளவுக்கு நமது உயிர்

இருப்பதால் நாம் காண்பது கேட்பது செயலாற்றுவது நிகழ்கிறது என்பதை விளக்கி அந்த உயிரைப் பார்க்க இயலாதிருப்பதை உணர்த்தி அது மறைந்திருந்து கொண்டு நமக்கு உறுதுணையாக உதவுவதைப் போல எல்லாப் பிராணிகளுக்கும் - உதவுவதையும் உணர்த்தலாம்.

நமது வீட்டில் உபயோகப்படும் மின்சாரம் தொலைக்காட்சி, வானொலி, மின்விளக்குகள், மின்சார விசிறி, குளிர் சாதனப்பெட்டி, மின்சார அடுப்பு ஆகிய சாதனங்களின் வாயிலாக அந்த அந்தக் கருவிகளின் அமைப்புக்கு இசைய மின்சார சக்தி பயன்படுகிறது.

கடந்த வேகத்துடன் ஏககாலம் ஏகதேசம் ஆக உள்ள கடவுளின் கடந்த வேகம் ஏன் நமக்குப் புலப்படாமல் இருக்கிறது என்பது பல ஆண்டுகள் சிந்தித்து விசாரித்து உணர்ந்து தெளிந்த மகாஇரகசியம் ஆகும்.

கடவுள் கடந்த வேகமாக சமசீராக போக்குவரவு இன்றி விண்ணாக, விண்வெளியாக வேகமாக என்னும்போது கடவுள் விவேகமாக இருக்கிறார் என்பதே சத்தியம்.

நாயகன் என்பதற்கும் விநாயகன் என்பதற்கும் உள்ள வித்தியாசம் போன்றதே வேகமும் விவேகமும்.

நாயகன் என்றால் தலைவன் எனப் பொருள்படும். விநாயகன் என்றால் தனிப் பெருந்தலைவன் ஒருவனே தலைவன் என்ற தனிநாயகன் ஆகும்.

விவேகம் என்பதும் கடந்தவேகமாக இருக்கும். சிவகதியை - பரகதியை மட்டுமே குறிக்கும். கடவுளின் விவேகம் போக்குவரவு அற்ற நிலையிலே விண்ணாகி - நாதமாகி -ஓம் என சதா பராசக்தியோடு இடையீடின்றி எங்கும் ஓரேசீராய் பண்ணவனாக அன்பும் ஆனந்தமும் அறிவும் ஆற்றலும் அதுவேயாக விண்கூவி நிற்கிறது. அதுவே ஆஊம் ஆக மகாமந்திரமாக படைத்தல் காத்தல் அழித்தல் அனைத்தையுஞ் செய்கிறது.

அந்தக் கடவுளின் ஓம் என்ற பண் ஏன் நமக்குக் கேட்பதில்லை. அது ஏன் மௌனகீதம் எனப்படுகிறது. விசாரித்தால் - நமது ஐம்பொறிகள் மேல்ஸ்தாயி கீழ்ஸ்தாயி எல்லாமே கேட்க இயலாதவகையிலே ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அமைந்துள்ளதே காரணம்.

ஒளியைக் கூட கண் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே காணக்கூடியது. மிகுந்த ஒளியை நம்மாலே பார்க்க இயலாது திருவருட்பயனிலே ஒளியும் மிக இருளாம். என்பதால் விளங்கலாம். இனி கடந்த வேகத்தினாலே காலமும் இடமும் (எல்லையில்லாத இடம் அனைத்தும்) ஏக காலமும் ஏகதேசமானதை அதுவாகித் தெளிந்த ஞானிகள் வாழ்ந்து அனுபூதியில் உணர்த்திய விளக்கத்தை நான் எனது அனுபவத்திலே தெளிந்துதான் விளக்கினேன். இலகுவாக எளிமையாக கூறினாலும் மிகமிக ஆழ்ந்த சிந்தனையும் விசாரணையும் ஆதார சுத்தியும் ஆன்மசுத்தியும் தெய்வீகமாக வாழ்ந்த அன்பும் அறிவும் தியானமும் உடைய ஞானிகளும், புலவர்களும் அவதார புருஷர்களும் சத்சங்கமும் சாத்திரங்களும் தோத்திரங்களும் ஆதாரமான அவன் அருளுமே காரணமாகும்.

இனி இந்தப் பிரபஞ்சத்தைக் கடந்தவர் என்பதை அனுபூதி நிலையிலேயே விளக்குகிறேன். வேதாந்தத்திலே காலதேச வர்த்தமானங்கடந்தவர் என்று எனது குரு உபதேசித்தார்.

வர்த்தமானம் என்பது காரணகாரியத்தைக் கடந்தவர் கடவுள் என்பது. காரணகாரிய சம்பந்தமானதே பிரபஞ்சம். விஞ்ஞான மயமானது. விஞ்ஞானம் காரணகாரிய விளக்கமுள்ளது.

ஆனால் கடவுள் இந்த காரணகாரியவாதத்தில் அடங்குபவர் அல்ல. கடந்தவர் ஆவார். இந்தப் பிரபஞ்சம் கடவுளின் அனந்த சக்திகளில் ஒன்றான மாயா சக்தியினால் படைக்கப்பட்டது.

மாயையின் இயல்புகள் மூன்று என வேதாந்தம் கூறுகிறது. 1. கயிற்று அரவு 2. கானற்சலம் 3. மாயாவிவிவகரிப்பு

கடவுள் காரணகாரியமாக அமைந்த பிரபஞ்சத்தைக் கடந்தவர்.

இறைவன் விவேகமான விண்வெளியாக நாதப்பிரமமாக ஒரே இறையாக தேசப்பளிங்கின் திரளாக ஆதி அந்தமற்று வியாபித்திருக்கிறார்.

ஒரு வெண்மையான துணியிலே வரைந்த சித்திரமாக இந்த உலகம் இருக்கிறது. பரப்பு அளவிலே சேலை இருக்கிறது. அப்படியல்ல விண்ணான இறை (வெளி) முப்பரிமாணமாக கனஅளவை வைத்து நோக்க வேண்டும். பராசக்தியோடு கூடிய பரவெளியின் செறிவு அளவிடற்கரியது. அறிவு, அன்பு, ஆனந்தம் ஆற்றல் நிறைந்த உயிர்வெளிஅது.

அந்த இறை தான் தன் இயல்பில் மாறாதபடி இருந்து கொண்டே பிரபஞ்சம் அனைத்தையும் தன் மாயா சக்தியால் அதிட்டித்தும், காத்தும், அழித்தும் மறைத்தும் விளையாடுகிறார்.

அலங்கலில் தோன்றும் பொய்மை அரவெனப்பூதம் ஐந்தும் விலங்கிய விகாரப்பாட்டின் வேறுபாடுற்ற வீக்கம்கலங்குவது எவரைக் கண்டால் அவர் என்பர் கைவில்லேந்தி இலங்கையிற் பொருதார் அன்றே.

மறைகளுக்கு இறுதியாவார் "கம்பராமாயணம் பூமாலையிலே அந்தி சந்தி வேளையிலே (போதிய வெளிச்சம் இன்மையால்) வழிப்போக்கன் கண்டபாம்பு போல உள்ளது. காணப்படும் பிரபஞ்சம். உண்மையான பூமாலையில்லாவிடில் (இல்லாத) பாம்பு தோன்றியிருக்காது. வெளிச்சம் வந்தபோது பாம்பு இல்லாமல் அதே இடத்திலே ஒரு பூமாலை பாம்புபோல வளைந்து கிடந்தது தான் சத்தியம்.

காரண காரிய வாதமாயிருக்கும் இந்த உலகம் பூமாலையிலே தோன்றிய பாம்பு போன்ற மாயமானது . இது அத்தியாசவாதமாகும்.

# LAW OFFICE

# T. JEGATHEESAN

உங்கள் சட்டப் பிரச்சினைகள் எதுவாயினும் தமிழிலும், ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும், சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

- **REAL ESTATE - Purchase, Sale, Mortgage**
  காணி, நிலம், வீடு வாங்குதல் விற்றல், அடமானம் வைத்தல்



- **FAMILY LAW - Divorce, Separation**
  குடும்பம் தொடர்பான வழக்குகள் விவாகரத்து, பிரிவு

- **BUSINESS - Purchase, Sale, Incorporation**
  வர்த்தக ஸ்தாபனங்கள் கொள்முதல், விற்பனை

- **IMMIGRATION - Refugee Matters, Sponsorship, Appeal**
  குடிவரவு அகதி விவகாரம், உறவினர் சேர்க்கை. மேன்முறையீடு

- **POWER OF ATTORNEY - Affidavits, Statutory Declarations, Last Will**
  தத்துவப் பத்திரம் சத்தியக்கடுதாசி, உயில்

இலங்கை, இங்கிலாந்து, ஆகிய நாடுகளில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக
அனுபவம் பெற்று கனடாவிலும் சட்ட வல்லுனராகப் பயிற்சி பெற்று பதிவு பெற்ற
தமிழ் வழக்கறிஞர்

## தி. ஜெகதீசன்

**Barrister, Solicitor and Notary Public (ONTARIO)**

**TEL:**

**Office: (416) 266-6154 Res: (416) 449-0358**

**Fax: (416) 266 - 4677**

**2620 Eglinton Ave. E., #201**
**Scarborough, ON M1K 2S3**

# பழைய கிரந்தங்களில் கண்ட சீரிய தகவல்கள்

தொகுப்பு: நம்பி

எண்சோதிடம். சிந்தித்து அறிக.

ஒன்று முதல் ஒன்பது எண்களைச் சேர்ந்தவர்களுக்கும் இயற்கை அமைப்புக்களாக என்னென்ன தன்மைகள் உருவாகும் என்பது பற்றி ஒரு பழமையான எண் சாத்திர நூலைப் பார்த்தேன். அந்த நூலில் ஒவ்வொரு எண்களுடைய விசேடமான தன்மைகளைப் பற்றியும் பல குறிப்புக்கள் தரப்பட்டிருப்பதைக் கண்டேன். நான் இந்தச் சாத்திரத்தைப் பயின்று கொண்டு தானிருக்கிறேனே. முற்றிலும் உணர்ந்து விட்டதாக ஒருபோதும் நினைப்பதில்லை.

ஆகையினால், நான் கண்ட பழைய ஒரு புத்தகத்தில் 9 எண்களுக்கும் சொல்லப்பட்டிருக்கின்ற விசேடத் தன்மைகளைப் பற்றிய குறிப்புக்களை வாசகர்களுக்கு வழங்க வேண்டும் என்ற குறிக்கோளோடு எழுதுகிறேன்.

### எண் 1: பிறவிப் பயன் காணும்.

இந்த எண் கடவுளைப் பிரதிபலிக்கும் எண்ணாகும். ஆத்மசூரியன் என்று இந்த எண்ணைச் சொல்லலாம். கடவுள் ஒருவரே ஆவார் என்பது போலச் சூரியனும் ஒருவர் தான். அந்தச் சூரியனுடைய எண்ணாகிய இந்த 1. ஒன்பது எண்களிலும் தனிச் சக்தி வாய்ந்த எண்ணாகும்.

கீழே இந்த எண்ணின் தன்மைகளின் பட்டியலைத் தருகிறேன்.

1. ஆற்றலையும் ஸ்தாபன நிர்வாகத்தையும் இந்த எண் குறிக்கும்.
2. ஒரு காரியத்தை நிறைவேற்றுகின்ற ஆற்றலை இந்த எண் அளிக்கும்.
3. இந்த எண்ணைச் சேர்ந்தவர்கள் இந்த உலகத்தில் தாங்கள் மனிதராகப் பிறந்ததின் அடையாளத்தை முத்திரை பொறித்துவிட்டுப் போவார்கள்.
4. சரீர பலமும் மனோபலமும் இவர்களுக்குக் கூடுதலாக இருக்கும்.
5. தெளிவான குறிக்கோளுடன் இந்த எண்ணைச் சேர்ந்தவர்கள் எதை அணுகினாலும் நிச்சயமாக அதை அடைந்தே தீருவார்கள்.
6. முக்கியமான குறிக்கோள் எதுவோ, அதிலிருந்து வளையாமல் நேர் நோக்குடன் சென்றார்களானால், வெற்றிக்கு உத்தரவாதமுண்டு.

இந்த எண்ணைச் சார்ந்தவர்களுக்கு வைராக்கியம் இருக்கும்; கர்வம் இருக்கும்; அடக்குகின்ற சுபாவம் இருக்கும்.

8. எந்தக் காரியத்தில் வெற்றி பெற வேண்டுமானாலும், இவர்கள் சுதந்திரமாக இயங்க வேண்டுமே தவிர மற்றையோருக்குக் கட்டுப்பட்டு நடப்பது என்பது முற்றாகக் கூடாது.

### எண் 2: தவறை ஏற்பார்கள்

இந்த எண் ஆண், பெண் என்ற இனங்களில் பெண் இனத்தைக் குறிப்பதாகும். எண் சாத்திர வல்லுநர்களின் கருத்துப்படி இந்த எண் அவ்வளவு பலமுடையதாகாது. இந்த எண்ணின் விசேடத் தன்மைகளைப் பற்றிய குறிப்புக்களின் பட்டியலைக் கீழே தருகிறேன்.

1. மற்றையோருடைய கருத்துக்களையும் மனநிலையையும் இந்த எண்ணைச் சேர்ந்தவர்கள் பிரதிபலிப்பார்கள். எண் 1-ஐச் சேர்ந்தவருக்கு இந்த எண்ணைச் சேர்ந்தவர்கள் "ஆம்" போடுவார்கள் இல்லை" என்று சொல்லப் பின் வாங்குவார்கள்.
2. இவர்களுடைய உணர்ச்சிவசப்பட்ட மனப்பான்மை காரணமாக இவர்களின் ஈடுபாடு எக்காரியத்திலும் அமையும். அறிவினால் உணர்ந்து, இதயத்தால் சிந்திப்பவர்கள் இவர்கள்.
3. தங்களுடைய குற்றங்களை ஒப்புக்கொள்ளத் தயங்க மாட்டார்கள் இவர்கள். மேலும் எது, எதைக் காட்டிலும் தெளிவும் அதைப் பெறுவதற்காக, முன்னய மனநிலையிலிருந்து மாற்றம் கொள்ளுவார்கள்.
4. நாணம் நிறைந்திருக்கும் மற்றையோருடைய கவனத்தைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆனால், மற்றையோர் அலட்சியப்படுத்தினால், அவர்களை வெறுப்பார்கள்.
5. இவருடைய உள்ளத்தில் உறைந்திருக்கும் குறிக்கோள்கள் இத்தகையவை என்று மற்றையோரால் எளிதில் புரிந்து கொள்ள இயலாமற்போகும்.
6. கடுமையாக உழைப்பார்கள் பொறுமையாகவும் இருப்பார்கள். சுயமரியாதை இழக்கப்படும்போது அதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் தீவிரமான பலத்தோடு எதிர்ப்பார்கள்.
7. வசதிகளை இவர்கள் விரும்புவார்கள். ஆனால், அவற்றிற்கு அடிமையாக மாட்டார்கள்.

அடங்கியிருப்பவர்கள் போல அடங்கியிருந்து, அவசியம் நேரும்போது வீறிட்டு எழுவார்கள்.

8. குடும்ப வாழ்வில் இவர்களுக்குப் பிரியமிருக்கும், கணவன், மனைவியையோ மனைவி கணவனையோ விட்டுப் பிரிந்திருக்க மாட்டார்கள். அவ்வாறே மக்களோடும் சேர்ந்திருப்பார்கள்.
9. பொதுவாக இவர்கள், மற்றவர்கள் தங்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்று நினைத்து விடுவார்கள்.

### எண் 3: வேதாந்த ஞானம்

இந்த எண் ஆத்ம வைராக்கியம் நிறைந்த எண்ணாகும். வாழ்க்கையை இனிமையாக இரசிப்பதற்குரிய ஆற்றல் இந்த எண்ணுக்கு உண்டு. ஜீவ ஓட்டத்தை உண்டு பண்ணும். கீழே இந்த எண்ணின் குணங்களுக்குரிய பட்டியலைத் தருகிறேன்.

1. தங்கள் குரல் எங்கும் எதிரொலிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். தங்கள் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் நாட்டம் கொள்ளுவார்கள்.
2. தெய்வீக வேதாந்தத்திலும் சித்தாந்தத்திலும், கவித்துவத்திலும் கலைஞானத்திலும் சமூக அறிவிலும் சுயசிந்தனையிலும் இவர்களுக்குத் தனித்தன்மையிருக்கும். எதையும் வேடிக்கை பார்த்துக்கொண்டு வாயைப் பொத்திக் கொண்டிருப்பவர்கள் அல்லர் .
3. இந்த எண்ணைச் சார்ந்தவர்களுக்கு எண்-1ஐச் சார்ந்தவரின் தகுதியும் அதாவது பரந்த குறிக்கோளும், எண்-2ஐச்சார்ந்தவர்களுடய அடக்கமும் இருப்பதோடு தமக்கே உரித்தான கருத்துச் சிறப்பும் நிறைந்திருக்கும்.
4. இவர்கள் நிர்வாக ஸ்தாபனங்களுக்குத் தலைவராகும் தகுதியுடையவர்கள் ஆவார்கள். பரந்த மனம் இருக்கும். எல்லோருக்கும் உதவுகின்ற குணமிருக்கும். தம் கீழ்ப்பணி செய்கின்றவர்களை அரவணைத்துச் செல்லுகிற ஆற்றலிருக்கும்.
5. வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பெரிதாக நினைத்துக் கலங்க மாட்டார்கள். அன்றாடம் ஏற்படுகிற எந்த ஒரு இடர்ப்பாட்டையும் கண்டு அஞ்சிவிட மாட்டார்கள். நல்ல பொழுதுபோக்குகளை இரசிப்பார்கள். தாங்கள் இரசிப்பதோடு மற்றவர்களையும் இரசிக்க வைப்பார்கள்.
6. எதையும் வேடிக்கையாகவும், விளையாட்டாகவும், இரசனையுடன் எடுத்துக்கொண்டு அதற்காக மனத்தை அலட்டிக் கொள்ளாமல் குறிக்கோளை நோக்கி நடைபோடுவார்கள்.
7. நிறையப் பேசுவார்கள். தம்முடைய குறிக்கோளைத்தான் நம்புவார்களே தவிர பிறருடைய கருத்துக்களைச் சுலபத்தில் நம்பிவிட மாட்டார்கள்.

### எண் 4: நன்றி உள்ளவர்கள்

இந்த எண்ணைச் சேர்ந்தவர்கள் மற்றையோரிலிருந்து மாறுபட்டவர்கள் ஆவார்கள். இந்த எண்ணுக்குரியவர்களின் இலக்கணங்களைப் பற்றிக் கீழே குறிப்பிடுகிறேன்.

1. ஒழுங்காக இருப்பார்கள். சுத்தமாக இருப்பார்கள். சாதுரியமாக இருப்பார்கள்.
2. பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள மாட்டார்கள். எந்தவிதமான ஆசைக்கும் அடிமை ஆகாமல் உறுதியான கோட்பாடுகளின் மீது நம்பிக்கை வைத்து எண்ணங்களை ஈடேற்றிக் கொள்ளுவார்கள்.
3. சொன்ன வார்த்தைகளைக் காப்பாற்றவும், தன்னம்பிக்கையில் நிலைத்திருக்கவும் செய்வார்கள். ஆசாபாசங்களுக்கு அடிமைஆகாமல் இருப்பார்கள். எந்தப் பழக்கத்திலும் ஓர் உறுதிப்பாடு இருக்கும்.
4. சம்பிரதாயத்தைக் கைவிடமாட்டார்கள். பாரம்பரியமான அனுபவ வழக்கங்களைத் தீவிரமாகப் பின்பற்றுவார்கள்.
5. இவர்கள் மெதுவானவர்கள். ஆனால் உறுதியானவர்கள். சிந்தனைக்கு அப்பாற்பட்டவர்கள்.
6. பொறாமை இருக்கும். நன்றி விசுவாசமிருக்கும். உணர்ச்சிவசப்படமாட்டார்கள். எதையும் அனுபவபூர்வமாக யோசிப்பார்கள்.
7. உண்மையை மறைக்காமல் பேசுவார்கள். ஆனால் இரக்கமற்ற விமரிசகர் எனப்படுவார்கள். மற்றையோர்கள் கேட்டால் சொல்வார்களே தவிர, தாங்களாக வலியச் சென்று தங்கள் கருத்துக்களை வெளியிடமாட்டார்கள்.
8. நன்றாக உழைக்கக்கூடியவாக்ள். அதிகம் போராட்டம் இல்லாமல் தலைமைப்பதவியை எளிதாக எட்டிப்பிடிப்பவர்கள் ஆவார்கள்.
9. தங்களைச் சேர்ந்தவர்களிடம் அதிகம் ஈடுபாடு கொள்ளுவார்கள். நூதனமானவர்கள் மீது எளிதில் நம்பிக்கை வைத்து விடமாட்டார்கள்.

### எண் 5: விடாமுயற்சி

சிந்தனை நிறைந்தவர்கள் 5-ஆம் எண்காரர்கள். சிந்தனையில் மாற்றத்திற்கும் இடம் தருபவர்கள். ஆற்றல் மிக்கவர்கள். இந்த எண்ணின் விசேடத் தன்மைகளைப் பற்றிய பட்டியலைக் கீழே தருகிறேன்.

1. இவர்களுக்கு ஒவ்வொன்றைப் பற்றியும் ஏதேனும் கொஞ்சம் தெரிந்திருக்கும். முழுமையாக எதையும் கவனித்து, அதில் நிபுணத்துவம் பெற முனைய மாட்டார்கள்.
2. எப்போதும் விழிப்பாக இருப்பவர்கள். இவர்கள். எதையும் தெளிவாக உணர விரும்புவார்கள். உண்மையை எளிதில் புரிந்து கொண்டு விடுவார்கள்.
3. இவர்கள் தைரியசாலிகளாக இருப்பார்கள் ஆனால், விடாமுயற்சியோடு பணி செய்வதில் உற்சாகம் காட்டமாட்டார்கள். வெற்றி அடைவதில் பாபரைப் போல் விளங்குவார்கள் என்றாலும், அகண்ட சாம்ராஜ்யத்தை நிறுவும் அரசரைப்போல் இருக்க மாட்டார்கள்.
4. நடைமுறையில் நிறைவேறும் வகையில் நல்ல வடிவம் வருகிற யோசனைகளைச் சொல்லுவார்கள். எல்லாவற்றையும் செய்யக்கூடிய இவர்களுக்குச் சில சமயங்களில் எதையும் செய்ய முடியாமற் போகும்.
5. எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்கிற முறையில் தங்கள் பலத்தை வீணடிப்பார்கள். இந்த எண்ணைச் சார்ந்தவர்கள் ஒரு நோக்கத்தில் முறையாக ஆழ்ந்து ஈடுபட்டார்களானால் வெற்றி வீரர்களாகத் திகழ முடியும்.
6. வேகமாகச் சிந்திக்கக் கூடியவர்கள் ஆவார்கள் இவர்கள். புதிய யோசனை வரும்போது பழைய யோசனையை விட்டுவிடுவார்கள்.
7. எதிலும் மாறுபட்டவைகளையே வரவேற்பார்கள்

இவர்கள். ஒரே மாதிரி பண்டங்களை உண்ண மாட்டார்கள். ஒரே அறையில் வசிக்க விரும்பமாட்டார்கள். ஒரே கட்சியில் நீடித்திருக்க மாட்டார்கள்.

8. பயணத்தில் நாட்டமிருக்கும். வேகம், வேகம் என்று வேகத்திற்கு முக்கியத்துவம் தருவார்கள். சுதந்திரத்தில் உறுதியாக இருப்பார்கள். புதியவர்களுடன் பழகுவதை விரும்புவார்கள்.

## எண் 6: அமைதிப் பிரியர்கள்

இந்த எண்ணைச் சேர்ந்தவர்கள் உண்மையான பண்புகளின் பிரதிபிம்பமாக விளங்குவார்கள். அமைதியை விரும்புவார்கள். இந்த எண்ணைச் சேர்ந்தவர்களின் விசேடமான பட்டியலைக் கீழே தருகிறேன்.

1. நம்பிக்கைக்குரியவர்கள், உறுதியாக எதிலும் இருப்பவர்கள்

2. அமைதிப் பிரியர்கள், குழப்பத்தை அகற்றுவார்கள்

3. வாழ்க்கையில் மனோரம்மியமாக இருக்கும்போது இவர்கள் மிகவும் ஆனந்தமாக இருப்பார்கள். திடீர் மாற்றங்களையும் அதிசயங்களையும் வரவேற்க மாட்டார்கள்.

4. மனோபாவம் நேரான முறையில் இருக்கும். வாழ்க்கையைப் பற்றிய ஓர் அடக்கமான உணர்வு இருக்கும். நூதனமானவர்களைவிட நண்பர்களுடனும் உறவினர்களுடனும் சேர்ந்திருக்க விரும்புவார்கள்.

5. எதையேனும் நினைத்துக் கவலைப்படுகிறவர்கள் இவர்கள். தாங்க முடியாத அளவுக்குப் பழுவைச் சுமப்பார்கள். நிகழ்கால, எதிர்கால நிகழ்ச்சிகளை நினைத்துக் கவலைப்படுவார்கள்.

6. கடந்த காலத்தை நினைத்துச் சபித்துக் கொண்டிருப்பார்கள்.

7. ஒன்றை நினைத்துக் கவலைப்பட்டாலும் கூட, அதை அடைந்தே தீர வேண்டும் என்று அதற்காக வருந்த மாட்டார்கள். ஆனாலும் மனத்தில் அபிலாஷைகளை வளர்த்துக் கொண்டிருப்பார்கள். தங்கள் மீது அனுதாபப்படுகிறவர்களுடைய உறவை நாடுவார்கள். தங்களைப் பாராட்டுகிறவர்கள் யாரோ அவர்களை வரவேற்பார்கள்.

## எண்: 7 புதிய அனுபவங்கள்

ஏற்றம், இறக்கங்களைச் சந்திக்க வைக்கும் எண்ணாகும் இது. இவர்களுக்கு அமைகிற நண்பர்களைப் பொறுத்து இவருக்கு வெற்றி அமையும். விசேடத்தன்மைகளைப் பற்றிக் கீழே பார்ப்போம்.

1. அசாதாரணமான நடைமுறைக்கு அப்பாற்பட்ட அனுபவங்களை விரும்புவார்கள்.

2. உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி ஆகிய இரண்டிலுமே பணமீட்டுதலைவிட அதிகமாகக் கவனம் செலுத்துவார்கள்.

3. புரியாத மாயா தந்திரங்களைப் புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் இவர்களுக்கு இருக்கும். அதையும் மேலெழுந்த வாரியாகப் பாராமல் உட்புகுந்து ஆராயக்கூடிய ஆற்றல் மிக்கவர்கள் இவர்கள்.

4. தியானத்தில் ஈடுபடுவார்கள் சிந்திப்பவர்களாக இருப்பார்கள். வேதாந்தம் இவர்களுக்கு வரும். மதாபிமானம் நிறைந்திருக்கும்.

5. கற்பனை உலகத்திலும், கனவுலகத்திலும் தங்கள் எண்ணங்களை ஓடவிட்டு இன்னது நடக்கும் என்ற குறிக்கோளுடன் அந்த அதிசய வானத்தில் தங்கள் உள்ளத்தைப் பறக்க விடுவார்கள்.

6. "இன்ட்யூஷன்" எனப்படுகிற ஆற்றலை இவர்கள் நம்புவார்கள். இவர்களுடைய அந்த "இன்ட்யூஷன்" தவறாகி விடுவதில்லை. இவர்களுடைய மனஉறுதியை யாராலும் கலைத்துவிட முடியாது.

7. நேரான மனப்பான்மையும், பழக்கவழக்கங்களும் உடையவர்கள் இவர்கள். இன்று நடைபெற முடியாமற் போனாலும், எதிர்காலத்தில் நடக்கும் என்ற நம்பிக்கையுடன் நீண்டநாளைய திட்டங்களைத் தீட்டக்கூடியவர்கள் இவர்கள்.

## எண் 8: கடுமையான உழைப்பு

சேவகம் செய்யக்கூடியவர்களை உருவாக்குகிற எண்ணாகும் இது. காலத்தைக் கணிக்க வைக்கும் சக்தியையும் இந்த எண் தரும் சுயநலமற்ற தியாக மனப்பான்மையை உண்டுபண்ணும். மற்ற விசேட அம்சங்களைக் கீழே தருகிறேன்.

1. சுதந்திரத்திற்காக ஆசைப்படுகிற இவர்கள் அதை அடையமுடியாத சூழ்நிலை காரணமாக அடிமைகளாக இருப்பார்கள்.

2. ஒன்றை ஆளும்போது நன்கு பணியாற்றுவார்கள். ஒரு பணியில் ஈடுபடும்போது அதை நன்றாக ஆளுவார்கள்.

3. உன்னதமான உயர்பதவியை எட்டிப்பிடிப்பவர்களாக இருப்பார்கள். ஆனால், அனுபவிப்பதற்குத் தகுதியற்றுப் போவார்கள்.

4. கடுமையாக உழைக்கக்கூடியவர்கள் இவர்கள் தன்னை அடக்கி ஆள்வார்கள்.

5. வாய்மை நிறைந்தவர்களாய் விளங்கக்கூடிய இவர்கள், தங்கள் குறிக்கோளின்படி நடப்பார்கள். மற்றையோர் சொல்வதைக் கவனிப்பார்களே தவிர, தாங்கள் நினைப்பது தான் சரி என்று முடிவெடுப்பார்கள்.

6. எதிலும் நிதானமாகவும், பரபரப்பு இல்லாமலும், முயற்சிகளை ஆற்றி, பயனடைய விரும்புவார்களே தவிர, வேகமான போக்கில் துரித கதியில் காரியங்களை நிறைவேற்றுகிற குறிக்கோளை மேற்கொள்ள மாட்டார்கள்.

7. இவர்கள் பெரும்பாலும் அதிட்டக் கட்டையாக இருப்பார்கள். தங்களுடைய கடும் உழைப்பால் பெரும் பொருள்களை அடைவார்கள்.

8. மனித குலத்திற்குச் செய்ய வேண்டிய தியாகப் பணிகளைச் செய்கிறவர்கள் ஆவார்கள்.

**எண் 9: எதையும் தாங்கும் இதயம்**

இது ஒரு விசேடமான எண்ணாகும். முரண்பாட்டுக்கும் இந்த எண்ணுக்கும் பொருத்தம் மிக அதிகம். சில விசேடத் தன்மைகளைக் கீழே தருகிறேன்.

1. வாதப்பிரதிவாதங்களில் ஈடுபடக்கூடிய இந்த எண்ணைச் சேர்ந்தவர்கள் இறுதி வெற்றி அடையப் பெறுவார்கள்.

2. பல இடர்ப்பாடுகளை இவர்கள் சந்திக்கக்கூடும். ஆனால், அவற்றிலிருந்து வெளிவந்துவிடுவார்கள்.

3. கொள்கைகளை எந்த நிலையிலும் கைவிட மாட்டார்கள். பொருளாதார வெற்றி இவர்களுக்கு உண்டு

4. சீக்கிரமாக வருமானம் வரக்கூடிய துறையைக் கண்டுபிடிப்பார்கள்.

5. அதிக அளவு உற்சாகமாக இருப்பார்கள். ஆனால், பயனை அடைவதற்கு முன் பொறுமையை இழப்பார்கள்.

6. எதிலும் விழிப்பாக இருப்பதுடன் சுறுசுறுப்பாகவும் இருப்பார்கள்.

7. யாருக்கும் கீழ்ப்படிய மாட்டார்கள். அதிகாரம் செய்யப் பிறந்தவர்கள்.

8. ஆக்க வேலைகளில் இவர்கள் உற்சாகமாகவும், துணிவாளர்களாகவும் இருப்பார்கள். ஆனால் அழிவுச் சக்தியில் ஈடுபடும்போது இவர்கள் சர்வாதிகாரி ஆகிவிடுவார்கள்.

9. அபிலாஷைகளுக்கும் குறிக்கோள்களுக்கும் இவர்கள் பெயர் பெற்றவர்கள் ஆவார்கள். எது நடந்தாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வல்லமை உள்ளவர்கள் .

**சான்றோர் சொல்லமுதம்**

தண்ணீர் உலகத்தில் எல்லோருக்கும் பயன்படுவது. இது இனிமையாகவே இருக்கும் இடம், தேங்காய்க்குள்ளே இருக்கும் இளநீர். ஆக, அதுவே உலகஆசைகளின் அடையாளமாக விளங்குகிறது. மேலே உள்ள கெட்டியான ஓட்டை நம்பி அது உள்ளே இருக்கிறது. அது உடையாது என்றும் இளநீர் நம்பி இருக்கிறது. ஆனால் காலத்தே உடைக்காமற் போனால் இளநீர் பயனற்றுப் போய்விடும். அதேபோல நம்முடைய உடம்பு உறுதியானது என்று எண்ணி ஆசைகளை வளர்க்கிறோம். ஆனால் வயதுக்கேற்ற மனப்பக்குவத்தை அடைந்து, உடம்பு சாகவதமானது அல்ல என்று புரிந்து கொள்ளாவிட்டால் இந்த ஆசைகளே நம்மைக் கெடுத்துவிடும்.

தேங்காய் முற்ற முற்ற இளநீர் வற்றித் தேங்காயின் பக்குவத்துடன் கலந்து கொள்ளுகிறது. நீர் வற்றியதால் தேங்காய் கெடுவதில்லை, மேலும் நல்ல முதிர்ச்சியை அடைகிறது. அதே போல அனுபவஞானம்முதிர உலகஆசைகள் குறைந்துவிடும். அவற்றின்மீது உள்ள பற்றை விட்டுவிட்டு , விலகி வாழ மனிதன் கற்றுக் கொள்கிறான். முற்றிய தேங்காயையே நாம் கடவுளுக்கு நைவேத்தியமாகப் படைக்கிறோம். அதேபோலப் பக்குவமிருந்து முதிர்ச்சி அடைந்த உள்ளத்தையே ஆண்டவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். முற்றி உடைந்த தேங்காய் அதன்பின் சமையலுக்குப் பயன்படுகிறது. பக்குவம் முதிர்ந்து வாழ்ந்து முடிந்த மனிதனின் நல்லசேவை நாட்டுக்கும் பயன் தருகிறது. - **பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாவா**

**விநாயகர் வணக்கம்**

''ஏர்ஆனைக் காவில்உறை என்ஆனைக் கன்றளித்த
பேரர் ஆனைக் கன்றுதனைப் போற்றினால் - வாராத
புத்திவரும், பக்திவரும், புத்திஉற் பத்திவரும்,
சக்தி வரம், சித்திவருந்தான்'' - **ஔவையார்**

கருத்துரை:- அழகுடைய திருவானைக்காவில் எம் தாயாகிய பெண்யானை வடிவுடைய உமையம்மையாருக்கு மகனாக உதித்த விநாயகப்பெருமானை வணங்கினால் அறிவு உண்டாகும், அன்ப உண்டாகும், நன் மக்கட்பேறு உண்டாகும், எண்ணிய செயல்களை முடிக்கும் ஆற்றல் உண்டாகும், எடுக்குஞ் செயல்களில் வெற்றி உண்டாகும்.

வாக்கையும் மனத்தையும் ஒன்றுபடுத்துவது யோகம். பேசியதையே மனதில் கொள்ளவேண்டும். மனதில் கொண்டிருப்பதையே பேசவேண்டும். உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுபவன் அருளுக்குப் புறம்பு ஆகிறான். அன்னவன் தன் சொரூபத்தைச் சிதைக்கிறான். - **பீஷ்மன்**

வாழ்வில் ஒவ்வொரு கணப்பொழுதையும் கிடைப்பதற்கு அரிய வாய்ப்பு என அறிஞன் அறிகிறான். அஞ்ஞானி பிறப்பை நேசிக்கிறான். ஞானியோ அதைப் பகையென ஒதுக்குகிறான் - அபி

NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு

## நிரு வெற்று உறை லேபல்களைச் சேகரித்து பெறுமதிமிக்க பரிசுகளைப் பெறுங்கள்

கீழ்க்காணும் பட்டியலில் தொகுதி **A** யில் உள்ள நிரு பிராண்ட் தயாரிப்புக்களின் வெற்று உறைகள் / லேபல்கள் ஒவ்வொன்றிற்கும் தலா 20 புள்ளிகளும், தொகுதி **B**யில் உள்ளவற்றிற்கு தலா 15 புள்ளிகளும், தொகுதி **C** யில் உள்ளவற்றிற்கு தலா 10 புள்ளிகள் வீதமும் கணக்கிடப்பட்டு ஒவ்வொரு 100 புள்ளிகளுக்கும் ஒரு பெறுமதிமிக்க எவர் சில்வர்தட்டு இலவசமாக வழங்கப்படும். நீங்கள் இதுவரை சேகரித்த வெற்று உறைகள் லேபல்களுடன் இத்துடன் காணப்படும் படிவத்தை நிரப்பி வரும் புள்ளிகளின் மொத்த எண்ணிக்கையைக் கொண்டு எத்தனை எவர் சில்வர் தட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாமென்பதை அறிந்து கொள்ளுங்கள்.

### தொகுதி A (20 புள்ளிகள்)

| | |
|---|---|
| அமெரிக்கன் பார்பொயில் அரிசி ---- | 20Lb |
| கைக்குத்தரிசி --------------- | 5Kg |
| பஸ்மதி அரிசி --------------- | 10Lb |
| பசு நெய் ---------- | 227gr/454gr |
| வறுத்த சிவப்பு அரிசி மா ----------- | 5Kg |
| நல்லெண்ணெய் -- | 750ml/1Lit |
| வறுத்த மிளகாய்த்தூள் | 900gr |
| உறைபபுக் கூடிய வ.மி. தூ | 900gr |

### தொகுதி B (15 புள்ளிகள்)

| | |
|---|---|
| கோப்பித்தூள் ------------------- | 175gr |
| நெத்தலி தலையற்றது ----- | 200gr |
| அச்சாறு --------------------- | 400gr |
| மீன் கறித்தூள்------------- | 400gr |
| பத்தியத்தூள் -------------------- | 400gr |
| சரக்குத்தூள் ---------------- | 400gr |
| இட்டலிப்பொடி ------------- | 400gr |
| குரக்கன் மா------------- | 1Kg |
| தனி மிளகாய்த்தூள் -------- | 900gr |
| மல்லித்தூள் ---------------- | 400gr |
| இரசத்தூள்------------- | 200gr |
| வறுத்த மிளகாய்த்தூள் ---- | 450gr |
| வறுத்த மிளகாய்த்தூள் Cont ------- | 450gr |
| வறுத்த உழுத்தம் மா----- | 900gr |
| வறுத்த பயற்றம் மா----- | 900gr |
| உறைப்புக் கூடிய வ.மி.தூ- | 450gr |

### தொகுதி C (20 புள்ளிகள்)

| | |
|---|---|
| சவ்வரிசி ----------------------- | 450gr |
| வறுத்த உழுத்தம்மா ------- | 450gr |
| ஆட்டாமா --------- | 5Lb/10Lb |
| அரிசி வெள்ளை---------- | 2Kg/10Lb |
| ஓமம் ஓமத்தூள் ------------ | 200gr |
| பார்லி அரிசி------------------ | 200gr |
| மிளகு மிளகு தூள் --------------- | 200gr |
| மல்லித்தூள் ---------------- | --450gr |
| மோர்மிளகாய் -------------- | --500gr |
| மல்லி------------------ | 200gr/450gr |
| கறிவாசனைக் கூட்டு-------- | 100gr |
| உடைத்த மிளகாய் --------- | 200gr |
| சி.சீரகம் சி. சீரகத்தூள்----- | 200gr |
| வெந்தயம்--------------- | 200gr/ 400gr |
| பெ.சீரகம் பெ.சீரகத்தூள் --- | 200gr |
| கரம்மசாலா------------------ | 100gr |
| உள்ளித்தூள்-------------- | 100gr |
| வறுத்த பயறு----------------- | 450gr |
| வறுத்த சிவப்பரிசிமா---- | 1Kg/2Kg |
| வறுத்த வெள்ளை அரிசிமா--- | 1Kg |
| வறுக்காத வெ. அரிசிமா------- | 900g/ 1.8Kg |
| எள்ளு கறுப்பு / வெள்ளை--- | 200gr |
| சேமியா-------------------- | 200gr |
| நிரு சோயா----------------- | 250gr |
| கோப்பிக்கொட்டை---------- | 250gr |
| கொர்ஸ் கொஸ்------------- | 450gr |
| செத்தல் மிளகாய்------------ | 100gr |
| கற்கண்டு------------------- | 200gr |
| பழப்புளி-------------------- | 227gr |
| மஞ்சள் ----------------------- | 100gr |
| மஞ்சள் தூள் --------------- | 200gr |
| கடலை மா ----------------- | 900gr |
| வேர்க்கொம்பு /வே. தூள்---- | 100gr |
| பலாப்பழம்(ரின்) ------------ | 500gr |
| சர்க்கரை ------------------- | 400gr |
| மாசி துகள்கள் ------------- | 185gr |
| வேப்பம்பூ வடகம்----------- | 75gr |
| மதராஸ் கறிப்பவுடர் -------- | 200gr |
| பப்ரிக்கா தூள் ------------- | 200gr |
| அவல் சிவப்பு ∴ வெள்ளை | 400gr |
| பாவக்காய் வற்றல் ---------- | 100gr |
| குத்தரிசி--------------------- | 1Kg |
| மிளகாய்த்தூள் (வறுக்காதது) | 200gr/450gr |
| மல்லி இலை ஊறுகாய்--- | 400gr |
| உள்ளி ஊறுகாய் --------------- | 400gr |
| எலுமிச்சை ஊறுகாய் ------ | 400gr |
| மாங்காய் ஊறுகாய் ------------- | 400gr |
| நெல்லி ஊறுகாய் ----------- | 400gr |
| பப்படம் 3"X5" -------------- | 175gr |
| கசகசா --------------------- | 100gr |
| பொட்டுக் கடலை ----------- | 400gr |
| தீட்டிய சிவப்பரிசி ----------- | 1Kg |
| சம்பா அரிசி / சீரகச்சம்பா----- | 1Kg/ 5kg |
| சுண்டங்காய் வற்றல் ------- | 100gr |
| சாம்பார் பொடி ------------- | 200gr |
| கடுகு ----------------------- | 200gr |
| அரிசிக்குறுணல்------------ | 900gr |
| கடலைப்பருப்பு--- | 900gr/1.8kg/5kg |
| உழுத்தம்பருப்பு--- | 900gr/1.8kg/5kg |
| மைசூர்பருப்பு------ | 900gr/1.8kg/5kg |
| துவரம் பருப்பு----- | 900gr/1.8kg/5kg |
| கொண்டல் கடலை--- | 900gr/1.8kg/5kg |

பெயர்......................................

விலாசம்...................................

..............................................

..............................................

..............................................

தொலைபேசி இல.........................

நிரு பிராண்ட் பொருட்களை வாங்கும் வியாபார ஸ்தாபனம்

..............................................

ஒவ்வொரு 100 புள்ளிகளுக்கும் தலா ஒரு எவர்சில்வர் சாப்பாட்டுத் தட்டு வழங்கப்படும்

| | | |
|---|---|---|
| தொகுதி - A | X 20 | |
| தொகுதி - B | X 15 | |
| தொகுதி - C | X 10 | |
| | மொத்தப்புள்ளிகள் | |

அனுப்பவேண்டிய முகவரி

**76 HOWDEN ROAD, SCARBOROUGH**
**ONTARIO, M1R 3E4 CANADA**

NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு

# நீத்தார் கடன் செய்தல்

கயிலைமாமுனிவர்
தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
பேரூராதீனம்

உயிர் உடலை விட்டுப் பிரியத் துடிக்கும்போது பொறிபுலன்கள் கலங்குகின்றன. எனவே, அப்பொழுது இறைவனை நினைத்தல் அரிது. ஆகையால் அவருக்கு நெருங்கியவர்கள் அருகில் அமர்ந்து திருவாசகத்தை வாய்விட்டு ஓதுவது சிறந்த செயலாகும். அதனால் அவ்வுயிர் சிவசிந்தனையோடு உடலை விட்டுப் பிரிந்து நற்கதி அடையும்.

இறந்தவர்களைப் புதைப்பதும் உண்டு. எரித்து விடுவதும் உண்டு. சங்ககாலத்திலேயே இவ்விரு முறைகளும் இருந்துள்ளன.

உடல் கிடத்தப்பட்டுள்ள இடத்திற்கு ஈசான திசையில் (வடக்கு) மெழுகி முறைப்படி வாழையிலை இட்டு பச்சரிசியைப் பரப்பி அதில் திருவைந்தெழுத்தை எழுதி இரண்டு நிறைகலசங்களை வைக்கவும். அதில் சிறுமண் செப்பில் ஆனைந்தையும் வைக்கவும், முதலில் மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து நீத்தார் கடன் செய்பவரை முன்னிறுத்திக் கொண்டு வழிபாடு செய்ய வேண்டும். அப்பொழுது,

**ஐந்து கரத்தனை யானை முகத்தனை**
**இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை**
**நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்**
**புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே**

என்னும் திருமந்திரப் பாடலை ஓதவும்.
பிறகு நிறைகலசங்களில் சிவசக்தியை எழுந்தருளச் செய்ய வேண்டும். அதற்கு இரண்டு கைகளிலும் மலர்களை எடுத்துக் கொண்டு

**புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி**
**அறிவு அழிந்திட்டு ஐமேல்உந்தி**
**அலமந்த போதாக அஞ்சேலென்றருள்**
**செய்வான் அமரும் கோயில்**
**வலம் வந்த மடவார்கள் நடமாட**
**முழவதிர மழையென் றஞ்சிச்**
**சிலமந்தி அலமந்து மரமேறி**
**முகில்பார்க்கும் திருவையாறே**

என்னும் ஞானசம்பந்தர் தேவாரத்தை ஓதி நிறைகுடங்களின் மேல் தூவவும். பிறகு திருக்குடங்களுக்கு முறைப்படி நறும்புகை, விளக்கொளி முதலியவற்றைக் காட்டி அமுதூட்டிக் கருப்பூர ஒளிகாட்டி மலர்தூவவும்.

**போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்**
**போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை**
**போற்றியோ நமச்சிவாய புறம் எனைப் போக்கல் கண்டாய்**
**போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி.**

என்னும் திருவாசகப் பாடலை ஓதி நிறைகுடங்களின் மேல் மலரிடவும்.

**ஐயினால் மிடறடைப்புண்டு ஆக்கைவிட்டு**
**ஆவியார் போவதுமே அகத்தார் கூடி**
**மையினாற் கண்ணெழுதி மாலைசூட்டி**
**மயானத்தி லிடுவதன் முன் மதியம் சூடும்**
**ஐயனார்க்காளாகி அன்புமிக்கு**
**அகங்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதம்**
**கையினால் தொழுமடியார் நெஞ்சினுள்ளே**
**கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.**

அப்பர் தேவாரம்

**தந்தையார் தாயாருடன் பிறந்தார்**
**தாரமார் புத்திரரார் தாந்தாமாரே**
**வந்தவாறெங்கனே போமாறேதோ**
**மாயமாமிதற்கேதும் மகிழ வேண்டா**
**சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்**
**திகழ்மதியும் வாளரவும் திளைக்கும் சென்னி**
**எந்தையார் திருநாமம் நமச்சிவாய**
**என்றெழுவார்க்கு இருவிசும்பில் இருக்கலாமே**

அப்பர் தேவாரம்

**வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்**
**பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறிதான்**
**தாழாதறஞ் செய்மின் தடங்கண்ணான் மலரோனும்**
**கீழ்மேலுற நின்றான் திருக்கேதாரமெனீரே**

சுந்தரர் தேவாரம்

முதலிய பாடல்களை ஓதவும்.

### திருப்பொற் சுண்ணம் இடித்தல்

அடுத்து ஒரு சிறு கிண்ணத்தில் திருமஞ்சனப் பொடியை இட்டு அதற்கு மலர்ச்சரம் சுற்றவும். ஒரு மாவிலைக் கொத்திற்கும் அதேபோல் மலர் சுற்றி அதை உலக்கையாகப் பாவித்துத் திருவாசகத்தில் உள்ள திருப்பொற்சுண்ணப் பாடல்களை ஓதியபடி இடிக்கவும். முப்புரி நூலை வழிபாடு செய்து நிறை கலசங்களில் சுற்றிக் கட்டவும். அதன் மற்றொரு முனையை இறந்தவரின் வலது காதில் சுற்றவும். அதன் வழியாகச் சிவசக்தியை இறந்தவரின் உள்ளத்தில் எழுந்தருளும்படி

வேண்டவும். அப்பொழுது திருவைந்தெழுத்தை ஓதியபடி தருப்பை அல்லது மாவிலைக்கொத்தினால் நிறைகுடங்களிலிருந்து இறந்தவர் காதுவரை ஐந்துமுறை நூலைத் தடவிக் கொண்டுவர வேண்டும். இறைவன் இறந்தவருள்ளத்தில் எழுந்தருளியதாகப் பாவித்து உடலைக் குளிப்பாட்டத் தொடங்கவும். அப்பொழுது "தந்தையார் தாயார்" என்று தொடங்கும் அப்பர் தேவாரத்தைப் பாடவும்.

முதலில் தூய நீராலும் அடுத்து ஆனைந்தாலும் முழுக்காட்டவும். பிறகு திருப்பொற்சுண்ணத்தை நிறைகுடநீரில் கலந்து நீராட்டி உடலை வேறிடத்தில் கிடத்திப் புத்தாடை அணிவிக்கவும். திருநீறு, சந்தனம், குங்குமம், முதலியவற்றைஇடவும். மாலை அணிவித்து நறும்புகை விளக்கொளி முதலியவற்றைக்காட்டி அமுதூட்டிக் கருப்பூரவொளி காட்டி மலர் தூவவும். இவற்றைச் செய்யும்போது சிவபுராணம் ஓதவேண்டும்.

### சமாதி செய்தல்

ஆழமாகக் குழிதோண்டி உடலைத் துணிப்பையில் வைத்து உப்பு, திருநீறு, வில்வம், கற்பூரம் முதலியவற்றை மாறிமாறிப் போடவும். அதன்மீது முறைப்படி உடலை வைத்து அதன்மீது மேற்கண்ட பொருள்களை இடவும். பிறகு உரியவரைக் கொண்டு மண்ணை முன்று முறை தள்ளச் செய்யவும். சமாதியை மூடிவிட்டுக் கருப்பூரம் ஏற்றி வழிபடவும். பிறகு நீரில் மூழ்கி விட்டு வீடு திரும்ப வேண்டும்.

### ஒளிவழிபாடு

உடலைச் சமாதி வைத்தால் பத்தாம் நாளும், எரித்தால் பதினாறாவது நாளும் ஒளி வழிபாடு செய்வது முறை யாகும். அன்று வீடு முதலியவற்றைத் தூய்மையாக்கி மாவிலைத் தோரணம் கட்டவும். ஆனைந்தை வீடுமுழுவதும் தெளித்துத் தூய்மையாக்கவும்.

இறந்தவருக்கு நீத்தார் கடன் செய்பவரை அவர்தம் மனைவியுடன் தெற்கு நோக்கி மனைகளில் அமரச்செய்து, அவர்களைக் கொண்டு சடங்குகளைச் செய்விக்க வேண்டும். முதலில் மஞ்சளில் பிள்ளையார் பிடித்துவைத்து முன்பு சொன்ன முறைப்படி வழிபாடு செய்யவும்.

முறைப்படி இரு நிறை கலசங்களை வைத்து அதில் முன்பு சொன்ன முறைப்படி சிவசக்தியை எழுந்தருளச் செய்யவும். அதற்கு நறும்புகை விளக் கொளி காட்டி அமுதூட்டிக் கருப்பூரவொளி காட்டவும். அப்பொழுது நமச்சிவாய என்னும் பாடலை ஓதி மலர் தூவவும். நிறை குடங்களைச் சுற்றிலும் பதினாறு அகல் விளக்குகளை ஏற்றி வைக்கவும். பத்தாவது நாளில் ஒளிவழிபாடு செய்தால் பத்து விளக்குகளை ஏற்றி வைக்கவும்.

நிறை கலசங்களுக்கு முன்னால் மணல் பரப்பிக் குண்டம் அமைத்து முறைப்படி எரிவளர்க்கவும். சிவபுராணம் கோளறு பதிகம் சொல்லி எரியோம்பி முறைப்படி வேள்வியை நிறைவு செய்யவும். பிறகு உரியவரிடம் கருப்பூரம் ஏற்றிய தட்டைக் கொடுத்து

**முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்**
**சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட**
**அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.**

என்னும் திருவாசகப் பாடலை ஓதியபடி மூன்றுமுறை சுற்றிவரச் செய்யவும்.

"பண்ணின் நேர் மொழியாள் பங்க நீ அல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே யாண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறை உறைசிவனே
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின் மேல்அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே

"கடையவனேனைக் கருணையினால்
கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தரகோச
மங்கைக்கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான்
என்னைத் தாங்கிக் கொள்ளே"

முதலிய பாடல்களை ஒதவும். பிறகு எல்லாவற்றுக்கும் கருப்பூர ஒளிகாட்டி மலர் தூவவும். நிறை கலசங்களில் உள்ள புனித நீரை எல்லா இடங்களிலும் எல்லோர் மீதும் தெளித்துத் திருநீறு வழங்கவும். இயன்றவரை எளியவர்களுக்கு அறம் செய்யவும்.

ஓராண்டு முடிவிலும் இதே முறைப்படி ஒளிவழிபாடு செய்யவும். அப்பொழுது பன்னிரண்டு அகல் விளக்குகளை ஏற்ற வேண்டும் ஒளிவழிபாடு முதலியவற்றைத் தந்தைக்கு இளைய மகனும் தாய்க்கு மூத்த மகனும் செய்வது முறையாம். அன்று இயன்ற அளவு எளிய மக்களுக்கு உணவு உடைமுதலிய வற்றை வழங்கவேண்டும்.

நாமே ஆண்டு தோறும் முன்னோர்களுக்கு வழிபாடு (திதி) செய்யலாம். அன்று முதலில் பிள்ளையார் வழிபாடுசெய்ய வேண்டும். விளக்கேற்றி வைத்து மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை ஆளாமே அருள் அரசே போற்றி" என்று மூன்று அல்லது ஐந்து முறை சொல்லி மலரிட்டு வணங்கவும். அன்று எளியவர்களுக்கு உணவோ அல்லது பொருளோ வழங்கிப் பிறவிப்பயன் தேடலாம்.

வாழிய வையகம்! - வாழிய நீதி!

# NEW BANANA LEAF CATERING

## TAKE - OUT SERVICE

We specialize Indian, Sri Lankan, and Chinese Foods

**Vegetarian & Non Vegetarian**



**Weddings**
**Birthdays**
**Family Parties and**
**Special Events**

திருமணம் - பிறந்ததினம் மற்றும் சகல வைபவங்களுக்கும் வேண்டிய தரமான, சுவையான உணவு வகைகளுக்கு எம்மை நாடுங்கள



**Office: (416) 609 9247**
**Pager: (416) 600 1030**
**24 Hrs: (416) 704 8208**

**431 Nugget Ave. Unit 10**
**Scarborough, Ontario M1S 4J5**
**(Markham & Nugget)**

# பிள்ளைத் தமிழில் முருகன்

முருகவே பரமநாதன்

"கையா லிழைத்த சிற்றிலேநின்
காலா வழிக்கை கடனலகாண்
காப்பா னழிக்கத் தொடங்கின் எங்கள்
கவலை யெவரோ டினியுரைப்போம்
ஐயா! உனது வழியடிமை
அடியேம் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறியும் திருச் செந்தூ
ரரசே சிற்றில் அழியேலே

திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்

சிற்றில் - சின்னவீடு, மணல்வீடு

அழகு கொழிக்கும் இயற்கையை வியந்த சங்கப்புலவர் "கைபுனைந் தியற்றாக் கவின் பெறு வனப்பு" என்றோர் சொல்லோவியத்தையே தீட்டினார். இயற்கை என்ன செயற்கையும் ஒயிலாகத்தானே அமைந்துளது. இயற்கையினின்றும் மயிரிடை கூடப்பிசகாமல் செய்யப்படும் பொருள்களைத் தொட்டுப் பார்த்து வியந்து நிற்கிறோம். கல்லிற் கலைவண்ணங் கண்டும், சொல்லில் கவிவண்ணங்கண்டும் தூரிகை கொண்டு அள்ளித் தெளிக்கும். ஓவியம் கண்டும் பிரமிக்கிறோம். இப்படி ஆயிரமாயிரம் செயற்பாடுகள் எம்முன்னே சிற்பங்களும், சிங்காரக் கோயில்களும் சிற்பியின் கைவண்ணம் அல்லவா?. அழகான குழந்தையைக் கண்டு அள்ளியெடுத்து முத்தம் இடுகிறோமே. இங்கேதான் எழுந்தது பிள்ளைத்தமிழ் இலக்கியம். அழகா அழகு. கொட்டும் அழகு, தேன் சொட்டும் அழகு அங்கே. எம்மைக் கிள்ளுகிறது. அதனால் நெஞ்சம் துள்ளுகிறது. இதோ ஓர் எழில் கொஞ்சும் பிள்ளைத்தமிழ்.

"கமலமட மங்கைவத னத்தழகு காண்பன் அக்
கரியமுகில் வண்ண வஞ்செங்
கண்ணழகு காண்பன் வளர்கலைவாணி சொல்லழகு
காண்பன்˙ முக்கண் தாதையும்
விமலமுறு சொற்பொருளின் அழகு காண்பன்˙ விதி
வியன் கரத்தழகு காண்பான்
வீறுதோள் அழகிந்திராணி காண்பாள்˙ உம்பர்
வேந்து வேல்அழகு காண்பான்˙
நிமலமன அடியர் அடிஅழகுகாண்பார்˙ கவரி
நின்று பின்னழகு காண்பாள்˙
நின்னொத்த ஆதித்தன் வடிவழகு காண்பன்˙ ஒரு
நீயுமவருடன் குழுமியே
அமலமென் னகையழகு காணலாம் சமயமீ
தம்புலீ யாட வாவே
அம்புய தடங்குவவு கம்பை வளர்கந்தனுடன்
அம்புலீ பாட வாவே"

கம்பை முருகன் பிள்ளைத் தமிழ்

முருகப் பெருமானை என்றும் இளையாய் அழகியாய் ஏறுூர்ந்தான் ஏறேயெனப்பாடினார் நக்கீரர். அருணகிரியாரோ, "முழுதுமழ கியகுமர கிரிகுமரி யுடனுருகு, முக்கட்சி வன்பெறுஞ் சற்புத்ரவும்பர்தந் தம்பிரானே" என (திருப்புகழ் 1277) ப் பாடிமகிழ்ந்தார். இருவரும் தந்தையோடு தனையனையும் சேர்த்து அறிமுகம் செய்துள்ளனர். இதன் விளைவே இந்த அம்புலிப் பருவப்பாடல். அழியா அழகு என்றான் கம்பநாடன். பத்துக்கம்பன் எனப்பேசப்படும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் பாடிய தமிழழகு சொல்லில் அடங்காது. பட்டா அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியெனப் போற்றுகிறார் அபிராமியை. அழகு சுமந்திழைத்த ஆகத்தள், பழகு கருங்கூந்தற்பாவை என்பது இன்னோர் கவிஞன் பேச்சு. எது என்னவாயினும் தெய்வீக அழகை எப்படி வடிப்பது. கள்ளழகர் வதிவிடம் அழகர்மலை, அழகான சிற்பக் கூடமது. தமிழிலே எழுந்த முதற்பிள்ளைத்தமிழாகக் கருதப்படுகிது. அழகர் பிள்ளைத்தமிழ். பிறவாயாக கைப் பெரியோனான சிவனுக்கு எழவாய்ப்பில்லை, எழுந்தால் எப்படி இருக்கும். துணைவி பார்வதி கணபதி முருகன் என்னும் பிள்ளைகள் எல்லாம் பிள்ளைத் தமிழ்க்குட்பட்டவர்களே. இவர்களின் பிள்ளைத்தமிழெல்லாம் சிவனைப் போற்றாமல் எப்படி வரும். இவர்களோடு கண்ணனுக்கும் ஏகப்பட்ட பிள்ளைத்தமிழ்கள் எழுந்துள்ளன. இதே போல அதிமானிடர்க்கும் இவ்விலக்கியம் பொருந்தும். இன்றோ சினிமாக்காரருக்கும் பிள்ளைத்தமிழ் வந்து, அதன் பெருமையைக் கறைபடுத்துகிறது.

இப்பிள்ளைத்தமிழ் இலக்கண மொழியிலே, பிள்ளைப்பாட்டு, பிள்ளைக்கவி எனப் பேசப்பட்டுளது. இம்மரபு பற்றிய செய்திகளை வெண்பாப் பாட்டியல், பன்னிருபாட்டியல் என்னும் பழைய நூல்களிற் காணலாம். பாடப்போகும் பாட்டுடைத்தலைவனை பெண், ஆண் என வகுத்துள்ளனர். எனவே மகளிர் பற்றி வருவன பெண்பாற்பிள்ளைத்தமிழ் ஆண்களோடு தொடர்புடையன. ஆண்பாற்பிள்ளைத்தமிழென அழைக்கப்படும். இவை பத்துப் பருவங்களாக வகுக்கப்பட்டுள்ளன. 3,5,7,9,11,13,15,17,19,21 திங்களையோ, வருடங்களையோ

அமைத்து யாக்கப்படும் இவ்விலக்கியம் ஆண்கள்பற்றி அமையும் 10 பருவங்கள்.

1. காப்புப் பருவம் 2. செங்கீரைப்பருவம் 3. தாலாட்டுப் பருவம் (தாலப்பருவம்) 4. சப்பாணிப்பருவம் 5. முத்தப்பருவம் 6. வாரானைப் பருவம் (வருகைப்பருவம்) 7. அம்புலிப்பருவம் 8. சிற்றில் பருவம் 9. சிறுபறைப்பருவம் 10. சிறுதேர்ப்பருவம் பெண்களுக்கு இதிற் கடைசி மூன்றையும் தள்ளி அம்மானை, கழங்கு ஊசல் மூன்றையும் சேர்த்துக் கொள்ளவும். இறைவனது, திருவடியை "அழகெழு தலாகா அருட்சேவடி என அப்பர் திருவீரட்டானரின் திருவடித்திறனைப் பாடுகிறார். இறைவனின்றும் வேறாகாத முருகனைப் பாடும் பிள்ளைத் தமிழிலும் அழகு குவிந்து கிடக்கிறது. முருகன் அழகானவன். அவன் பதுமப் பாயலிற் கிடந்த அழகே அழகு. தமிழ் அழகானது. எனவே வேறெம்மொழியிலும் இல்லாத பிள்ளைப் பாடல்கள் தமிழுக்கே சிறப்பாயமைந்த பாணி எனலாம். இலக்கிய வரலாற்றாய்வாளர். தமிழில் வெளியான பிள்ளைத் தமிழ்க்கனியெல்லாம் முருகன் பற்றியனவே கூடியவிழுக்காடு உள்ளன என எழுதியுள்ளனர்.

பக்தி இலக்கிய வரிசையிலே தமிழ் என்ற பெயரைத் தாங்கிய பிரபல்யமான பிரபந்தம் பிள்ளைத்தமிழ்தான். நற்றாயும், வளர்ப்புத்தாயும், குழந்தையோடு மழலை பேசிக் கதைகேட்பது மரபு. இந்நெறியிலே பிள்ளையின் பிரேமநிலை தமிழ் செய்யப்பட்டுள்ளது. பெரியாழ்வார் பலநிலையிலே கண்டு கவிபண்ணியுள்ளார். திருத்தாலாட்டு, அம்புலிப்பருவம், செங்கீரைப்பருவம், சப்பாணிப்பருவம், அச்சோப்பருவம், புறம்புல்கல், பூச்சி காட்டி விளையாடுதல், கண்ணனை முலையுண்ண அழைத்தல் காதுகுத்தல், நீராட்பம், கண்ணனின் குழலை வாரக்காக்கையை அழைத்தல், பூச்சூட்ட அழைத்தல், காப்பிடல் என்னும் தலைப்புகள் பிள்ளைத்தமிழ் அமைப்பின் தொடக்கம் எனலாம். தாகுத்தன் தாலாட்டு, தேவகியாய் நின்று குலசேகராழ்வாரின் அருளிச் செயல்களிலும் பிள்ளைத்தமிழ்ப் பாவம் பளிச்சிடுகிறது. பெரும்பாலும் முருகன் பிள்ளைத்தமிழ்ப் பனுவல்கள் எல்லாமே முருக தலங்களையே நடுவணாகக் கொண்டு எழுந்தவை. முத்துக் குமார சுவாமிப் பிள்ளைத்தமிழ் வைத்தீஸ்வரன் முத்துக்குமாரசுவாமியின் அருளால் எழுந்தது. ஆறுபடைவீடுகளும், அவை போன்ற பிரபல்யமான முருகத் தலங்கள் மீதும் பாடப்பட்டனவாகவே அவற்றின் அமைப்பு மிளிர்கிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர் திருச் க்ஷேத்திரக் கோவை பாடியுள்ளது. அதேபோன்று க்ஷேத்திரக் கோவைப்பிள்ளைத்தமிழ் பல க்ஷேத்திரங்களில் எழுந்தருளி அருள்சுரக்கும் முருகுமூர்த்திகளைத் தொகுத்துப் பாடியுள்ளது. சிலபிரபல்யமான சுப்பிரமணியர் ஆலயங்களுக்குப் பலர் பிள்ளைத்தமிழ் செய்துள்ளனர். இப்படிப் பாடி முருகனருளால் வேண்டியவற்றைப் பெற்ற வரலாறுகளும் உண்டு. பல்லவ பக்தி இலக்கிய மறுமலர்ச்சியின் போதோ பின்னரோ இவ்விலக்கியம் காலத்துக்குக் காலம்எழுந்திருக்கிறது. இப்போதும் பாடிக்கொண்டே இருக்கிறார்கள். ஈழத்திருமணிநாட்டில் கலாநிதி பண்டிதர் மு. கந்தையா அவர்களும் பிள்ளைக்கவி வ. சிவராஜசிங்கம் அவர்களும் நல்லைதிருஞானசம்பந்தர் ஆதினமுதல்வர்மீது, ஒருபிள்ளைத்தமிழ் செய்துள்ளனர். அண்மையில் ஈழமணித்திருநாட்டிலும், தமிழகத்திலும் எழுந்த முருகன் பிள்ளைத்தமிழப் பிரபந்தங்கள் சிலவருமாறு:

1. திருமலைமுருகன் பிள்ளைத்தமிழ்
   கவராஜபண்டாரத்தையா
2. கழுகுமலைப்பிள்ளைத்தமிழ்
   -
3. க்ஷேத்திரக்கோவைப்பிள்ளைத்தமிழ்
   காஞ்சி சிதம்பரமுனிவர்
4. திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்
   மார்க்க சகாயதேவர்
5. மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்
   இலக்கண விளக்கம் வைத்தியநாததேசிகர்
6. தணிகைப் பிள்ளைத்தமிழ்
   கந்தப்பதேசிகர்
7. கம்பைமுருகன் பிள்ளைத்தமிழ்
   -
8. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்
   குமரகுருபரசுவாமிகள்
9. பழநிப்பிள்ளைத்தமிழ்
   விசையைகிரி வேலச் சின்னோ வையன்
10. சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்
    அந்தகக் கவிவீரராகவர்
11. திருப்போரூர் முருகன்பிள்ளைத்தமிழ்
    சிதம்பர சுவாமிகள்
12. திருச் செந்தூர்முருகன்பிள்ளைத்தமிழ்
    பகழிக்கூத்தர்
13. திருவிலஞ்சிமுருகன் பிள்ளைத்தமிழ்
    -
14. நல்லூர் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ்
    சி அப்புக்குட்டியர் நல்லூர்
15. செல்வச்சந்நிதி பிள்ளைத்தமிழ்
    வல்வை ச வைத்திலிங்கம்பிள்ளை
16. கதிரவேலர் பிள்ளைத்தமிழ்
    வட்டுக்கோட்டை சிதம்பரநாதன்
17. திருக்கதிரகாமம்பிள்ளைத்தமிழ்
    சிவம் கருணாலய பாண்டியனார்
18. மாவைப்பிள்ளைத்தமிழ்
    இலக்கிய கலாநிதி மு. கந்தையா ஏழாலை
19. காரைநகர் பயிரிக்கூடல்

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி பிள்ளைத்தமிழ்
அருட்கவி சி. விநாசித்தம்பி
20. கரவை முருகன் பிள்ளைத்தமிழ்
கவிஞர் கலைவாணர்
21 நல்லூர்க் கந்தன் பிள்ளைத்தமிழ்
வ.கோவிந்தபிள்ளை

இவ்வரிய பிரபந்தம் சில இப்போ கிடைக்குமாறில்லை. மறுபதிப்புச்செய்ய சைவசமயநூல் வெளியீட்டு மையம் இல்லாமையே இதற்கான காரணம் எனலாம்.

இனிஇப்பாவியங்களின் செவ்வியைக் காண்போம். குழந்தைமுருகனை அன்னைமலைமகள் வாரியணைத்து முத்தமிடும் அபூர்வமான காட்சியைக் கற்பனையில் சொன்னாலும் அவ்வனுபவத்தை நேரே காண்பதுபோல் இழைக்கப்பட்டிருக்கும் ஒருபாடல் முத்தப்பருவத்தில் வருகின்றது.

"தொழுது புலவர் புகழ்ந்த தண்டைத்
துணைத் தாமரையில் இருமுத்தம்
தூய கணைக்கால் முழந்தாள் செந்
தொடையில் இடையில்எழு முத்தம்
எழுத அரிய தொந்தி யுந்தி
இலங்கு மார்பில் மூன்று முத்தம்
ஏய்ந்த கரங் கந்தரம் புயத்தில்
இருபத்தைந்து திருமுத்தம்
அழுது சிரித்து மழலை சொல்லும்
அருமைத் துகிரில் ஆறுமுத்தம்
அழகு கதுப்பு கண்குடுமி
அனைத்தும் அந்தப்படி யுடலம்
முழுதும் உமையாள் முத்தமிடும்
முத்தே முத்தம் தருகவே
முத்துக் குமரா திருமலையின்
முருகா முத்தம் தருகவே"
திருமலை முருகன்பிள்ளைத்தமிழ்

தண்டை-காலணி, துணை-இரண்டு, தாமரை -தாமரையான திருவடிகள் (உருவகம்) தொந்தி-வயிறு, உந்தி-தொப்பூழ், கந்தரம்-கழுத்து, துகிர்-வாய்

இப்பாடலிலே வரும் முத்தம் எத்தனை என்பது பாடலே கணக்கிட்டுக் கூறுமாற்றால் தெரிந்து கொள்ளலாம். இந்த முத்தாடும் முருகனுக்கு, முத்தையன், முத்துக்குமரன், முத்துச்சுவாமி என்றெல்லாம் திருநாமங்களுண்டு. முத்தாம்பிகையெனப் பேசப்படுகிறாள் அன்னைபராசக்தி. இந்த முத்தமிடும் செவ்வியைத் திருப்புகழிலும் காணலாம்.

"முற்கா லத்தே வெற்பேய் வுற்றார்
முத்தாள் முத்தச் சிறியோனே
முத்தா முத்தீ யத்தா சுத்தா
முத்தா முத்திப் பெருமாளே
திருப்புகழ் 1125

வெற்பு - மலை. இங்கே கயிலை ஒய்வுற்றார் -பொருந்தி வீறிருப்பவர். முத்தார் - முத்துப்போன்ற முத்தாம்பிகை எனப்படும்தேவி. சுத்தர் - பரிசுத்தமூர்த்தியே, சுத்தா-பற்று அற்றவனே. முத்தீ -மூன்றுவிதயாகாக்கினி (திரு ஆமாத்தார் தேவி திருநாமம் - (முத்தாம்பிகை)

பிள்ளைத்தமிழிலே வரலாற்றுச் சம்பவங்கள் தலச்சிறப்பு, வேண்டுதல், சமகாலநிகழ்வுகள் இடம் பெறும். இப்படி நக்கீரரோடு தொடர்பான சம்பவங்களைப் பின்னியும் பாடல் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நக்கீரர் சோமசுந்தரரையும், பாண்டியனையுமன்றிப் பாடேன் என்னும் விரதம் பூண்டவர். இவருக்கு ஒருபடிப்பனை கொடுக்க வேண்டும் என எண்ணினார். நக்கீரர் பரங்கிரிப் பொய்கைக் கரையில் தினமும் தவம் செய்யப்போவார். அத்தருணம் இரு பூதகணத் தலைவர்களை அனுப்பி நக்கீரனிற் குற்றம் கண்டு அவனை மலைக்குகையில் அடையுங்கள் என்றார். அக்கட்டளையை நிறைவுசெய்ய சரவணப் பொய்கை ஓரம்நின்ற அரசின் இலையைக்கிள்ளிக் கீழே போட்டனர். அது பாதி (இலை) நீரிலும் பாதி(இலை) நிலத்திலும் பொருந்தவீழந்தது. நீரில் விழுந்த பகுதி மீனாகவும், நிலததில் விழுந்த பாகம் பறவையாகியும் ஒன்றையொன்று இழுத்தன. இதைக்கண்டு சகியாது தொடுத்திருந்த பகுதியை அறுத்தார். அவை தப்பட்டும் என்று. ஆனால் இறந்து போயின. இதைக்கண்ட பூதகணத்தலைவர் நக்கீரரை மலைக்குகையில் அடைத்தனர். அப்போ தன்சபதத்தை விட்டு முருகனைப் பாடி விடுதலை பெற்றார். அதுவே திருமுருகாற்றுப்படை என்னும் சிறந்த பிரபந்தம். இவ்வரலாறு சொல்லும் பாடல்களை இனிக் காண்போம்.

ஏர்கொண்ட பொய்கைதனில் நிற்குமொரு பேரரசின்
இலை பார் விழிற் பறவையாம்
இது நிற்க நீர்விழிற் கயலாம் இதன்றியோர்
இலையங்கும் இங்குமாகப்
பார் கொண் டிழுக்கஅது நீர் கொண்டிழுக்கஇப்
படிகண்ட ததிசயமென
நீர்கொண்ட வாவிதனில் நிற்குமொரு பேழ்வாய்
நெடும் பூத மது கொண்டு போய்
நீள்வரை எடுத்ததன் கீழ்வைக்கு மதுகண்டு
நீதிநூல் மங்காமலே
சீர்கொண்ட நக்கீர னைச்சிறை விடுத்தவா
செங்கீரை யாடியருளே
திரை யெறியும் அலைவாய் உகந்தவடி வேலனே
செங்கீரை யாடியருளே
திருச் செந்தூர்ப்பிள்ளைத்தமிழ்

பொய்கை - குளம், பேழ்வாய்-பெருத்தவாய், வரை-மலை, நீதிநூல்-மூதுரைஎனும் திருமுருகாற்றுப்படை அப்பூதம் 999 பேரைச் சிறைவைத்திருந்தது. 1000பேரை

உண்ண வேண்டும். நக்கீரரோடு 1000ஆயிற்று. அங்கே உள்ள 999 பேரும் உன்னாலேதானே இக்கதி எமக்கு ஏற்பட்டது என்றதும் நக்கீரர் பிரபந்தம்பாடி எல்லாரையும் சிறையினின்றும் விடுவித்தார் என்கிறது அடுத்துவரும் பிள்ளைத்தமிழ்.

"ஓராயி ரம்பேரை வருடத்தில் ஒருநாளில்
உண்கின்ற கற்கிமுகிதான்
என்றுகுறை யாகிவிடு மன்றுநக் கீரர்வர
ஓடிப்பிடித் தவரையும்
காராய குன்றத் தடைத்துரிய நியதிக்
கடன்துறை முடிக்க அகவக்
கருதிமுரு காறவ ருரைத்தருள நீலக்
கலாபமயி லேறி யணுகிப்
பேரான குன்றந் திறந்திவுளி முகியைப்
பிளந்துநக் கீரர்தமையும்
பெரியவேல் கொண்டுபுனல் கண்டுசுனை மூழ்கிப்
பிரான்முகலி நதியின் மேலச்
சீராய திருவருள புரிந்தகர னூராளி
சிறுதேர் உருட்டியருளே
செய செயென அமராதொழ அசுரர்முடி சிதறுமுனி
சிறுதேர் உருட்டியருளே

திரு விரிஞ்சைமுருகன் பிள்ளைத்தமிழ்

இலஞ்சி என்பது மகிழமரம். இலஞ்சிமுருகன் மீது நான்கு திருப்புகழ்பாடியுள்ளார். அருணகிரிநாதர் ஒன்று அகத்துறப்பாடல். இத்தலம் குற்றலாத்துக்கு அண்மையில் அமைந்துளது. தலவிருட்சம் இலஞ்சி. திருஇலஞ்சிமுருகன்மீது சில பிரபந்தங்கள் எழுந்துள்ளன. குற்றாலத்தில் இருந்த திருமால் க்ஷேத்திரம் திருமுற்றம் எனப்படும். அகத்தியர் அங்கே சென்றபோது வைணவர்கள் அவரை வெருட்டினார்கள். இச்சம்பவத்தை இலஞ்சி முருகனிடம் குறுமுனி முறையிட்டார். அவர் அருளால் குற்றாலத்திருந்த முருகனை குறுகு குறுகு எனக்கூறி மகாலிங்கமாக்கினார். இச்செய்தி பிள்ளைக்கவியிலே அமைந்துளது.

"குருவா யகத்தியர் உன்னைப் பணிந்திடக்
கூடும் வைணவர் நாணவே
குளிர்சித்தி ராநதிக் குற்றால மாகுதிரி
கூடா ச லக்பதிக்குள்
மருவார் துழாய் மௌலி மௌலி யுஞ்சங்கு சக்கரமும்
மணிவண்ண முங்காணவே
வளர் நெடிய மால்வடிவு குறுகு குறு கென்றே
மகாலிங்க வடிவ மாகிய
பெருவான மதிநதி முடிக்குஞ் சபாடவிப்
பெம்மானை யம்மானிடம்
பிரியாத எந்தைதனை யைந்தான னத்தனைப
பெருமானை அர்ச்சி யென்றே
திருவாய் மலர்ந்தருள்செய் தென்னிலஞ் சிக்குமர!
செங்கீரை யாடி யருளே
சிறியேன் அறிவினுட் குடிகொண்ட தெய்வமே!
செங்கீரை யாடி யருளே!

க்ஷேத்திரக்கோவைப்பிள்ளைத்தமிழ்

இப்பாடலிற் சிவனது இடப்பாகம் திருமால் பாகமான சக்திபாகம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாமெல்லாம் குழந்தைகளோடு சாளை சாளை சப்பாணியெனக் கைபிடித்துக் கொட்டுவோம்.
மயிலும் முருகன் சப்பாணி கொட்டுகிறார் இப்படி

தண்டமிழ் விரகன் பரனொடு வாதுசெய்
சங்கத் தமிழ் நிபுணன்
சகல கலாதரன் இறைவ னுரைக்குரை
தந்தருள் நக்கீரன்
கொண்ட லெனச்சந் தத்தமிழ் மாரி பெய
கொற்றவன் அருணகிரிக்
கோமான் எண்டிசை யளவு நெடும்புகழ்
கொண்ட அருட் செந்தேன்
அணடர் தெள் ளமுதொடு முக்கனி யூறல்
அளவி வடித்தென்ன
அணிபெறு கவிதர மாலிகை நீடித்
தலர்மா லிகை யினுடன்
கொண்டணி பன்னிரு பொற்புய பூதர
கொட்டுக சப்பாணி
குக்குட கேதன மயில நிகேதன
கொட்டுக சப்பாணி.

படைவீடுகள் ஆறிலொன்று பழநி- திருவாவினன்குடி, சிவகிரி யெனவு மழைக்கப்படும்.
அன்புப் பழமான அவன் மீது பஞ்சாமிர்த வண்ணமாயமைந்த தமிழோடு இதைப் பூர்த்தி காண்பாம்.

"கங்கைக் கொருமா மகனே! குகனே
கனியே கண்மணியே
கருணா லயமே! மறையோர் தவமே!
கருதும் பெருவாழ்வே!
திங்கட் சடிலன் மகிழுங்குருவே!
தேவர்கள் பணிகோவே
தெய்வச் சுருதிப் பொருளே! பொருளின்
தெளிவே களிகூரும்
துங்கப் புயனேர் திருமால் மருகா!
சோதிச் சுடரொளியே!
தோகைக் குடையாய்! நீபத் தொடையாய்!
சொல்லுக் கினியானே!
சங்கத் தொருவா! பழநித் தலைவா!
தாலோ தாலேலோ
தமிழால் உயரும் சிவமா மலையாய்
தாலோ தாலேலோ

பழநிப்பிள்ளைத்தமிழ்
விசையைகிரி வேலச்சின்னோவையன்

# ராஜாராம் உணவுச் சேவை



**இந்திய, இலங்கை உணவு வகைகள்**

உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

சாதமா, நெய்ச் சாதமா, **Pillau** சாதமா, புரியாணியா, புளிச்சாதமா, தயிர்ச்சாதமா, இடியப்பமா எதுவானாலும் வகை செய்வேம்

கனடா இந்து மாமன்றத்தினர் தமிழ் சைவசமய கலாச்சாரப் பண்பாட்டினை வளர்க்கும் நோக்கமாக வெளியிடும் – "சைவநீதி "– சஞ்சிகை புதிய மறுமலர்ச்சியை மேலும் ஏற்படுத்தட்டும். சமயத்திற்கும் நாட்டிற்கும் நற்றமிழர்க்கும் நம்மொழிக்கும் நற்பணி புரியட்டும். எங்கள் உள்ளங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

வாழிய! வளர்க! சைவ நீதி

## RAJAH RAM CATERERS

**589 Middlefield Road, #20, Scarborough, Ontario, M1V 4Y6**

**TEL: (416) 299-5200, 439-4256**

**ஸ்காபுரோவில் ஒரு புதிய பேக்கறி**

# குவாலிற்றி பிறெட் பேக்கறி

# QUALITY BREAD BAKERY

**வெல்ல முடியாத மலிவு விலைகளில்**

பலவிதமான பாண்வகைகள்
பணீஸ் **(Buns)**
கேக் வகைகள் **(Cakes)**
மப்(f)பின் **(Muffins)**
இன்னும் பல......

உங்களுக்குத் தேவையான சிற்றுண்டி வகைகளை எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்




**1221 Markham Road, Unit #13**
**(Markham & Ellesmere)**
**Scarborough, ON.**
**TEL: (416) 431-9829**



# காலந்தான் பதில் கூறும் கடவுள் .......

வீ. வ. நம்பி

விருத்தப்பா

எடுக்கின்றாய் "பெட்டிசத்தை" எத்தனையோ பேர்தம்மை இகழ்வு கூறி
விடுக்கின்ற அதன்கீழே வேட்பாளர் பேரையேன் விடுக்க வில்லை
கொடுக்கின்ற அத்தனையும் பொய்யாகும் கூறிவிடு உண்மை யானால்
மடுக்கின்ற சூழ்ச்சிக்கா மானமுண்டேல் மறையாதே மாடி யேறு.

கருவாடு பெருவாடை தருமுன்னே மூடிக்கொள் மூக்கைப் பொத்து
உருவாக்கும் உன்வித்தை ஊருக்கே அவமானம் உணர்ந்து கொள்க!
பெரியாரைப் பழிசூட்டி வையாதே பிதாவுண்டேல் பேரைப் போட்டுத்
தருவாயா 'பெட்டிசத்தை' தரவின்றிப் போடாதே தயவு செய்து.

உண்மையை உரைப்பாயேல் தவறில்லை உள்ளந்தான் திருந்த வேண்டில்
வண்மையை வளர்த்துவிடு பொய்மையை வளர்க்காதே வாய்மை பேசு
அண்மையில் அழிவுண்டு அதற்குள்ளே ஆண்டவனே தண்ட மீவான்
திண்மையே வரவேண்டில் திசைமாறு தீமையை விலத்தின் வாழ்வாய்

உனக்கென்ன பொதுவாழ்வு ஊருக்கா உபதேசம் உனக்கே சொல்லு
தனக்கொன்று பிறர்க்கொன்று தான்பேசி தலைமேலே கைகாட் டாதே
உனக்கொன்று சொல்லக்கேள் உன்செயலை ஊர்மீது போட்டி டாதே
வினைக்கெட்டு நிற்காதே வீண்கதைகள் கட்டாதே வெளிக்கும் உண்மை

பேருண்மை தானென்றால் பெட்டிசத்தில் பேரிடுக பெருமை யுண்டு
நேருண்மை யல்லவெனில் நீயதனை எழுதாதே நேரோ னாகு
சீருண்மை சிறப்பாகும் செய்தொழிலே சிறப்பானால் செல்வ மோங்கும்
ஆருண்மை கெடநிற்போர் அழிவையே அடைவாரே அன்று மென்றும்

நீயழிவு செய்திட்டு மற்றவரைச் சாட்டாதே நிகரில் துன்பம்
பேயழிவைத் தந்துவிடும் பின்பேதான் உளங்கொள்வாய் பித்த னென்று
தாயழிவைச் செய்யாது தக்கோனாய் மாறிவிடு தப்புப் பண்ணேல்
காயழிவு ஏற்பட்டால் கனிகூட மாட்டாது கற்றுக் கொள்க!

ஊருக்கும் உலகிற்கும் சேவையா செயவந்தாய் உனக்கென் செய்தாய்?
பேருக்கும் புகழிற்கும் சேவையா? அதுவேண்டாம் பொய்யும் வேண்டாம்
பாருக்குள் பண்புள்ள மானுடனாய் வாழ்ந்திடுக பக்தி கொண்டு
நேருக்கு நேர்நின்று நிம்மதியாய் வாழவிடு வாழ்ந்தே காட்டு

உன்பேச்சே உன்செயலை ஒளிவின்றிக் காட்டிவிடும் ஒன்றும் வேண்டாம்
நின்பேச்சும் நின்செயலு மொன்றேதான் நினைவில்கொள் நீயே நீதான்
பின்புத்தி பிறர்தீமை செயுநேயம் பேராசை தீராக் கேடு
உன்புத்தி பலங்கொள்ள உண்மையே பேசிக்கொள் உயர்வு உண்டு

யார்யாரோ கையெழுத்துப் போடாது விடுக்கின்ற அறிக்கை தன்னை
ஆரென்று அறியாமல் எவர்மீதும் சந்தேகப் பட்டால் பாவம்
சீரற்ற சிறியோரின் செய்கையால் சீர்பெற்றார் சாதல் நன்றோ
பேரில்லாப் பெருங்கேடர் சூழ்ச்சியினால் பெருமனிதர் பிசங்க லாமோ?

குணக்கேடர் குலக்கேடர் கொள்கையால் குணமுள்ளார் கோட லாமா?
சணம்பித்தர் சண்டாளர் சால்பறியார் சாதனைகள் இதுவே யாகும்
துணிவோடு தன்பெயரைப் போட்டெழுதாத் தண்டயலின் தத்தத் தாலே
மணியான மக்களது மாண்பின்று மாய்கிறதே மாய மாக.

பிரித்தாளும் சூழ்ச்சிதனைக் கையாளும் பெரியாரைப் பேட்டி காண்க!
உரித்தாளி துணிவுண்டேல் உன்பெயரைப் போட்டெழுதி இருக்க லாமே
தரிதானே உனைச்சாடும் தப்பில்லான் தரங்கெடுதல் தக்க தல்ல
நரிக்குட்டி நாயாகிக் குரைக்காது நம்பநட நம்பி டாதே. (தரி - தரித்திரம்)

துணிவுண்டேல் வெளியேநில் துச்சாத னனாகாதே தூயோ னாகு
பணிவாகு பாபத்திற் கஞ்சிநட பணந்தன்னைப் பதுக்கி டாதே
மணியான சேவகனாய் மகத்தான செயலாற்ற மதியும் வேண்டும்
தணியாத தாகமுடன் தமிழ்சமயப் பணியாற்றத் தரமும் வேண்டும்.

அட்டாலும் பால்சுவையே குன்றாது அதுபோலப் பெரியார் வாழ்வு
கெட்டாலும் செட்டியவர் கிழிந்தாலும் பட்டேதான் கீழோ ராகார்
மட்டான அறிவாலே மதிப்பீடு செய்யாதே மாற்றிக் கொள்க
பட்டாங்கி லுள்ளபடி பயின்றறிக பார்த்தறிக பண்பைக் காண்பாய்.

தான்கள்ளன் பிறர்மேலே பழிகூறித் தன்குற்றம் மறைத்தே நிற்பன்
ஆன்கன்று அல்லற்பட் டோடிவிழுந் தன்மையாம் அந்த வேட்டு
ஏனிந்தத் தடுமாற்றம் எப்படியுந் தப்புதற்கே இந்த மாற்றம்
நானிந்தச் செயல்செய்யேன் என்பதனை நிலைநாட்ட இந்தக் கோலம்.

சிந்திக்க மூளைதா னிருக்க வேண்டும் சீராக்க முயற்சி செய்க
பிந்திடிலோ பெருந்துன்ப மாகிவிடும் பேச்சொன்று செய்கை வேறாம்
அந்திக்கும் சந்திக்கும் பேதமற்ற அறியாமை தோன்றக் கூடும்
வந்தவழி மாறிவிடும் வக்கிரமே வந்துவிடும் வாழ்வும் வீணாம்.

வீணாகச் சந்தேகம் வெளியார்மேல் கொள்ளாது விடுக்கும் ஓலை
ஆணாக இருப்பாயேல் அதன்கீழே கையெழுத்தை அழகாய்ப் போடு
கோணாத உண்மைதான் என்றுகண்டால் கொன்றாலு முண்மை பேசு
பூணாத பொய்க்காப்பைப் பிறர்பூணச் செய்யாதே பொய்யே கொல்லும்.

கோழிகள வெடுத்தோனுங் கூடிநின்று தேடுவது சொல்லக் கேட்பீர்
வாழியிது வையத்தில் வாழுவழி வகையோரார் வசைந்தே போவார்
ஆழிதனில் நனைந்தார்க்கு அச்சமில்லை ஆதிக்கம் அனைத்தும் செய்வர்
ஊழியுள காலவரை உத்தமராய் உரைபேசி ஊரை மேய்ப்பார்.

நடிக்கின்றார் நன்றாக நாடகத்தை உருவாக்கி நண்பர் போல
வடிக்கின்றார் கண்ணீரை நீலியாக வழிகாட்டி வக்கா லத்து
படிக்கின்ற பாடத்தை பண்பாகப் புரியாது பார்வை போல
துடிக்கின்றார் நஞ்சூட்டி தூயவர்போல் துப்பின்னும் துலங்கா தென்று.

சூழ்ச்சியொரு சுழல்காற்று சுழன்றுன்னைச் சாடிவரும் சோடை போவீர்
வீழ்ச்சிதனை உனக்காக்கும் வேடத்தை வெளிக்காட்டும் வெல்ல மாட்டாய்
காழ்ப்புணர்வு கூடிவிடும் கபடத்தைத் தெளிவாக்கும் காலப் போக்கில்
பாழ்படுத்தும் பலவீனம் தந்துவிடும் பச்சோந்திப் பட்டம் நல்கும்.

கேடொன்றை உருவாக்கி அதற்குள்ளும் கேடுசெயும் கேண்மைக் கார
நாடொன்றை உருவாக்க நாமெடுக்கும் பிரயாசை நீண்ட தன்றோ
வீடொன்றைக் கட்டுவது விளையாட்டா விளையாடிப் பார்க்கின் றீரோ
கூடொன்று கலைந்தாலே குருவிக்குத் தஞ்சம்யார் கொடுப்பார் கூறீர்.

**வேறு**

உள்ளத்தில் உண்மையே இருக்கு மானால்
ஊருலக மாந்தரென உலாவ வேண்டும்
கள்ளப்பொயக் கடிதங்கள் கையெழுத் தின்றியே
கண்டகண்ட இடமெல்லாம் போடுதல் தானோ
குள்ளநரிக் கூட்டத்தின் செயல தாகும்
கோமாளி ஏமாளித் தனமும் ஆகும்
உள்ளத்தா லுண்மையா மென்று கண்டால்
ஊருலக மறியக்கை யெழுத்தைப் போடு.

இரவுபகல் வெளியீடு எதுவா னாலும்
எழுதிக்கொள் கையொப்ப மிட்டு என்றும்
மரபுவழு வாதிருத்தல் மாண்ப தன்றோ
மானிடமே உணரத்தான் வேண்டு மென்றும்.
உரமற்ற உள்ளத்தோர் உணர்ந்து கொள்ளார்
ஊமையாய் உலகத்தே வாழா தீர்கள்
கரந்தட்டி வரவேற்பர் உண்மை யானால்
காலாலே உதைப்பார்கள் பொய்ய தானால்.

பட்டடையின் ஒட்டறையாய் இருத்தல் ஆகா
பாசமொடு நேசமுற வாழ வேண்டும்
வட்டமிடும் பருந்தாக இருத்தல் ஆகா
வாசமுள்ள மலராக இலங்க வேண்டும்
திட்டமின்றித் தலையேனோ ஆட்ட வேண்டும்
தேசமக்கள் பாசமதை மறக்கல் ஆகா
மட்டரகப் பேர்வழியாய் நடக்க லாமா
மாசுபட்ட மனிதாநீ மறைந்து வாழேன்.

விழுதேநீ வீணனெனத் திரிய லாமா
வீணாக பசப்பாகப் பேச லாமா
கொழுந் தாயப் போனாலும் கொள்கை நன்கு
கோலமிடப் பணியாற்றிக் குளிரப் பேசு
உழுந்தன்ன உணவெனினும் பகிர்ந்து உண்ணு
ஊர்ப்பெயரை உளமாரச் சொல்லிக் காட்டு
புழுந்தாது கண்ணாலே பார்த்துச் சிந்தி
பூவுலகைப் புரிந்திட்டுப் புத்தி தேடு

மட்டரகப் புத்தியென மக்கள் கூறில்
மாதவத்தின் கொழுந்தாக மாற எண்ணு
பட்டடையில் கட்டியநாய்ப் பான்மை போல
பாலுக்குக் காத்திருக்கும் பூனை போல
வட்டமிட்டு வளையாதே வாய்மை காண்க
வங்கடத்தைக் காட்டாதே வையம் தேரும்
வெட்டொன்று துண்டிரண்டாய் வேட்டுப் பேசு
வேசிகுணம் கூடாது விசரைக் கூட்டும்.

நெஞ்சார நேர்மையே காண வேண்டும்
நேர்மையாய் வாழவுமே தெரிய வேண்டும்
வஞ்சகத்திற் ஒஞ்சிநட வாது பேசேல்
வாளாலே வெட்டிடினும் பொறுத்துக் கொள்க
அஞ்சுதற்கு அஞ்சிநட ஆசை வேண்டாம்
ஆலாபோல் ஆகாதே அன்பை நாடு
பிஞ்சாகும் பருவத்தே பழுத்தி டாதே
பேர்படைக்க ஆசைதான் புத்தி தேடு.

கரைகண்ட களவும்பொய் அனைத்தும் உண்டு
காசாசை மிகவுண்டு கஞ்சத் தோட்டி
வரையாத வள்ளல்போல் காட்சி காட்டி
வாய்மையே கிடையாது வாஞ்ஞைக் காரன்
நிரையான பற்காட்டி நேச முற்றே
நேரற்ற தொண்டனென நீச்சல் காட்டும்
புரைபேணும் வாயாலே புகழ்ந்து பின்னால்
போனதுமே இகழ்கின்ற புன்மைத் தோழ!

கோள்கொண்டு பிரிக்காதே கோலம் வேண்டாம்
குற்றத்தை மற்றவர்மேல் சுமத்தி டாதே
நாள்தோறும் நல்லதையே நாடிச் செய்க
நயமான கதைபேசி நடிக்க வேண்டாம்
தேள்போலக் கொட்டாதே தெய்வங் கொல்லும்
தெருவெல்லாம் பகைசூழும் தீமை நேரும்
ஆளான ஆளெல்லா மடங்கிப் போனார்
அறந்தானே நிலைநிற்கும் அன்பே வெல்லும்.

இனத்தையும் முறவையும் பிரித்தே ஆள
ஏனிந்தச் சூழ்ச்சிதனைச் செய்து வாறீர்
மனத்தையும் மணத்தையும் மாற்ற லாமோ
மாலையும் காலையும் மருங்கி லொன்றே
தினந்தோறம் சிந்தித்துத் தீமை போக்கு
தீராண்மை செய்யாதே தெய்வம் கேட்கும்
கனகாலம் பொய்நிலையா காவ லேனோ
காலிதனை அடிக்காதீர் கண்முன் காட்டும்.

பண்பற்ற உனக்கேனோ பதவி யாசை
பாதாளம் செல்லவழி சமைப்ப தற்கா?
எண்ணிக்கொள் இடர்தன்னை எவர்க்கும் செய்யேல்
ஏட்டறிவு உனக்குண்டா ஏலப் பேச்சா
மண்ணுக்குள் நீமனிதப் பிறவி யல்ல
மாயத்தால் மறைந்திட்டு பிழைக்க வந்தாய்
கன்னக்கோல் வையாதே கதைகூட் டாதே
**காலந்தான் பதில்கூறும் கடவுள் கேட்பார்.**

அறிவிப்பு: பெற்றோர் - பாதுகாவலருக்கு.

# கனடா இந்து மாமன்றப் பாடசாலைகள்

சகல தரத்திலுமுள்ள மாணவர்களுக்கான தமிழ் மொழி - சைவசமயம் -பண்ணிசை வகுப்புக்கள் கீழ்க்காணும் இடங்களில் (பாடசாலைகளில்) நடைபெற்றுவருகின்றன. உங்கள் பிள்ளைகளை அண்மையிலுள்ள பாடசாலைகளில் மேற்படி பாடங்களைப் படிக்கச்செய்து பயன் பெறுங்கள். வகுப்புகள் யாவும் பயிற்றப்பட்ட - அனுபவம் மிக்க ஆசிரியர்களால் நடாத்தப்பெறுகின்றன. தேவையான இடங்பகளில் புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்க மன்றத்துடன் தொடர்புகொள்ளுங்கள். 6ம் தரம் தொடக்கம் விஞ்ஞான வகுப்புக்களும் ஆரம்பிக்கபபெறும்:

**விபரம்**

1. லெமறோ (L'AMOUREAUX C.I.) 2. பியர்சன் (BEARSON C.I.)
3. வெஸ்றகில் (WEST HILL C.I.) 4. சீடா பிறே (CEDARBRAE C.I.) 5. DRIFT WOOD C.C.
மேற்படி இடங்களில் ஞாயிறு தோறும் காலை 9.00 - பி.ப. 1.00 மணி வரை
6. கிப்பிளிங் (KIPPLING C.I.) வெள்ளி மாலை 6:00 - இரவு 9:00 மணிவரை
7 லான்ஸ்டவுண் (lANSDOWN) வெள்ளி மாலை 4:00 - 7:00 வரை நடைபெறுகிறது

**விசேட குறிப்பு:-**

சீடாபிறேயில் சனிக்கிழமை தோறும் காலை 9.00 12.00 மணிவரை ஓவியக்கலை (வரைதல்) வகுப்பு நடைபெறுகிறது. ஆசிரியர் திரு. இ. மரியநாயகம் - (416) 751-7551

**"ENRICHMENT MATH"** வகுப்பு 9 முதல் **OAC** வரையிலான மாணவர்களுக்கு சனிக்கிழமை தோறும் காலை 9.00 மணிமுதல் லெமறோ **C.I** ல் நடைபெறுகிறது.
ஆசிரியர்: கலாநிதி மு. பிரபாகரன் Ph. D. ஆவர் (416) 286-6179

விபரங்களுக்கு: **(416) 431-2460, 724-0602, 696-9315**


வாழிய சிவநெறி

# இந்து மத சேவை

திருமணம், பதிவுத் திருமணம், புண்ணியாவாசகம், புதுமனை புகுவிழா, புதுக்கடைத் திறப்புவிழா, விவாகப் பொருத்தம் பார்த்தல், இறுதிக் கிரியைகள், அந்தியேட்டி, மற்றும் அனைத்து இந்து மத சேவைகளுக்கும் எம்மை நாடுங்கள்

*சைவ சிவாச்சாரியார் - திருமணப் பதிவாளர்*

**ச. திருஞானசம்பந்தக் குருக்கள் B.A**

**(416) 535-1491**

**769 LANSDOWNE AVENUE. TORONTO, ONTARIO.**

# மாணவர் பகுதி

## எங்கள் தமிழ் மொழி

**தனுஷா தர்மலிங்கம்**

மொழிகளில் இனிமையானது தமிழ் மொழி. நான் ஒரு தமிழ்ப்பிள்ளை. நான் தமிழ் மொழியை மிகவும் நேசிக்கிறேன். தமிழ் பேசும் மக்கள் உலகு எங்கும் வாழ்கிறார்கள். எனது தாய் மொழி தமிழ் மொழி. தமிழ் மொழியில் பல அறிவு நூல்கள் இருக்கின்றன. அவற்றைப் படித்து நன்கு விளங்கினால் உலகத்தில் உயர்ந்தவர்களாக வாழலாம். பாரதியார் பாப்பாப் பாடல்களைப் பாடியுள்ளார். மாணவர்களாகிய எமக்குப் பல நல்ல கருத்துக்களை அவை எடுத்துச் சொல்கின்றன. எங்கள் தமிழ் மொழி என்றும் வாழியவே.

## எனது சமயம் சைவ சமயம்

**த. மதுரன்**

சைவ சமயம் மிகவும் பழமை வாய்ந்தது. நாங்கள் சிவ பெருமானை முழுமுதற் கடவுளாக வணங்குவோம். வீபூதி உருத்திராக்கம் சிவசின்னங்களாகும். நமசிவாய என்பது திருவைந் தெழுத் தாகும். தைப் பொங்கல், சிவராத்திரி, சித்திரை வருடப் பிறப்பு, நவராத்திரி, தீபாவலி என்பன மக்கள் கொண்டாடும் சைவசமயக் கொண்டாட்டங் களாகும்.

## தைப் பொங்கல்

**த. வித்தகன்**

தைப் பொங்கல் தமிழரின் ஒரு முக்கியமான திருநாள். இத்திருநாளை நாம் தைமாதம் 13ம் அல்லது 14ம் திகதி கொண்டாடுகிறோம். அன்று விடியற்காலை எழுந்து நீராடிப் புத்தாடை அணிந்து இறைவனை வணங்குவோம் முற்றத்தை மெழுகிக் கோல மிட்டு மாவிலை தோரணம் கட்டி வாழை நட்டு அடுப்பு வைத்து மஞ்சள் இஞ்சி இலைகள் கட்டிய புதுப்பானையில் பால் வைத்துப் பச்சரிசி, பயறு சர்க்கரை இட்டுப் பொங்கல் பொங்குவோம். பொங்கிய பொங்கலைப் பலகாரங்கள் பலவித பழங்கள் வைத்துச் சூரியனுக்குப் படைத்து வணங்குவோம். பின்பு உறவு சுற்றத்தாருடன் உண்டு மகிழ்வோம். உலகத்து மக்கள் பசியற்று வாழ உணவுதரும் உழவர்களின் திருநாள். அன்றியும் உணவுப்பயிர்கள் நன்கு வளர வெயில், மழை தரும் சூரிய பகவானுக்கு நன்றி தெரிவிக்கும் நன்நாள் என்று தமிழ் மக்கள் அனைவரும் நன்றித்திருநாளாகக் கொண்டாடி மகிழ்வர்.

## கடவுள்கள்

**விஜயசோபனா யுககுலராசா**

பிள்ளையார் ஒருகடவுள். பிள்ளையாரின் தம்பி முருகக் கடவுள். முருகக்கடவுளின் மனைவிகள் வள்ளி தெய்வயானை. சிவபெருமான் உமாதேவியார், பிள்ளையார் முருகனின் பெற்றோர்கள். சிவனின் வாகனம் எருது. வைரவர் வீரபத்திரர் கிருஷ்ணர் லக்சுமி சரஸ்வதி என்ற கடவுள்களை வணங்கி அருள்பெற்று வாழ்வோம். கடவுள் எங்கும் இருக்கிறார்.

## மாட்டுப்பொங்கல்

**திவ்வியா விஜயபாலன்**

மாட்டுப் பொங்கல் தமிழர்களின் முக்கிய திருநாளாகும். காளை மாடுகள் கொண்டு வயல் உழுது நெற்பயிரை அறுவடை செய்து சூரியனுக்கு நன்றி தெரிவிக்கத் தைப் பொங்கல் கொண்டாடுகிறோம். மறு நாள் அக்காளை மாடுகளுக்கும், பால் தரும் பசுக்களுக்கும் நன்றியுடன் விழா எடுக்கின்றோம். அன்று மாடுகளைக்குளிப்பாட்டி தொழுவங்களைத் துப்புரபு செய்து அலங்கரித்து மாடுகளின் நெற்றியில் விபூதி சந்தணம் குங்குமம் வைத்து பூமாலைகளைச் சூட்டிப் பின்னர் இனிய பொங்கல் செய்து அதை அவைகளுக்கு உணவாகக் கொடுத்து நாமும் உண்டு மகிழ்வோம். அன்றையதினம் காளை மாடுகளுக்கென வேடிக்கை விளையாட்டுக்கள் அதாவது காளையோட்டம் மாட்டுப்பந்தயம் போன்ற பல விளையாட்டுக்களை நடாத்தி மகிழ்விப்பார்கள். இவ்விழா இன்றும் தமிழர் வாழும் பகுதிகளில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

# நத்தார்ப்பண்டிகை

தனுஷா தவராஜா

நத்தார்ப் பண்டிகை உலகெங்குமுள்ள கிறிஸ்தவர்கள் அனைவராலும் மிக மகிழ்ச்சியாகக் கொண்டாடப் படுகின்றது. உலகஇரட்சகரெனக் கூறும் இயேசுக் கிறிஸ்த்து நாதர் மார்கழி மாதம் 25ம் திகதி நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குப் பாலனாக அவதரித்தார். இந்தத்திகதியைக் கொண்டே நத்தார் பண்டிகை காலம் ஆரம்பமாகின்றது. இக்காலத்தில் பாலன் பிறப்புப் பற்றிய செய்திகளையும் பாடல்களையும் கூறி கிறீஸ்தவ ஆலயங்களில் ஆராதனைகளும் கொண்டாட்டங்களும் நடைபெறுகின்றன. மக்கள் தங்கள் வீடுகளிலே நத்தார்மரம் என்று ஒரு மரத்தை வைத்து அதை மிக அழகாகவும் ஒழுங்காகவும் அலங்கரித்து மின்விளக்குகளால் ஒளியேற்றுவார்கள். மரத்தின் கீழ் பல பரிசுப் பொருட்களை வைத்து தங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அன்பளிப்புச் செய்து மகிழ்வார்கள்.

# சித்தரைப் புதுவருடம்

சோபிகா விக்னேஸ்வரன்

தமிழர்களின் புதுவருடமான சித்திரைப் புத்தாண்டு தமிழர்களின் சித்திரை மாதம் முதலாம் திகதி சைவத் தமிழ்மக்கள் அனைவராலும் கொண்டாடப்படுகின்றது. அன்று அதிகாலை மக்கள் மருத்து நீர் தலையில் தேய்த்து நீராடிப் புத்தாடை அணிந்து கோவிலுக்குச் செல்வார்கள். கோவிலில் சுவாமியைத் தரிசித்துப் புதுவருடப் பலன்களை வாசிக்கக் கேட்பார்கள். வீட்டில் பொங்கல் பட்சணங்கள் செய்து உறவு சுற்றங்களுடன் உண்டு மகிழ்வார்கள். நல்ல நேரம் பார்த்துக் கைவிசேஷம் பெறுவார்கள். உலகின் எல்லா நாடுகளிலும் வாழ்கின்ற தமிழர்கள் தங்கள் கலாச்சாராத்தைப் பேணுவதற்காக இதைச் சிறப்பாகக் கொண்டுவர்

# சூரியன்

பிரியா ரவீந்திரன்

சூரியன் மஞ்சள், சிவப்பு நிறங்களில் தெரியும். சூரியன் மிகவும் பெரியது. சூரியன் காலையில் உதிக்கும் மாலையில் மறையும். சூரியன் எங்களுக்கு வெளிச்சத்தையும் வெய்யிலையும் தருகின்றது. கோடைகால வெய்யில் மிகவும் சூடாக இருக்கும். சூரியன் நமக்குப் பருவகாலங்களை ஏற்படுத்துகின்றது. உலகின் ஜீவராசிகள் அனைத்துக்கும் சூரிய வெளிச்சம் பிரதானதேவையாகும்.

சூரியன் எத்தனையோ கோடிமைல்தொலைவில் இருக்கும் ஒரு கிரகம். சூரியனை இரவி, ஆதவன், உதயன், வெய்யோன் என்றும் அழைப்பார். தமிழர்களாகிய நாங்கள் தைப் பொங்கல் தினத்தன்று வயலில் விளைந்த நெல்லை அறுவடை செய்து புதிய அரிசியில் இனிய பொங்கல் செய்து சூரியனுக்கப் படைத்து வணங்குவோம். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட மதம் சைவம் என்ற மதமாகும்.

# எனது நண்பிகள்

சங்கீதா நாகசிவகுமாரன்

எனது பெயர் சங்கீதா. எனக்கு நண்பிகள் இருக்கின்றனர். இவர்கள் எனது உண்மையான நண்பிகள் என்மீது அன்புள்ளவர்கள். நானும் அவர்கள் மீது அன்பாக இருக்கின்றேன். இலக்சுமி, விஜி, பிரியா, நிவித்தா, ஜனனி என்பவர்கள் எனது நண்பிகள். இலக்சுமியும் விஜியும் எனது பாடசாலைக்கு வருபவர்கள்.

பிரியாவும் விஜியும் என்னுடன் தமிழ் வகுப்பில் படிக்கின்றனர். நிவித்தா ஜனனியுடன் நான் பரதநாட்டிய வகுப்பில் பயில்கிறேன். நாங்கள் எல்லோரும் படிப்பு விடயங்களில் ஒருவருக்கு ஒருவர் உதவியாகவும் மற்றும் உண்மை அன்புடனும் நன்றியுடனும் பழகுவோம்.

# மயில்

ந.கீதன்

மயில் ஒரு அழகான பறவை. மயிலுக்குத் தோகை உண்டு. மயில் தோகையை விரித்து ஆடும். தோகை விரித்து ஆடுவது பார்க.க அழகாக இருக்கும். மயில் காடுகளிலும் மிருகக்காட்சிச் சாலைகளிலும் இருக்கும். மயில் முருகப் பெருமானின் வாகனமாகக் கருதப் படுகிறது.

மயிலைக் கோவிலிலும் வளர்ப்பார்கள். மயில் மற்றப் பறவைகளைப் போல பறக்கா விடினும் ஓரளவு தூரம் பறக்கும். மயிலைக் கண்டால் பாம்புக்குப் பயம். மயில் பாம்பைக் கொத்தும்

# கன்னிகைத் தீர்த்தம்

அனு. பரமா

இராவணன் தன்தாயாரின் கன்மாதிக் கிரியைகளைத் திருகோணமலை என்னும் புண்ணிய தலத்திலே செய்ய வேண்டுமென விரும்பினான். முனிவராக இருந்த விஷ்ணு மூர்த்தியை நோக்கி "ஐயா, நீரே ஆச்சாரியராக இருந்து எனது தாயாரின் கன்மாதியைச் செய்து நிறைவேற்ற வேண்டும்" என்று பிரார்த்தித்தான். அதைக் கேட்ட முனிவர் மிகுந்த சந்தோஷத்துடன் இராவணனை அழைத்துக் கொண்டு திருகோணமலைக்கு மேற்குத் திக்கிலுள்ள "கன்னியா" என்னும் தலத்துக்குப் போய் அவ்விடத்தில் தனது கையில் இருந்த தண்டினால் ஏழு இடத்தில் ஊன்றினார். முனிவர் ஊன்றிய ஏழு இடத்திலும் கடுஞ்சூடு இளஞ்சூடு கடுங்குளிர் இளங்குளிர் போன்ற ஏழுவகைப் பேதமுள்ள நீர்க் குழிகள் உண்டாகின. அப்போது முனிவர் இராவணனை நோக்கி "இந்தப் பூங்காவனத்தில் தெய்வப் பெண்கள் எப்போதும் வந்து விளையாடிப் போவதால் இக் கன்னிகா மிகவும் விசேடமான தலமாயிருக்கும். இத்தீர்த்தமானது பாதாள லோகத்தில் இருந்து உற்பத்தியானது. இது குமரித் தீர்த்தமென்று அழைக்கப்படும். இவ்விடத்தில் இறந்தவர்களுக்கு அந்தியேட்டி செய்வதால் அவர்கள் வீடு பேறடைவர் எனச் சொன்னார்.

விஷ்ணு மூர்த்தி உண்டாக்கிய இத்தீர்த்தங்கள் "கன்னியாய் வெந்நீர்க்கிணறுகள்" என்று திருகோணமலையில் இருப்பதை இன்றும் நாம் காணலாம். "கோவிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமா மலையமர்ந்தாரே" என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியுள்ளதும் அதன் சிறப்பைக் கூறி நிற்கின்றது.

# நாய்

க. அர்ஜூன

நாய் ஒரு நன்றியுள்ள மிருகம். நாய் வீட்டைக் காக்கும். நாய் வள், வள் என்று குரைக்கும். நாய்களில் பல இனங்கள் உண்டு. நாய் தனக்குத் தெரிந்த ஆட்களைக் கண்டால் வாலை வாலை ஆட்டும். நாய்க்கு நான்கு கால்கள் உண்டு. இரண்டு கண்களும் இரண்டு காதுகளும் உண்டு.

நாய் கள்வரைக் கண்டால் குரைத்துத் துரத்தும். நாய் வீட்டைக் காக்கும்.

# பூனை

க. பிரசாந்

பூனை ஒரு வீட்டு மிருகம். பூனை பால் குடிக்கும். பூனை மியா! மியா! என்று கத்தும். பூனை பாம்பைக் கண்டால் சீறும். பூனை எலிபிடிக்கும். பூனை குட்டி ஈனும். பூனை குட்டியைக் கழுத்தில் கௌவிக் கொண்டு திரியும். பூனைக்கு வட்டமான கண்கள் உண்டு. பூனையின் கண்கள் இரவில் பிரகாசமாகத் தெரியும். பூனைக்குக் கட்டையான கால்கள் உண்டு. பூனை வாலை வாலை ஆட்டும்

## நான் யார் தெரியுமா?

ப.அனந்தன்

அழகிய முகம் ஒன்று உண்டு
அதிலே எண்கள் பல உண்டு
கைகள் இரண்டு எனக்கு உண்டு
கால் இல்லாமல் ஓடிடுவேன்
நான்யார்? உமக்குத் தெரியுமா?
நான் தான் அந்த மணிக்கூடு

## எனது விருப்பம்

யு.கமலகாந்தன்

எனக்கு நாய் வளர்க்க விருப்பம். நாய் நன்றியுள்ள மிருகம். நாய் வீட்டைக் காவல் காக்கும். நாய் கள்வரைத் துரத்திக் கடிக்கும். நண்பரைக் கண்டால் வாலை ஆட்டி வரவேற்கும். துள்ளிப் பாய்ந்து விளையாடும். நாய்க்குப் பூனையைக் கண்டால் பிடிக்காது. எனக்கு நாய் என்றால் மிகவும் பிடிக்கும்.

# மறப்பேனா?

தி. லதா

திடீரென இராணுவம் முற்றுகை இட்டது. ஏதோ அகப்பட்டதை எடுத்துக் கொண்டு எல்லோரும் சைக்கிள் வண்டியிலும் கால்நடையாகவும் சாவகச்சேரி நோக்கி ஓடினோம். சன நெருசல் காரணமாக நான் எனது உறவினரை விட்டுவிட்டேன்.

என் நிலை சொல்ல முடியாதது. அழுது அழுது மக்களோடு தள்ளுப்பட்டேன். ஏதோ ஒருவர் என்னை புலி முகாமில் சேர்த்து விட்டார். காணாமல் போனோர் பட்டியலில் எனது பெயரும் இடம் பெற்றது. ஆனாலும் தகவல் எனது பெற்றோரை மூன்று நாட்களின் பின்னரே சென்றடைந்தது. அதன் பின்பே நான் ஆறுதலடைந்தேன். இதுவும் ஒரு போர் அனுபவம்.

# மறக்கமுடியாத நிகழ்ச்சி

**சி. செந்தில்குமார்**

அன்றொரு நாள் நானும், எனது நண்பர்களும் பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தோம். எனது நண்பர்களோ, ஆடிப்பாடிக் கொண்டு வீதியின் நடுவே நடந்து வந்து கொண்டிருந்தார்கள். நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். ஆனால் அவர்கள் என் சொல்லைக் கேட்காமல் வீதியில் நடுவே ஆடிப்பாடி வந்து கொண்டிருந்தார்கள். அப்போது, என் பின்னே ஒரு ஊர்தி விரைந்து வந்து கொண்டிருந்தது. அப்படியே விரைந்து வந்த அந்த ஊர்தி, என் நண்பனை இடித்து விட்டு விரைந்து சென்றது. என் நண்பன் இரத்தத்தில் துடித்துக் கொண்டிருந்தான். என்னால் ஒன்றுமே செய்து கொள்ள முடியவில்லை. எல்லோரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்களே ஒழிய ஒருவரும் வந்து உதவி செய்யவில்லை.

எனக்குக் காலும் ஓடவில்லை, கையும் ஓடவில்லை. என்ன செய்வது என்று திகைத்தேன். என் நண்பனோ "ஐயோ" என்று கத்திக் கொண்டிருந்தான். அப்பொழுது அந்த வழியால் வந்து கொண்டிருந்த ஊர்தி ஒன்றை முன்னின்று மறித்தேன். அவரும் நல்ல சாரதியானமையினால் என்னையும் என் நண்பனையும் ஏற்றிச் செல்ல அனுமதித்தார். உடனே என் நண்பனை ஏற்றி வைத்திய சாலைக்கு அனுப்பினேன். நான் பின்னால் நடந்து சென்றேன். அங்கே என் நண்பனுக்கு "ஆப்பிரேசன்" நடந்தது. பொழுது சாய்ந்துவிட்டது. ஆகையினால் நான் வீடு திரும்பினேன். என் வீட்டில் இருந்தும் என் நண்பனுக்கு என்ன நடந்தது என்று அவனின் தாயாருக்குத் தொலைபேசி வாயிலாக அறிவித்தல் விடுத்தேன். அதைக் கேட்டவுடன் அவர்கள் அங்கே ஓடோடிச் சென்றார்கள். ஆனால் "பாவம்" அவன் இரத்தம் இன்றி இறந்துவிட்டான். இதைக்கேட்ட தாய், தன் மகனை பிரிந்து வாழமுடியாது என்று சொல்லிக் கொண்டு தன் உயிரை மாய்த்தார். இதை நேரில் கண்டு கொண்டிருந்த தகப்பனார் பைத்தியம் ஆனார். அவர்கள் குடும்பமே சீர் குலைந்தது. நான் மிகவும் வேதனைப்பட்டேன். ஆனால் என்னால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இப்போ அந்த விபத்து நடந்து பல வருடங்கள் ஆயிற்று எனினும் என்னால் அதை மறக்க முடியவில்லை. அதை நினைக்கும்போது என் கண்கள் கலங்கத் தவறுவதில்லை.

# திருப்தி

**தர்சிகா தங்கவேலாயுதபிள்ளை**

ஒவ்வொருவருக்கும் உடல் உறுதி, மன உறுதி, ஆத்மபலம் ஆகிய மூன்றும் இன்றியமையாதன. இந்த மூன்றும் தன்னம்பிக்கையிலிருந்து அதாவது தன் உள்ளே ஒளிரும் பரமாத்மாவை உணரும் தன்மையிலிருந்து பிறக்கின்றன.

இதனை நன்கு அறிந்து அப் பரமாத்மாவினிடமிருந்து வேண்டும் பலத்தைப் பெறுக! என்னுடைய வேலை அத்தகைய சுயநம்பிக்கையை உனக்கு அளிப்பதாகும். மனச்சோர்வே அழிவுக்குக் காரணம். ஆகையால் ஒவ்வொருவரும் எப்பொழுதும் ஆனந்த மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும். பொறாமை உடல் சத்துக்களை அரித்து, உடல் உறுப்பெங்கும் நஞ்சைப் பரப்பி விடும். ஆதலால் பொறாமையை விடுத்து இன்ப துன்பங்களை இறைவனுக்கு அர்ப்பணித்து விடு. அதுவே மதிப்பற்ற திருப்தி என்னும் பெருஞ் செல்வத்தைப் பெறும் இரகசியம்.

# கனடா நாள்

**சி. லஜி**

ஒருவருடத்தில் ஒரு முறைதான் ஆடி வரும். அந்த ஆடி முதலாம் நாளில் வருவதுதான் கனடா நாள். இதை எல்லோரும் கனடாவின் பிறந்தநாள் எனக் கொண்டாடுவார்கள். ஏனெனில் கனடாவை ஆட்சி செய்து வந்த ஆங்கிலேயரிடம் விடுதலை பெற்ற நாளே கனடா நாள். அன்று கூடுதலாக ஒருவரும் வேலைக்குப் போகமாட்டார்கள் ஏனெனில், அன்று அவர்களுக்கு விடுதலை நாளாக லீவு கொடுக்கப்படும். அந்தக் கனடா தினத்தை முன்னிட்டு எல்லோரும் சுற்றுலாப் பயணம் செய்வது வழக்கம். அன்று எல்லோரும் சந்தோசமாக இருப்பார்கள். கனடாவை எல்லோரும் போற்றுகின்றார்கள். மற்றும் யாவரும் இந்த நாட்டையே நாடுகிறார்கள். ஏனெனில் கனடா மதம், சாதி, நிறம் பாராமல் எல்லோரையும் ஆதரிக்கிறது. எல்லோரும் தங்கள் விருப்பங்களைச் செய்ய அனுமதிக்கிறது. கலாச்சாரம் மற்றும் எங்களுடைய நாகரிகங்களை வளர்க்கவும் உதவி செய்கிறது. அப்படிப்பட்ட ஒரு நாட்டில் இருப்பவர்கள் மிகவும் அதிட்டசாலிகள். ஆகையால் கனடாவின் சட்டங்களுக்கு அமைவாக நடந்து எங்கள் இனத்தையும் வந்த நாட்டையும் காப்போமாக.

அன்பே சிவம்

# சோழா

## கேற்றறஸ் & ரேக்அவுற்

**SRI LANKAN & SOUTH INDIAN CUISINE**

சகலவிதமான வைபவங்களுக்கும் ஏற்ப, சுவையான - சுத்தமான - தரமான உணவுகளைக் குறிப்பிட்ட நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

# CHOLA

**CATERERS & TAKE OUT**
**1217 ELLESMERE ROAD ( at Midland)**
**SCARBOROUGH, ON. M1P 2Y3**
**TEL: (416) 288-9339**

திருமுறை இருப்பிடம் சைவநீதி

# ராதிகா ரேட்

சுபமுகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கு ராசியான இடம்

ஆசிகா, விபுன், G.M., படையப்பா, அமர்க்களம், பூவேலி,
ரெடிமெட் சாரி செட், கோலம், ரங்கோலி, அபூர்வா

தூய காஞ்சிபுரம் கூறைகள், கொடி வேலைப்
பாடுகளுடன் மணவறைப் பட்டுகள், திரட்வேக்
இராமாயணம், சுயம்வரம், மகாபாரதம், அனைத்தையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
ராதிகா ஒரு வஸ்திராலயம்

# RAATHIKA TRADE

**3850 FINCH AVENUE EAST, # G7**
**SCARBOROUGH. ONTARIO. M1V 3T6**
**Tel: (416) 291-9050 Fax: (416) 291-8801**

# வாசகர் அகழ்வும் ஆய்வும்

முனைவர் சாம்பசிவனார் எம்.ஏ, பிஎச்டி
ஆசிரியர் 'தமிழ் மாருதம்'
மதுரை, தமிழ்நாடு
15-12-99

சைவத்திரு
பண்டிதர் வி. வ. நல்லதம்பி அவர்கள்,
கனடா.

அன்பகத்தமைந்த ஐயா,
கனிந்த வணக்கம். நலம். நலமறிய அவா.

தாங்கள் அன்புடன் அனுப்பிவைத்த "சைவ நீதி - தீபாவலி மலர்" கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. நன்றி பெரிது. மலரில் யான் தொகுத்துத் தங்கட்கு அனுப்பிய "சைவத் தமிழ்த்திருமணம்" வெளியிட்டமை கண்டு மகிழ்ந்தேன் அது, வெளிநாட்டுத் தமிழ் அன்பர்கட்குப் பெரிதும் பயன்படும்.
தாங்கள் வெளிநாட்டில் அன்னைத் தமிழுக்கும் ஆன்ற சைவசமயத்திற்கும் அருந்தொண்டு ஆற்றிவருவது மிக்க மகிழ்ச்சிதருகின்றது. எம்பெருமான் தண்ணருளால் தங்கள் தொண்டு மேலும் சிறந்திட வாழ்த்து.

நன்றி

அன்பன்
ச. சாம்பசிவனார்

---

ஏழாவது சைவத் தமிழ் மாநாட்டினை கனடா தேசத்தில் கண்குளிரக்கண்டு பேரானந்தம் கொண்டோம். தேமதுரத்தமிழ் ஓசை உலகமெல்லாம் வியாபித்துப் பரந்து விளங்குவதற்கு இம்மாநாடு ஓர் எடுத்துக்காட்டு. அதனைத் தமிழ் பேசும் மக்கள் கண்டு பேரின்ப வெள்ளத்தில் மிதந்ததைக் கண்குளிரக் கண்டோம்.

தமிழ் நிலைக்குமா இல்லை மங்கிவிடுமா? என்ற கேள்விக்கே இடமில்லாது செய்துவிட்டாகள் பண்டிதர் நல்லதம்பி அவர்களும் இந்துமாமன்றமும். மூன்று நாட்கள் நடைபெற்ற இம்மாநாடு எத்தனை சிறப்பாக அமைந்துள்ளது என்பது கனடா வாழ் தமிழ் மக்கள் நன்கு அறிவார். கனடா இந்து மாமன்றம் இம்மாநாட்டை சிறப்பாக நடத்தி அதன் பெருமையைப் பெற்றுள்ளது. இந்த மன்றத்தின் ஆணி வேராகத்தாங்கி நிற்பவர் முத்தமிழ் வித்தகர் புலவர் பண்டிதர் நல்லதம்பி எனனும் பெருமகன். உடல் நலம் குன்றிய நேரத்திலும் தன் உயிரிலும் மேலாகத் சைவத் தமிழ் அன்னைக்கு அவர் ஆற்றிய தொண்டு பொன் ஏட்டில் பதிக்கவேண்டியது.

சைவத்தையும் அத்துடன் தமிழ் மொழியையும் தன் இருகண்களாய்க் காத்து வரும் இப்பெருவள்ளலுக்கு எனது சிரந்தாழ்ந்த வணக்கங்கள். கனடாவாழ் தமிழ் மக்கள் அப்பெரியாரை நிச்சயம் போற்றுவார்கள், போற்ற வேண்டும். வாழ்க தமிழ் மொழி.

தெய்வேந்திரம்

Vicotria Park
25/10/99

---

சைவநீதி ஆசிரியர் நம்பி அவர்களுக்கு
புத்தாண்டு வாழ்த்துக்கள்

உலக சைவப்பேரவையின் ஏழாவது மாநாடு சிறப்பாய் நடந்தது அறிந்து மகிழ்ந்தேன். சுகவீனமானதால் வரமுடியவில்லை. விரைவில் கனடா வந்து உங்களைக் காண்பேன். தமிழுக்கும், சமயத்துக்கும் தாங்கள் ஆற்றும் சேவை மகத்தானது. உங்கள் சேவை உலகசேவையாகிவிட்டது. நலமுடன் பல்லாண்டு வாழ்ந்து சமுதாய சேவையாற்ற இறைவனை வேண்டுகிறேன். இந்து மாமன்ற நிர்வாகிகளுக்கும் எனது வாழ்த்தும் வணக்கமும் உரித்தாகுக.

அன்புள்ள
மு. ஆறுமுகம்
முன்னாள் தலைவர்
இலண்டன் சிவதொன்டன் நிலையம்

இலண்டன்
1-1-2000

கயிலைமாமுனிவர் வித்துவான்
சாந்தலிங்க இராமசாமியடிகள்
பேரூராதீனம், தமிழ்நாடு
23-11-99

சிவத்திரு நல்லதம்பி அவர்கள்
கனடா

அருள்மிரு சாந்தலிங்கப் பெருமான் இன்னருள் பெருகுக.

அன்புகெழுமிய சிவனடிச் செம்மல் சிவத்திரு நல்லதம்பி அவர்களுக்கு எழுதிக்கொள்வது.

சிறப்பாக எழாவது சைவ உலக மாநாட்டை நடத்தியமைக்குப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நமது அன்பர்கள் பரிவோடும், அன்போடும் பேணியது குறித்து மகிழ்ச்சி.

சிவஞானபோத திருநெறிய உரை அமெரிக்காவிலிருந்து தங்களுக்கு அனுப்பப்பட்டது. கிடைத்த விபரம் தெரிவிக்கக்கேட்டுக்கொள்கின்றோம். தங்களுக்கும், அன்பர்களுக்கும் குடும்பத்தார்களுக்கும் வாழ்த்துக்கள். இத்துடன் திருக்கார்த்திகைத் திருநாள் திருநீறு அனுப்பியுள்ளேன். அணிந்தின்புறுங்கள்.

வேண்டுந்தங்களன்பு

அன்புள்ள
சாந்தலிங்க இராமசாமியடிகள்

---

ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை
21-12-99

மதிப்பார்ந்த பண்டிதர் வீ. வ. நல்லதம்பி அவர்கள்
கனடா.

ஐயா,

வணக்கம். நீங்கள் அனுப்பிய " சைவநீதி" புத்தகம் கிடைத்தது. மிகவும் நன்றி. மலர் நல்ல முறையில் அமைந்திருந்தமை மகிழ்ச்சியைத் தந்தது. "சைவநீதி" மேலும் மேலும் நல்ல கருத்துக்களைக் கொண்டு வெளிவர எம்பெருமாட்டி துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றேன். தங்கள் பணிமேலும் வளர வேண்டுமென்று வாழ்த்தி அமைகின்றேன்.

வணக்கம்

கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி

---

PROF. K. KARUNAKARAN
VISITING PROFESSOR
UNIVERSITY OF MICHIGAN
DEPARTMENT OF ASIAN LANGUAGES AND CULTURE
26-12-99

பெருமதிப்பிற்குரிய பெருந்தகையீர்

வணக்கம். இறையருளால் நலம். அது போன்றே தங்கள் நலம் வேண்டுகிறேன். இந்தப் புத்தாண்டு 2000 நன்னாளில் தங்களுக்கு என் எளிய – அன்பான – நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்க நீவீர்! வாழிய பல்லாண்டு!

தாங்கள் அண்மையில் அனுப்பியிருந்த சைவநீதி இதழ் கிடைக்கப் பெற்றேன். அதற்கும் என்னுடைய சிறு கட்டுரையை அவ்விதழில் வெளியிட்டுள்ளமைக்கும் என் நன்றி. தங்கட்கும் கனடா நாட்டுத் தமிழ் – சைவ மாமன்றத்திற்கும் நன்றி.

இத்துடன் எங்கள் இனிய வாழ்த்தட்டையினை இணைத்தனுப்பியுள்ளேன். அனைவருக்கும் நன்றி.

வாழ்க கனடா வாழக் தமிழ்ச் சமுதாயம்!

இங்ஙனம்
தங்களன்புள்ள
கி. கருணாகரன்

அனைவருக்கும் முதல்வணக்கம்!

# நன்றிக் கலசம்

சைவநீதி வாசகர் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்தும் வணக்கமும் தைப்பொங்கல் வாழ்த்தும் வணக்கமும் உரித்தாகுக. வழமைப்பிரகாரம் சைவநீதி தமிழ் – சமயத்திற்கும் கலை – கலாச்சாரத்திற்கும் நீங்கள் அளித்த ஆதரவிற்கும் ஒத்துழைப்பிற்கும் நன்றி தெரிவிக்க இதோ! உங்கள் முன்னிலையில் வந்து நிற்கிறது. எனவே, நன்றியை ஏற்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்வீர்களாக.

1. இதுவரை கனடா இந்து மாமன்ற வெளியீடான "சைவநீதி" மலர்கள் பன்னிரண்டு. இந்த பன்னிரண்டு மலர்களையும் பாராட்டி உள்நாடு – வெளிநாடுகளிலுமுள்ள பேரறிஞர்கள், அன்பர்கள் – ஆதரவாளர்கள் பலர் கடிதங்கள் வரைந்துள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும்;

2. 1999 ஐப்பசி – தீபாவலி மலருக்கான கட்டுரை – கவிதைகளைத் தரமாகத் தந்துதவிய கட்டுரை – கவிதையாளருக்கும்;

3. 'சைவநீதி' மலருக்கான செலவினங்களைச் சரிசெய்ய அவ்வப்போது உதவியளித்துவரும் பதவிவழி உத்தியோகத்தர்களுக்கும், வர்த்தகப் பிரமுகர்களுக்கும், சமயகுருமார்களுக்கும்; முதற் பிரதிகளை வெளியீட்டு விழாக்களில் பெற்றுச் சிறப்பித்தவர்களுக்கும்.

4. மலரை மிகக்குறுகிய காலத்தில் வடிவமைப்புச் செய்த திரு. மா. கனகசபாபதி,, அழகுற அச்சிட்டுத் தரும் ROYAL GRAPHIC அச்சகத்தினர், முகப்பு அட்டையை அழகுற வரைந்து உதவும் சிறந்த கலைஞர் திரு. வி. க. கண்ணன் ஆகியோருக்கும்

5. சைவநீதி சிறந்து – வளர்ந்து உலகிற்குப் பயன்தரவேண்டுமென்ற பெருநோக்கில் மிகுந்த ஒத்துழைப்பு நல்கும் கனடா இந்து மாமன்றத்தின் தலைவர் – செயலாளர் – பொருளாளர் – நிருவாக உறுப்பினர்களுக்கும் கனடா இ.மா.ம. பாடசாலைகளின் பெற்றோர் – ஆசிரிய சங்க தலைவர் – செயலாளர் – பொருளாளர் – நிருவாக சபையினருக்கும் மன்றப்பாடசாலைகளின் ஆசிரியர் – பெற்றோர், மாணவர்களுக்கும்;

6. சைவநீதி வெளியீட்டு விழா, பெற்றோர்தினவிழா – சர்க்கரைப் பொங்கல் – சமய கலாச்சாரவிழா – கலைவிழா –சித்திரக் கண்காட்சி விழா முதலிய பலநிகழ்வுகளுக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கிவரும் அனைவருக்கும்;

7. கனடா இந்து மாமன்றத்தின் சேவைக்கு மதிப்பளித்து, பல்வேறு வகையில் பாராட்டும் உதவியுமளித்து விழாக்களுக்கும் சமுகமளித்த கௌரவ Minister of Citizenship, Culture and Recreation, ஸ்காபுரோ நகரசபை முதல்வர் (Mayor) – பா. உறுப்பினர் (M.P) – நடைமுறை (Officers) உத்தியோகத்தர்களுக்கும்;

8. "சைவநீதி" – சிவநெறி – தமிழர் நீதி என்ற பேரெண்ணத்தினால் வாங்கி வாசித்துப் பயன் பெறும் வாசகர் – வாசக வட்டத்தினருக்கும்;

9. சைவநீதி மலரை உரிய தினங்களில் ஆலயங்களில் பொது மக்களுக்கு விநியோகித்து வரும் மன்றத்தினருக்கும் அனுமதியளித்து ஆதரவு நல்கும் ஆலய நிருவாகத்திற்கும்;

10. கனடா இந்துமாமன்றமும் ஏனைய சைவஸ்தாபனங்களும் சேர்ந்து நடாத்தி மாபெரும் வெற்றிகண்ட உலகப் பெருவிழாவாகிய உலக சைவப் பேரவையின் ஏழாவது சைவ மாநாட்டினை (கனடாவில் நடத்த) மிகத் திறம்படுத்தி – ஒத்துழைத்த அனைவருக்கும் மாநாட்டில் சமுகமளித்த உலக சைவப் பேரவையினருக்கும், பேரவைத் தலைவர், செயலாளர், பொருளாளருக்கும் மற்றும் பல நாட்டின் கிளை உத்தியோகத்தர்களுக்கும், பேரூா ஆதீனத் தலைவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளுக்கும் சொற்பெருக்காற்றிய அனைவருக்கும் விழாவுக்கான நிதி உதவி அளித்த அனைவருக்கும் மாநாடு சிறப்பாக நடாத்தப் பல வழிகளிலும் ஆதரவு தந்த சகலருக்கும்;

11. கடந்த நான்கு ஆண்டுகளாக கனடா இந்து மாமன்றத்தில் முக்கி மூன்று பதவிகளை வகித்துப் பணிசிறக்க உழைத்த திருவாளர் த. சிறிபதி, வே. நந்தீஸ்வரா, சி. கனகலிங்கம் ஆகியோருடன் அமைந்த நிருவாக சபையினருக்கும்;

12. சைவநீதி மலரை வரவேற்று ஆசீர்வதிக்கும் "கலசம்" "சைவஉலகம்" சஞ்சிகை ஆசிரியர்களுக்கும் கனடா – இலங்கைப் பத்திரிகையாளர்களுக்கும், இலங்கை – கனடா – லண்டன் சிவதொண்டன் நிலையத்தினருக்கும் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினருக்கும், கொழும்பு இராமகிருஷ்ண சபையினருக்கும், அகில இலங்கை இந்து மாமன்றத்தினருக்கும், இலண்டன் மெய்கண்டார் ஆதீனம் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டுச் சைவ ஸ்தாபனங்களுக்கும் மன்ற வளர்ச்சி விரும்பும் அனைவருக்கும்.

ஓம் சிவாயநம அன்பே சிவம்

மலராசிரியர் – சைவநீதி
கனடா இந்து மாமன்றம்

கனடா
14–01–2000

வணக்கம்



*For all your Graphic Design*
*and Printing Service needs*

ROYAL *Graphic* inc.

3031 Markham Road, Unit 30
Scarborough, Ontario
M1X 1L9

Tel: (416) 293-9163
Fax: (416) 293-9617

VALKA NEETHI

AIR POWER

SUCCESSFULLY COMPLETING OUR 8TH YEAR

# AIR LINK

NOW

## INTRODUCING KOREAN AIR
## LOW LOW FARE TO
## COLOMBO AND INDIA

A great way to fly SINGAPORE AIRLINES

طيران الخليج GULF AIR

Canadian

Lufthansa

KOREAN AIR

AIRLANKA

KLM

Emirates

CANADA 3000

**TOP AGENT AWARDS**

SINGAPORE AIR LINES
1994 1995 1996 1997

LUFTHANSA
1996 1997

KLM
1995 1996 1997

AIR LANKA
1992 1993 1994

GULF AIR
1996 1997

**SINGAPORE AIRLINES**

THE BEST AIRLINE IN THE WORLD

OFFERS QUALITY SERVICE TO COLOMBO WITH FREE HOTEL

**CANADA 3000**
Reliable Affordable Air Travel

**GULFAIR**

ஏக விநியோகத்தர்கள்

COLOMBO & MADRAS

உங்கள் பயணச்சீட்டுகளுக்கு நீங்கள்
நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஒரே இடம்

# AIR LINK TRAVEL LTD.

5200 Finch Avenue East, Unit G115, Toronto, ON M1S 4Z4

TEL: (416) 292-6200 FAX: (416) 292-7478

திசை தொறும் சைவநீதி தேசுற்று வாழ்க! மேலும்
தீந்தமிழ் உலகமெங்கும் திருப்பொலிவுடனே வாழ்க!!
வாழிய! வையகம்

# Rainbow Village Dental Office

# Main Square Dental Office

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல்
பல் வைத்திய சிகிச்சையில்
அனுபவம் பெற்ற
உங்கள் நம்பிக்கைக்குரிய

## டாக்டர். அ. சண்முகவடிவேல்

குடும்ப பல் வைத்தியர்

பல்வைத்திய சேவைகளும் கிளிப்போடுதலும்

## Dr. A. Shan Shanmugavadivel

திங்கள், செவ்வாய், புதன்,
வியாழன் வெள்ளி, சனிக்கிழமைகளில்

இவரது சேவையும் இடம் பெறுகின்றது
டாக்டர் தவமணி
சிறிகந்தராஜா
செவ்வாய், சனிக்கிழமைகளில்
**Main Square**

வியாழக்கிழமைகளில்
**Rainbow Village**

சப்வேயில் இருந்து
நடந்துவரின்
Mid Scarborough
Community Centre Exit
ஐ எடுக்கவும்




**Tel: (416) 266-5161**
2466 Eglinton Ave. East, Unit 7
Scarborough, Ontario M1K 5J8
(near Kennedy Subway)

**Tel: (416) 690-0121**
2575 Danforth Ave.
Toronto, Ontario M4C 1L5
(near Main Subway)